# அபத்தம்

4



## இலக்கிய உலகின் ‘நிர்வாணச்’ சக்கரவர்த்திகள்

சித்திரை 2023

ஏடு இட்டோர் இயல்

# இலக்கிய உலகின் 'நிர்வாணச்' சக்கரவர்த்திகள்

பெண்கள் மீதான பாலியல் வன்முறைகளும் அத்துமீறல்களும் #MeToo யுகத்தில் மட்டும் தொடங்கியவை அல்ல.

ஆண் மேலாதிக்கச் சிந்தனையாலும், அதிகாரம் பெரும்பாலும் ஆண்களின் வசமே இருப்பதாலும், பொது சமூகச்சிந்தனை ஆண்களுக்குச் சார்பானதாக இருப்பதாலும் ஆண்கள் காலாகாலமாக அதை தங்களது 'பிறப்புரிமை'யாகவும், சில நேரங்களில் பெருமையாகவும், கருதுகின்ற நிலை இருக்கிறது. அதை ஒரு தவறான விடயமாகவேனும் பலர் கருதுவதில்லை.

பாதிக்கப்பட்ட பெண்களுக்கு சமூகத்தில் இருக்கின்ற 'சமூகக் களங்கம்' (social stigma) பல பெண்களை தங்களுக்கு இழைக்கப்படுகின்ற இந்த துன்புறுத்தல்கள் பற்றி வெளியில் பேசுவதற்கு தயங்க வைக்கிறது. தனக்கு எந்த விதத்திலும் குற்றம் இல்லாத வல்லுறவு நிலைகளில் கூட, சமூகம் அவர்களை பாதிக்கப்பட்டவர்கள்(Victims) என்ற நிலையில் கூட அணுகுவதில்லை.

அதிலும் இந்த சமூக வலைத்தள யுகத்தில், சம்பந்தமில்லாத எந்த முட்டாளும் அவர்களைக் குற்றம் சாட்டி அவமானத்திற்குள்ளாக்க முடியும். (Victim blaming/shaming).

ஆண்களின் ஆதிக்கச் சிந்தனைக்கு எதிராக கருத்துச் சொல்லும் பெண்கள் மீதான சமூகவலைத்தள அவதூறுகள் (cyber bullying) நாங்கள் அன்றாடம் காண்பது தான்.

அதில் 'பண்பாடு காக்கும்' பெண்கள் மட்டுமன்றி, 'புத்திஜீவிப்' பெண்களும் அடங்கியிருப்பது தான் பெரும் துயரம்.

தன்னுடைய 'ஆண்மையை'க் காட்டவும், பெண்ணின் இனத்தை அவமானப்படுத்தவும் கூட பெண் மீதான பாலியல் அத்துமீறல்கள் பயன்படுத்தப்படுகின்றன. யுத்தங்களின் போது பெண்கள் மீதான வன்முறை அவர்களின் இனத்தை அவமானப்படுத்துவதற்கான குறியீடாகத் தான் உள்ளது.

'அவர்களின் வம்சங்களின் இரத்தத்தை மாசுபடுத்தல்'.

இந்த அத்துமீறல்கள் யுத்தப் பிரதேசங்களில் நடப்பது போல வெளிப்படையானதாக இல்லாமல், வேலை இடங்கள், கல்வி நிலையங்கள், வழிபாட்டுத் தலங்கள், பயணம் செய்யும் நேரங்கள் என, வீட்டுக்கு வெளியிலான பல இடங்களில் மறைமுகமானதாகத் தான் இருக்கின்றன. அதிலும் அவ்வாறான அத்துமீறல்களில் பாதிக்கப்படுகிறவர்களாக இருந்தாலும், அதனால் சமூகத்தில் ஏற்படக்கூடிய வாழ்நாள் வரை தொடரும் அவமானங்களால், அதைப் பற்றி வெளியே சொல்லாமல் சகித்துக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் உண்டாகிறது.

இது இந்த அத்துமீறல்காரர்களுக்கு வசதியாகவும் அமைந்து விடுகிறது.

அதிகாரத்தை வைத்திருக்கும்

ஜோர்ஜ் இ.குருஷ்சேவ்

அரசியல்வாதிகள் முதல் பணக்கார முதலாளிகள் வரை, சினிமா போன்ற கேளிக்கை உலகங்களிலும் இவ்வாறான அத்துமீறல்களும் துஷ்பிரயோகங்களும் பரவலாக இருந்தாலும், சமூக மட்டத்தில் ஏறக்குறைய அங்கீகரிக்கப்பட்ட சாதாரண நிகழ்வாகத் தான், ஒரு business transaction போன்று அதனால் பெண்ணும் பயன்பெறுவது போலவோ, பயன்பெறுவதற்காக ஒத்துப் போவதாகவோ தான், கருதப்படுகிறது.

இந்தியாவில் அரசியல் வாதிகளில் பலர் வல்லுறவுக் குற்றங்களில் ஈடுபட்டவர்களாக இருந்தாலும், அவர்கள் தேர்தல்களில் வெற்றி பெறுவதும், சட்டத்திற்கு பயமே இல்லாமல் அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி மேலும் இவ்வாறான பாலியல் வன்முறைகளில் ஈடுபடுவதும் சர்வ சாதாரணம் என்ற நிலையில் தான் இருக்கிறது.

இதில் ஒரு வித்தியாசத்தை நாங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

குறிப்பிட்ட ஒருவர் மீதான ‘மையல்’ (obsession) காரணமாக, மறுப்புத் தெரிவித்த நிலையிலும், விரும்பத் தகாத முயற்சிகளில் (unwanted advances) ஈடுபடும் ஆண்களும், அது குறித்து ஆத்திரத்தில் வல்லுறவு, அசிட் வீச்சு, கொலை என்று நடக்கின்ற பெண்களுக்கான வன்முறைகள் தனியானவை. அவை அதிகாரம் சம்பந்தப்பட்டதாக இல்லாமல், பெண் பற்றிய சமூக சிந்தனைகளை உள்வாங்கிய மனப்பிறழ்வாகத் தான் இருக்கின்றன. அவை பெரும்பாலும் உரிய முறையில் சட்டத்தின் கைகளில் கையாளப்பட்டுத் தான் கொண்டிருக்கின்றன.

இதில் இன்னொன்று, தான் ஆணாக இருப்பதன் வசதியைப் பயன்படுத்தி, யார் எவர் இன்றி, யாரோடாவது உரசிப் பார்த்து வேட்கையைத் தீர்த்துக் கொள்ள முயற்சிப்பதும், தீர்த்துக் கொள்வதும். இந்த மனப்பிறழ்வு பொதுப்பயணங்களில், கோயில் திருவிழாக்களில் முன்பின் தெரியாதவர்களோடு நடைபெறுவது. இது கூட ஆணின் வக்கிரபுத்தி என்பதைத் தவிர அதிகாரம் பற்றியதல்ல.

“ மிகப் பெரிய பிரச்சனை இந்த Sexual predators எனப்படும் Serial offenders. தங்களின் நிலைமையை (Status) சாதகமாக்கி, அந்த அதிகாரத்தின் மூலம் எந்தப் பெண்ணையும் எந்தத் தடையும் இன்றிப் புணரலாம் என்று, அதன் பின்விளைவுகள் பற்றிய பகுத்தறிவு ஏதுமின்றி, ஏற்படும் பிறழ்வுச் சிந்தனை. இதில் உறவுகளும் பலமும் சமமான அளவில் இருப்பதில்லை. தங்களை, சட்டம் உட்பட, மேலானவர்களாகக் கொண்டிருக்கும் சிந்தனைதான் இதன் அடிப்படையாக இருக்கிறது. ”

மிகப் பெரிய பிரச்சனை இந்த Sexual predators எனப்படும் Serial offenders. தங்களின் நிலைமையை (Status) சாதகமாக்கி, அந்த அதிகாரத்தின் மூலம் எந்தப் பெண்ணையும் எந்தத் தடையும் இன்றிப் புணரலாம் என்று, அதன் பின்விளைவுகள் பற்றிய பகுத்தறிவு ஏதுமின்றி, ஏற்படும் பிறழ்வுச் சிந்தனை. இதில் உறவுகளும் பலமும் சமமான அளவில் இருப்பதில்லை. தங்களை, சட்டம் உட்பட, மேலானவர்களாகக் கொண்டிருக்கும் சிந்தனைதான் இதன் அடிப்படையாக இருக்கிறது. தங்களை யாரும் எதுவும் கேட்க முடியாது, செய்ய முடியாது என்ற சிந்தனை தான் எந்த தயக்கமும் கூச்சமும் இல்லாமல் இவர்களை இந்தக் குற்றங்களில் ஈடுபட வைக்கிறது.

இது வேலையிடங்களிலும், சமூக நிலைகளிலும் மேல் மட்டங்களில் இருப்பவர்களும், மத பீடங்களில் அமர்ந்திருப்பவர்களும் பிரபலங்களாக உள்ளோரும், ஏன் குடும்ப உறுப்பினர்களாக உள்ளோரும் அடங்கியது. அதிகாரம் பற்றி பிரமையே (Feeling of power) இதன் அடிப்படை.



**facebook: George RC**

இவர்களின் குற்றங்கள் தனி ஒருவருடன் நின்று விடுவதில்லை.

வைரமுத்துவும் வைன்ஸ்டைனும் கோணங்கியும் இலங்கையில் மயூரனும் பற்றி குற்றம் சாட்டியது தனி ஒருவர்கள் இல்லை.

#MeToo எழுச்சி கூட இவ்வாறான தொடர் குற்றவாளிகளுக்கு எதிராகத் தான் மேல் எழுந்தது. சூழ்நிலைகள், இயலாமைகள் காரணமாக மௌனமாக இருப்பதைச் சாதகமாக்கி தொடர் குற்றங்களில் ஈடுபடுவோரை பொதுவெளியில் அடையாளம் காட்டும் துணிச்சல் முயற்சியாகத் தான் இது வந்தது.

பாலியல் சுதந்திரம் அதிகமாகவுள்ள மேற்குலகில் கூட, ஒரு பெண்ணின் விருப்பத்திற்கு மாறான அத்துமீறல்கள் அனுமதிக்கப் படுவதில்லை. மனைவியைக் கூட விருப்பத்திற்கு மாறாக உறவு கொள்வது கூட, நாகரீக உலகில் சட்டரீதியாக தடை செய்யப்பட்டிருக்கிறது... மதவாதிகள் எந்தவிதமான முட்டாள்தனமான கருத்துக்களைச் சொன்னாலும்!

முற்போக்குச் சிந்தனையோடு முன்நோக்கி நகரும் உலகம் இவ்வாறான வன்முறைகளை சட்ட

ரீதியாக எதிர்கொள்வது மட்டுமன்றி, மாற்று பாலியல் ஈர்ப்பு வாழ்வு நிலைகளை ஏற்று அங்கீகரித்து, அவை சட்டரீதியாக உறுதி செய்யப்பட்டும் உள்ளன.

எதுவாக இருந்தாலும், சட்ட ரீதியான வயதுக்கு வந்தவர்கள் தாங்களாகவே விரும்பி ஏற்படுத்தும் உறவுகளை (consenting adults) சட்டம் எதுவும் செய்வதில்லை.

சம்மதம் பெறப்படாத, அதிகாரம் மேலான நிலையிலான அத்துமீறல்கள் வயதானவர்கள் மீது மேற்கொள்ளப்படுவதும், பராயம் அடையாதோர் மீதான எந்த வகையான அத்துமீறல்களும் சட்டத்தின்படி குற்றங்களே. (Postions of trust or authority) இது சமூகத்தில் உள்ள நிலை.

இது அடிப்படையிலேயே பழமைவாதச் சிந்தனை கொண்டோர் அதிகமாக உள்ள சமூக நிலையில் உள்ள நிலவரம்.

ஆனால், சமூக மாற்றங்களை வேண்டும் கொள்கைகளோடு புரட்சி அரசியல் நடத்துவோரும், எந்த வித பொருளாதார பலமும் இன்றி வெறும் 'starving artists' இலக்கியகாரர்களாக இருப்போரும் இவ்வாறான பாலியல் அத்துமீறல்காரர்களாக இருப்பதை நாங்கள் எப்படி விளங்கிக் கொள்வது?

ஒரு சமூகத்தில் சமூக நீதியை வேண்டி போராடுவோரும், பெண்களுக்கான சமத்துவத்தை வலியுறுத்துவோரும் இவ்வாறான கேவலமான சிந்தனை கொண்டிருப்பதற்கான நியாயங்கள் என்ன?

முற்போக்குச் சிந்தனை கொண்டவர்கள் என்று தங்களைச் சித்தரிப்பவர்கள் சாதாரண மனிதர்களை விட மோசமான முறையில் நடந்து கொள்வதன் அடிப்படை என்ன?

இவ்வாறான ஒரு குற்றச்சாட்டு மேலெழுந்து பரபரப்பாகும் போது, இந்த முற்போக்கு, இலக்கிய உலகங்களின் பதில், சாதாரண சமூகத்திலிருந்து எந்த விதத்தில் வேறுபட்டதாக இருக்கிறது?

> எங்கள் சமூகத்தில் முற்போக்கானவர்கள், இலக்கியவாதிகள் என்ற சித்தரிப்புகள் எல்லாம் சுயமானவை தான். அவரவர் தங்களைத் தாங்களே அவ்வாறாக சித்தரித்துக் கொள்வதைத் தவிர, சமூகமாக கொண்டாடப்படும் நிலையில் எனக்குத் தெரிந்து யாரும் இல்லை.
>
> (மிஞ்சிப் போனால், அவர்களின் முகாம்கள், 'சொம்பு தூக்கிகள்' தவிர்ந்து!)
>
> தன்னை யாராவது கவிஞர் என்றால், இந்தச் சமூகம் அதற்கு எந்த ஆட்சேபமும் தெரிவிப்பதில்லை

எங்கள் சமூகத்தில் முற்போக்கானவர்கள், இலக்கியவாதிகள் என்ற சித்தரிப்புகள் எல்லாம் சுயமானவை தான். அவரவர் தங்களைத் தாங்களே அவ்வாறாக சித்தரித்துக் கொள்வதைத் தவிர, சமூகமாக கொண்டாடப்படும் நிலையில் எனக்குத் தெரிந்து யாரும் இல்லை. (மிஞ்சிப் போனால், அவர்களின் முகாம்கள், 'சொம்பு தூக்கிகள்' தவிர்ந்து!)

தன்னை யாராவது கவிஞர் என்றால், இந்தச் சமூகம் அதற்கு எந்த ஆட்சேபமும் தெரிவிப்பதில்லை. தனது படைப்புகளுக்கு அங்கீகாரம் கிடைக்க வேண்டும் என்று முக்குவதிலும் புலம்புவதிலும் செலவிடும் எவரும் தனது உழைப்பையும் நேரத்தையும், காலத்தால் அழியாத நல்ல படைப்புகளைப் படைப்பதற்கு செலவிடுவதில்லை.

அரசியல் தத்துவப் புத்தகங்கள் முதல் உலக இலக்கியங்கள் வரை வாசிப்பதும் பேஸ்புக்கில் அதையெல்லாம் தெரிந்ததாகக் காட்டிக் கொள்வதும் தான் தங்களை முற்போக்குச் சிந்தனையுள்ள புத்திஜீவிகளாகக் காட்டுவதற்கான அடையாளம் என்ற போலித்தனம், தனக்குத் தெரிந்தவர்கள் என்று பெயர்களை உதிர்க்கும் name dropping வித்தை இந்த சமூகத்திற்குள் நிறையவே இருக்கிறது.

அதிலும் தங்கள் பேஸ்புக் பதிவிற்கு நாலு லைக் கிடைத்தாலேயே அடுத்த உலகப் புரட்சி தங்கள் தலைமையில் தான் நடக்கப் போகிறது என்ற நினைப்போடு திரியும் 'தோழர்கள்' பலரை நான் நாளாந்தம் கண்டு கொண்டு தான் இருக்கிறேன். மார்க்ஸிசம் முதல் மாவோயிசம் வரை, பெரியாரியம் முதல் அம்பேத்காரியம் வரை அறுதியும் இறுதியுமானதான பொழிப்புரையும் தீர்ப்பும் தங்களுடையது தான் என்ற கணக்கில் உலாவி வருகிறவர்களும் எங்களுக்குத் தெரிந்தவர்கள் தான்.

இவர்கள் எல்லாம் அறிவில் மேம்பட்டவர் களாகவோ, சிந்தனையில் செழுமை அடைந்தவர்களாகவோ இருப்பதில்லை. குறைந்தபட்ச பகுத்தறிவு கூட பலரிடம் இருப்பதில்லை. வட்சப் குறூப் வரலாறுகளை முழுமுதல் உண்மை என்று பயபக்தியோடு நம்புகிற கூட்டத்தை விட, இவர்கள் எந்த விதத்திலும் மேலானவர்கள் இல்லை.

இதனால் தான், தமிழில் இந்த 'முற்போக்குச்' சக்திகள் எல்லாம் அடிப்படையிலேயே சுயசாதிப் பற்றுள்ள சாதியவாதிகளாகவும், பெண்களும் பெண்ணியமும் குறித்து பிற்போக்குச் சிந்தனையாளர்களாகவும் இருக்கிறார்கள்.

சிலர் வஞ்சகமில்லாமல் தங்கள் பெண்களுக்கு எதிரான பிற்போக்குச் சிந்தனைகளை பெரும் கண்டுபிடிப்புகள் போல பெருமையாகப் பகிரங்கப்படுத்தவும் செய்கிறார்கள்.

இப்படியான 'pseudo-புத்திஜீவிகளில்' பல ஆண்கள் வழமை போல, முற்போக்கு முகமூடியை வசீகரமாக்கி, பெண்களை படுக்கை வரை அழைக்கலாம் என்ற சிந்தனையுள்ளவர்களாக இருக்கிறார்கள். இது பொதுமைப்படுத்தலாக இருப்பது தவறானதாக இருக்கலாம்.

ஆனால், இந்தக் குற்றங்களில் ஈடுபடுவோர் பெரும்பாலும்

இவ்வாறான சிந்தனைகளுக்குள்ளே இருக்கிறவர்கள் தான்.

அரசியல் ரீதியாகவோ, பொருளாதார ரீதியாகவோ, எந்த வகையான அதிகாரங்களும், இல்லாமல், இவர்கள் துஷ்பிரயோகம் செய்ய முனைவது இந்த முகமூடியை வைத்துக் கொண்டு மட்டும் தான்.

இவ்வாறான குற்றச் சாட்டுக்களின் போது, மற்றவர்கள் ஓடி வந்து முட்டுக் கொடுப்பதும், victim shaming/blaming இல் ஈடுபடுவதன் காரணம் என்ன?

வைரமுத்து விவகாரத்தில் சின்மயி மீது உடன்பிறப்புகள் ஓடி வந்து அவதூறுகளில் ஈடுபட்டதற்கான காரணம், அவர் திமுக ஆதரவாளர் என்பது மட்டும் தான்.

அதைப் போல, பாதிக்கப்பட்டவர் மீதோ பொறாமை உட்பட்ட ஏதோ காரணங்களுக்காக வெறுப்பு உள்ள, (சின்மயி பார்ப்பனர் என்பதே சிலருக்கு வைரமுத்துவை நியாயப்படுத்த காரணமானதாக இருந்தது), பெண்கள் உட்பட சம்பந்தமில்லாத மற்றவர்கள் நியாயம் சொல்கிறார்கள்.

நான் சொல்வது அவ்வாறானவர்கள் பற்றியல்ல. குற்றம் சாட்டப்பட்டவரை நன்கு தெரிந்த, அவருக்கு நெருக்கமானவர்கள்.

இவர்களில் பலர் கூட, பாதிக்கப்பட்டவருக்கு ஏற்பட்டிருக்கக் கூடிய மன அழுத்தம், உளைச்சல் பற்றி எந்த அக்கறையும் இல்லாமல், குற்றம் இழைத்ததாகக் குற்றம் சாட்டப்பட்டவரை நியாயப் படுத்தவே முனைகிறார்கள்.

> அதற்கான முதன்மைக்காரணம், முதலில் கல்லெறிய முடியாதபடிக்கு இவர்களும் இதே பாவங்களில் ஈடுபட்டிருப்பது தான்.
>
> வாயைத் திறந்தால், வண்டவாளங்கள் ஃபேக் ஐடிக்களில் வெளிவரும் என்ற பயம்.
>
> ஆசான் தன் உட்பெட்டிக்குள் பல ஆதாரங்கள் பெண்களால் அனுப்பி வைக்கப்பட்டதாக சும்மா அடித்து விடுவது கூட, இந்தப் பொதுமைப்படுத்தல் காரணமாகத் தான்.

இவ்வாறு நடந்திருந்தால் அது தவறு தான் என்று இவர்களால் அடித்துச் சொல்ல முடிவதில்லை.

அதற்கான முதன்மைக்காரணம், முதலில் கல்லெறிய முடியாதபடிக்கு இவர்களும் இதே பாவங்களில் ஈடுபட்டிருப்பது தான். வாயைத் திறந்தால், வண்டவாளங்கள் ஃபேக் ஐடிக்களில் வெளிவரும் என்ற பயம்.

ஆசான் தன் உட்பெட்டிக்குள் பல ஆதாரங்கள் பெண்களால் அனுப்பி வைக்கப்பட்டதாக சும்மா அடித்து விடுவது கூட, இந்தப் பொதுமைப்படுத்தல் காரணமாகத் தான்.

இதுவரைக்கும் யாரும் 'ஓகோ, அப்படியா!? என்னைப் பற்றி ஏதாவது வந்திருந்தால் வெளியே விடு, பார்க்கலாம்!' என்று சவால் விட்டதைக் காணவில்லை. இதனால் ஆசான் துணிச்சலாகவே சிலாவி வலை வீசி அடிக்க முடிகிறது.

அடுத்தது, தங்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் வரும் போது, தங்களுக்கும் ஓடி வந்து முட்டுக் கொடுக்க ஆள் வேண்டுமே என்ற பாதுகாப்பு உணர்வு.

முகாம்களாக இயங்கி, ஒன்றாகவே தண்ணியடித்து 'ஒன்றாகவே படுத்து எழும்புகிற' 'கூட்டுக் கலவா'ணிகளுக்கு இந்த நடவடிக்கைகள் பற்றி எதுவும் தெரியாது என்று சொல்ல முடிவதில்லை.
நேரடியாகவோ, கிசுகிசுக்களாகவோ, 'பகிரங்க ரகசியங்களாகவோ' தெரிந்தாலும் அந்த அயோக்கியர்கள் இவர்களின் நண்பர்களாகவோ, முட்டுக்கொடுப்பாளர்களாகவோ இருந்து விட்டால், அதை இவர்கள் விமர்சிப்பதில்லை.

அதற்கான அறநெறிகளோ, பண்புகளோ இவர்களிடம் இல்லாதபடிக்கு இவர்கள், அறநெறி பற்றி அதிகமாக அலட்டிக் கொள்கிற அயோக்கியர்களாக இருக்கிறார்கள்.

இலக்கியவாதிக்கான சமூகக்கடமை என்ன?

ஒரு சமூகம் முற்போக்குச் சிந்தனையோடு முன்நோக்கிப் போவதற்கான ஒரு உந்துதலைக் கொடுப்பது தானே? சமூகத்தில் பிறழ்வுகள் எந்த வகையில் இருந்தாலும், அதைப் படம் பிடித்துக் காட்டி சமூகத்தின் சிந்தனையில் மாற்றத்தைக் கொண்டு வருவது தானே?

சமூகத்தின் பிறழ்வுகளையும் தனது மனப் பிறழ்வுகளையும் நியாயப்படுத்துகிறவர்கள் எப்படி சமூகத்திற்கானவர்களாக இருக்க முடியும்?

Lolita வையும் Lady Chatterley's lover ஐயும் மாபெரும் இலக்கியங்களாகக் கொண்டாடுவோர், தங்கள் பிள்ளைகளையும் துணைவர்களையும் இவ்வாறான உறவுகளுக்கு அனுமதிப்பார்களா?

தன்னுடைய பிறழ்வுகளைப் பெருமையாகக் கொண்டாடும் சாருவினால், தன் வீட்டுப் பெண்கள் மீது இவ்வாறான பிறழ்வுகள் நிர்ப்பந்திக்கப் படுவதையோ,ஏன் அவர்கள் விரும்பி உடன்படுவதையோ, ஏற்றுக் கொள்ள முடியுமா?

கலை, இலக்கியவாதிகள் சமூகத்தின் பிறழ்வுகளைப் படம் பிடித்துக் காட்டலாம். அதை நியாயப்படுத்த முடியாது.

சில நேரங்களில், சம்மதத்துடன் நடந்த உறவுகள் கூட கசந்து போகும் போதும், கைவிடப்படும் போதும், பாலியல் குற்றச்சாட்டுக்களில் முடிவதும், false memory syndrome காரணமாக, நடக்காத ஒன்றை நடந்த உண்மை என்று நம்பிக் குற்றம் சாட்டுவதும் நடக்கின்ற சம்பவங்கள் தான். அவை பெரும்பாலும் விதிகளாக இல்லாமல் விதிவிலக்குகளாகத் தான் இருக்கின்றன.

ஆனால், ஏன் இவ்வளவு நாளும் குற்றம் சாட்டவில்லை? அப்படியாயின் சம்மதத்துடன் நடந்த உறவு தானே? இதற்கு முன்னம் பொதுவெளியில் இருவருடைய ஊடாடல்களும் நெருக்கமாகத்

தானே இருந்தன?

இப்படியான கேள்விகள் தான் வழமையாக முன் வைக்கப்படுகின்றன.

எங்கள் எல்லோருக்குமே தெரியும். எங்கள் நெருக்கமான உறவுகளில் கூட, பல தடவைகள் விரும்பாவிட்டாலும் அனுசரித்துப் போக வேண்டிய நிலை ஏற்படுகிறது. ஒரு கட்டத்தில் பொறுத்துக் கொள்ளமுடியாது என்கிற போது சிலரால் மட்டுமே முறித்துக் கொள்ள முடிகிறது.

இதன் போது யாரும் கேட்க முடியுமா, ஏன் இவ்வளவு நாளும் முறித்துக் கொள்ளவில்லை என்று?

அதிலும், ஆக்கிரமிக்கின்ற தரப்பு பலம் வாய்ந்ததாக இருந்தால், அதை மீறி எளிதாக வெளியே வர முடிவதில்லை. கணவன் மீதான பயம் மட்டும் காரணமாகவே உறவுகளுக்குள் நீடிக்கும் மனைவிகள் எத்தனை பேர்? பிள்ளைகளின் நலன்களை நினைத்து வெளியேறாமல் சகித்துப் போகும் தாய்மார் எத்தனை பேர்?

பிடிக்காத காரணங்களுக்காக நெருக்கமான நட்புகளைக் கூட முறித்துக் கொள்ள முடியாமல் நாங்கள் படும் அவலம் எவ்வளவு? வெறுமனே முகத்தை முறிக்கக் கூடாது என்பதற்காகவே தொடர்கின்ற நட்புகள் எவ்வளவு?

குடும்ப வாழ்வும், நட்புகளின் உறவுமே இந்த நிலையில் இருக்கும்போது, அவற்றுக்கு அப்பாற்பட்ட இவ்வாறான சூழ்நிலைகளில் மனம் விரும்பா விட்டாலும், உறவைத் தொடர வேண்டிய நிர்ப்பந்தம் வருகிறது.

தங்கள் மீதான அத்துமீறல்களின் போது எத்தனை பேரால் செருப்பால் அடிக்க முடிகிறது? உறவில் சமநிலை இல்லாத போது, பலம் குறைந்தவரை அதற்கு எதிராக போராடவில்லை என்று குற்றம் சாட்டுவது எந்த விதத்தில் நியாயம்?

இப்படித்தான், ஒரு தொடர் பாலியல் அத்துமீறல்கள் குறித்து, சாதாரண சமூகத்தைப் போலவே, 'முற்போக்குக்' கும்பல் தன் எதிர் செயற்பாடுகளைச் செய்து வருகிறது.

இதில் அபத்தத்தின் உச்சமாக இருப்பது, இவர்கள் இலக்கியவாதிகள், முற்போக்காளர்கள் என்பதற்காக, இவர்களுக்கு விதிவிலக்கு அளிக்கக் கோரும் நியாயப்படுத்தல்கள்.

அவர்கள் மென்மையான நுண்ணுணர்வு படைத்தவர்கள், அவர்களின் உணர்வுகள் வித்தியாசமானதாகத் தான் இருக்கும் என்ற உருட்டல்.

புராதன கிரேக்க, ரோம கலாச்சாரங்களில் சிறுவர்களை பாலியல் உறவுக்காக வைத்திருத்தல் என்பது சமூகமாக ஏற்றுக் கொள்ளப்பட்டு அங்கீகரிக்கப்பட்டதாக இருந்தது. pederasty எனப்படும் வயதான ஆண்களுக்கும் சிறுவர்களுக்குமான உறவு இருந்த காலத்தில் கூட, சம வயது உள்ள ஆண்கள் உறவில் இருப்பது ஏற்றுக் கொள்ளப்பட்டதும் இல்லை.

கிரேக்க தத்துவஞானிகள் முதல் ரோம சிற்ப, ஓவியக் கலைஞர்கள் வரைக்கும் அவ்வாறான தொடர்புகளைக் கொண்டிருந்தார்கள் என்ற தகவல்கள் உண்டு.

மைக்கேல் ஆஞ்சலோவும், லியனாடோ டாவின்சியும் அவ்வாறான உறவுகளைக் கொண்டிருந்தார்கள் என்று சொல்லப்படுகிறது.

அந்தக் காலங்களில் சமூகமாக ஏற்றுக் கொள்ளப்பட்ட இதெல்லாம் தற்போதைய நவீன உலகில் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. அதிலும் இளையவரின் வயது குறைவானதாக இருந்தால், அது குற்றமாகவும் கருதப்படுகிறது.

இலக்கியவாதிகள் மென்மையான இதயம் படைத்தவர்கள், அவர்களது பாலியல் சிந்தனைகள் வித்தியாசமாகத்தான் இருக்கும் என்று உருட்டுவதெல்லாம் இந்த இலக்கியவாதிகளே அன்றி, சமூகம் இல்லை. ஒழுங்கான வேலை வெட்டி இல்லாமல், தங்களுடைய குடும்பக் கடமைகள் பற்றிய கவலைகளும் இல்லாமல், எழுத்துக் குமாஸ்தா வேலையும், மிஞ்சிய நேரத்தில் புணர்தலும் என்ற சிந்தனையுடன் இருப்பவர்கள் தான் இப்படியான உருட்டல் நியாயங்களுடன் வர முடியும்.

ஒரு சமூகத்தில் சாதாரண பிரஜைகளை விட, இலக்கியவாதிகள் எந்த வகையில் மேலானவர்கள்?

சரி, இலக்கியவாதிகள் என்பவர்கள் தான் யார்?

ஒரு கவிதையை எழுதி விட்டு, தன்னை ஒரு உலக மகா கவிஞனாக நினைத்துக் கொண்டிருப்பவர்களா?

எழுத்தை முழுநேரத் தொழிலாகக் கொண்டிருக்கும் குமாஸ்தாக்களா?

ஊருக்குள்ளே எல்லாரும் தான் கவிதை எழுதுகிறார்கள். அதற்காக அவர்கள் மென்னுணர்வு படைத்தவர்கள், அவர்களுடைய உணர்வுகளுக்கு நாங்கள் மதிப்பளிக்க வேண்டும் என்பது என்ன வகையான அபத்தம்?

உலகம் எங்கோ போய் விட்டது.

ஆனால், கொடுங்கோல் மன்னர்களை கொடை வள்ளல்கள் என்று பாடிப் பொற்காசுப் பிச்சை எடுத்த பாரம்பரியம் தான் நம்முடையது. அதன் தொடர்ச்சி தான் எமது இன்றைய இலக்கியமும் அதன் கர்த்தாக்களும்.

காரணம், இவர்களும்

"இலக்கியவாதிகள் மென்மையான இதயம் படைத்தவர்கள், அவர்களது பாலியல் சிந்தனைகள் வித்தியாசமாகத்தான் இருக்கும் என்று உருட்டுவதெல்லாம் இந்த இலக்கியவாதிகளே அன்றி, சமூகம் இல்லை.

ஒழுங்கான வேலை வெட்டி இல்லாமல், தங்களுடைய குடும்பக் கடமைகள் பற்றிய கவலைகளும் இல்லாமல், எழுத்துக் குமாஸ்தா வேலையும், மிஞ்சிய நேரத்தில் புணர்தலும் என்ற சிந்தனையுடன் இருப்பவர்கள் தான் இப்படியான உருட்டல் நியாயங்களுடன் வர முடியும்."

ஆயிரமாயிர ஆண்டு காலப் பெருமையைப் பற்றிப் பீற்றிக் கொள்ளும் அதே சமூகத்தில் இருந்து வந்தவர்கள் தான்.

பொற்காசுகளுக்குப் பதில் தற்போது இரந்து வேண்டி நிற்பது அங்கீகாரம்.

அந்த அங்கீகாரத்தின் நோக்கம் என்ன?

சமூக அந்தஸ்து.

எதற்கு அந்த சமூக அந்தஸ்து?

இவ்வாறான பாலியல் வக்கிர சிந்தனைகளுக்கு வடிகால் அமைக்க!

கவிஞர் இந்திரன் கோணங்கி விவகாரத்தின் போது, பேஸ்புக் பதிவில் எழுதியிருந்தார்.

'செக்ஸ் டார்ச்சர் கொடுக்கவும், அதை நியாயப்படுத்தவும் சிறப்புச் சலுகையை இலக்கிய சன்னிதானங்களுக்கு யார் கொடுத்தது?'

அதற்கு நான் பின்னூட்டம் போட்டிருந்தேன்.

'அவங்களையெல்லாம் மேடையில் ஏத்தி கையில பிடிக்க மைக் கொடுத்தாங்களே, அவங்க தான், ஐயா!'

இவர்களுக்கு கொடுத்த அங்கீகாரம் தான் அவர்களுக்கு அந்த Sense of entitlement உரிமை உணர்வைக் அவர்களுக்குக் கொடுக்கிறது. கட்டியிருந்த துவாயைக் கழற்றி திறந்து காட்டச் சொல்கிறது.

அந்த அங்கீகாரம் தான் தன்னைப் பாதுகாக்க ஒரு கூட்டம் வரும் என்ற நம்பிக்கையைக் கொடுக்கிறது.

சமூக நீதி தழுவிய ஒரு சமூகத்தின் விதிமுறைகளுக்கு இலக்கியவாதிகள் உட்பட்ட எவரும் மேலானவர்கள் இல்லை. அதற்குக் கட்டுப்பட்டவர்கள் தான்.

சட்டத்தின் முன் எல்லோரும் சமன் என்ற பின்னால், தனக்கான சிறப்புரிமை என்று இலக்கியவாதிகள் நினைப்பது என்ன?

இதென்ன, பழுதடைந்த புளித்த மா பைக்கட்டா, இலக்கியவாதிக்கான கழிவு விலகோரா?

அவர்களுடைய திறமைகளுக்காக அவர்கள் அந்தச்

'செக்ஸ் டார்ச்சர் கொடுக்கவும், அதை நியாயப்படுத்தவும் சிறப்புச் சலுகையை இலக்கிய சன்னிதானங்களுக்கு யார் கொடுத்தது?'
அதற்கு நான் பின்னூட்டம் போட்டிருந்தேன்.
'அவங்களையெல்லாம் மேடையில் ஏத்தி கையில பிடிக்க மைக் கொடுத்தாங்களே, அவங்க தான், ஐயா!'

சமூகத்தால் புகழ்ந்தேத்தப்படலாம். ஆனால் அது குற்றங்களிலிருந்து விதிவிலக்குச் செய்வதில்லை.

ஒரு காலத்தில் தூக்கிக் கொண்டாடப்பட்ட பாப்லோ நெருடா தனது சொந்த நாட்டு மக்களாலேயே அவமானச் சின்னமாகக் கருதப்பட்டு புறக்கணிக்கப்படுகிறார்.

பல பிரெஞ்சு தத்துவ வியலாளர்கள், படைப்பாளிகளை எல்லாம் உதாரணம் காட்டுகிறார்கள். அவர்கள் சட்டங்களால் தண்டிக்கப் பட்டவர்கள், சட்டத்தின் பிடியில் இருந்து தப்ப நாட்டை விட்டு தப்பி ஓடியவர்கள்.

அவர்களுடைய படைப்புகளை வேண்டுமானால், அவர்கள் கொண்டாடலாம். அது அவர்கள் குற்றவாளிகள் என்பதிலிருந்து விடுதலை செய்வதில்லை.

பிறழ்மனநிலை பற்றிய சமூக சிந்தனை மாறி விட்டது தான். ஒரு காலத்தில் குற்றமாகக் கருதப்பட்ட தன் பாலீர்ப்புக்கு சட்ட அமைப்பில் கூட 1968ல் கனடாவில் சமத்துவம் வழங்கப்பட்டது. ஆனால், குழந்தைகள் மீதான பாலீர்ப்பு (Pedophilia) எந்தப்பாலீர்ப்பானதாக இருந்தாலும் இன்றைக்கும் குற்றம் தான்.

Lolita கடந்த நூற்றாண்டின் சிறந்த நாவல்களில் ஒன்று என பல பட்டியல்களில் குறிப்பிடப்பட்டது என்பதற்காக, அமெரிக்காவில் ரோமன் போலன்ஸ்கி வயது வராத பெண்ணுடன் கொண்டிருந்த உறவு நியாயப்படுத்தப்படவில்லை. சிறைத்தண்டனை தான் வழங்கப்பட்டது.

சூரிச்சில் அவர் கைது செய்யப்பட்டு அமெரிக்காவுக்கு நாடு கடத்தப்பட இருந்த நிலையில், அவருக்காக குரல் கொடுத்தவர்கள் ஹொலிவூட் பிரபலங்களும் பிரெஞ்சு இலக்கியவாதிகளும் தான். ஹொலிவூட் பிரபலங்களில் ஹார்வி வைன்ஸ்டைனும், வூடி அலனும் இருந்த நகைச்சுவைக்கு எங்கே போய் முட்டலாம்?

பிரான்சில் பொதுமக்கள் கருத்துக் கணிப்பில் அவர் நாடு கடத்தப்படுவதற்கு மக்கள் ஆதரவு அதிகமாகவே இருந்தது.

பண்டைய கிரேக்க, ரோமன் தத்துவவியலாளர்கள் இன்றைக்கும் போற்றப்படுவதும், இன்றையபாலியல் குற்றவாளிகளின் படைப்புகள் ஏற்றுக் கொள்ளப்படுவதும் நடந்து கொண்டு தான் இருக்கிறது. றோமன் போலன்ஸ்கிக்கு அதன் பின்னால் ஒஸ்கார் விருது கூடக் கிடைத்தது தான்.

இதெல்லாம் அவர்களின் குற்றங்களில்இருந்து பாவமன்னிப்பை வழங்கி விடவில்லை.

நாங்களும் எங்கள் 'படைப்பாளிகளின்' படைப்புகளை நுகர்வதோடு மட்டும் நிறுத்திக் கொள்ள வேண்டும். அவர்களைத் தலையில் வைத்து தூக்கிக் கொண்டாடுவது தான் இந்த இலக்கிய சன்னிதானங்களுக்கு 'செக்ஸ் டார்ச்சர் கொடுக்கவும், அதை நியாயப்படுத்தவும் சிறப்புச் சலுகையை' வழங்கிக் கொண்டிருக்கிறது.


ஒரு சமூகமாக, அவ்வாறான ஒரு படைப்பாளி, தத்துவவியலாளரின் குறைபாடுகளையும் கடந்து, நாங்கள் அவரைப் போற்றுகிறோம் என்று ஒரு சமூகம் சொல்லலாம்.

அந்தப் படைப்பாளியோ, தத்துவவியலாளரோ அதை தனது உரிமையாக நினைக்கவோ, தனக்குத் தரும்படியோ, விதிவிலக்கு அளிக்கும்படியோ நிர்ப்பந்திக்க முடியாது.

எங்கள் self-proclaimed இலக்கியவாதிகள் என்பவர்கள் சட்டத்தின் முன்னால் மட்டும் அன்றி, அறத்திலும் சாதாரண மனிதர்களை விட எந்த விதத்திலும் மேலானவர்கள் இல்லை.

அபத்தம்

சித்திரை 2023




எழுதிய, எழுதப்பட்ட ஆளுமைகள் குறித்து மேலும் அறிந்து கொள்ளவும், அவர்களை நேரடியாகத் தொடர்பு கொள்ளவும் அவர்களின் பேஸ்புக் அடையாளங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

எழுத விரும்புவோர்
Read the fine print ஐ வாசிக்க..

ஆக்கங்களுக்கு ஆக்கியோர்களே பொறுப்பு. ஆயினும் அதைப் பிரசுரிப்பதற்கான பொறுப்புகளில் இருந்து அபத்தம் விலக மாட்டாது.

email: apaththam@gmail.com
www.thayagam/apaththam
www.facebook.com/apaththam



ஆசிரியர், வடிவமைப்பு
ஜோர்ஜ் இ.குருஷ்சேவ்
**Editor/Design**
**George R. Ckrhushchev**

# உத்தரவின்றி உள்ளே...

# வரலாம்!





# உலகின் அழகைத் திருடி பெட்டிக்குள் அடைக்கும் கீதா ரவி!

## இந்த இதழின் அட்டைப்பட ஓவியர்

கீதா ரவி. நோர்வேயில் வாழ்பவர். இவர் குரலைத் தொலைபேசியில் கேட்கும் போதே என்னை அறியாமல் அவரது உற்சாகம் என்னையும் தொற்றிக் கொள்கிறது. தன்னைச் சுற்றி, உழன்று கொண்டிருக்கும் உலகின் அழகைத் தன் புகைப்படக் கருவியூடாகத் திருடி, அதை ஏனையவர்களுக்கும் பகிர்ந்து தரும் நேசம் நிறைந்தவர்.

கீதா இயற்கை அழகின் ரசிகையாக இருந்தாலும் ஏனைய பல விடயங்களையும் தன் திறமையால் சிறைப் பிடிப்பது போலவே, தன் மொழிச் செழுமையால் கவிதைகளினாலும் அவற்றை இரசிக்கும் தன்மை கொண்டவர். இவர் ஒரு சிறந்த கவிஞர் என்பதும், இப்பிரபஞ்சத்தின் போக்குகளையும் அதன் பாற்பட்ட மாந்தர்களையும் அவர்களின் வாழ்வியலையும் இவரது கவிதைகள் பேசிச் செல்வதைப் பலரும் இரசிக்கக் கண்டுள்ளேன்.

கீதாவிற்கு ஒளி ஓவியங்களை வசப்படுத்தும் ஆர்வம் இயற்கையாகவே வந்த போது அவருக்கு ஊக்கம் கொடுத்து, அவர் ஆர்வத்தை ஆக்கபூர்வமாக்குவதற்கு துணை புரிந்த ஒவ்வொருவரையும் அவர் நன்றியோடு நினைவு கூர்கிறார். உறவினர்கள் மட்டுமல்ல நோர்வீஜியன் மக்களும் இவர் படம் பிடிப்பதைப் பார்த்து விட்டு அவருக்கு இத்துறையின் நுணுக்கங்களை கற்றுக் கொள்வதற்கு, அதற்கான கல்வியைப் பெற்றுக் கொள்ளும் இடங்களை இவருக்கு அறிமுகப்படுத்தி ஊக்கம் அளித்துள்ளார்கள்.

அதனைச் சரிவரப் பற்றிப் பிடித்து, தொடர்ந்தும் இயங்கிக் கொண்டிருப்பது நோர்வேயில் அதற்கான அங்கீகாரத்தை இவருக்குப் பல இடங்களில் வழங்கியிருக்கிறது. 2019 மார்கழியில் அங்குள்ள சஞ்சிகை ஒன்றில் ( Stokke Magazine) இயற்கையை படம் பிடிக்கும் ஒளி ஓவியர் என இவரைப் பற்றிய விபரங்கள் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

2017, 2021, 2022 இல் நோர்வே தேசிய விருதுகளில் இவருடைய படங்கள் ஒவ்வொன்றும் தெரிவு செய்யப்பட்டதோடு இவரது ஒளி ஓவியச்சங்கத்தின் மூலம் போட்டிகளில்த் தெரிவு செய்யப்பட்ட இவரது ஒளி ஓவியங்கள் , இவர் வாழ்கின்ற நகரத்திலுள்ள பாலம் ஒன்றிலும், அரங்கம் ஒன்றிலும் பார்வைக்கு வைக்கப்பட்டதை பெருமிதத்துடன், ஆனால் மிகுந்த அடக்கத்துடன் தெரிவிக்கிறார்.

ஒளி ஓவியங்களைச் சிறைப் பிடிப்பது போலவே தனது ஆர்வத்தினால் தன்னைச் சுற்றியுள்ள இயற்கையையும், வர்ணங்களையும் தன் தூரிகையினால் வரைவதையும் தன் பொழுது போக்குகளில் ஒன்றாக வைத்திருக்கிறார். நோர்வே நாட்டில் தன் வாழ்வை அனுசரித்துப் போக வேண்டிய ஆரம்ப காலத்தில், ஏறத்தாழ இரண்டு வருடங்கள் அங்குள்ள ஒரு பாடசாலையில் கலை சார்ந்த கற்றலைப் பெற்றிருக்கிறார். அதனைத் தொடர முடியாது போனது ஒரு துரதிஷ்டம் என்றாலும் அதற்குக் காரணமான தன் தாய்மையைப் பெருமிதத்துடன் நினைவு கூர்கிறார்.

அது மட்டுமல்ல அப்போது தான் கற்ற கலை நுட்பங்கள், தனக்கு இன்றும் வர்ணங்களைத் தெரிவு செய்தல், பின்னணியைத் தெரிவு செய்தல் போன்ற ஒளி ஓவியங்களுக்கு இன்றியமையாத விடயங்களுக்கு உதவி புரிவதாகக் கூறுகிறார்.

சிறு அலங்காரப் பொருட்களை உருவாக்குவதிலும் அலாதியான ஆர்வமுள்ள கீதா, கடற் சிப்பிகள் கொண்டு தான் அமைத்த குருவிகள், பறவைகளின் ஒளி ஓவியங்களை நான் கேட்டதற்கு இணங்க அன்போடு அனுப்பி வைத்தார். இவரது ஏனைய ஒளிஓவியங்கள் போல் அல்லாது, அவை சற்றே தெளிவற்றதாய் இருந்ததில், இவையெல்லாம் தான் ஒரு ஒளிஓவியராய்த் தலையெடுக்க முன்னர் உருவாக்கியதால், அவற்றை வேறு ஒருவரது தொலைபேசி மூலமே படம் பிடிக்க முடிந்ததாய் இருந்தது என விளக்கம் அளித்தார்.

இத்தனை சாதுரியமும், திறமையும் தன்னடக்கமும் கொண்ட கீதா தனது ஐந்து வயதில் இரண்டு கால்களையும், போலியோ நோயின் பாதிப்பினால் செயல் இழந்தவர். இருந்த போதிலும், தன்னுடைய சக்கர நாற்காலியில் நகர்ந்தபடியே மிகுந்த ஓர்மத்துடனும், தன்னம்பிக்கையுடனும், புன்னகை ததும்ப தன் வாழ்வைக் கொண்டு செல்கிறார்.

கீதா தான் இரண்டு ஆண் குழந்தைகளுக்குத் தாயாக, அவர்களையும் தன்னைப் போலவே திடமான நெஞ்சுரம் கொண்டவர்களாய் வளர்த்திருப்பதோடு, அவர்களும் கீதா சிக்கலான பாதைகளில்ப் பயணிப்பதற்கு துணை புரிவதாகக் கூறுகிறார்.

நீண்ட பயணங்களுக்கு, அவர் தன் தேவைகளுக்காக வடிவமைக்கப்பட்ட காரில் போய் வருவது அவருக்கு மிகவும் நன்மை பயப்பதை அறிந்து கொள்ள முடிந்த போது, இவருக்குள் தான் எத்தனை திறமை என என்னை அது எண்ண வைத்தது.

தாயகத்தில் வாழ்ந்த பொழுது, நோர்வேயில் இருக்கும் வசதிகள் போல தன்னை நகர வைப்பதற்கான நவீன தொழில் நுட்பங்களோடு கூடிய சாதனங்கள் இருக்காத போதிலும் தன்னை அன்போடு அரவணைத்து, மிகுந்த சிரமத்துக்கு மத்தியில் துவிச்சக்கர வண்டியில் அல்லது வேறு வாகனங்களில்த் தன்னை ஏற்றி இறக்கி உதவி செய்யப் பலரும் துணை புரிந்ததை மறக்க முடியாது என்று நினைவு கொள்கிறார். முக்கியமாகத் தன் தம்பியின் தோள்களைப் பற்றிய படியே தான் தன் கால்களுக்குப் பலம் கொடுத்து நடந்து பாடசாலை சென்ற நாட்களை எண்ணிப் பார்க்கிறார். தன் வாழ்வு எப்போதுமே அன்பினாலும் பாசத்தினாலும் சூழ்ந்தது என புன்னகைக்கும் இவரை நாம் வியப்புடன் தான் பார்க்க முடிகிறது.

எத்தனை சவால்களும், சஞ்சலங்களும், இடர்களும் வந்து போனாலும் இவ்வாழ்க்கையை வாழ்ந்தே காட்டுவது என்று நிமிர்ந்து, மிகப் பிரமாண்டமாய் உயர்ந்து நிற்கும் இவரை நான் மிகப் பெருமிதத்துடன் அண்ணார்ந்து பார்க்கிறேன்.

**பூங்கோதை**





©R.Geetha








©R.Geetha


©R.Geetha


© Geetha Rasalingam




©R.Geetha
© Geetha Rasalingam






R.G

R.g











# புதியதொரு வீடு

நியூட்டன் மரியநாயகம்
மெலிஞ்சிமுனை

மஹாகவி எழுதிய புதியதொரு வீடு, இசை நாடகத்தை நேற்று பிற்பகல் 26.02.2023, காணக்கிடைத்தது. திருமறைகலாமன்றம் தயாரித்த இந்த இசைநாடகத்தினை, யாழ்.பிரதான வீதியில் அமைத்துள்ள தமது சொந்த அரங்கில் நடத்தினர்.

மகாகவி இந்த நாடகத்தை எழுதிய அறுபதுகளின் இறுதியாக இருந்தாலென்ன, இன்று 2023 இலும் கூட - பிரபலமான இந்த நாடகத்தின் கதை என்னவோ பெரிய ஆச்சரியத்தை ஏற்படுத்தக் கூடியதல்ல.

புயலில் சிக்கி கடலில் காணாமல் போகிறான் ஒரு மீனவன். சில வருடங்களின் பின் அவனின் மனைவி, தமது மைத்துனரை - அதாவது கணவனின் தம்பியை கலியாணம் செய்து கொள்கிறார். காணாமல் போனவன் மீள வருகிறான். இதனால் ஏற்படும் "முரண்பாடுகள்" எவ்வாறு முடிவுக்கு வருகின்றன . என்பதே கதை.

மீன்பிடித் தொழிலில் பெருபாலானவை பலர் கூட்டாக இணைத்து செய்பவை தான். இதனால், ஆசியாவின், பெரும்பாலான மீனவ சமூகங்கள், அதன் தொழில் பின்னணி காரணமாக, கூட்டுக்குடும்ப கட்டமைப்பை கொண்டது. இதனால், ஒருவர் அச் சமூகங்களில் இறக்கும் போது, அக் குடும்பத்தின் பொருளாதாரம்- அதன் பாதுகாப்பு "சமூகத்தின்" பொறுப்பாகிறது. இதனால், இறந்தவரின் சகோதரர்களில் ஒருவர் அக் குடும்பத்துக்கு பொறுப்பெடுப்பதும் வழைமையானது.

தற்போது இந்த "பாரம்பரியம்" முற்றுமுழுதாக இலங்கையில் இல்லாமல் போய் விட்டது. பெண் கல்வி மற்றும் சமூகப் பொருளாதார காரணிகளும் இதற்கான அடிப்படைகளாகும் .

எனக்கு தெரிந்த மட்டில், 2009 போர் முடிவின் பின்னான காலத்தில், இரண்டு சம்பவங்கள் மஹாகவியின் கதை போல நிகழ்ந்துள்ளன. போரில் கொல்லப்பட்டார்கள், கடத்தப்பட்டு காணாமல் செய்யபட்டார்கள் என நம்பப்பட்ட இருவர், விடுதலையாகி வரும் போது அவர்களின் இணையர்கள், வேறு இணை தேடி இருந்தனர். இதனால், விருப்பதகாத சம்பவங்களும் - பெண்கள் மீதான கொடு வன்முறைகளும் நிகழ்த்தப்பட்டன. இதனடிப்படையில், மஹாகவியின் பேசு பொருள் இப்போதும் பேசப்பட வேண்டியதொன்று எனப்படுகிறது.

கதை என்னவோ, கடல் சார்ந்த மக்களின் "பிரச்சனையை" பேசுவதாக இருந்தாலும் - மீனவ சமூக பின்னணியை கொண்டதாக இருந்தாலும் கூட- எனக்கு ஏதோ, யாழ்ப்பாண "விவசாய சமூகத்து" கதை போலவே உணர வைத்தது. இந்த நாடகத்தை குறுகிய வடிவமாக ஐரோப்பிய நாடொன்றில் பார்த்த போது மட்டும்மல்ல - திருமறை கலாமன்றத்தில் 26.02.2023 பார்த்தபோதும் கூட "கடலுடன் ஒட்டாத" உணர்வையே பெற்றேன்.

> *எனக்கு தெரிந்த மட்டில், 2009 போர் முடிவின் பின்னான காலத்தில், இரண்டு சம்பவங்கள் மஹாகவியின் கதை போல நிகழ்ந்துள்ளன.*
>
> *போரில் கொல்லப்பட்டார்கள், கடத்தப்பட்டு காணாமல் செய்யபட்டார்கள் என நம்பப்பட்ட இருவர், விடுதலையாகி வரும் போது அவர்களின் இணையர்கள், வேறு இணை தேடி இருந்தனர்.*
>
> *இதனால், விரும்பத்தகாத சம்பவங்களும்- பெண்கள் மீதான கொடு வன்முறைகளும் நிகழ்த்தப்பட்டன. இதனடிப்படையில், மஹாகவியின் பேசு பொருள் இப்போதும் பேசப்பட வேண்டியதொன்று எனப்படுகிறது.*

மேடை அமைப்பு, அதன் பின்னணி பொருட்களாக வலைகளும், குடிசையும், நீல நிற வெளிச்சமும் உபயோகிக்க பட்டிருந்தாலும் கூட ஒட்ட முடியவில்லை. இதற்கு அடிப்படையான காரணம், இதை இயக்கியவர்கள் அல்ல. மஹாகவியின் படைப்பில் உள்ள தன்மை என்றே விளங்கிக்கொள்கிறேன்.

வசனங்கள் மற்றும் பாடல்களில் வரிகள் உலகமகா கவித்துவமாக இருந்த போதும் கூட - கடல் சார்ந்த மண்ணின் கூத்துடனும், பாட்டுடனும் வளர்த்த எனக்கு கொஞ்சம் அந்நியமாக பட்டது. கடல்சார் வடக்கின் சமூகங்களுக்கு பொதுவான உரையாடல் முறையும் மற்றும் சொல்லாட்சி பாரியமும் உள்ளது. அவற்றை உன்னிப்பாக தேடினாலும் கிடைக்கவில்லை. அத்துடன் உணர்வு நிலையை வெளிப்படுத்தும் காட்சியமைப்பில் ஒருவகை யாழ். சைவ ஆதிக்க சிந்தனா தன்மை மஹாகவியின் இந்த படைப்பில் நூலிழையாக தொடர்வதாக நான் உணர்ந்ததும் - எனது ஒட்டாத நிலைக்கு காரணம் எனலாம்.

திருமறை கலாமன்றத்தின் ஜோசப் ஜோன்சன் இந்த நாடகத்தை இயக்கி இருந்தார். ஜோன்சனை எனக்கு எனது இளமை காலத்திலிருந்து அறிமுகம். மிகவும் திறமை வாய்ந்த கூத்தன், எழுத்தாளன், நாடகாசிரியன் , சமூக நலன் சார் சிந்தனாவாதி. பாஸ் எனப்படும் ஜேசுவின் இறுதி நேரத்தை நாடகமாக காட்டும் திருப்பாடுகளின் காட்சி, வடமோடி , தென்மோடி கூத்துக்கள் மற்றும் பல நாடகங்களை ஜோன்சன் இயக்கி இருக்கிறார்.இவர் இயக்கிய பாஸ், கூத்துக்கள் மற்றும் "வழைமயான" நாடகங்கள் பலராலும் இவருக்கு முன்பேயே இயக்கப்பட்டவை. அவற்றை கொஞ்சம் மெருகூட்டி "நவீன ப்படுத்தி" அரங்கேறுவதில் பெரியதொரு சவால் ஒரு திறமையான படைப்பாளிக்கு -இயக்குனருக்கு இருக்கமுடியாது. அந்த வகையில் , மஹாகவியின் புதியதோர்வீடு நாடகத்தை இயக்கியது தான் அவரின் - தற்போது வரையான திறைமையின் உச்சம் என்பது எனது கருத்து! அல்லது இந்த நாடகத்தில் தான் அவர் ஒரு தொழில்முறை நாடக இயங்குநராக வெளிப்பட்டுள்ளார் .

மஹாகவியின், இந்த படைப்பின் கதை இலகுவானதாக இருந்தாலும் - நாடகத்தின் வடிவம், ஐரோப்பிய பாரம்பரிய இசைநாடகங்களின்- Musical theatre தன்மை கொண்டது. ஓபரா, ஒபேரட் பாரம்பரியத்தில் உருவாகி பின்பு திரைப்படத்தையும் ஒருகாலத்தில் ஆக்கிரமித்த மியூஸிக்கல் எனப்படும் இசைநாடக வகையை சேர்ந்ததே மஹாகவியின் இந்த படைப்பு. அதேவேளை, இந்த படைப்பை மஹாகவி திட்டமிட்டு ஐரோப்பிய மியூசிக்கல் பாரம்பரியத்திற்கிணங்க எழுதினாரா என நான் அறியேன்.

மியூசிக்கல்;/Musical theatre என்பது பாடல், நடனம், உரையாடல் மற்றும் நடிப்பு ஆகியவற்றை ஒருங்கிணைக்கும் நாடக வடிவமாகும்.

கதையின் உள்ளடக்கத்தை வெளிப்படுத்தும் வகையில் - நகைச்சுவை, சோகம், காதல், குற்றவுணர்வு ஆகிய உணர்வுகளை உள்ளடக்கமாக கொண்ட இசை ஃபாடல் மற்றும் வசனங்கள் இதில் இருக்கும். உலகில் தலைசிறந்த - பிரபலமான, சிங்கின் இன் த ரெய்ன் (1952), மவுலின் ரூஜ்! (2001), சவுண்ட் ஆஃப் மியூசிக் (1965), கிரீஸ் (1978), மம்மா மியா! (2008), மை ஃபேர் லேடி (1964), அன்னி (1982), வெஸ்ட் சைட் ஸ்டோரி (1961)

இவை எல்லாமுமே மேற்கூறிய வரையறைக்கு உட்பட்டவை தான். இவை திரைப்படங்களாக வந்தும் பிரபலம் அடைந்தவை. அல்லது முதலில் திரையில் வந்து, பின் மேடையேறியவை. ஒரு ம்யூசிக்கலை திரைப்படமாகும் போது இயக்குனர் பல உத்திகளை - தொழில் நுட்ப வசதிகளை பயன்படுத்த முடியும். அது, மேடை வடிவத்துக்கு பெரும்பாலும் பயன்படா . இதனால், மேடை வடிவம் இலகுவானதல்ல. ஒரே நேரத்தில் பல நூறு நடன கலைஞர்களையும், நாடக நடிகர்களையும் கையாள்வதும் - நாடகத்தின் ஆத்துமாவை, எழுதியவரின் கலை வெளிப்பாட்டை அலுங்காமல்-குலுங்காமல் மேடை ஏற்றுவது என்பதும் மிகவும் கஷ்டமான காரியம்.

யோன்சன் ராஜ்குமார், மேற்படி ஐரோப்பிய ம்யூஸிக்கல் வடிவத்தையே, மஹாகவியின் புதியதோர் வீடு நாடகத்துக்கு பயன்படுத்தியுள்ளார். சில தடவைகள் இந்த நாடகம் இலங்கையில் அரங்கேற்றிய வேளையில், ம்யூஸிக்கல் வடிவத்தை அந்த அப்பிரதி தன்னகத்தே கொண்டிருந்த போதிலும் அந்த வடிவம் பயன்படுத்தப் படவில்லை என அறிந்தவர்கள் தெரிவிக்கின்றனர். யோன்சன் தனது மேடையாக்கத்தில் பெரும்பாலான பாடல்களுக்கும் புது இசை வடிவம் கொடுத்துள்ளார். அத்துடன், இசைக்கான நடனங்கள்-அசைவுகள் அனைத்தையும் புதிதாக உருவாக்கியுள்ளார். இவ் உருவாக்கமானது நான் மேற்கூறியது போல ஐரோப்பிய ம்யூசிக்கலை வடிவத்துக்குள் நெருக்கமாக வந்துள்ளது.

புதிய இசை அமைக்கப்பட்டதும், திறமையான பாடகர்களினாலும், மஹாகவியின் கவிகள் புதிய பரிமாணத்தை பெறுகின்றன. பலருக்கும் பரிச்சயமான சிறு நண்டு என்ற பாடல், நாடகத்தின் பல பகுதிகளில் வித்தியமான தாளக்கட்டுகளுடன் பாடப்பட்டுள்ளது. பலவகை தாளக்கட்டுடன் - அதற்கேற்ற நடன அசைவுகளுடன் பாடல் மேடையில்

ஒலிக்கும் போது, பார்வையாளர்களுக்கு மிகவும் உவகை தரும் அனுபவமாக இருக்கிறது.

சவுண்ட் ஒவ் ம்யூசிக், The Little Mermaid போன்ற இசை நாடகங்களில் ஒரு பாத்திரம் காதல் வயப்பட்டு ஒரு பூங்காவில் இருக்கும் போது, பூக்கள் மற்றும் காட்சியின் பின்னணியில் இருக்கும் "பொருட்கள்" பாத்திரத்தின் உணர்வை வெளிப்படுத்த பாடும். அல்லது நடன குழுவினர் தோன்றி பாத்திரத்தின் உணர்வை வெளிப்படுத்தும் விதத்தில் பாடி ஆடுவார்கள். அந்த முறைமை ஜோன்சனினால் இந்த நாடகத்திலும் பாவிக்கப்பட்டுள்ளது. மாசிலனும் மயிலையும் உறவில் இருப்பதாக ஊர் கதைப்பதை காட்சிபடுத்த மிகவும் அழகாக மேற்படி உத்தியை பாவித்துள்ளார் இயக்குனர்.

இயக்குனர் இந்த நாடகத்துக்கு 6 பாத்திரங்களுடன் 24 பேரை துணைப்பாத்திரங்களாகவும், பாடகர், நடன காரர்களாகவும் மேடையில் உபயோகித்துள்ளார். இவ்வளவு பேர் பங்கு கொள்ளும் அரங்கை எந்த வித குழப்பமும் ஏற்படாமல், கதை மற்றும் அது வெளிப்படுத்தும் உணர்வுகளை சீராக பார்வையாளர்களிடம் சேர்த்துள்ளார்.

ஆறு நடிகர்களும் தமது பாத்திரத்தின் தன்மையை உணர்ந்து, அதிகளவு நேரத்தை உபயோகித்து பழகி, கொஞ்சம் கஷ்ட்டமான- நீண்ட வாசனைகளை பாடமாக்கி அரங்கேறியுள்ளது வெளிப்படையாக உணர முடிந்தது. தொழில் முறைகலைஞர்களே சிரமப்படும் மியூசிக்கல்/Musical theatre வடிவத்தை, amateur நடிகர்கள் இவ்வளவு சிரத்தையெடுத்து நடித்ததென்பது வெகுவாக பாராட்ட தக்கது .

என்னை பொறுத்த மட்டில் மையுண்ட நெடுங்கா கண்ணாதாதை பாத்திரத்தில் நடித்த செ.வைதேகி அதி சிறந்த நடிப்புத் திறமையை வெளிப்படுத்தினார். அதேபோலவே, மாயன் பாத்திரத்தில் நடித்த ஜஸ்டின் ஜெரால்டு மற்றும் மன்னன் பாத்திரத்தில் நடித்த சிறுவன் ற.ரஸ்ணனும் பாராட்ட பட வேண்டியவர்கள்.

...

சவாலான அரங்க முறைமையயான மியூசிக்கல்/Musical theatre வடிவத்தை கையிலெடுத்து யோன்சன் புதியதொரு வீட்டை இயங்கியிருந்தாலும், அப்பிரதி உள்ளடக்கியிருக்கும் சாத்தியப்பாடுகளையும் - மியூசிக்கல்/Musical theatre வடிவம் கொடுக்கும் சாத்தியப்பாடுகளையும் முழுமையாக வெளிக்கொணர- உபயோகிக்க அவர் தவறி விட்டார் என்று நான் கருதுகிறேன். உதாரணமாக. மியூசிக்கல்/Musical theatre வடிவம் காதல் உணர்வையும் அதனால் ஏற்படும் வீழ்ச்சியையும் - மீட்சியையுமே பெரும்பாலும் தனது உள்ளடக்கமாக கொண்டிருக்கும். மஹாகவியின் இந்த பிரதியில் வரும் மாசிலன் மற்றும் மயிலின் பாத்திரங்கள் சிருங்காரத்தையும் காதலையும் மேடையில் செதுக்க இயக்குனருக்கு இடமளிக்கும் பாத்திரங்களாக அமைத்தவை. பல வருடங்கள் ஒரே குடிசையில் வாழும் இளம் மனிதங்கள் இருவருக்குமிடையிலான ஈர்ப்பு, காமம் சார் தேவை மற்றும் காதல் உணர்ச்சி என்பன இயக்குனருக்கு சிருங்காரத்தையும் காதலையும் சொல்ல வாய்ப்பளிக்கிறது.

> **யாழ்ப்பாண போலி பாலியல் ஒழுக்கம் பேசும் சமூகத்தில் நான் கூறியதுபோல ஒரு நாடக கட்சியை அமைப்பது சுலபமல்ல. தொட்டு நடிப்பதையே பொறுத்துக் கொள்ளாத லும்பன் தனமாக யாழ். தமிழ் சமூகத்தில் எவ்வாறு காதலை வெளிப்படுத்தும் காட்சிகளை அரங்கேற்ற முடியும் ?**

அவ் இரண்டு பாத்திரங்கள் வரும் பெருன்பான்மையான காட்சிகளை -இயக்குனருக்கான சுதந்திரத்தை முன்னிறுத்தி- இயக்குனர் காதலை - காம வேட்கையை அரகேற்றி இருக்கலாம். அந்த இரு பாத்திரங்களும் ஒருவர் மீது ஒருவருக்கான ஈர்ப்பை வெளிப்படுத்தும் வகையின் அமைத்திருந்தால், உச்ச காட்சியில் இருவரின் சேர்வும் முழுதளவாக நியாயப்படுத்தப்பட்டிருக்கும். அவர்கள் இருவரின் சோர்வும் சமூகத்தால் திணிக்கப்பட்டதாக மட்டுமே சித்தரிக்கப்படுகிறது.

இதனால் நடந்தது என்னவென்றால், உச்சக் கட்சியில் மாயன் பாத்திரமே பெரிதளவான பரிவை பார்வையளர்களிடமிருந்து பெற்றுக்கொள்கிறது. ஒரு தியாகியாக அப்பாத்திரத்தை நிலை நிறுத்தப்படுகிறது. முக்கிய பாத்திரங்களான மாசிலனும் - மயிலையும் துணைப்பாத்திரங்கள் ஆக்கப்படுகிறார்கள்.

மாயனும் அவனின் மகனும் புதியதொரு வீட்டை உருவாக்கியது போல நாடகம் முடிகிறது .

அதேவேளை, யாழ்ப்பாண போலி பாலியல் ஒழுக்கம் பேசும் சமூகத்தில் நான் கூறியதுபோல ஒரு நாடக கட்சியை அமைப்பது சுலபமல்ல. தொட்டு நடிப்பதையே பொறுத்துக் கொள்ளாத லும்பன் தனமாக யாழ். தமிழ் சமூகத்தில் எவ்வாறு காதலை வெளிப்படுத்தும் காட்சிகளை அரங்கேற்ற முடியும் ?

அவ்வாறான காட்சிகளில் நடிக்க யார் சம்மதிப்பார்கள்? பெண்கள், பணம் சம்பாதிக்கும் வேலையை தவிர வேறு எதற்கும் பெரிதாக அவர்களை வீட்டுக்கு வெளியில் போய்வர அனுமதிக்காத போலி ஒழுக்கம் பேசும் இச் சமூகத்தில் - நாடகத்தில் பங்கெடுப்பதே பெரிய விடயம் தான்.

நிறைவாக, இன்றுள்ள யாழ்ப்பாண சமூக கலாச்சார சூழலில் இந்த நாடகத்தை தயாரித்ததன் மூலம், திருமறைகலா மன்றம், அரங்கவியலில் பெரியதொரு சாதனையை செய்துள்ளது. இந்த நாடகம் அனைத்து மக்களும் பார்க்கும் வகையில் யாழ்ப்பாண "இந்திய கலாச்சார மண்டபத்தில் அரங்கேற சமூக கரிசனை உள்ளேர் - பொறுப்பான அரசியல்வாதிகள் வகை செய்ய வேண்டும். அத்துடன் கூடுமான அளவுக்கு பரந்து பட்ட அளவில் தமிழ் பேசும் பிரதேசங்களிலிலும் மேடை ஏற்றப்படல் வேண்டும்.

இந்த தயாரிப்பு மக்களிடம் போய் சேர்வதன் மூலம் சமூகத்துக்கு சில புதிய ரசனைகளையும் , சில நேர்மறையான சமூக பார்வைகளையும் கடத்த முடியும் என்பது எனது கருத்து.



# விலைக்கு வாங்கும் விருது

**ஜோர்ஜ் இ.**

விருதுகள் என்பது இன்றைக்கும் எங்கள் தமிழ் சமூகத்தில் பெரும் பரபரப்பு ஏற்படுத்தும் ஒன்றாகத் தான் இருந்து வருகிறது. எதற்கும் பயன்படாத ஒரு துண்டைக் கொண்டு போய் போர்த்தி, 'பொன்னாடை போர்த்தும் பண்பாட்டுக் கலாசாரப் பாரம்பரியம்' என்று கொண்டாடும் சமூகத்தில், படித்துப் பெயருக்குப் பின்னால் போடும் பட்டங்களை விட, பெயருக்கு முன்னால் போடும் பட்டங்களைப் பெருமையாக நினைக்கும் சமூகத்தில், விருது என்பது ஏதோ திறமையை அங்கீகரித்து வழங்கப்படுவதான, எல்லாருக்கும் தெரிந்த பொய், பகிரங்கமாக நம்பப்படும் உண்மையாகி விட்டிருக்கிறது.

தாங்களே சொன்ன பொய்களை தாங்களே நம்பும் சமூகம் இது!

கனடாவில் ஒரு தமிழர் மேல் தடக்கி விழுவதாக இருந்தால், ஒன்றில் விருது கொடுக்கின்ற பத்திரிகையாசிரியர் அல்லது விருது வாங்கிய வீடு விற்பனையாளரில் தான் விழ முடியும். அப்படிப் புழுத்து மலிந்து போயிருந்தாலும், அதை ஒரு கௌரவமாக வரவேற்பறையில் வைத்துப் பெருமை கொள்வோர் இங்கே நிறைய.

விருதுக்காக வடக்கு நோக்கித் தவம் இருப்போர் பற்றி நாங்களும் தான் எழுதிக் கொண்டிருக்கிறோம்.

ஆனாலும், ஒரு விருதைக் கொடுத்து விட்டால், அது திறமைசாலி ஒருவருக்கு கொடுக்கப்பட்ட அங்கீகாரம் என்று சமூகமாக ஏற்றுக் கொள்வதில்லை என்பது தான் 'தமிழர் என்றோர் இனத்திற்கு தனியே இருக்கும் குணம்!'.

எப்படி விருது திறமைக்கு கொடுக்கப்படுகிறது என்று நம்பும் சமூகம், விருது கொடுக்கப்பட்டவுடன் மட்டும் அதை ஏற்றுக் கொள்வதில்லை?

உலகிலேயே அதிபுத்தி சாலிகள் நிறைந்த தமிழ் சமூகத்தில், எந்த விருது கொடுக்கப்பட்டாலும், அது தனக்கோ, அல்லது தான் பூஜிக்கும் யாருக்கோ கொடுக்கப்படவில்லை என்று பொங்கி எழுவதில் தான் எப்போதும் முடிகிறது. தனக்குக் கொடுக்கும் போது தன் திறமைக்கு கொடுக்கப்பட்டதாகவும், மற்றவர் களுக்குக் கொடுக்கப்படும் போது, தகுதியில்லாதவனுக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது என்று, பொறாமைப்பட்டுப் புழுங்குவதுமாகத் தான் நிலைமை இருக்கிறது.

யாரும் யாருக்கும் விருது கொடுக்கலாம் என்ற நிலையில், விருதைக் கொடுப்பதற்கு பணம் கேட்டு வாங்கி, பணத்தைக் கொடுத்து விருதைப் பெறும் சமூகத்தில், விலைக்கு வாங்கிய டாக்டர் பட்டங்களுக்கு தாங்களே விழா எடுக்கும் ஒரு இனத்தில், பிரச்சனை இல்லாமல் தாங்களே தங்கள் மனம் விரும்பியோருக்கோ, ஏன் தங்களுக்கே கொடுக்க தடையில்லாத நிலையில், எதற்காக இந்த விருதுகள் பற்றி பெருமைகளும் பொறாமைகளும் நடக்கிறது என்பது எனக்கு ஆச்சரியமாகவே இருக்கிறது.

இங்கே என்ன, எங்கேயுமே எந்த விருதுமே தகுதி, திறமையின் அடிப்படையில் கொடுக்கப்படுவதில்லை என்பது எந்த இளிச்சவாயனுக்கும் தெரியும்.

இயல்விருது கொடுக்கப் படுவதன் நோக்கமே, அதற்காக

வாணீர் ஊற்றியபடி வடக்கு நோக்கித் தவம் இருக்கும் தமிழக இலக்கியவாதிகள் வேறுவழியின்றி தங்களை புகழ்ந்தேத்தி வழிபடுவார்கள் என்ற ஒரே நோக்கம் தான். நக்கியோர் நாவிழப்பார்கள் என்று நன்றாகவே தெரிந்து கொண்டு, அதற்கான ஆட்சேர்ப்புத் தான் அந்த விருது!

சாகித்திய அக்கடமி விருதுகள் முதல் மாநில கலைமாமணி விருதுகள் வரைக்கும், சொந்த சாதிக்காரன், அதே முகாம்காரன், கட்சிக்காரன் என்ற அடிப்படையில் லாப நட்டக் கணக்குப் பார்த்துத் தான் கொடுக்கப்படுகின்றன என்பது கிடைக்காத அனைவரினதும் குற்றச்சாட்டு.

அந்தக் காலத்தில் எம்.ஜி. ஆருக்குக் கொடுத்த பாரத் பட்டம், நாங்க தான் வாங்கிக் கொடுத்தோம் என்று திமுக வினர் உரிமை கோரியபோது, எம்.ஜி.ஆர் அந்தப் பட்டத்தைத் துறந்தார்.

இத்தனையையும் தெரிந்து கொண்டும், கிடைக்கும் விருதைக் கொண்டாடுகிறவர்களையும், கிடைக்காத போது மட்டும் அநீதி நிகழ்ந்ததாக புலம்புகிறவர்களையும் அயோக்கியர்கள் என்று சொல்லாமல் வேறு எப்படி அழைப்பது?

முன்பு கமலஹாசனுக்கு பிலிம்பெயர் விருது கிடைக்கும்போது, பிலிம்பெயர் சஞ்சிகைகளை பெருமளவில் வாங்கி விருதுக்காக அனுப்பி வைக்கிறார் என்ற குற்றச்சாட்டை எண்பதுகளில் வாசித்திருக்கிறேன். தொலைக்காட்சி நிறுவனங்களின் விருது வழங்கல்கள் எல்லாம், பிரபலங்களை வரவைத்து, தங்கள் ரேட்டிங்கை அதிகரிப்பதைத் தவிர வேறு எந்த நோக்கமும் இல்லாதவை. தொலைக்காட்சி நிறுவனங்களில் என்ன கலை விமர்சகர்களா பணிபுரிகிறார்கள்?

விகடன் விருதுகளின் இலட்சணம் எனக்குத் தெரியும்.

Don't get me started on that!

புக்கர் பரிசு பெரிதாக புகழப்பட்டாலும், அதன் நடுவராக 1996ல் இருந்த A.L.Kennedy சொன்னார். வெற்றி பெற்றவர் முடிவு செய்யப்படுவது,



குடை நிழலிருந்து குஞ்சரம் ஊர்ந்த ஹார்வி வைன்ஸ்டைன்

'Who knows who, who's sleeping with who, who's selling drugs to who, who's married to who, whose turn it is'.

இதை விட, இந்த விருதுகளின் மகத்துவம் பற்றி வேறென்ன சொல்வதற்கு இருக்கிறது? இதற்குள் ஒஸ்கார் விருது என்பது பெரும் கனவாக தமிழ்நாட்டுச் சினிமாக்காரர்களிடம் இருந்து வருகிறது.

இந்த வியாதி 'உலகநாயகன்' கமலஹாசனில் தான் தொடங்கியது என்று நினைக்கத் தேவையில்லை. அதற்கு முதல் காமேஷ் என்னும் இசையமைப்பாளர், நடிகையாக இருந்த கமலா காமேஷின் கணவர், இளம் வயதில் இறந்து போனார் என நினைக்கிறேன், ஒரு தடவை தமிழக வார இதழ் ஒன்றில் தான் ஆஸ்கார் விருதுக்காக உழைக்கப் போகிறேன் என்று சொன்னதை வாசித்திருக்கிறேன். அந்தக் காலத்திலேயே எனக்கு ஆச்சரியமாக இருந்தது... அவருக்கு அந்த விருதுக்கான விதிமுறைகள் தெரிந்திருக்குமா என்று.

இதெல்லாம் ஒஸ்கார் விருது என்பது பொதுவெளியில் பரவலாகப் பேசப்படாத ஒரு காலத்தில்.

கிணற்றுத் தவளைகளுக்கு உலக சினிமா பற்றி அடித்து விடலாம். கேட்க ஆளிருக்காது!

இப்போது, 'பட்டி(க்காட்டு) தொட்டிக்கு' எல்லாம் ஒஸ்கார் பற்றியும், எலோன் மஸ்க் பற்றியும் தெரிந்திருக்கும் அளவுக்கு வந்து முடிந்திருக்கிறது. பொதுவெளிக்குள் அனாவசியங்களை வாய்க்குள் திணித்த ஊடகங்களின் sound bites புண்ணியம் அது.

இன்றும் கூட, ஒஸ்கார் என்பது ஏதோ திறமைக்காகக் கொடுக்கப்படுவதாக நம்பிக் கொண்டிருக்கிறார்கள்.

முன்பு ஹொலிவூட் திரையுலகம் பெரும் ஸ்டூடியோக்களின் கட்டுப்பாட்டில் இருந்தது. கலை வடிவம் என்பதை விட, வெற்றிப்படங்களைக் கௌரவிப்பதாகத் தான் இந்த விருது வைபவம் இருந்து வந்தது. எண்பதுகளில் independent cinema எனப்படும் ஸ்டூடியோக்களுக்கு வெளியால் தனியார்களால் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்ட படங்கள் வெற்றிப் படங்களாகிய நிலையில், கலைப்படங்கள், பிரபலமில்லாத படங்கள் எல்லாம் பரிசு பெறும் நிலைக்கு வந்திருந்தன.

அதற்கு இந்த விருதை தெரிவு செய்யும் தகுதிக்கு இளைய தலைமுறையைச் சேர்ந்த பலரும் உரியவர்களாகிய நிலைமையும் ஒரு காரணம் எனலாம்.

இந்த விருதுக்காக பிரேரிக்கப்படுவது கூட, பொதுவெளியில் ஆர்வத்தைத் தூண்டும் என்பதால், அதனால் வரும் வருமானத்தைக் கருத்தில் கொண்டு, பரிசு பெறக் கூடிய கலைத்துவமான படங்கள் வருட இறுதியில் வெளியிடப்பட்டு வந்தன. இதனால், அடுத்த வருட ஆரம்பத்தில் விருதுப் போட்டிக்கு தகுதி பெற்ற படங்களின் பெயர்கள் அறிவிக்கப்படும் போது அவற்றைத் தியேட்டரில் அதிகளவு மக்கள் சென்று பார்ப்பார்கள் என்ற எதிர்பார்ப்பு இருந்தது.

இதெல்லாம் மாறத் தொடங்கியது ஹார்வி வைன்ஸ்டைனின் வருகையின் பின்னால் தான். அவர் தான் விதிகளுக்குட்பட்ட மோசடிகள், சூழ்ச்சிகள் மூலமாக பரிசுகளைப் பெறுவதற்கான முயற்சியில் முழுமூச்சாக ஈடுபட்டவர். இவரது மிராமாக்ஸ் நிறுவனம் தயாரித்த, வினியோகித்த படங்களுக்கு பரிசு கிடைப்பதற்காக இவர் செய்த இந்த முயற்சிகள் பெரும் பயன் அளித்திருந்தன.

இதனால், இவர் சம்பந்தப்பட்ட படங்களிற்கு இதுவரையும் 341 விருதுப் போட்டித் தெரிவுகளும் (nominations), 81 ஒஸ்கார் விருதுகளும் கிடைத்துள்ளன. இவர் கூட இரண்டு தடவைகள் விருதுக்கான போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டு, 1999 ல் Shakespeare in Love படத்திற்கு விருதும் பெற்றார்.

இது வரையில் பரிசு பெற்றவர்கள் நன்றி தெரிவித்தவர்களில், அதிகம் நன்றி தெரிவிக்கப்பட்ட ஸ்டீவன் ஸ்பீல்பேர்க்குக்கு அடுத்ததாக, கடவுளோடு போட்டி போட்டுக் கொண்டிருப்பவர் ஹார்வி வைன்ஸ்டைன்.

90களில் நான் தேடித் தேடிப் பார்த்த பல கலைப்படங்கள், உலகத் திரைப்படங்களில் பல ஹார்வி வைன்ஸ்டைனால் தயாரிக்கப்பட்டோ, வினியோகிக்கப்பட்டோ இருந்தன. 1990 இல் Daniel Day Lewis நடித்த My Left Foot, 1991 இல் வந்த சுவிஸ் படமான Journey of Hope எனத் தொடங்கி நான் பார்த்த பல படங்களுக்கு இவருக்கு ஒஸ்கார் விருதுகள் கிடைத்தன.

இவற்றில் பல படங்கள் உண்மையிலேயே சிறந்த படங்கள் ஆயினும், அவற்றை வெல்வதற்காக இவர் எடுத்த நடவடிக்கைகள் பலராலும் விமர்சிக்கப்பட்டே வந்தன.

இந்த ஒஸ்கார் விருதுகள் அறிவிப்பதற்கு முன்பாக, கோல்டன் குளோப் விருதுகளுக்கான தெரிவுகள் வெளியாகும். அது திரைப்படங்களுக்கு மட்டுமல்லாது, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்குமானது. இது தான் வருட ஆரம்பத்தில் வெளியாகி பரபரப்பு ஏற்படுத்தும் முதல் அறிவிப்பு. பெரும்பாலும் இந்த தெரிவுகள் தான் ஒஸ்கார் விருது அறிவிப்புகளிலும் பிரதிபலிக்கப்படும்.

காரணம் என்ன?

கோல்டன் குளோப் விருதுகளை தெரிவு செய்வது, ஹொலிவூட்டில் இருந்தபடி உலகெங்கும் இந்த கேளிக்கை உலகம் பற்றி எழுதும் செய்தியாளர்களின் சங்கமான, Hollywood Foreign Press Association எனப்படும் 55 நாடுகளைச் சேர்ந்த 105 ஊடகவியலாளர்களைக் கொண்ட அமைப்பு.

இவர்கள் எடுக்கும் முடிவுகள் புத்திஜீவித்தனமாக இருக்கும் என்ற எண்ணத்திலோ என்னவோ, அக்கடமி உறுப்பினர்களும் தங்களையும் புத்திஜீவிகளாகக் காட்டும் முயற்சியில் பெரும்பாலும் அந்தப் படங்களையே தாங்களும் தெரிவு செய்வார்கள்.

ஆனால், லொஸ் ஏன்ஜலஸ் ரைம்ஸ் பத்திரிகை வெளியிட்ட ஆய்வு ஒன்றில், அந்த அமைப்பில் எந்த கறுப்பினத்தவர்களும் இல்லை என்பதும், அந்த அமைப்பின் உறுப்பினர்களில் பலர் முழு

> “வெறும் 105 பேர் தானே!? sting operation க்கான தேவை இல்லாமல், நகைப் பெட்டி லஞ்சமும், ஐந்து நட்சத்திர ஹோட்டல் விருந்தும் விஸ்கியும் கொடுத்தால், தங்கள் சுயரூபத்தைக் கக்கி விட்டுப் போகிறார்கள்... ஓ... சொன்ன படங்களைத் தெரிவு செய்து விட்டுப் போய் விடுவார்கள்.”



நேரமான ஊடகவியலாளர்கள் இல்லை என்பதும், இவர்கள் பெரும் ஸ்ரூடியோக்கள் வழங்கிய அன்பளிப்புகளை, நல முரண்பாடுகளுக்குள் (Conflict of interest) பெற்றுக் கொண்டார்கள் என்றும் செய்தி வெளியாகியது.

வெறும் 105 பேர் தானே!? sting operation க்கான தேவை இல்லாமல், நகைப் பெட்டி லஞ்சமும், ஐந்து நட்சத்திர ஹோட்டல் விருந்தும் விஸ்கியும் கொடுத்தால், தங்கள் சுயரூபத்தைக் கக்கி விட்டுப் போகிறார்கள்... ஓ... சொன்ன படங்களைத் தெரிவு செய்து விட்டுப் போய் விடுவார்கள்.

இதனால் 2022ல் இந்த விருது வழங்கலில் பெரும் ஸ்ரூடியோக்கள், பிரபலங்கள் கலந்து கொள்ளாததாலும், அதை ஒளிபரப்பிய தொலைக்காட்சி நிறுவனம் தன் தொடர்புகளைத் துண்டித்துக் கொண்டதாலும், அவ்வருடம் அந்த நிகழ்ச்சி நடைபெறவில்லை. Tom Cruise தான் பெற்ற விருதுகளை திருப்பி வழங்கியிருந்தார்.

தனக்கு இந்த அமைப்பில் உறுப்பினராக அனுமதி தரப்படவில்லை என்று நோர்வேஜிய ஊடகவியலாளர் ஒருவர் தொடர்ந்த வழக்கின் பின்தான் இந்த சர்ச்சை கிளம்பியது.

இந்த விருது வழங்கல் வைபவத்திலேயே, 2016ல் அதன் நிகழ்ச்சி வழங்குனராக இருந்த Ricky Gervais கூறினார்...

'worthless.... a bit of metal that some nice old confused journalist wanted to give you in person so they could meet you and have a selfie with you"

இது மட்டும் போதும் இதன் பெருமையை எடுத்துரைக்க. கேட்டால் விகடன் விருது மாதிரி இல்லையா?

இது எங்கள் தமிழக தொலைக்காட்சிகள் தங்கள் ரேட்டிங்குக்காக வழங்கும் சினிமா விருதுகளை விட, எந்த விதத்திலும் உயர்ந்ததில்லை.

திறமையை அங்கீகரித்துக் கொடுக்கும் விருதாக இல்லாமல், கொடுப்பதால் பெருமை பெற எடுக்கும் முயற்சி இது, நான் இயல்விருது பற்றிச் சொல்வது போல!



இது மட்டும் போதும் இதன் பெருமையை எடுத்துரைக்க. கேட்டால் விகடன் விருது மாதிரி இல்லையா?
இது எங்கள் தமிழக தொலைக்காட்சிகள் தங்கள் ரேட்டிங்குக்காக வழங்கும் சினிமா விருதுகளை விட, எந்த விதத்திலும் உயர்ந்ததில்லை.
திறமையை அங்கீகரித்துக் கொடுக்கும் விருதாக இல்லாமல், கொடுப்பதால் பெருமை பெற எடுக்கும் முயற்சி இது, நான் இயல்விருது பற்றிச் சொல்வது போல

இந்தக் குற்றச்சாட்டுகளின் பின் அந்த அமைப்பு பல சீர்திருத்தங்களை மேற்கொண்ட பின்னால் தற்போது ஹொலிவூட் பிரபலங்கள் பரிசளிப்பில் கலந்து கொண்டிருக்கின்றன.

இதில் விருதுக்கு பிரேரிக்கப்படுவதும், வெற்றி பெறுவதும் பெரும் பரபரப்பை உண்டு பண்ணும், அது படத்தின் வசூலை அதிகரிக்கும் என்பதால், ஹொலிவூட் பிரபலங்கள் இதில் திரும்பவும் கலந்து கொள்கிறார்கள். இம்முறை தன் படத்திற்கான விருதைப் பெற்றுக் கொள்ள ஸ்பீல்பேர்க் நேரில் வந்திருக்கிறார்.

இவர் நேரில் வருகிறார் என்பதை ஊடகங்கள் பெரும் செய்தியாக்கும். ஊடகங்கள் ஊதிப் பெருப்பித்ததை சாதாரண மக்கள் விழுங்கிக் கொள்வார்கள்.

இது தான் இந்த விருதுகளின் இலட்சணங்கள்.

சரி, ஹார்வி வைன்ஸ்டைன் எப்படி விதிகளை வளைத்து பரிசு பெறுவதையே ஒரு கலையாக்கினார்?

அக்கடமி எனப்படும் Academy of Motion Picture Arts and Sciences என்ற அமைப்பு சுமார் பத்தாயிரம் உறுப்பினர்களைக் கொண்டது. அதில் நடிகர்கள், இயக்குனர்கள் முதல் பொதுத்தொடர்பு வரை திரைப்பட உருவாக்கலின் 17 அம்சங்களைப் பிரதிபலிக்கும் கிளைகள் உள்ளன. ஒவ்வொரு கிளைகளிலும் உள்ளோர்கள் தங்கள் கிளைப் பகுதிகளில் உள்ள சிறந்த படங்கள், கலைஞர்களை பரிசுப் போட்டிக்காக (Nomination) தெரிவு செய்வார்கள். சிறந்த படத்துக்கான தெரிவை எந்த உறுப்பினரும் தெரிவு செய்யலாம்.

தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் பட்டியல்கள் அறிவிக்கப்பட்ட பின்னால், எல்லா உறுப்பினர்களும் எல்லா தெரிவுப் பிரிவுகளுக்கும் வாக்களிக்கலாம்.

ஹொலிவூட் பெரும்பாலும் வெள்ளையின, யூத இனத்தவர்கள் கட்டுப்பாட்டிலேயே நீண்ட காலமாக இருந்தது. (ஹொலிவூட் கலிபோர்ணியாவில் சினிமா உலகம் நிர்மாணிக்கப்பட்டதன் பின்னணியில் பெரும் கதை இருக்கிறது. ஹொலிவூட்டை ஆரம்பித்த யூதர்கள் பலரும் கிழக்கு ஐரோப்பாவிலிருந்து அமெரிக்காவில்

குடியேறிய யூதர்கள். எடிசன் சினிமா கமெராவைக் கண்டுபிடித்த போது, திரைப்படம் எடுப்பவர்கள் அவருக்கு பணம் செலுத்த வேண்டும் என்பதால், அமெரிக்காவின் கிழக்கு பகுதியில் நியூ யோர்க்கில் இருக்கும் எடிசன் தங்கள் மீது வழக்குத் தொடர முடியாதபடிக்கு அமெரிக்காவின் மேற்குப் பகுதிக்குச் சென்று அங்கு திரையுலகை ஸ்தாபித்தார்கள்.)

இது இவர்களின் கட்டுப்பாட்டில் இருப்பதான பெரும் குற்றச்சாட்டுக்களின் பின்னால் தான் தற்போது பிற இனத்தவர்கள் அதிகமாகச் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.

இப்படியாக அக்கடமி உறுப்பினர்கள் பிரேரிக்கப்பட்ட படங்களை தெரிவு செய்வதற்கு அவர்கள் அந்தப் படங்களைப் பார்த்திருக்க வேண்டும். அத்தனை படங்களையும் அத்தனை உறுப்பினர்களுக்கும் அனுப்புவதில் உள்ள தொல்லையும், அப்போது பிரதிகள் கைமாறி பிரதி செய்யப்பட்டு வெளியே விடப்படலாம் என்ற பிரச்சனையும் இருந்தது. அப்படி பிரதியை வெளிவிட்ட ஒருவர் அக்கடமியிலிருந்து வெளியேற்றப்பட்டிருந்தார்.

பொதுவாக, திரைப்பட உலகில் சம்பந்தமான பலரும் இந்தத் தெரிவைச் செய்யும் அக்கடமியில் உறுப்பினர்களாக இருந்தாலும், எல்லாரும் எல்லாப் படங்களையும் பார்ப்பதுமில்லை. பார்ப்பவர்கள் எல்லாரும் விருதுக்கான தங்கள் தெரிவு வாக்குப்பத்திரங்களை தபாலில் அனுப்புவதும் இல்லை.

இங்கே தான் ஹார்வி தன் கைவரிசையைக் காட்டினார். வீடியோப் பிரதிகளை சகல உறுப்பினர்களுக்கும் அனுப்பி அவர்களைப் பார்க்க வைப்பது முதல், ஹொலிவூட் பகுதியில் உள்ள யூதர்கள் வாழும் வயோதிபர் இல்லங்களில் படங்களைத் திரையிடுவது வரைக்கும் இவரது செயற்பாடுகள் இருந்தன. இவரது படத்தில் நடிப்பவர்கள் முதல் இயக்குனர்கள் வரைக்கும் இவரால் ஏற்பாடு செய்யப்படும் தொலைக்காட்சி பேட்டிகள்

*1998 இல் ஹார்வியின் Shakespeare in Love வெளிவந்தது. வருடத்தின் இறுதியில் வெளிவந்த இந்தப் படத்திற்கு ஒஸ்கார் விருதுக்கான எந்தச் சந்தர்ப்பமும் இல்லாதபடிக்கு ஏற்கனவே ஸ்டீபன் ஸ்பீல்பேர்க்கின் Saving Private Ryan வெளிவந்து சக்கை போடு போட்டுக் கொண்டிருந்தது.*

*அந்த வருடத்தின் சிறந்த படத்திற்கு அது தான் தெரிவாகும் என்று ஏற்கனவே கிட்டத்தட்ட முடிவாகியிருந்தது போன்ற நிலைமை.*

*விகடன் தமிழில் சொல்வதாயின், மாஸ் காட்டுவதற்கு ஸ்கெட்ச் போட்டார் ஹார்வி. சேறு வாரியிறைக்கத் தொடங்கினார்.*

முதல் வானொலி நேரடி சந்திப்பு வரைக்கும் கலந்து கொண்டே ஆக வேண்டும். இதற்காகவே ஐரோப்பிய இயக்குனர்கள் ஹொலிவூட்டில் இந்த ஒஸ்கார் விருதுக் காலங்களில் வந்து தங்கியிருக்கும் அளவுக்கு இவரின் நெருக்கடிகள் இருந்தன.

ஹொலிவூட்டின் பிரபலமான publicists களைச் சம்பளத்திற்கு அமர்த்தி, அவர்கள் தங்களுக்கு பழக்கமான அக்கடமி உறுப்பினர்களை தனது படங்களுக்கு வாக்களிக்கும்படி தூண்டுவது முதல் அந்தப் படங்களின் சினிமா பிரபலங்களுக்கான பார்ட்டிகளை வைத்து, அங்கு அக்கடமி உறுப்பினர்களை வரவழைத்து அவர்களை அறிமுகப்படுத்துவது வரைக்கும் பெரும் பணம் செலவிட்டுத் தான் பரிசுகளைப் பெற்றுக் கொண்டார்.

நம்ம தமிழ்நாட்டில் சேலையும் டிவியும் கொடுத்து வாக்கு வாங்குவது போலத் தான்.

எல்லாமே நன்னாத்தான் போய்க்கிட்டிருந்தது.

1998 இல் ஹார்வியின் Shakespeare in Love வெளிவந்தது. வருடத்தின் இறுதியில் வெளிவந்த இந்தப் படத்திற்கு ஒஸ்கார் விருதுக்கான எந்தச் சந்தர்ப்பமும் இல்லாதபடிக்கு ஏற்கனவே ஸ்டீபன் ஸ்பீல்பேர்க்கின் Saving Private Ryan வெளிவந்து சக்கை போடு போட்டுக் கொண்டிருந்தது. அந்த வருடத்தின் சிறந்த படத்திற்கு அது தான் தெரிவாகும் என்று ஏற்கனவே கிட்டத்தட்ட முடிவாகியிருந்தது போன்ற நிலைமை.

விகடன் தமிழில் சொல்வதாயின், மாஸ் காட்டுவதற்கு ஸ்கெட்ச் போட்டார் ஹார்வி.

சேறு வாரியிறைக்கத் தொடங்கினார். Saving Private Ryan படத்தின் முதல் பதினைந்து நிமிடங்கள் மட்டும் தானே சிறந்தது, அதன் பின்னால் எதுவும் இல்லை என்ற கருத்தை பொதுவெளியில் திட்டமிட்டு விதைத்தார். வழமையில் தனியார் தயாரிப்பு நிறுவனங்கள் இரண்டரை லட்சங்களும் பெரிய ஸ்டூடியோக்கள் இரண்டு மில்லியனும் செலவிட்ட இடத்தில், ஹார்வி இந்தப் படத்திற்கான ஒஸ்காரைப் பெற்றுக் கொள்ள ஐந்து மில்லியன் டொலர்களை செலவிட்டதாக கணிப்பிடுகிறார்கள்.

கடைசியில் ஸ்டீவன் ஸ்பீல்பேர்க்குக்கு சிறந்த படத்திற்கும் கிடைக்காமல், சிறந்த இயக்குனருக்கான பரிசு மட்டுமே கிடைத்தது. தயாரிப்பில் எந்தச் சம்பந்தமும் இல்லாமல் இருந்த ஹார்வி, இறுதியின் தனது பெயரையும் தயாரிப்பாளர்கள் பெயரில் போட்டு, விருது வாங்கும் போது, உரை நிகழ்த்திக் கொண்டிருந்த மற்றத் தயாரிப்பாளரைத் தள்ளி தான் மைக்கை வாங்கி உரை நிகழ்த்துமளவுக்கு ஈகோ நிறைந்திருந்தார்.

2002 இல் தனக்கு எதிராகப் போட்டியிட்ட A Beautiful Mind படம் பற்றி அவதூறுகளைப் பரப்புவதன் மூலம் அதற்கான வெற்றி பெறும் சந்தர்ப்பத்தை முறியடிக்க முயற்சித்தார். கணிதமேதை ஒருவர் மனநோயால் பாதிக்கப்பட்டு, பின்னர் மீண்டெழுந்து வந்து பொருளாதாரத்திற்கான நோபல் பரிசு பெற்ற கதை அது. அவர் ஓரினச் சேர்க்கையில் ஆர்வம் உள்ளவராக இருந்தார் என



புத்தகத்தில் சொல்லப்பட்ட விடயம் படத்தில் இல்லை என்பதும், அவர் யூதர்களுக்கு எதிரான மனநிலையைக் கொண்டவர் என்றுமான அவதூறுகளை ஹார்வி விதைக்க முயன்றார்.

ஹார்வியின் சேறடிப்புக ளையும் மீறி, அந்தப் படம் சிறந்த படத்திற்கான விருதைப் பெற்றது.

தனது Gangs of New York படத்திற்கு அதன் இயக்குனரான Martin Scorsese க்கு பரிசு கிடைக்க வேண்டும் என்பதற்காக, அக்கடமியின் தலைவராக முன்பு இருந்தவரும் Sound of Music பட இயக்குனருமான றொபேட் வைஸைக் கொண்டு, Martin Scorsese ஐப் பாராட்டி பத்திரிகைக்கு கட்டுரை எழுத வைத்தார். இந்தக் கட்டுரை வசனங்களை பத்திரிகை விளம்பரங்களில் ஹார்வி பயன்படுத்தினார். உண்மையில் 88 வயதான றொபேட் வைஸ் எழுதியதாகச் சொன்ன கட்டுரை, ஹார்வியின் உதவியாளர் எழுதி, றொபேட் வைஸைக் கையெழுத்து வைக்க வைத்தது பின்னர் தெரிய வந்தது.

இதன் பின்னால், அக்கடமி உறுப்பினர்கள் கூறும் கூற்றுக்களை பயன்படுத்தி விளம்பரப்படுத்துவது பின்னர் தடை செய்யப்பட்டது.

Slumdog Millionaire படத்திற்கு விருது கிடைக்கலாம் என்றவுடன், அந்தப் படத்தில் நடித்த குழந்தை நட்சத்திரங்கள் தயாரிப்பு விதிகளை மீறிச் சுரண்டப்பட்டார்கள் என்ற கதை பரவ விடப்பட்டதற்கும் ஹார்விக்கும் தொடர்பு உண்டு என்று கருதப்படுகிறது.

றோமன் போலன்ஸ்கியின் The Pianist படத்திற்கு இங்கிலாந்தின் BAFTA விருது கிடைத்தபோது, ஒஸ்கார் விருது அதற்கு கிடைக்கக் கூடும் என்ற பயத்தில் ஹார்வியின் மிராமாக்ஸ் ஊடக தொடர்பாளர் போலன்ஸ்கியை, rapist, child molester என்று குற்றம் சாட்டியிருந்தார். போலன்ஸ்கி அமெரிக்காவில் மைனர் பெண்ணோடு உறவு கொண்ட குற்றச்சாட்டில் குற்றவாளியாகக் காணப்பட்டு, அமெரிக்காவிலிருந்து தப்பியோடியவர்.

இப்படி ஹார்வி தனக்கு ஒஸ்கார் விருதுகள் கிடைக்க வேண்டும் என்பதற்காக செய்த கூத்துக்களை அடுக்கிக் கொண்டே போகலாம். அது என்னைப் போன்ற தீவிர சினிமா ஆர்வலர்களுக்கு மட்டுமே சுவாரஷ்யமாக இருக்கும் என்பதால், 'விரிவஞ்சி விட்டு விடுகிறேன்.'

இப்படியெல்லாம் செய்த ஹார்வி வைன்ஸ்டைன் 2017ல் தனது படங்களில் நடித்த நடிகைகளை பால் உறவுக்கு வற்புறுத்தினார், வல்லுறவுக்குள்ளாக்கினார் என்ற பல குற்றசாட்டுகளில் அதே அக்கடமியிலிருந்து வெளியேற்றப் பட்டதுடன், தனது சகோதரனுடன் சேர்ந்து தொடங்கிய மிராமாக்ஸ் நிறுவனத்திலிருந்தும் நீக்கப்பட்டார்.

இந்தக் குற்றச்சாட்டுக ளுக்காக நியூ யோர்க்கில் 23 வருடங்களும் கலிபோர்ணியாவில் 16 வருடங்களும் என சிறைவாசம் அனுபவித்து வருகிறார்.

இப்படித் தான் ஹொலிவூட் ஒஸ்கார் விருதுகளின் இலட்சணம் இருக்கிறது.

இம்முறை நாட்டு நாட்டு பாட்டுக்கு விருது கொடுத்ததற்கும் அதை வெற்றி பெற வைப்பதற்காக பணம் செலவிடப்பட்டிருப்பது பற்றி செய்திகள் வெளிவந்திருக்கின்றன.

வழமை போல, இளையராஜாவுக்கு கிடைக்கவில்லை என்று ஒரு காரணத்தோடு இம்முறை தமிழ் உணர்வாளர்கள் கொதிப்படைந்திருக்கிறார்கள்.

கிடைக்கும் போது புல்லரிப்பதும், கிடைக்காத போது, பழம் புளிப்பதும் தமிழ் இனத்தின் மன நோய்.

தமிழ்ப்பாட்டு மட்டுமே கேட்கிற கூட்டம் இளையராஜா தான் இசைக்கடவுள் என்று நம்பிக் கொண்டிருக்கிறது. அதை உலகம் அங்கீகரிக்க வேண்டும் என்று நம்புகிறது.

பிரபாகரனை தேசியத் தலைவர் என்று வழிபடும் யாழ்ப்பாணிகள், உலகம் அவரை அங்கீகரிக்க வேண்டும் என்று புலம்புவது போல!

முதலில் இந்த விருதுகள் என்பதே ஒரு கோமாளிகளின் கூத்து என்பதை உணர்ந்து கொள்ளாத வரைக்கும்,

பட்டிதொட்டி எங்கும் எதிலும் ஒஸ்கார் தான்!

ஒஸ்கார் என்பது எதுவென்றே தெரியாத கூட்டம் ஒஸ்கார் பற்றி பொங்கியெழுந்தால்...

பிறகென்ன?

முட்டாள்களை அயோக்கியர் கள் பேய்க் காட்டிக் கொண்டே இருப்பார்கள்.

பணம் கொடுத்து வாங்கிய டாக்டர் பட்டத்திற்கு விழா எடுக்கிற கோமாளிகளையும், வாங்கிய இயல்விருதுக்கு ரஜனியைக் கூப்பிட்டு விழா எடுக்கிற 'Copy writer' ஐயும் போல!

# தாடி





## ஜெயந்தீஸனின் குட்டிக் கதைகள்

கோவிலின் முன் முனிவர். அவரது வயிற்றைத் தொடுவது நீள்தாடி. நிறைய ஆண்களும் பெண்களும் அவர் மீது பக்தி முத்தங்களைக் கொட்டுதலில். உள்ளே கடவுள் பல வருடங்களாக விழித்துத் தூங்கினாலும் சில ஆண்டுகளில் பெரிய கதவின் முன்னே இருக்கும் முனிவர் மீதே மக்களுக்கு நிறையப் பக்தி.

அதிகமான காசுகள் அவர் முன் விழும். வரங்கள் வழங்குவதில் அவர் ஓர் விண்ணர். ஆண்கள் அவர் முன் தாமதிக்கலாம். பெண்களுக்கே வரங்கள் தாமதமின்றி. அவள்களது விழிகளை அவர் மிகவும் ஆழமாகப் பார்ப்பார். தமக்குள் பக்தி முத்துகளைக் கொட்டுகின்றார் என்பது அவள்களது நினைப்பு. ஆம்! அவர் நினைப்புகளைத் தூண்டுவதில் விண்ணர் எனலாம்.

இவர் சில கிழமைகளில் தரிசனம் செய்து பின்பு பல கிழமைகள் மறைந்துவிடுவார். ஆனால் இவரைக் காத்திருப்பது பக்தர்களது வேலை. இவர் இல்லாது விட்டால் அவர்கள் கோவிலின் உள்ளே போவதையும் மறந்து கொள்வார்கள். ஆம்! அவர் ஓர் புனிதமான முனிவர்.

மாலை தினத்தில் அவரின் முன் வந்தாள் வாசுகி. அவள் மிகவும் அழகி. ஓர் நடிகையின் தோற்றம் அவள் உடலில். புதிய பூ எனக் கருதப்படும் அவளது முகத்தினைக் கிலேசங்கள் கவ்வி

இருந்தன. கூந்தல் மிகவும் கறுப்பு. அவள் இளைச்சி. முனிவரது தலைக்குள் தனது முகம் இருப்பது வாசுகிக்குத் தெரியுமோ? அவளது விழிகளை விட்டு வெளியேறிக் கன்னத்தை நனைத்தன சில கண்ணீர்த் துளிகள். முனிவர் உற்சாகமானார் தனக்குள்.

அவள் 2200 ரூப்பிகளை அவர் முன் வைத்தாள்.

"ஏன் எனக்கு? எடு!"

"எனது இனிய முனிவரே! இது உங்களுக்குத்தான். உங்களால்தான் நிறையப் பெண்கள் தமது வாழ்வை நிமிர்த்தியுள்ளார்கள் என்பது எனக்குத் தெரியும்."

"ஆம்! அவைகள் கடவுளது அருள்கள். உனது விழிகளில் இருந்து வழியும் கண்ணீர் எனது விழிகளையும் காயப்படுத்துகின்றது. நீ மிகவும் அழகி. எனது மகளே! நீ ஏன் அழுகின்றாய்?"

"எனது பக்திக்குரிய முனிவரே! நான் திருமணம் செய்து 10 வருடங்கள். எனக்கு இப்போதும் பிள்ளைகள் இல்லை. நான் சிறையில் வாழ்கின்றேன் போல எனக்குப் படுகின்றது."

"உனது வாழ்வு ஒருபோதும் சிறையாக இருக்க முடியாது. இரவில், உனது கணவன், கட்டிலில் என்ன செய்கின்றார்?"

"நன்றி" என்று சொல்லிவிட்டு முதுகைக் காட்டிப் படுப்பது அவர் வழக்கம்.

"அவரது முதுகு அழகானதா?"

"நிறையப் பருக்கள் அதில் உள்ளன. அவரது முதுகை முத்தமிட எனக்குப் பயம்."

"அவருக்குக் காம சூத்திரம் தெரியாது என நான் நினைக்கின்றேன்."

"முனிவரே! உங்களுக்கு இந்த சூத்திரம் தெரியுமா?"

"என்னை நீ பக்தியால் கௌரவிக்கின்றாய்! எனக்குச் சூத்திரங்களும் தெரியும், சாத்திரங்களும் தெரியும்."

"பக்திக்குரிய முனிவரே! எனக்கு ஓர் பிள்ளை வேண்டும். உங்கள் கிருபையால் அதனைப் பெற முடியுமா?"

"நீ தேடுவது உனக்குக் கிடைக்கும். எனது வரம் உனக்குள்."

"எனக்குக் குழந்தை எப்போது கிடைக்கும்?"

"சில தினங்களின் பின். எப்போது உனது போக்கிரிக் கணவன் உன்னுடன் இரவைக் கழிப்பதில்லை?"

"அவர் இரவுகளில் தனது நண்பர்களுடன் குடித்து அவர்களது இல்லங்களில்தான் பல தடவைகள் தூங்குவார். இரண்டு இரவுகள் அவர் இல்லை. நிச்சயமாக அவர் திரும்பிவர இரண்டு கிழமைகள் ஆகும்."

"இரண்டு கிழமைகளா? அது நல்லது. நான் சொல்பவைகளை நீ கேட்டு அடங்குவாயா?"

"முனிவரே! நீங்கள்தான் எனது கடவுள். உங்களுக்கு அடங்குதல் எனது கடமை."

"உனது முகவரியைத் தா!"

தருகின்றாள்.

"நாளை உனது வீட்டுக்கு இரவு நேரத்தில் ஓர் தாடி இல்லாதவர் வருவார். அவர் சொல்வதைக் கேள். அவர் கேட்பவைகளுக்கு மறுத்துப் பேசுதல் உனது வேண்டுகோளை நிராகரிக்கும்."

"அவர் யார்?"

"கேள்வி உனக்குத் தடுக்கப்பட்டுள்ளது."

"மன்னிக்கவும்! நான் அவரைப் பக்திப்பேன்."

"போ."

வாசுகி போனபோது அவளது பிருஷ்டங்களது அசைவை மிகவும் ஆழமாகக் கவனித்தார் முனிவர்.

மறுநாள் இந்தத் தினத்தில் வராதா என்று அவள் ஏங்கினாள். அப்படி நடக்காது என்பது ஓர் இயற்கை விதி. கட்டிலில் அவள் தனியாகக் கிடந்தாலும் மறுநாள் மாலையே அவள் முன்.

காலையில் முழுகலை முத்தமிட்டது அவள் நீள் கூந்தல். பின்பு சிறிய சிவனின் படத்தினது முன் நின்றாலும் முனி முகமே தெரிந்தது. இந்த முகத்தின் முன் தனது பக்திப் பூக்களைத் தூவினாள். அவளது தொலைபேசி கூச்சிட மாலை வந்தது அவளுக்குத் தெரிந்தது.

தெரியாத இலக்கம்.

"நீங்கள் யார்?"

"நான் முனிவரால் உங்களுக்கு வழங்கப்பட்டவன்."

"வாங்கள்! வாங்கள்!" என்று கத்தியபோது கதவு திறப்பட்டது.

அவன் மிகவும் அழகன். தாடி இன்மையினால் கன்னம் செழிப்பாக இருந்தது. விழிகளுக்குள் காந்தத் துண்டுகள் இருந்தன.

"உங்களது அறை எங்கே உள்ளது?"

"அறையா?"

"அறையே கோவில்."

அவள் அறையைக் காட்டுகின்றாள்.

"அழகிய கட்டில்."

அவன் அவளை அதன் மீது கிடத்தினான். பல மணி நேரங்கள் காம ஒலிகள். பின் அவன் மறைந்தான்.

அவள் பூரித்தாள்.

ஒரு மாதங்களின் பின் மாதவிடாய் வரவில்லை.

மீண்டும் பூரித்தாள்.

முனிவருக்கு நிறையப் பக்திகளைச் சமர்ப்பிக்கும் எண்ணம் அவளைத் துரத்தியது.

கோவிலின் முன் சென்றாள்.

முனிவர் இல்லை.


கோவில் மூடும் வரை நின்றாள்.

அவரோ இல்லை.

தாடி வளராமல் எப்படி அங்கு அவர் திரும்பி வருவார்?

**பண்பாட்டுச் சிக்கலை எழுதிய புனைவு**

# மாஜிதாவின் பர்தா



அ.ராமசாமி

**பர்தா** – கவனத்தை ஈர்க்கும் தலைப்பு. வெளிவந்துள்ள சூழலில் இந்தக் கவனம் கிடைத்திருக்கிறது.

ஒரு பெயர்ச்சொல்லோ வினைச்சொல்லோ அதன் பயன்பாட்டில் குறிப்பிட்ட காலகட்டத்தில் கவனத்தை ஈர்க்கும் சொல்லாக மாறுவதற்குச் சூழலும் அதன் காரணிகளும் பின்னணியாக இருந்துள்ளன.

அந்தச் சூழல் வரலாற்றுச் சூழலாக இருக்கலாம் பண்பாட்டுச் சூழலாக இருக்கலாம். இன்னதென்று விளக்கமுடியாத நெருக்கடியாகவும் இருக்கலாம். பர்தா என்ற சொல் கவனம் பெற்ற சொல்லாக மாறியதில் எல்லாக் காரணங்களும் இருக்கின்றன.

அதே காரணங்கள் மாஜிதா எழுதியுள்ள நாவலையும் கவனப்படுத்தியிருக்கிறது.

...




“ மாஜிதாவின் “பர்தா” இசுலாமிய அடிப்படைவாதத்தின் பக்கம் நிற்காமல், தாராளவாத நிலைபாட்டிலிருந்து எழுதப் பெற்றுள்ள நாவலாக அடையாளப்படுத்திக் கொண்டுள்ளது. அந்த வகையில் கவனிக்கத்தக்க நாவலாகவும் விவாதிக்கவேண்டிய நாவலாகவும் ஆகிறது.

அதே நேரம் முழுமையாக அடிப்படைவாதத்தை எதிர்ப்பதாக இல்லாமல், அதற்குள் இருக்கும் அடையாள அரசியல் நோக்கையும் முன்வைத்துள்ளது என்ற வகையில் கூடுதல் கவனத்திற்குரியதாக மாறியிருக்கிறது என்பதையும் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. ”

குழந்தைப் பிறப்பின்போது அறியப்படும் பாலடையாளத்தின் வேறுபாட்டைக் கவனத்துடன் பரிசீலனை செய்து வளர்த்தெடுப்பதில் வாழ்க்கை வட்டச் சடங்குகள் பெரும்பங்கு வகிக்கின்றன. பிறந்த குழந்தையின் நிர்வாண உடலை மூடுவதற்கான முதல் ஆடைத் தேர்வுதொடங்கி பெண்ஒஆண் வேறுபாடுகள் உருவாக்கப்படுகின்றன் நிலைநிறுத்தப்பட்டுள்ளன. பிறப்பு முதல் இறப்புவரை தொடரும் வாழ்க்கை வட்டச் சடங்குகளின் வேறுபாட்டால் சமயங்கள் ஒன்றையொன்று வேறுபடுத்திக் கொள்கின்றன. அவ்வேறுபாடுகளின் பின்னால் நம்பிக்கைகள் மறைந்து நிற்கின்றன. ஆண் உடலுக்கான வாழ்க்கை வட்டச் சடங்குகளும் பெண்ணுடலுக்கான வாழ்க்கை வட்டச்சடங்குகளும் வெவ்வேறானவை. ஒரே சமய நம்பிக்கை கொண்ட கூட்டத்திலும் கூடச் சடங்குகளின் வேறுபாட்டால் உட்பிரிவுகளின் வேறுபாடு அறியப்படுகின்றன.

ஒரு காலத்து நம்பிக்கைகளும் சடங்குகளும் காலமாற்றத்துக்கேற்ப வடிவமாற்றமும் வெளிப்பாட்டுநிலை மாற்றமும் பெற்றுக்கொள்ளும் நிலையில் மரபின் தொடர்ச்சியாக நிலைபெறுகின்றன. இந்நிலையைத் தாராளவாதப்போக்கு என்கிறோம். மாறாமல் நிலைநிறுத்தப்பட வேண்டும் என வலியுறுத்தப்படும் நிலையில் அவை அடிப்படைவாதக் கருத்தியல்கள் என விளக்கப்படுகின்றன.

வெவ்வேறு கடவுள் நம்பிக்கை, வழிபாட்டு முறைகள், புண்ணியதலங்கள் போன்றவற்றால் வேறுபட்டு நிற்கும் சமயநெறிகள், அவற்றைப் பின்பற்றும் மனிதர்கள் தங்களின் அடையாளங்களைப் பேணவேண்டும் என வலியுறுத்துகின்றன. ஆனால் வளர்ந்துவரும் தாராளவாத மனநிலை, “சமய நம்பிக்கைகளும் பின்பற்றலும் அந்தரங்க வெளிக்குரியவை ஆகவே அந்தரங்க வெளியில் மட்டும் வேறுபடுத்திக் காட்டிக் கொண்டால் போதுமானது” என வலியுறுத்துகின்றன. ஆனால் அடிப்படைவாத நிலைப்பாடு கொண்டவர்கள் ஒவ்வொரு நிலையிலும் தங்களின் சமய அடையாளங்களை வெளிப்படுத்திக் கொண்டே இருக்க வேண்டும் என்கின்றனர். வீடு, தெருக்கள், வழிபடும் இடங்கள் என வாழிட வெளிகளிலும், உண்ணும் உணவிலும் வேறுபாடுகள் இருக்கின்றன் அவற்றைக் கைவிடக்கூடாது என்று வலியுறுத்தும் அடிப்படைவாதம் உடுத்தும் உடையில் காட்டவேண்டிய வேறுபாட்டையும் வலியுறுத்துகின்றது. அந்த வலியுறுத்தலில், ஆண் உடல்களை மறைக்க உதவும் ஆடைகளுக்கான நெருக்கடிகளைவிடப் பெண்கள் தங்கள் உடல்களை மறைக்கப் பயன்படுத்தும் ஆடைகளுக்குக் கட்டாயங்களும் வலியுறுத்தல்களும் அதிகம். இதனைப் புத்தொளிக்காலம் தொடங்கி ஐரோப்பியர் விவாதப்பொருளாக்கியுள்ளனர்.

இந்த விவாதங்கள், தாராளவாதப் போக்கிற்கும் அடிப்படைவாதப் போக்கிற்கும் இடையேயான நிகழ்காலத்தின் முதன்மையான முரண்பாடு. இம்முதன்மையான முரண்பாட்டில் மாஜிதாவின் “பர்தா” இசுலாமிய அடிப்படைவாதத்தின் பக்கம் நிற்காமல், தாராளவாத நிலைபாட்டிலிருந்து எழுதப் பெற்றுள்ள நாவலாக அடையாளப்படுத்திக் கொண்டுள்ளது. அந்த வகையில் கவனிக்கத்தக்க நாவலாகவும் விவாதிக்கவேண்டிய நாவலாகவும் ஆகிறது.

அதே நேரம் முழுமையாக அடிப்படைவாதத்தை எதிர்ப்பதாக இல்லாமல், அதற்குள் இருக்கும் அடையாள அரசியல் நோக்கையும் முன்வைத்துள்ளது என்ற வகையில் கூடுதல் கவனத்திற்குரியதாக மாறியிருக்கிறது என்பதையும் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

...

22 இயல்களை 120 பக்கத்திற்குள் எழுதி முடிக்கப்பட்டுள்ள பர்தாவின் கதைசொல்லும் முறை, ஒரு பெண்ணின் தன்வரலாற்றைச் சொல்லும் நேர்கோட்டு வடிவம் என்பதை வாசிப்பவர்கள் புரிந்து கொள்ள முடியும். சுரையா என்ற பெண்ணின் கதையை கிழக்கிலங்கையின் கிராமப்புறம், தலைநகர் கொழும்பு,

இங்கிலாந்தின் லண்டன் என மூன்று வெளிகளில் நகர்த்திக் கதை சொல்லப்பட்டுள்ளது. இம்மூன்று வெளிகளிலும் சொல்லப்படும் கதைக்குள் முதல் பகுதியின் சொல்முறைக்கும் பின்னிரு பகுதியின் சொல்முறைக்கும் நிகழ்வுகளை வடிவமைத்திருக்கும் தன்மையில் வேறுபாடுகள் உள்ளன. கிராமிய வாழ்வின் பின்னணிகளும் அக்கிராமத்து நடைமுறைகள், உறவுகள் சார்ந்த சித்திரிப்புகளும் அவற்றுக்குள் செயல்படும் ஆண்களின் மேலாதிக்க மனப்பாங்கும் ஒரு சிறுமியின் போக்கில் ஏற்படுத்தும் கேள்விகளும் அதற்கு மேல் மூர்க்கமாக எதிர்த்து நிற்காமல் அடங்கிவிடும் இயல்பும் என நகர்த்தப்பெற்றுள்ளன.

குடும்ப அமைப்புக்குள் பெண்களின் பாடுகளும் இடமும் இரண்டாம் நிலையில் இருப்பதோடு, ஆண்களின் வன்முறையான மனநிலையை ஏற்று நகரவேண்டியவர்களாக இருக்கிறார்கள் என்பதும் அவளது பார்வையிலேயே சொல்லப்பட்டுள்ளன. அதே நேரம் அவளுக்குக் கிடைக்கின்ற சலுகைகள், உரிமைகள் ஆகியனவற்றின் பின்னே அவளது படிப்பும், படிப்பின் மீது அவளது தந்தைக்கு இருக்கும் ஈர்ப்பும் பிடிமானமும் கவனமாக உணர்த்தப்பட்டுள்ளன.

இந்த உணர்தலோடும் நகர்வுகளோடும் சேர்ந்து பெண்கள் உடுத்தும் ஆடைகளின் வண்ணங்கள், வடிவங்கள் சார்ந்த வலியுறுத்தல்கள் நிகழ்கின்றன. அவர்களின் வாழிடம் சார்ந்து ஏற்படும் மாற்றங்களாக இல்லாமல், பணியின் பொருட்டு வெளிநாடுகளுக்குப் போய்வரும் ஆண்களின் வழியாக இவையெல்லாம் இசுலாமிய அடையாளங்கள் அதைப் பின்பற்றுவதே இசுலாமியர்களாக இருப்பதின் கடமை என்பதுபோல நம்பவைக்கப்படுவதற்குள் வெவ்வெறு பின்னணியில் இருப்பவர்களின் எதிர்ப்புக்குரல்களையும் நாவல் பதிவு செய்துகொண்டே வருகிறது.

ஒரே மொழி, ஒரே பணியிடம், ஒரே ஊர் என வாழ்பவர்களில் இசுலாமியப் பெண்களுக்கு மட்டும் இந்தக் கட்டுப்பாடுகள் ஏன் என்ற கேள்வியை எழுப்பும் காட்சிகள் நாவலில் பொருத்தமாகவே உருவாக்கப்பட்டுள்ளன. அக்காட்சிகளிலும் உரையாடல்களிலும் வெளிப்படும் கோபமும் எரிச்சலும் தனிநபர்கள் மீதான எரிச்சலாகவும் அவர்களைப் பின்னின்று இயக்கும் உள்ளூர் அமைப்புகளின் மீதான கோபமாகவும் வெளிப்படுவதும் பொருத்தமாக உள்ளன. இலங்கையில் வாழும் இசுலாமியப்பெண்களின் மீது வளைகுடா நாட்டு ஆடைகள் திணிக்கப்படும் நடைமுறையைத் தர்க்கரீதியாகவும் இயலாமையோடும் சொல்லிச்செல்கிறது நாவல்.

இசுலாமியர்கள் அதிகம் வாழும் கிழக்கிலங்கைப் பகுதியை விட்டு வெளியேறும் காலம் வரை நாவல் தரும் வாசிப்பனுவம் தடைகளற்ற இயல்பு நவிற்சித்தன்மையோடு நகர்ந்துள்ளது. ஒவ்வொரு இயலிலும் உண்டாக்கப்பட்டுள்ள சின்னச்சின்ன நிகழ்வுகளுக்கு ஒரு தொடக்கம், முரண், அதற்கொரு உச்ச நிலை, அதன் தொடர்ச்சியில் ஒரு நகர்வு எனக் கச்சிதமான வடிவமைப்பைக்கொண்டுள்ளது. லண்டனுக்குப் போய்விட்டுத் திரும்பிவந்து கிராமத்து வெளியில் “எல்லாமே மாறிப்போய்விட்டதே? மகிழ்ச்சியான கிராமிய எல்லைக்குள்ளான தர்க்காவை வழிபடும் வழிபாட்டு முறை காணாமல் போய்க்கொண்டிருக்கிறதே” என்ற தவிப்போடு அலையும்போதும்கூட இயல்பான போக்காகவே எழுதப்பட்டுள்ளது.

இப்படி எழுதப்படுவதற்குக் காரணம் முழுமையான அனுபவங்களைச் சித்திரித்தல் என்பது ஒரு காரணமாக இருக்கலாம்.

இந்தத் தன்மை கொழும்பு என்னும் பெருநகர வெளிக்குள் நுழைந்தவுடன் தொடரப்படவில்லை. பல்கலைக்கழக வளாகத்தில் இருக்கும் வேறுபட்ட மொழிப்பின்னணி உருவாக்கும் சிக்கல்களைத் தாண்டி, இசுலாமியப்பெண்களைக் கட்டுப்படுத்தும் மாணவர் அமைப்பின் கட்டுப்பாட்டை அவள் சந்திப்பதும், அதனை மீறத்துடிப்பதுமான முரண்பாடுகள் போதிய அளவு எழுதப்படவில்லை.

ஆடைசார்ந்த விருப்பம் மட்டுமல்லாமல் வாகனம் ஓட்டுவதில் இருந்த ஆர்வம், அதற்கு எதிரான மனநிலை கொண்ட இர்பானோடு கொண்ட தொடர்பும் உறவும் மனதிற்குள் பெரும் கேள்வியாக உருவெடுக்கக் கூடிய ஒன்று. அவனோடு ஏற்படும் காதலைத் தொடர்வதில் அவனிடம் ஊடாடும் அடிப்படைவாத ஆதரவு எழுப்பியிருக்கக் கூடிய மனப்போராட்டம் நாவலில் போதிய அளவு இடம்பெறவே இல்லை. காதலுக்காகவும் திருமணத்திற்காகவும் யார் விட்டுக்கொடுத்தார்கள் என்பதைச் சொல்லாமல் நாவல் தாவிச்சென்றுள்ளது. அந்த முரண்பாட்டிற்குள் நுழைந்து நிகழ்வுகளை விரிக்காமல் வெளியேறியிருக்கிறார் நாவலாசிரியர் என்பதை முக்கியமான குறை என்றே நினைக்கிறேன். இசுலாமியப் பெண்கள் அல்லாத மாணவிகளின் இயல்புகளோடு தன்னை நிறுத்தித் தானே விசாரித்துக்கொள்ளும் வாய்ப்புகளும் சுரையாவுக்கு உண்டு. உயர்கல்வியின் பொருட்டுப் பெருநகரவெளியில், பல்கலைக்கழக வளாகத்தில் கிடைத்திருக்கக் கூடிய சுதந்திர உணர்வையும் மகிழ்ச்சியையும் தடுக்கும் பண்பாட்டு ஆடையாக இருந்த பர்தாவையும் அதன் ஆதரவு அமைப்பான மஜ்லீஸ் போன்ற இசுலாமிய மாணவர்

ஒரே மொழி, ஒரே பணியிடம், ஒரே ஊர் என வாழ்பவர்களில் இசுலாமியப் பெண்களுக்கு மட்டும் இந்தக் கட்டுப்பாடுகள் ஏன் என்ற கேள்வியை எழுப்பும் காட்சிகள் நாவலில் பொருத்தமாகவே உருவாக்கப்பட்டுள்ளன. அக்காட்சிகளிலும் உரையாடல்களிலும் வெளிப்படும் கோபமும் எரிச்சலும் தனிநபர்கள் மீதான எரிச்சலாகவும் அவர்களைப் பின்னின்று இயக்கும் உள்ளூர் அமைப்புகளின் மீதான கோபமாகவும் வெளிப்படுவதும் பொருத்தமாக உள்ளன. இலங்கையில் வாழும் இசுலாமியப்பெண்களின் மீது வளைகுடா நாட்டு ஆடைகள் திணிக்கப்படும் நடைமுறையைத் தர்க்கரீதியாகவும் இயலாமையோடும் சொல்லிச்செல்கிறது நாவல்.

அமைப்புகளையும் குறித்துக் கடும் கோபம் இருந்த நிலையில் எப்படித்தாண்டிக் கடந்தாள் என்ற விசாரணைக்குள் நாவல் நுழையவில்லை.

கொழும்பு பல்கலைக்கழக வெளியில் எழுதப்படவேண்டிய நிகழ்வுகள் எழுதப்படவில்லை என்பதைக் குறையாகச் சொல்லும் அளவிற்கு லண்டனை நிகழ்வு வெளியாகக் கொண்ட பகுதியைச் சொல்லமுடியாது. ஆனால் தாராளவாதக் கருத்தியலையும் பெண்ணுரிமைச் சிந்தனைகளையும் ஏற்றுக்கொண்டதாகப் பாவனை செய்யும் ஐரோப்பிய நாடுகளில் உருவான அடிப்படைவாதப் போக்கொன்றை நாவலுக்குள் விவாதப் படுத்தும் வாய்ப்பு கைவிடப்பட்டுள்ளது என்பதைச் சுட்டிக் காட்டத்தான் வேண்டும்.

தேச எல்லைகளைக் கடந்து வெள்ளையர்களை ஏற்றுக்கொள்ளும் ஐரோப்பியர்கள் ஆசியர் களையும் வளைகுடா நாட்டு இசுலாமியர்களையும் ஏற்றுக்கொள்வதில்லை. நிறபேதம் காட்டுவதன் வழியாகவும் இனத்துவேசம் பேசுவதின் வழியாகவும் ஐரோப்பிய மையச் சிந்தனை கொண்டவர்களாக மாறிச் சில பத்தாண்டுகள் ஆகியுள்ளன.

கடும் உடல் உழைப்பைத் தரத்தயாராக இருந்தவரை இவர்களை ஏற்றுக்கொண்ட ஐரோப்பிய மனநிலை மெல்லமெல்ல மாறி வெறுப்பு நிலைக்கு நகர்ந்துள்ளது. அதன் வெளிப்பாடான நிகழ்வொன்றையே நாவல் உச்சநிலைக்காட்சியாக வைத்துள்ளது.

என்றாலும் இசுலாமிய விரோத மனப்பான்மையின் வரலாற்றுப் பின்னணியைக் காட்டும் கூடுதல் நிகழ்வுகளை நாவலில் இடம்பெறச் செய்திருக்கலாம்.

மதம், மொழி, நிறம், வர்க்கம் எனவேறுபாடுகளை முன்வைத்து மனிதர்களை ஒதுக்கும் வாழ்க்கை முறையைக் கைவிட்டு மெல்லமெல்ல எல்லாரையும் ஏற்றுக்கொள்ளும் மனிதநேய வாழ்நிலை நோக்கி நகர்ந்த ஐரோப்பிய வாழ்வில் உருவான இனவேறுபாடு சார்ந்த அடிப்படைவாத நிகழ்வுகளைத் தனது நாவலுக்குள் இடம்பெறச் செய்திருந்தால், மாஜிதாவின் நாவலுக்கு நிகழ்கால உலகப்பார்வை ஒன்று கிடைத்திருக்கும். அதைத் தவறவிட்டிருக்கிறார்.

அதற்குள் நுழையாமல் தடுத்தது பர்தா என்ற ஒற்றைப் பரிமாணத்தை மட்டும் பேசினால் போதும் என்று நினைத்ததே காரணம் என்று தோன்றுகிறது. அதே நேரம், ஐரோப்பாவில் தோன்றியுள்ள அடிப்படைவாதப் போக்கினால் தான் பூங்காவில் ஏற்பட்ட அவமதிப்பிற்குப் பின்னும் தனது அடையாளமான “பர்தா”வைக் கைவிடத் தயாரில்லை என்பதாகக் காட்டியுள்ளார் என்றும் தோன்றுகிறது. அந்த நிலையில் பர்தா, அரசியல் அடையாளத்தின் குறியீடாக மாறியிருக்கிறது.

...

பர்தா, புர்க்கா, ஹபாயா, ஹிஜாப் என ஒலிக்கும் சொற்கள் தமிழ்ச் சொற்கள் அல்ல. ஆனால் தமிழ் பேசும் இசுலாமியர்கள் வாழ்க்கையின் பகுதியாக மாறிக்கொண்டிருக்கும் சொற்கள். ஒரு கூட்டத்தின் வாழ்க்கைப் பகுதியாக மாறும் நிகழ்வுகள் மெல்லமெல்லப் பண்பாட்டு அடையாளங்களாக மாறுகின்றன. பண்பாட்டு அடையாளங்கள் சமயநம்பிக்கைகளாகவும் சடங்குகளில் பின்பற்ற வேண்டிய விதிகளாகவும் மாறிவிடும் நிலையில் சமயநெறிகளாக ஏற்கப்படுகின்றன. சமயநிறுவனங்கள் வலியுறுத்தும் இத்தகைய நடைமுறைகள் தனிமனிதர்களின் சுதந்திரத்திற்கும் விடுதலை உணர்வுக்கும் பெருந் தடைக்கற்களாக இருக்கின்றன என்று விமரிசனத்தை எதிர் கொள்கின்றன.

பர்தா இசுலாமியப் பெண்களின் நடைமுறை வாழ்க்கையில் பெருந்தடைகளை ஏற்படுத்தும் ஆடை என்பதை மாஜிதா போன்று இசுலாமியச் சமயவெளிக்குள் இருப்பவர்கள் சொல்லும்போது அதற்குரிய பொருத்தத்தை மறுக்க முடியாது. அதே நேரம் குறிப்பிட்ட சூழலில், நாட்டில் ஆட்சியதிகாரமும் பெரும்பான்மைப் பண்பாடும் தரும் நெருக்கடியான சூழலில் அதே ஆடைகள் தங்களின் தனியடையாளத்தைத் தக்கவைப்பதற்கான போராட்டக்கருவியாக ஆகும் என்பதும் நிகழ்கால உண்மை.

இந்திய இசுலாமிய மாணவிகளுக்கு ஹிஜாப் அணியத் தடை என்றொரு சட்டம் வந்தபோது உருவான எதிர்ப்புணர்வையும் போராட்டங்களையும் இப்போது நினைத்துக்கொண்டால் இது புரியவரும். ஒரே ஆடை அடிமைத்தனத்தின் அடையாளமாகவும், எதிர்ப்புணர்வின் ஆயுதமாகவும் இருப்பது நமது காலத்தின் சுவையான முரண். பின் நவீனத்துவம் இத்தகைய சுவையான முரண்களை உருவாக்கிக் கொண்டே இருக்கிறது. அதனை உள்வாங்கி எழுதும் எழுத்துகள் நமது காலத்தின் எழுத்துகளாகக் கொண்டாடப்படும்.

...

விவாதப்பொருள் சார்ந்து கவனம் பெற்றுள்ள பர்தா, நாவலின் வடிவம் மற்றும் சொல்முறைமை சார்ந்து முழுமையாக இல்லை என்பதைச் சொல்வதில் எனக்குத் தயக்கம் இல்லை. பொதுவாகப் பிரச்சினையைப் பேசும் நாவல்களில் இத்தகைய குறைகள் இருக்கவே செய்யும். வடிவ நேர்த்தி கொண்ட சிறுகதைகளை எழுதிய மாஜிதாவுக்கு இது முதல் நாவல் இனி எழுதும் நாவல்களில் இந்தச் சிக்கல்கள் உருவாகக் கூடாது என்பதால் சுட்டிக்காட்டல் தவறில்லை.

இந்திய இசுலாமிய மாணவிகளுக்கு ஹிஜாப் அணியத் தடை என்றொரு சட்டம் வந்தபோது உருவான எதிர்ப்புணர்வையும் போராட்டங்களையும் இப்போது நினைத்துக்கொண்டால் இது புரியவரும். ஒரே ஆடை அடிமைத்தனத்தின் அடையாளமாகவும், எதிர்ப்புணர்வின் ஆயுதமாகவும் இருப்பது நமது காலத்தின் சுவையான முரண்.

பின் நவீனத்துவம் இத்தகைய சுவையான முரண்களை உருவாக்கிக் கொண்டே இருக்கிறது. அதனை உள்வாங்கி எழுதும் எழுத்துகள் நமது காலத்தின் எழுத்துகளாகக் கொண்டாடப்படும்.



# மணப்பும் மட்டக்களப்புச் சமையலும்!

நீலாவணையில் ஏன் கிழக்கு மாகாணத்தில் பெரும்பாலும் எல்லா வீடுகளிலும் மதியச்சாப்பாடு மீன் குழம்பில்லாமல் அரங்கேறுவதே இல்லை.

அப்பா மாயாவலைத் தோணி வைத்திருந்த காலத்திலும் அதற்கு பின்னரும் கூட, மீன் குழம்பு, சொதி, பொரியல் என மீனின் வகையறாக்கள் சோற்றுத்தட்டுக்குள் நீந்திக் கொண்டிருக்கும்.

கடலில் நீந்துகின்ற மீன்களை விட, நாங்கள் குழம்பில் நீந்துகிற மீனைப் பார்த்தது தான் ஏராளம். முதல் மரியாதை சிவாஜி போல நாங்கள் மீன் குழம்பு சாப்பிடுவதே அலாதியானது. ஆனால் அதைப் படம் பிடிக்க பாரதிராஜாக்கள் இல்லை என்பது வருத்தத்திற்குரியது.

இப்படியாகத்தான் கீரிமீன் உப்பவியல் மட்டக்களப்பு குசினிகளில் தயாராகிறது!

சீரகக் கொச்சிக்காய், அல்லது சாதாரணக் குட்டி மிளகாயினை வழமைக்கு மாறாக கொஞ்சம் அதிகமாகவே எடுக்க வேண்டும். அதனுடன் சின்னவெங்காயமும் சேர்த்து மண்சட்டியில் வைத்து, சொட்டு நீரில் உலைமூடியை மூடி கொதிக்கவிட வேண்டும். பின்னர் அகப்பையால் கொச்சியை நன்கு கடைந்து விதைகளை வெளியேற்றுவதென்பது கறிக்கு சுவை கூட்டும் சங்கதியாகும்.

தேங்காய் பாலில்லாத இலங்கை நாட்டுக்கறி இது மட்டும் தான் போல..., பின்னர் தேவையான அளவு தண்ணீரை வைத்து அதற்குள் இரண்டு சிட்டிகை மஞ்சள் தூள், உப்பு, புளிமாங்காய்த்துண்டுகளை போட்டு கொதிக்க விட மாங்காயின் புளி விரவி உப்பவியல் ஒரு மணத்தை கொடுக்கும் பாருங்கள் அதன் மணமே தனி. இங்கு கொஞ்சம் அதிகமாகவே மஞ்சள் தூள் போட்டாலும் பரவாயில்லை.

**நீலாவணை இந்திரா**



mithanrajh@gmail.com

மீனின் வெடுக்கும் போகவேணும் தானே. கடைசியில் கொதிக்கும் நீரில் கீரி மீன்களை போட்டு, கள கள எனக் கொதிக்கவிட்டு இறக்கும் போது, மிளகுத்தூளை கஞ்சப்படாமல் கையளவில் கால் வாசி தூவி இறக்க வருகின்ற உப்பவியல்! மட்டக்களப்பு பெண்டுகளுக்கு மட்டுமே தெரிந்த மகத்தான கறி. அந்த மீனை சுடு சோற்றுக்குள் குழி வெட்டி உப்பவியலோடு நிரப்பி ருசிப்பதென்பது...

சா.... சொல்லவும் வேண்டுமா...

எனது “பதினொரு கதைகள்” எனும் கட்டுரையில் இடம்பெற்ற மேலுள்ள பத்தியுடன் இந்தக் கட்டுரையை ஆரம்பிக்கிறேன். ஒரு பிரதேசத்தின் தன்மை என்பது அங்குள்ள தரைத் தோற்ற அம்சங்களையும், உயிரற்ற சடப்பொருட்களையும் மட்டும் கொண்டு தீர்மானிக்கப்படுவதில்லை. அங்கு வாழும் மக்களின் வாழ்வியல் முறைமைகளிலிருந்தும், தொன்மத்திலிருந்தும், பண்பாட்டு கலாசார விழுமியங்களிலிருந்தும் கூட அறியக்கூடியதொன்றாகிறது. உண்மையைச் சொல்லப்போனால் புவியியலை விட, அப்புவியியல் சார்ந்த இனக்குழுமமொன்றின் சமூகவியலிருந்தே அக் குழுமம் என்ன வகையான வாழ்க்கை முறைமையை வாழ்ந்துள்ளது என

"...... மெய்ய தம்பீ! பாயோடை ஒட்ட வைக்கிற வித்தை இப்பவும் மட்டக்களப்பிலை இருக்கோ?"

......... அந்தப் பாயோட ஒட்ட வைக்கிற கதை ஒரு பேய்க்கதை. இவையல்லோ போய் இருந்திட்டு எழும்பாமல் குந்தியிடுகினம்.... அதுகள் மனசார நல்ல சனம். எங்கட கசவாரங்களைப் போலையே? இந்தக் காலத்துச் சடையப்ப வள்ளல்களைப் பார்க்க வேணுமெண்டால், மட்டக்களப்புப் பக்கத்து பெரும் போடிமாருடைய வீட்டைத்தான் போய்ப் பார்க்க வேண்டும்... சோறென்ன? பாலென்ன? தயிரென்ன? பழமென்ன? தேனென்ன? அவங்கள் எங்களைப்போல படலையைக் கட்டிப் போட்டு வந்திருந்தோ சாப்பிடுறவங்கள்?!......... இப்படியாக யாழ்ப்பாணத்தவரின் விருந்தோம்பலை குறையாகவும் மட்டக்களப்பின் உணவு வழக்கம் மற்றும் விருந்தோம்பலை சிலாகித்தும் எழுதுகிறவர் ஒரு மட்டக்களப்பார் இல்லை. யாழ்ப்பாணம் நல்லூரடியை பிறப்பிடமாகக் கொண்ட எஸ்பொ வே தனது "களரி" எனும் சிறுகதையில் இவ்வாறு எழுதுகிறார்.

அறிய முடிகிறது.

நியண்டதால் (பலாங்கொடை மனிதன்) மனிதனின் வாழ்க்கை முறைமையை அறிய முற்பட்ட ஆய்வாளர்கள் இலங்கையின் பாகியன்கல போன்ற குகைகளில் நடாத்திய ஆய்வுகளில் அவர்கள் உப்பின் பயன்பாட்டை அறிந்திருந்தனர் என்றும், ஈரப்பலா, நத்தை போன்றவற்றை உணவாகப் பயன்படுத்தினர் என்றும் கூறுகின்றனர். கீழடியில் அகழ்வாராய்ச்சி நடத்தியவர்களோ தந்தத்தால் செய்யப்பட்ட தாயக்கட்டைகளை, சீப்புக்களை அம்மக்கள் பயன்படுத்தியுள்ளதிலிருந்து அச் சமூகம் மேம்பட்ட செல்வச்செழிப்புள்ள சமூகமாக இருந்துள்ளமையை அடையாளங் காட்டுவதோடு மூடி கொண்ட பானைகள், ரோமானியாவிலிருந்து வருவிக்கப்பட்டதாக நம்பக்கூடிய நீர்க்குவளைகளை பயன்படுத்தியதிலிருந்து அவர்களது உணவுப் பரிமாறுகை தொடர்பான விடயங்களை முன்மொழிய எத்தனிக்கின்றனர்.

ஆகவே ஒரு இனக்குழுமத்தின் கலாசாரக் கூறுகளில் உணவின் முக்கியத்துவம் இன்றியமையாத தொன்றாகவே பார்க்கப்படுகிறது. குறித்த மக்களின் உணவிற்கான வளமும் தேடலும், சமையல் முறைகள் , பரிமாறுதல் நுட்பங்கள், புசித்தலுக்கான ஒழுங்குகள், விசேடமான உணவுக் கட்டுப்பாடு முறைகள், உணவு வகையறாக்கள் என்ற பல்வேறு பட்ட உப தலைப்புகளின் கீழ் ஆராய வேண்டியுமுள்ளது. அதிலும் மட்டக்களப்பாரின் உணவுப் பாரம்பரியமென்பது இலங்கைக்குள் இருக்கிறது பிற பிரதேசத்தை சேர்ந்த தமிழர்களுக்கே விளக்க வேண்டிய முக்கியத்துவம் வாய்ந்தது. ஏன்... எதற்காக... மட்டக்களப்புத் தமிழகத்தின் உணவு முறை அவ்வளவு விசேடித்த ஒன்றாக இருக்கிறது?!

எல்லா இனக்குழுமங்களிற்கும் உணவு முறைமை இருக்கின்றது தானே... மட்டக்களப்புக்கு மட்டும் மிகமுக்கியமானது இவ்விடயம் என்பதற்கு காரணமென்ன எனும் கேள்விக்காக கீழுள்ள பத்தியை நீங்கள் கண்டிப்பாக வாசிக்க வேண்டும்.

"...... மெய்ய தம்பீ! பாயோடை ஒட்ட வைக்கிற வித்தை இப்பவும் மட்டக்களப்பிலை இருக்கோ?"

......... அந்தப் பாயோட ஒட்ட வைக்கிற கதை ஒரு பேய்க்கதை. இவையல்லோ போய் இருந்திட்டு எழும்பாமல் குந்தியிடுகினம்.... அதுகள் மனசார நல்ல சனம். எங்கட கசவாரங்களைப் போலையே? இந்தக் காலத்துச் சடையப்ப வள்ளல்களைப் பார்க்க வேணுமெண்டால், மட்டக்களப்புப் பக்கத்து பெரும் போடிமாருடைய வீட்டைத்தான் போய்ப் பார்க்க வேண்டும்... சோறென்ன? பாலென்ன? தயிரென்ன? பழமென்ன? தேனென்ன? அவங்கள் எங்களைப்போல படலையைக் கட்டிப் போட்டு வந்திருந்தோ சாப்பிடுறவங்கள்?!.........

இப்படியாக யாழ்ப்பாணத்தவரின் விருந்தோம்பலை குறையாகவும் மட்டக்களப்பின் உணவு வழக்கம் மற்றும் விருந்தோம்பலை சிலாகித்தும் எழுதுகிறவர் ஒரு மட்டக்களப்பார் இல்லை. யாழ்ப்பாணம் நல்லூரடியை பிறப்பிடமாகக் கொண்ட எஸ்பொ வே தனது "களரி" எனும் சிறுகதையில் இவ்வாறு எழுதுகிறார்.

ஆகவே மந்திர தந்திர வித்தைகளால் யாழ்ப்பாணத்து ஆண்களை பாயோடு ஒட்ட வைத்து விடுவார்கள் வசியம் தெரிந்த மட்டக்களப்பார் என்பது யாழ்ப்பாணத்தவரின் மனங்களில் புரையோடிப்போயுள்ளது. இதற்காக யாழ்ப்பாணத்தில் இருந்து மட்டக்களப்புக்கு வரும் ஆடவர்களுக்கு பாய், தலையணை முதலியவற்றை அவர்களது வீட்டார் கொடுத்தனுப்பிய வரலாறுகளும் உள்ளது. அதன் பின்னணி வசியமோ , சூன்யமோ அல்ல மட்டக்களப்பாரின் உணவு வழக்கமும், விருந்தோம்பலுமே என்பதை இன்று வரை விளக்க வேண்டியிருக்கிறது. அப்படியென்ன தனித்துவமான சமையல், தனித்துவமான உணவு மட்டக்களப்பில் என்று வினவுகிறவர்களும் உண்டு.

கிட்டத்தட்ட இந்தியாவின் கேரள மாநிலத்தின் நிலவியலைப் போன்ற தன்மையை கொண்டமைந்த மட்டக்களப்பு சார்ந்த பெருநிலப்பகுதி. சுமார் பத்தாயிரம் சதுர கிலோமீட்டர் பரப்பளவில் அமைந்துள்ளமையும், தன்னுடைய இரு கரைகளில் கடலோடு இணைந்த

சூரியன் எழும், எழுவான் கரையாக நெய்தலையும், மேற்கே இலங்கையின் அண்சமவெளி மலைகளையும், சிறு காடுகளையும், வயல் வெளிகளை உள்ளடக்கிய சூரியன் அஸ்தமிக்கும் (படுகிற) படுவான்கரையினையும், இடையே ஊடறுக்கும் முந்தனையாறு, மகிழவெட்டுவான் ஆறு, பட்டிப்பளை ஆறு, மாதுறு ஓயா, ஹெட ஓயா, வில்லோயா போன்ற ஆற்றுப் பள்ளத்தாக்குகளையும், அவற்றோடு சுமார் 45 கிலோமீட்டர்களாக பரந்துவிரிந்த களப்புக்களையும் கொண்ட உணவிற்காக அடிப்படை மூலங்கள் நிறை இடமாக விளங்குகிறது.

இவ்வாறான மட்டக்களப்பின் நிலவியல் என்பது உணவு வளத்திற்கு குறைவில்லாத பிரதேசம் என்பதோடு அங்குள்ள உணவிற்கான மூலங்கள் பல்வகைமை நிறைந்ததாகவும் உள்ளமையே, தினம் தினம் ஒரு கறி வகையும், விருந்துமாக மட்டக்களப்பாரின் உணவுமுறை மாறிவிடக் காரணமாகிறது.

நீண்ட கால வரலாற்றை கொண்ட கிழக்கின் எழுவான் கரையின், கடல் சார்ந்த மீன்பிடியில் கிடைக்கும் கரையோர மற்றும் ஆழ் கடல் மீனினங்களும் , படுவான்கரையின் ஆறுகள், குளங்கள் சார்ந்த நன்னீர் மீனினங்களும், உணவிற்கு சுவை என்றால் கடலோடு இணைந்த மட்டக்களப்பு வாவியில் விரிந்து கிடக்கும் சவர் நீரில் வாழும் மீனங்களும், இறாலும் இன்னொரு ரகம். மேலும் படுவான்கரையை அண்மித்த இடங்களில் கிடைக்கும் நண்டும், கூனியும் என மீனின உணவுகளில் பல்வகைமை காட்டுகிறது மட்டக்களப்பு. மட்டக்களப்பு இறால், கிட்டங்கிச் செப்பலி, துறையடி நண்டு, கல்லாத்துக் கூனியென்று ஊருக்கொரு சிறப்பு உணவாக மீனுணவுகள் கிடைக்கின்றன.

இது மட்டுமல்லாமல் களுதாவளைக் கத்தரிக்காய், மண்டூர்க் கீரை, நீலாவணைப் பொன்னாங்கண்ணி, சேனையூர்க் கிழங்குகள் என்று ஒவ்வொரு ஊர்களும் தனித்துவமான மரக்கறிகளைக் கொண்டிருக்க, கரையோரத்தில் நீண்டிருக்கும் பெரும்பாலான கிராமங்களில் காலையில் (காணி) மரக்கறிகளை பயிரிடுவது வழக்கமாயுள்ளது. சம்மாந்துறை அரிசி என்றால் கொழும்பு வரை பிரபலமாக உள்ளதே!

சிவப்பு நாட்டரிசி,வெள்ளை நாட்டரிசி, சின்ன வெள்ளை, போளை, அல்லிக்கட்டி, வால்சிவப்பு, கீரிசம்பா என அரிசியிலே அறுசுவையே தாண்டும் திறமெல்லாம் மட்டுவில் மட்டுமே உண்டு. வாகரைச் சோளன், கரடியனாறுக் கச்சான் என்று தானியங்களை ஒரு வரிசை செய்யலாம். இதைத் தாண்டி பழுகாமத் தயிரும், தேனும், தினை மாவும் கூடுதல் ருசி சேர்க்க போதியளவு தெங்கும், பனையும் பழங்களும் நிறை நிலமாக மட்டக்களப்புத் தமிழகம் விரிந்திருப்பது அடுத்த சிறப்பாகும்.

இவைகளைத் தாண்டியும் மட்டக்களப்புக்கேயுரிய சிறப்புணவுகள் பல இருக்கின்றன. இறால் தக்காளிப் பழச்சொதி, கீரிமீன் உப்பவியல், கூனி போட்ட திராய்ச் சுண்டல், இடியப்பமும் பால்சொதியும், மண்டூர் கீரையுடன் மிளகு, வெள்ளைப்பூண்டு போட்ட அரைச்ச கறி, களுதாவளை கத்தரிக்காய் பால்கறி, கிழங்குப் பொரியலும் பாபத் கறியும், பருப்பு வடை - கூனிச்சம்பல் குலுக்கல், படுவான்கரை பொட்டியான் மீன் குழம்பு, சள்ளல் மீன் மிளகு தண்ணிக்கறி, ஏறு கெளுத்திமீன் மாங்காய் கறி சோளமாப்புட்டும் கூனி போட்ட சுரைக்காய் கறியும் என்று பல உணவு வகைகளை குறிப்பிடலாம்.

இன்று கொத்துரொட்டியினை இலங்கைக்குரிய உணவாக பிரகடனப்படுத்துவதில் மும்முரம் காட்டுகிறார்கள்.

அந்தக் கொத்து ரொட்டியின் தாய்வீடே மட்டக்களப்புத்தானே! இவைகளைத் தாண்டியும் மட்டக்களப்புக்கேயுரிய சிறப்புணவுகள் பல இருக்கின்றன. இறால் தக்காளிப் பழச்சொதி, கீரிமீன் உப்பவியல், கூனி போட்ட திராய்ச் சுண்டல், இடியப்பமும் பால்சொதியும், மண்டூர் கீரையுடன் மிளகு, வெள்ளைப்பூண்டு போட்ட அரைச்ச கறி, களுதாவளை கத்தரிக்காய் பால்கறி, கிழங்குப் பொரியலும் பாபத் கறியும், பருப்பு வடை - கூனிச்சம்பல் குலுக்கல், படுவான்கரை பொட்டியான் மீன் குழம்பு, சள்ளல் மீன் மிளகு தண்ணிக்கறி, ஏறு கெளுத்திமீன் மாங்காய் கறி சோளமாப்புட்டும் கூனி போட்ட சுரைக்காய் கறியும் என்று பல உணவு வகைகளை குறிப்பிடலாம்.

பேராசிரியர் சி. மௌனகுரு அவர்கள் ஆரையம்பதி வலைத்தளத்தில் எழுதிய "மட்டக்களப்பு உணவுச் சுவை" எனும் கட்டுரையில் படுவான்கரையின் பிஞ்சுக் கத்தரிக்காய் கணையான் கருவாட்டு வெள்ளைக்கறியை சிலாகித்து எழுதியிருப்பதுடன், முல்லை, முசுட்டை, முடக்கொத்தான், குறிஞ்சா, அகத்தி, இலட்சகட்டை, பிரண்டை, முருங்கை ஆகிய மருத்துவக்குணம் மிக்க மூலிகைகளை உணவாக்குவது பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் சுங்கான், உழுவை,விரால், பறட்டை, பனையான், ஏறுகெழுத்தி, ஐயா மாசி, கச்சப் பொட்டியான் என மட்டக்களப்பில் அதிகப் பயன்பாட்டிலுள்ள குளத்து மீன்களையும் குறிப்பிடுகிறார்.

இவற்றோடு மட்டக்களப்பு முஸ்லீம் மக்களிடமுள்ள வண்டப்பம், சமோசா, பாலப்பம் , மாட்டு, ஆட்டு சூப் வகையறா பற்றியும் எழுதுகிறார். இப்படியாக மட்டக்களப்பின் உணவு வகையறா பற்றி வந்த கட்டுரைகள் மிகவும் குறைவாகவேயுள்ளன.

வழக்கமான மட்டக் களப்புச் சாப்பாடும் அதன் தன்மையும் காலமாற்றத்தோடு மாற்றத்திற்குட்பட்டாலும் அதன் அடிப்படைத் தன்மையிலிருந்து அது விலகவேயில்லை என்பது கண்கூடு.

தினசரி காலை உணவுகளில் பழஞ்சோறும், பாற்சோறும், தயிர்சோறும், பழக்கரையலும் உணவாக இருந்தன. இரவு சமைத்த சோற்றில் நீரூற்றி வைத்து அடுத்த நாள் காலையில்

உப்பு, வெங்காயம், கொச்சிக்காய் சேர்த்து பிசைந்து உண்ணும் வழக்கம் இன்றுவரை தொடர்கிற ஒன்று. சிலர் இதில் தேங்காய்ப்பூ சிறிதளவைச் சேர்த்து மாசித்துண்டுகளைக் கடித்துக் கொண்டோ, அல்லது சுடப்பட்ட சூடைக்கருவாட்டைக் கடித்துக்கொண்டோ உண்பது வழக்கமாயிருக்கிறது.

சுடப்பட்ட செத்தல் மிளகாயை, பச்சை மிளகாய்க்குப் பதிலாகப் பயன்படுத்துவோரும் உண்டு. மேலும் எருமைப்பால் அல்லது தயிரைச் சேர்த்து சீனி போட்டுப் பிசைந்த சோற்றை உண்பதும் வழக்கமானதொரு காலை நேர உணவு முறையே் இதைத்தவிர கறுத்தக் கொழும்பான் மாம்பழம், வாழைப்பழம், விளாம்பழம் என்பவற்றை சோற்றுடன் சேர்த்து சீனி, கட்டித் தேங்காய்ப்பாலை ஊற்றிப் பழக்கரையல் செய்து சாப்பிடுவது அலாதியானது. பழங்கள் இல்லாவிட்டால் புளியம்பழம் கூட அதில் சேர்மானமே. மேலும் இடியப்பம், புட்டு, இட்லி, தோசை என்பவற்றை மாசிச்சம்பல், தேங்காய்ச் சம்பல் , இரண்டாம் தேங்காய்ப்பால் விட்டு பின்னர் தலைப்பால் விட்டு சமைக்கும் சொதியுடன் உண்பதும் இன்றைய காலை வழக்கமாக இருக்க, சிலர் பரோட்டா, எண்ணையில் பொரித்த உணவுகள், மரக்கறி ரொட்டி என மடைமாற்றமடைகின்றனர்.

மட்டக்களப்பின் தினசரி மதிய உணவு ஒரு சிறுவிருந்தின் கூறாகவே இருக்கிறது. குழம்பு, பால்கறி, சொதி, சுண்டல், பொரியல் என்பவற்றோடு தயிரும் பழமுமாக நிறைவடைகிற தன்மை மட்டக்களப்பாருக்கு சாதாரணமானதொன்று.

இந்த வழக்கமான குழம்பு மச்சம், மாமிசம் சார்ந்தே அமைகிறது. இந்தக் குழம்பு எனும் சமையலுக்கான சரக்குத் தூளை (மசாலா) மட்டக்களப்பார் தங்கள் வீடுகளிலே தயாரித்துக் கொள்ளுகின்றனர். சாதாரணமாக ஒரு குடும்பம் ஒரு மாத காலத்திற்கு தேவையான குழம்புக் கறித்தூளினை இந்த அளவீடுகளில் தயாரிக்கிறது. செத்தல் மிளகாய் ( சிவப்பு காய்ந்த மிளகாய்) 500 கிராமிற்கு, ஒரு கிலோ மல்லி, 100 கிராம் சின்னச் சீரகம், 100 கிராம் பெருஞ்சீரகம், 100 கிராம் மிளகு , 50 கிராம் கட்டி மஞ்சள் தேவையான அளவு கறிவேப்பிலை சேர்த்து நன்கு வறுத்தபின்னர் இடித்து எடுக்கப்படும் இம் மாசாலாவே பெரும்பாலும் கிழக்குப் பகுதிகளில் இருக்க, இன்று சந்தையில் கிடைக்கிற மசாலா வகையறாக்களையும் பயன்படுத்துகின்றனர்.

மேலும் மிளகுதண்ணிக்கறிக்காக அரைக்கப்படும் மசாலா பற்றிய விபரங்களை பத்தியக்கறிக்குள் பார்ப்போம். அடுத்து மதிய உணவுகளில் நாட்டு மரக்கறிகளை அடிப்படையாகக் கொண்ட வெள்ளைக்கறி எனும் கறியையும், அடுத்து மட்டக்களப்பின் விசேடித்த உணவாக இருக்கிற சொதி அல்லது ஆணமும் இதில் அடங்குகிறது. மஞ்சள் தூளை பிரதானமாகக் கொண்டு இறால், சில மீனினங்கள், மரவள்ளி மற்றும் உருளைக்கிழங்கு போன்ற கிழங்கு வகைகள் மற்றும் சிலவேளைகளில் மரக்கறிகளைக் கொண்டு சமைக்கப்படும் சொதி பிரதான இடம் வகிக்கிறது.

இதில் தேங்காயைப் பிழிந்து முதலாவதாகப் பெறப்படும் தலைப்பாலும், மேலும் நீர் சேர்த்து தேங்காய்ப்பூவினை பிழிகையில் கிடைக்கிற இரண்டாம் நிலை தண்ணிப்பாலும் சேர்க்கப்படுகிறது. மேலும் தீயல் என்று பிறாராலும் பொரியல் என்று மட்டக்களப்பாராலும் அழைக்கப்படும் தேங்காய் எண்ணையில் பொரித்த உணவுகளும் மதிய உணவில் பிரதானமாகிறது. இதைத்தவிர யாழ்ப்பாணத்தவரால் வறை என அழைக்கப்படுவதும், மட்டக்களப்பாரால் சுண்டல் என அழைக்கப்படுவதுமான தேங்காய்ப்பூ சேர்த்து செய்யப்படும் இலைக்கறி வகைகள் முதன்மை இடத்தைப் பிடிக்கின்றன.

**தீயல் என்று பிறாராலும் பொரியல் என்று மட்டக்களப்பாராலும் அழைக்கப்படும் தேங்காய் எண்ணையில் பொரித்த உணவுகளும் மதிய உணவில் பிரதானமாகிறது. இதைத்தவிர யாழ்ப்பாணத்தவரால் வறை என அழைக்கப்படுவதும், மட்டக்களப்பாரால் சுண்டல் என அழைக்கப்படுவதுமான தேங்காய்ப்பூ சேர்த்து செய்யப்படும் இலைக்கறி வகைகள் முதன்மை இடத்தைப் பிடிக்கின்றன.**

இப்படியான மதிய உணவு சுண்டல், பொரியல், குழம்பில் ஆரம்பித்து பின்னர் வெள்ளைக்கறியுடன் சாப்பிட்டு, புதிதாக சோறு சேர்த்து சொதியை முழுவதுமாக நிறைத்து ஒரு பிடி பிடிக்கின்றனர். அப்போதும் முடிந்த பாடில்லை. தட்டை மீண்டும் நன்கு சுத்தப்படுத்தி விட்டு சிறிதளவு சோற்றுடன் தயிர், சீனி சேர்த்து வாழைப்பழத்துடன் நிறைகிறார்கள். அடுத்த கட்டமாக சிலர் வேறு பழங்களை உண்பதுமுண்டு.

அடுத்து இரவு உணவாக சோற்றையும், மதியம் செய்த கறியுடன், புதிதாக வைக்கப்படுகிற ஒரு குழம்போ, சொதியோ சேர்க்கின்றனர். சிலர் பிட்டு, இடியப்பம் என்று சமைப்பது தற்போது அதிகரித்துள்ளதொன்றாகிறது. இதனடிப்படையில் மட்டக்களப்பாரின் தினசரி உணவு என்பது பெரும்பாலும் மூன்று வேளையும் சோற்றை அடிப்படையாகக் கொண்டு அமைவதுடன், கடலுணவுகள், இறைச்சி வகைகள் என மாமிசங்களோடுமே இருக்கிறது.

இதில் மசாலாவும் தேங்காய்ப்பூ, தேங்காய்ப்பால், தேங்காயெண்ணை பிரதான இடம் வகிப்பதாயுமுள்ளது. இந்த தேங்காய் சார்ந்த உற்பத்திகளை அதிகம் பயன்படுத்துகிற தன்மை கேரள மக்கள் மற்றும் இலங்கைச் சிங்களவர்களைப் போலவுமுள்ளது. அடுத்து அம்மன் கோவில்கள் திறந்தால் மட்டக்களப்பு முழுவதும் மரக்கறி மயமாக மாறிவிடுகிறது. அதைத் தவிர்த்து பெரும்பாலும் மட்டக்களப்பு உணவு என்றாலே மச்சமும், மாமிசமுமே எல்லோருக்கும் ஞாபகத்திற்கு வரும்.

இதைத்தவிர மட்டக்களப்பு உணவு முறையில் "பத்திய உணவு" என்பது முக்கியமாக இருக்கிறது. வயதுக்கு வந்த பெண்களுக்கும், குழந்தை பெற்ற பாலூட்டும் தாய்மாருக்கும் முக்கியத்துவமானதாக பத்திய உணவு முறைகள் கையாளப்படுகின்றன. மட்டக்களப்பின் மண்டூர்ப்பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்டு சு.சிவரெத்தினம் அவர்கள் எழுதிய அரிதான கட்டுரையொன்றில் இவைகளைப் பற்றிக் காணக்கூடியதாகவுள்ளது. சு.சிவரத்தினம் அவர்கள் எழுதிய தகவல்களுடன் மேலதிக தகவல்களையும் இணைத்து அடுத்த பகுதியை



இன்று கொத்துரொட்டியினை இலங்கைக்குரிய உணவாக பிரகடனப்படுத்துவதில் மும்முரம் காட்டுகிறார்கள். அந்தக் கொத்து ரொட்டியின் தாய்வீடே மட்டக்களப்புத்தானே!

வாசகர்களாகிய உங்களுக்குத் தருகிறேன்.

பிள்ளை பெற்ற தாய்மார்களுக்கு பிள்ளை பிறந்த அன்று அசமதாகம் கலந்த கோப்பி கொடுக்கப்படுவதுடன், அடுத்த சில நாட்களுக்கு “மிளகுதண்ணிக் கறி” கொடுப்பதாக கூறுகிறார். இந்த மிளகுதண்ணிக் கறிக்கான கறித்தூள், குழம்பிற்கான கறித்தூள் அளவு முறைகளிலிருந்து வேறுபடுகிறது.

150 கிராம் செத்தல் மிளகாயுடன், 250 கிராம் மல்லி, 100 அல்லது 150 கிராம் மஞ்சள் , 100 கிராம் மிளகு என்பவற்றோடு 150 கிராம் ஓமமும் ( அசமதாகம்) சேர்க்கப்படுகின்றது. இதனை நீரில் கழுவி காயவைத்து பொடியாக அரைக்கப்படுகிறது. இதில் கிரந்தி இல்லாத சுறா, பாற்சுறா, தெரலி, ஊடகத்தெரலி, காரல், உழுவை, சுங்கான் போன்ற மீனினங்களோடு, தேங்காய்ப்பூ அல்லது கொட்டைத் தேங்காயை அரைத்து கொறுக்காப்புளி, வெள்ளைப் பூண்டு மற்றும் குறித்த கறித்தூளை சேர்த்து சமைக்கின்றனர். சில நாட்களின் பின்னர் கைக்குத்தல் அரிசிக் கஞ்சி கொடுப்பதும் வழக்கமாகவுள்ளது.

சாமர்த்தியமடைந்த, வயது வந்த பெண்களுக்கு இரத்தப்போக்கு இருப்பதால் அதிகளவு புரதச்சத்து மற்றும் எண்ணைச் சத்து நிறைந்த உணவுகளை வழங்குகின்றனர். வேப்பெண்ணையை குடிக்க கொடுப்பதுடன், நாட்டுக்கோழி முட்டையை பச்சையாக உண்ணவும் கொடுக்கின்றனர்.

மேலும் தேங்காயெண்ணையைத் தவிர்த்து நல்லெண்ணையுடன் நாட்டுக்கோழி முட்டையைப் பொரித்தும் கொடுக்கின்றனர். இதைத் தவிர்த்து சு.சிவரெத்தினம் அவர்கள் எழுதுகிற வற்றில் முக்கியமானது யாதெனில், பச்சையரிசி மாவில் செய்த பிட்டினை வெள்ளைத்துணியொன்றில் நல்லெண்ணை விட்டுக் கட்டி பெண்ணின் உடலெங்கும் ஒத்தடம் இட்ட பின்னர் அதனை அப்பெண்ணுக்கு உண்ணவும் கொடுப்பர். இங்கு உப்புச் சேர்க்கப்படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அதன் பின்ன செத்தல் கிழித்துப் போட்ட முருங்கையிலைச் சுண்டலுடன் சோறு கொடுப்பது வழக்கமாயிருக்க முறையொன்றாகிறது. இப்படி பத்தியச் சாப்பாட்டு முறைகளிலும் சில விசேடமான தன்மைகள் மட்டக்களப்பாருக்கு இருக்கின்றன.

மட்டக்களப்பார் பாயோடு ஒட்ட வைப்பார் என்பதன் உட்பொருளென்ன? மட்டக்களப்பின் உணவுப் பன்மைத்துவங்களுக்கான காரணங்கள், மட்டக்களப்பின் விசேடமான உணவுகளும் அவற்றுடன் தொடர்புபட்ட ஊர்களும், மட்டக்களப்பின் தினசரி உணவுகளும் - உண்ணப்படும் ஒழுங்குகளும், கறித்தூள் சரக்குகளும் ஏனைய சமையல் பண்டங்களும் மற்றும் விசேட நிலைமைகளில் உண்ணப்படும் பத்திய உணவுகளின் வகைகளும் அவை தயாரிக்கப்படும் முறைமைகளும் என பல விடயங்களை சிறுகுறிப்புக்களாக அலசிய கட்டுரை இறுதியாக கட்டுரையின் தலைப்பிற்குள் நுழைகிறது.

மட்டக்களப்பு வழக்காற்றுச் சொற்களில் உணவு சார்ந்த ஒரு சொல்லாக இருக்கும் “மணப்பு” பற்றி அண்மையில் முகநூலில் ஒரு நண்பர் எழுப்பிய கேள்வியே இக்கட்டுரையின் அடிநாதமாக அமைந்தது. ஆதலால் மணப்போடு இந்தக் கட்டுரையை முடிக்கிறேன்.

மேலுள்ள கட்டுரையிலிருந்து எளிதாக புரிந்து கொள்ளக்கூடிய ஒரு விடயம் மட்டக்களப்பார் மரக்கறி உணவுகளுக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை விட மாமிச, கடலுணவுகளுக்கு கொடுக்கும் முக்கியத்துவமே அதிகமானதென்பதாகும். அதன் நீட்சியாக மரக்கறிக் கறிகள், இலைச்சுண்டல்கள் செய்தால் கூட அதில் மச்ச உணவுகளை சிறிதளவில் சேர்ப்பார்கள். அது காய்கறிகளுக்கு, இலை தளைகளுக்கு மச்ச உணவின் சுவையையையும், மணத்தினையும் அதிகரிக்கும். இதன் போது இவற்றை அதிகளவில் போடுவதில்லை, சாதாரணமாகவே குறைவாக இடுவார்கள். இதனாலே இவற்றை மணப்பு என்கின்றார்கள். கீரி மீன், சாளை மீன், உழுவை மீன், சென்னக்கூனி, தேடகக்கூனி, இறால் கூனி, சிறிய இறால், ஐயா மாசி, மாசித்துண்டுகள், கணையான், சுங்கான் கருவாட்டுத்துண்டுகள் போன்றவற்றை இவ்வாறான கறிகளில் சேர்த்து மரக்கறியைக்கூட மச்சமாகவே புசிக்கும் பழக்கம் இவர்களுக்கிருப்பது தனித்துவமானதே!

இவ்வாறான தனித்துவமுடைய மட்டக்களப்பு குசினிகளில் சமைக்கப்படும் உணவுகளைத் தேடி போகும் பயணங்களில் கிராமத்திற்கு கிராமம் தனித்துவமான பல உணவுகள் கிடைக்கின்றன. ஆரோக்கியத்தை அடிப்படையாகக் கொண்டு சமைக்கப்படும் இச் சமையலை வெறும் பெண்டுகளின் சமாச்சாரம், அடுப்படிக்கதை ஆண்களுக்கு எதற்கு என்று விலகிக் கொள்கிற போக்கு இன்றி அவ் உணவை மட்டுமல்லாமல், அவ் உணவுத் தயாரிப்பின் பின்னால் உள்ள பெண்களின் உழைப்பையும் காலத்தையும் மதிப்போமாக!

# பறக்குது பார், கொடி பறக்குது பார்!




## உருட்டும் புரட்டும்

இறுதியுத்தத்தில் புலிகள் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். புலிகளால் தடுத்து வைக்கப்பட்டு, மனிதக் கவசங்களாகப் பயன்படுத்தப்பட்டு, இடையில் அகப்பட்ட மக்கள் கொல்லப்படுகிறார்கள்.

உலகெங்கும் தலைநகர்களில் பெரும் ஆர்ப்பாட்டம்.

புலிக் கொடியோடு!

ஏற்கனவே புலிகள் பயங்கரவாத அமைப்பு என்று சர்வதேச நாடுகள் புலிகளைத் தடை செய்திருந்தன. தடை செய்யப்பட்ட அமைப்பின் கொடியைத் தாங்கியபடியும் புலிப் போராளிகள் மாதிரி உடைகளோடும் பெரும் கூத்து நடந்தது.

'உங்களுக்குப் பயங்கரவாதியாக இருக்கலாம், ஆனால் எங்களுக்கு அவர்களுக்கு புனிதப் போராளிகள்' என்பது தான் யாழ்ப்பாணிகளின் வாயில் இந்த ஊடகவியல் அயோக்கியர்கள் திணித்த வார்த்தைகள்.

விழுங்கிய முட்டாள்கள் வாந்தி எடுத்துக்கொண்டிருந்தார்கள்.

இப்படி, புலிக்கொடியோடு ஆர்ப்பாட்டம் செய்த போதெல்லாம், தாயகம் இணையத்தளத்தில் 'மக்களின் அழிவை முதன்மைப் படுத்துங்கள், அப்போது தான் சர்வதேச அனுதாபம் கிட்டும்' என்று திரும்பத் திரும்ப எழுதிக் கொண்டிருந்தேன்.

ஆனால், புலிக் கொடியைப் பிடித்தபடியே...

Our leader Prabhaharan.
We want Tamil Ealam.

மக்கள் அழிவு அவர்களுக்குப் பிரச்சனையாகவே இருக்கவில்லை.

புலிகளை அங்கீகரிக்க வேண்டும் என்பதே அவர்களின் கோஷமாக இருந்தது. அதிலும் மக்களும் போராளிகளும் அழிந்தாலும், தலைவர் தப்பினால் காணும் என்பது தான் அவர்களின் உண்மையான நோக்கம்.

கடைசியில் சர்வதேச தலைநகரங்களில் சர்வதேசத்தின் கவன ஈர்ப்பைப் பெற எடுக்கப்பட்ட முயற்சி தோல்வியில் முடிந்தது.

சர்வதேசம் புலியையும் யாழ்ப்பாணிகளையும் நன்றாக 'வைச்சுச் செய்து' விட்டது.

ஆனால், பழக்க தோசம்.

புலிக்கொடியை விட முடியவில்லை.

இன்றைக்குப் புலிகளும் இல்லை. அது பயங்கரவாத இயக்கம் என்று அமுல்படுத்தப்பட்ட தடைகளும் நீக்கப்படவில்லை. இலங்கை அரசியலில் புலிக் கொடி தேர்தல் நேரத்தில் சிவப்பு மஞ்சள் கொடியாவதைத் தவிர, தூக்கப்படுவதில்லை.

யுத்தம் முடிந்து பதினான்கு ஆண்டுகளாகின்றன.

தலைவரும் நெடுமாறனின் கொல்லைப்பக்க பங்கரில் இருந்து வெளியே வருவதாகவும் இல்லை.

ஆனால், புலன் பெயர்ந்த முட்டாள்கள் இன்றைக்கும் புலிக் கொடியை விடுவதாக இல்லை.

சுவிட்சலாந்தில் வருடாந்தம் நடைபெறும் ஐ.நா அமர்வுக்கு கொடி பிடிக்கும் காவடி இன்னும் முடிவுக்கு வரவில்லை. இம்முறையும் கொடிகளைத் தூக்கியபடியே கோஷம் போடுகிறார்கள்.

எந்த தலைநகரில் புலிகள் ஒரு நிகழ்வை ஒழுங்கு செய்தாலும், அங்கே கடல் போல புலிக்கொடிகள் பறப்பதை உறுதி செய்து கொள்கிறார்கள்.

இவர்கள் எதைச் சொல்ல வருகிறார்கள்?

எதையும் இல்லை.

கொடி பிடிக்கிற

முட்டாள்களுக்கு ஏன் எதற்குப் பிடிக்கிறோம் என்பது தெரியாது. அதைப் பிடிப்பதால் தீர்வு கிடைக்கும் என்று நம்புகிறார்கள் என்றால், அவர்கள் தலைவர் சொன்ன ‘வரலாறு வழிகாட்டி’ உளறலைக் கூட நம்பவில்லை.

அப்போ இந்தக் கொடி பிடித்தலின் பின்னணி என்ன?

புலிக்கு பணம் சேர்த்துக் கொழுத்தவர்கள் பலர் மில்லியனர்களாகி ஒதுங்கிக் கொண்டு விட்டார்கள். இன்னமும் பணம் பறிக்கலாம் என்ற எண்ணத்தில் ஒரு கூட்டம் இன்றைக்கும் நடமாடிக் கொண்டிருக்கிறது.

இந்தக் கூட்டம் தான் நெடுமாறன், சீமான் போன்றவர்களின் பைனான்சியர்கள். பிரபாகரனின் மனைவி, பிள்ளை என்றெல்லாம் மாறுவேடத்தில் பெண்களைக் கொண்டு வந்து ஏமாற்றி பணம் பறிக்க முயலும் கூட்டம்.

சந்தைக்கடைச் சண்டியன் போல, பயந்து மிரண்டு போகிறவர்களிடம் தான் திரும்பத் திரும்ப மிரட்டி பணம் பறிக்கிற கூட்டம்.

அதனால் தான், பிரபாகரனுக்கு நோய், மாறுவேடத்தில் மனைவி, மகள் என்று கதை சொன்னவுடன் பணத்தை வீசியிருக்கிறது இந்த விளப்பமான கூட்டம்.

இந்த சமூக விரோத அயோக்கியர்களின் கைவசம் முன்பு வாங்கிக் குவித்த கொடிகள் இருக்கின்றன.

இப்படிக் கூடிக் கோஷம் போட்டால் தீர்வு வரும் என்று நம்புகின்ற விளப்பமான முட்டாள் கூட்டம் இங்கே நிறைய.

இதற்காக அடிக்கடி அஞ்சலிகள், எழுச்சிகள், பொங்குகள், கொதிப்புகள், காட்டங்கள், கார் பவனிகள் எல்லாம் அரங்கேற்றப்படும்.

அங்கே புலிக் கொடி பிடித்தால் தீர்வு கிடைக்கும் என்ற பிலிம் காட்டப்படும்.

கொடி பிடிப்பதற்காக இலவசமாகக் கொடுக்கப் படுவதில்லை.

பணத்திற்குத் தான்.

அதையும் அங்கு விற்கப்படும் கொத்துரொட்டி, மட்டன் றோலையும் விலை கொடுத்து வாங்கி, தன் தமிழ்த் தேசிய உணர்வை வெளிக்காட்ட இந்த முட்டாள் கூட்டம் முண்டியடிக்கும்.

ஊடகவியலாளர்கள் என்ற தான்தோன்றி அயோக்கியர்கள் இதையெல்லாம் படம் பிடித்து தமிழர் எழுச்சி என்று படம் காட்டுவார்கள்.

உண்டியல் நிறையும்.

இந்தக் கொடிகளை விற்பதற்காகவே பல நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன.

ரொறன்ரோவில் கார் பவனி நடைபெறும்.

என்ன, சர்வதேசத்தின் கவன ஈர்ப்புத் தான். காரில் கொடி பிடித்தபடி இந்த விளப்பமான கூட்டம் ஹோர்ண் அடித்தபடியே கவனத்தை ஈர்க்கும். அதை இங்குள்ள ஊடகங்கள் கணக்கெடுக்காது. அரசியல்வாதிகளுக்கு இதெல்லாம் கண்ணிலேயே படாது.

வழமை போல, ‘பொங்குதமிழர் எழுச்சி கண்டு அதிர்ந்தது சர்வதேசம்! என்று தமிழ் ஊடக அயோக்கியர்கள் படம் காட்டுவார்கள்.

யாருக்கு லாபம்?

கொடி விற்கிறவர்களுக்குத் தான்.

வேறு யாருக்கும் இல்லை.

இவர்களால் போக்கு வரத்துக்கு ஏற்படும் இடைஞ்சல் களால் எரிச்சல் உறும் மற்ற வாகனச் சாரதிகளின் கவனத்தைத் தவிர இவர்கள் வேறு எவரினதும் கவனத்தை ஈர்ப்பதில்லை.

ஆயிரம் கார் பவனி என்று சுய இன்பம் அடைவதுடன், வாகனப் பேரணி நிறைவு பெறும்.

கொடியும் கொத்து ரொட்டியும் மட்டன் றோலும் விற்றவர்கள் பணத்தை எண்ணிக் கொண்டே துள்ளுநடை போடுவார்கள்.

புலி இருந்த காலத்தில் இந்தக் கொடியோடு இவர்கள் செய்த சேட்டைகள் சொல்லில் அடங்கா.

எந்த நிகழ்ச்சி என்றாலும் கொடியேற்றம் என்பதோடு முடிந்து விடுவதில்லை. பிறகு கொடி இறக்கம் என்று ஒன்று இருக்கும்.

இரண்டுக்கும் வன்னியில் வேலை மினக்கெட்ட யாரோ விதிமுறைகள் எழுதி வைத்திருந்தார்கள். அந்த ஆகம விதிமுறைகளின்படி, வடக்கு நோக்கி மலம் கழித்தே ஆக வேண்டும்.

நெஞ்சில் ஒற்றைக் கை ஹிட்லர் விசுவாசப்பிரமாணத்தோடு, இராணுவ அணிவகுப்புப் பாணியில் கொடிக்கு மரியாதை சீன் அரங்கேறும்.

போதாக்குறைக்கு, இறந்து போகும் புலி ஆதரவாளர்களுக்கு நாட்டுப்பற்றாளர், மாமனிதர் பட்டங்கள் வழங்குவதும், அவர்களின் பூதவுடல்களுக்கு புலிக்கொடி போர்த்துவதும் தற்போது சடங்காகி விட்டது.

முன் பின் தெரியாத ஒரு கூட்டம் இறுதி அஞ்சலி இடத்தில் கொடியை விரித்துப் பிடித்து வந்து போர்த்துகிறது. படித்த முட்டாள்களும் புல்லரித்துப் போகிறார்கள்.

ஆனா, இவ்வளவும் செய்து கூத்துக் காட்டுவோர், சூரியதேவனுக்கு புலிக் கொடி போர்த்தவோ, படத்துக்கு பூப் போட்டு, விளக்குக் கொழுத்தவோ, காடாத்தவோ தயாரில்லை.

காரணம், அவர் இல்லை என்று போனால் பிழைப்பே முடிந்து விடும்.

புலி தான் இல்லையே, இதைச் செய்யும் நீங்கள் யார் என்று இந்த முட்டாள் சமூகம் ஒரு போதும் கேட்கப் போவதில்லை. இதையெல்லாம் வரலாற்று நிகழ்வுகள் என்று காது குத்த ஊடக அயோக்கியர்கள் இருக்கும் வரைக்கும் இந்த சமூக விரோதிகள் இந்த சமூகத்தை ஏமாற்றிக் கொண்டு தான் இருப்பார்கள்.

கோவணம் கட்டக் கூட லாயக்கில்லாத ஒரு காலாவதியான கொடியைக் காட்டி விற்று இன்றைக்கும் எப்படி ஏய்த்துப் பிழைக்க முடிகிறது என்று நீங்கள் முடியைப் பிய்க்கவோ, முட்டிக் கொள்ளவோ தேவையில்லை.

பயந்தாங்கொள்ளிகளுக்கு கொலைகாரனே தலைவன். முட்டாள்களுக்கு அயோக்கியனே தலைவன்.

முட்டாள்கள் பயந்தாங் கொள்ளிகளாகவும் இருந்தால்...?

# நமட்டு வைப்பாட்டி



## சிறீனோ சிறீ சிறீசு

*1.*

*மிக நீண்ட நாட்கள் சென்றன, உலக முழுச்சனத்துக்கும், பிடித்த விஷயங்களிலும் பார்க்க, பிடிக்காத விஷயங்களே பற்பல மடங்கு அதிகம் என்றதை அறிய.*

*எனக்கு எக்கச்சக்கமான விஷயங்களைப் பிடிக்கும். பிடிக்கும் விவகாரங்களின் அந்தகாரங்களால் மட்டுமே சூழப்பட்டிருந்ததாலோ என்னவோ, என்னிடமும் பிடிக்காத அலுவல்கள் எக்கச்சக்கவோ எக்கச்சக்கமாக இருந்தமை தெரிந்திருக்கவில்லை.*

*பிறகு, பிறகு, யோசித்துப்பார்க்கையில்,- வாஸ்தவத்தில், பற்பல-பற்பல மடங்கு பிடியா விஷ யங்களால் நான் பீடிக்கப்பட்டமை தெளிவாய்த்தெரிந்து துலாம்பரமாகிற்று. உதாரணத்துக்கு, எனக்கு Calypso ஐ பிடிக்காது.*

*அது ஏன், என்று தெரியாது. ஆனால், குட்டிவிலாவிற்கு கலிப்ஸே ாவைப் பிடிக்கும்*

*அதுவும் ஏனென்று தெரியாது.*

*கலிப்ஸோவுக்கு ‘CALYPSO’ஐ (அந்தப் பெயரை) பிடிக்காது. கிரேக்கனான அவன், அடிக்கடி தனது பெயரை “இந்தா, மாற்றப்போகிறேன். அந்தா, மாற்றப்போகிறேன்,” என்று சொல்லிக்கொண்டே இருப்பான். ஆனால், மாற்றியதே இல்லை.*

*கிறீஸில், Calypso என்ற பெயர் பெண்களுக்கும் நாமிக்கப்படுவதென்பது போக, அதன் அர்த்தம், ‘WOMAN WHO HIDES’, என்பதாகும்.*

*மறைக்கும் பெண்ணாக எந்த ஆண்தான் இருக்க விரும்புவான்??!! கலிப்ஸோ, அப்படியாக “ஒளிக்கும் பெண்” இருப்பவனோ, என்று கூட நான் தருணங்களில் சந்தேகிப்பதுண்டு. பல சந்தேகங்கள் சாஸ்வதமானவை் சாகும்வரை தீரா.*

*அனேகமான ஐயங்கள், என்றுமே ஐயமானவையும்.*

*ஆனால், எனக்கு குட்டி விலாவைப்பிடிக்கும்.*

*அது அச்சொட்டாக ஏனென்றும் தெரியும்.*

*கு.விலா நீள்நாளாய் என்னுடன் இழுபடும் நீள்வால்.*

*இருவருக்கும் ராமநாதனைப் பிடிக்காது. அது ஏனென்று இருவருக்குமே தெரியாது. குட்டிவிலா அதற்கு நூறு காரணங்களைச் சொன்னாலும், அது எதுவும் காரணமேயில்லை, என எனக்குத்தெரியும்.*

*வேளைகளில், எனக்கும், ஏன்? ராமநாதனை “எனக்கு”ப் பிடியாதென்பது, சிறு அசுமாத்தமாய், புகையின் நிழலாய் தெரிவதாகப்பட்டாலும், உண்மையில் தெரியவே தெரியாது, என்பதுதான் உண்மை.*

*அதெல்லாம் போக,- இந்த குட்டிவிலாவின் பூடகமான நமட்டுச்சிரிப்பு இருக்கிறதே, அதைப்பற்றி நிறைய பறைய வேண்டும்.*

*அதோர் நீண்ண்ண்ண்ட கதை.*

*எதையெப்படி வியானிக்க வெளிக்கிட்டாலும், அந்த நமட்டுச்சிரிப்பை எனக்கு கடுகளவும் பிடிக்காது் கடுகென்ன, அணுவளவுமே கூட பிடிக்காது, என்று சொல்லி, கதையை சுறுக்காக முடிக்கலாம்*

எமது இத்தாலிய நண்பனின் Peppino (Giuseppe) பாணியில்.

பெப்பினோ, "உங்களுக்கு ஒரு நீண்ட கதை சொல்லவேண்டும்," என்று ஆயிரம் தடவை துவங்குவான். நாங்களும் ஒவ்வொரு தடவையும் திருந்தா வெருளிகளாக "ஆ" வென்று, வாய் பிளந்து, கேட்க வெளிக்கிடுவோம். "பெப்பி"யின் எல்லா நீண்ட கதைகளுமே கிட்டத்தட்ட கீழ்க்கண்டவாறுதான் முடியும்:-

"Questa è la storia della vacca vitoria. La vaccca è morta. E fine della storia."

இது "வெற்றிப்பசுவின்" கதை. பசு செத்துப்போயிற்று. எனவே, கதையும் முடிந்தது.

அவ்வளவுதான்.

கதை கேட்க ஆவலாதியாயிருக்கும் எம் முஞ்சியெல்லாம் திடுமென ஏமாற்றத்தில், தோசைக்கல் போல் சப்பழிந்து போகும் multi-flavor ice cream சாப்பிட எதிர்பார்த்திருக்கையில், வெறும் Ice கட்டி கிடைத்தாற்போல். இருந்தாலும், பேதமின்றி, ஏக எண்ணமாய், எல்லோருக்கும் படு அபரிமிதமாக "பெப்பி"யைப்பிடிக்கும்.

அதற்கான காரணங்களையும் தெரிந்திருப்பதாக எல்லோருமே சுலபமாக உணர்ந்தமைந்தாலும், தெரியாதென்பதே உள் நிஜம்.

"ஆள் நல்லவன் அதனால் அவனைப் பிடிக்கிறது", என்பது நிஜத்தில் ஒருவகைப் புருடாவே.

அப்போ, ஏன், கெட்டவர்களும் பிடிக்கப்படுகிறார்கள்..??!!

குட்டிவிலா அடிக்கடி "Barஇற்கு போவோம்," என்பான். எனக்கு பெரிதாய் இஸ்டமில்லையெனினும் போவதுண்டு.

வால் அல்லவா??!!

"Wagging the dog" என்பது இதைத்தான்.

*2.*

Bar இல் எல்லோரும் வளையவர குந்தியிருந்தோம்.

குடித்தலட்டியபடிதான். வழமை போல்.

கலிப்ஸோ, ராமநாதன், குட்டிவிலா, நான்.

பெப்பினோ ஒவ்வொரு முறையும் வருவதில்லை. இடையிடைதான்.

அதற்கான காரணம், ராமநாதனின் பிரசன்னமோ, என்று கூட நான் நினைப்பதுண்டு.

குந்தியிருந்து குடித்த லட்டுபவர்களுக்கு ஆளையாள் பிடிக்கவேண்டும், என்பதும் விதி அல்ல. தவிரவும், குடி, அலட்டல், Barஎன்பதற்கெல்லாம் உள் மனதளவிலான விதிகள் கிடையா. குழப்பம் விளைக்காதவரை, Bar இல், எவ்வளவும் குடிக்கலாம் அலட்டலாம்.

பிடித்தவர்களுடன் சம்பாஷிப்பதிலும் பிடியாதவர்களுடனும் அலட்டுவது மூலம் ஒளிந்திருக்கும் பற்பல உலக மஹா "விண்ணாணங்களை" அறியலாம் என்பது, என்விதி. மனநீதி மாதிரி. மனநீதியை மேவிய நீதியேதுமில்லை.

மனுநீதிக் குப்பையெல்லாம் வேறு.

இதையெல்லாம், நீட்டி, குறட்டிச் சொல்லக்காரணம்: கலிப்ஸோவை ராமநாதனுக்கு ஒரெப்பனும் கண்ணில் காட்டமுடியாது, என்பதால்தான். அதேனென்று துல்லியமாய்த் தெரியாதாயினும், அவனுக்கு வெள்ளை இனத்தார் மேல் விரோத, குரோத காழ்ப்பு இருப்பதும் பெருங்காரணமாகலாம்.

ஆயினும், அருகருகில்தான் அமர்ந்திருந்தனர்.

"தனது கூட்டு, குலவு, கட்டு, கலவி திருட்டாந்தங்கள் பற்றி நீட்டி மடக்கி, கன, கனதியான அரிப்பூட்டலுடன் வளர்த்து, அளப்பான்.

கண்ட பெண்கள், கட்டிப்பிடித்த பெண்கள், எட்டிய, கிட்டிய பெண்கள், என்று அவன் மனம் நெட்டுருகுமாற்போல இங்கிதமாய் ஊறிப்பிசைந்து, விபரிப்பதைக் கேட்பதில் எல்லோருக்கும் சுவாரஸ்யம் இருந்தது வாஸ்தவம், ராமநாதன் நீங்கலாய்.

இந்த கலவிக் கதைகளைக் கேட்கும் போதெல்லாம், ராமநாதனின் மூஞ்சித்தோல் பரப்பிலெல்லாம் உலகத்து வெறுப்பு பூரா வந்து குந்தி இருப்பதாக தோற்றும்."

Bar இன் விஷேஸம் அப்படி. வேறிடங்களிலும் இப்படியான விஷேஸங்கள் உள்ளனவா, என்பது தெரியாது. Galypso ஒருவகையில் Playboy. "ஒருவகை playboy" என்பது மேலும் பொருந்தும் போலும். தனது கூட்டு, குலவு, கட்டு, கலவி திருட்டாந்தங்கள் பற்றி நீட்டி மடக்கி, கன, கனதியான அரிப்பூட்டலுடன் வளர்த்து, அளப்பான்.

கண்ட பெண்கள், கட்டிப்பிடித்த பெண்கள், எட்டிய, கிட்டிய பெண்கள், என்று அவன் மனம் நெட்டுருகுமாற்போல இங்கிதமாய் ஊறிப்பிசைந்து, விபரிப்பதைக் கேட்பதில் எல்லோருக்கும் சுவாரஸ்யம் இருந்தது வாஸ்தவம், ராமநாதன் நீங்கலாய்.

இந்த கலவிக் கதைகளைக் கேட்கும் போதெல்லாம், ராமநாதனின் மூஞ்சித்தோல் பரப்பிலெல்லாம் உலகத்து வெறுப்பு பூரா வந்து குந்தி இருப்பதாக தோற்றும்.

அதை விபரிப்பது முடியா அலுவல். அந்த மூஞ்சி விபரணைகளுக்கு அப்பாற்பட்ட ஒரு அங்கம்.

அந்த குரோதத்தின் மூலம் கனலும் பொறாமையின் பாற்பட்டதோவென்றும் தெரியாது. இவ்வாறான மதன சமாச்சாரங்கள் வருகையில் பலர் தம்மால் "ஆகா நிலைமை"யையிட்டு சுயமாய் பட்சாதாபிப்பதைக் கண்டிருக்கிறேன். அது ஒருவகை உள்ளீனம்.

இந்த ஆகாத நிலைமைக்குக் காரணம்,- "ஆசை இல்லாமை" அல்ல. அல்லவே அல்ல.

"நான் சுத்தி," என்று சொல்பவர்களுக்கான "சுத்தி"யின் காரணங்கள் பலபற்றி எனத்தெரியும். சுற்றி உள்ளோரின் சூழலையிட்டான பயம், துணிவின்மை, சந்தர்ப்பமின்மை, கெட்டித்தனமின்மை... இன்னபிற என்றபல தற்குறைகளை "சீலச்சுத்தம்" என்கிற தற்சுத்தி, என்று சுய தம்பட்டம் அடிக்கிற படு(ஊ) பலஹீன தற்குறித்தனத்தின் உச்சமே அதாகலாம்.

இந்த கலிப்ஸோவின் குஸால் கதாகாலச்சேபங்களின் போதெல்லாம் குட்டிவிலாவிடமிருந்து ஒரு தினுஸான நமட்டுச்சிரிப்பு வரும். அதைக்காண எனக்கு எரிச்சல் வரும். அது பேரெரிச்சல். நமட்டுச்சிரிப்பு ஒரு கெட்ட அலுவல். அதற்கும் விபரணை கிடையாது.

நீங்கள் என்னதான் தலையால் கிடங்கு கிண்டினாலும்,- சிதம்பர சக்கரத்துக்கு வியாக்கியானம்

எழுதினாலும் எந்த நமட்டுச்சிரிப்பினதும் பூரண காரணத்தை அறிய முடியாது. கனவுகளைப்போல அவையும் மர்மாங்கங்களே.

புரியாத ஒன்று பேரெரிச்சலைத் தருவது ஆச்சர்யமானதல்ல.

“இது புதுசு,” என்று புதிதாய் ஒரு கட்டிப்பிடிப்பு, கலவிக்கதையைச் சொல்லத்துவங்கினான், கலிப்ஸோ.

*3.*

அந்த “புதிதான ஒன்று”, பின்னடிக்கு, நாங்கள் குந்தி, குடித்து, அலட்டும் Bar இல் உச்சக்கதையாகி / highlight ஆகிப்போயிற்று.

கலிப்ஸோவின் தொடர் மதனலீலைகளின் கடைசியான கட்டிப்பிடிப்பு-கலவி கதைதான்.

அது முன்னைய கதைகளிலும் வேறுபட்டிருந்தது. அதன் திரிகை புதிது. “உங்கள் நாட்டு பெண்தான், அவள்,” என்றான் கலிப்ஸோ.

அதைச்சொல்கையில் அவனது முகத்திலிருந்து நெளிந்த நளினத்துக்கு எந்த உச்சக் குருவானவரும் விளக்கம் சொல்லியிருக்க முடியாது.

குட்டிவிலாவிடமிருந்தும் நான் எப்போதுமே கண்டேயிராதவொரு, அபூர்வத்திலும் அபூர்வமான நமட்டுச்சிரிப்பொன்று கிளம்பிற்று. அதுவும் எந்த உச்சச்சாமியாலும் decipher செய்யமுடியாத ஒன்றுதான்.

எனக்கும் புகையின் நிழல்போன்ற, சாடையான எரிச்சலுணர்வொன்று வந்ததை ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும். ஏனென்று தெரியாது.

என்னதான் “எனினும்”, எவ்வளவு “சமசமம்” பேசினாலும், “Reality hits home” என்று வருகிறபோது, தாளாக்குணாம்ஸம் தவிர்க்க முடியாததாக்கும்.

ராமநாதனின் மூஞ்சி..??

அதையேன் கேட்பான்??!!

ஒரு மனிதன் தன் முகபாவனையில் இத்தனை தூரம் வெறுப்பைக்காட்ட முடியுமென்பதை, அப்போதுதான் நம்பினேன்.

அது Super வெறுப்பு.

அதன் அடிமூலம்,-பொறாமை, கறுவுகை என்ற எல்லாம் தாண்டிய ஒரு விசித்திரப்பிரதேசத்தின் பாதாளப்புள்ளி ஒன்றிலிருந்து கிளம்பியதாக தோற்றிற்று.

அன்று, எல்லாரும் தாறுமாறாக, மாறி மாறி குடித்திருந்தோம்.

”

*கலிப்ஸோவின் தொடர் மதனலீலைகளின் கடைசியான கட்டிப்பிடிப்பு-கலவி கதைதான். அது முன்னைய கதைகளிலும் வேறுபட்டிருந்தது. அதன் திரிகை புதிது. “உங்கள் நாட்டு பெண்தான், அவள்,” என்றான் கலிப்ஸோ.*

*“உங்கள் நாட்டுப்பெண் இப்படியெல்லாம் செய்வாளென்று நான் கனவிலும் நினைக்கவில்லை. Expert மதன வேலை,”*

”

Single Malt Whiskey-காரனான நான் Heineken beer குடித்தேன். Double Shot Brandy அடிக்கும் “குட்ஸ்விலா” வும் Beer தான் குடித்தான். Vodka குடிக்கிற கலிப்ஸோவுக்கு Whiskey; வழமையாக Coca-Cola உம் அருமையாய் Beer உம் கேட்கும் ராமநாதன் ஆச்சர்யகரமாய், Brandy இற்கு மாறியிருந்தான்.

எல்லாமே போதை தருபவைதான்.

*4.*

இப்போதெல்லாம் Bar இல், “உங்கள் நாட்டு பெண்தான் அவள்,” என்ற கதையின் தொடர்ச்சியைத்தான் கலிப்ஸோ பிரதானமாக சொல்லிக் கொண்டிருந்தான். அந்த affair விவகாரம்,-தொடர்ச்சிக்கு முடிவுவராத தொடராகவே தொடர்ந்தது. அது இலைகளில் வடியும் நீர்த்திவலைகள் மாதிரியானதொரு ரொம்பவும் இலகு வடிதலின் வடிவிலான எளிய சுவாரஸ்யத்தையே யாவர்க்கும் தந்தது, ராமநாதனைத் தவிர.

“உங்கள் நாட்டுப்பெண் இப்படியெல்லாம் செய்வாளென்று நான் கனவிலும் நினைக்கவில்லை. Expert மதன வேலை,” என்று ஆச்சர்யமும் ஒருவகைப்பெருமையும் ஒருசேரப் பொங்க அவன் விபரிக்கும் பலான விஷயங்கள் படு(ஊ) சுவாரஸ்ய கிளர்ச்சியை சுற்றுவெளி பூரா கிறுகிறுப்பாய் கிளப்பின.

இப்போதெல்லாம் எனக்கு வியப்புகரமாக, நிச்சயமாக, முன்னர்போல், எவ்வித எரிச்சலும் வரவில்லை.

புரியாதவகை உணர்வொன்றுதான் பரவியதாகவே தோற்றிற்று.

சிக்கலாயும் சிக்கலில்லாமலும் பிணைந்து கிடந்த நூற்பந்தொன்று மெல்லென சிரமமின்றி அவிழ்வதாயும், சரளைக்கற்கள் மீளச்சேர்ந்து பாறையாவதுமான ஒரு புதிருணர்வு அது.

அதையும் decipher பண்ண முடியாது.

எதெதென்றாலென்ன, எங்கெங்கு யார் படுத்தாலென்ன, எனக்கென்ன? என்றும் எண்ணினேன். அதோர் வலிந்த எண்ணல்.

குட்டிவிலா பிறிதொரு படு(ஊ) புதிர் நமட்டுச்சிரிப்பை அவிழ்த்து விட்டான்.

அது, அவிழ்ந்து எளிமைப்பட்ட தூயநூல் மீள சிக்குப்பந்தானதாயும் பாறை சிதறி, மீளவும் சரளைக்கற்களானதாயும் தோற்றிற்று.

இதென்ன dilemma எனக்கு..??!!

கோதாறி.

*5.*

இனித்தாளாது.

கேட்டுவிடுவதாகவே முடிவு செய்தேன்.

அது, யாராயிருந்தால் எனக்கென்னவென்று, இனிமேலும் எண்ணத் தோன்றவில்லை. யாரென்று அறியவேண்டும். அறிந்தே ஆகவேண்டும். என்னதான் தத்துவித்தாலும், பூதாகரமாய் கிளரும் ஆவலாதியை அடக்க முடியாது.

குட்டிவிலாவுக்கு call எடுத்தேன்.

“டேய், பொய் சொல்லாதே. தெரியாதெண்டும் பொய் சொல்லாதே. உன்ரை நமட்டுச்சிரிப்பிலேயே எனக்குத் தெரியும், உனக்குத்தெரியும், எண்டு. ஆரடா, அந்த கலிப்ஸோவின்ரை வைப்பாட்டி, எங்கடை ஊர்ப்பொம்பிளை?”

மறு முனையில் சிறு தீனமான சிரிப்புச்சத்தமொன்று கேட்டது. அது நிச்சயமாக நமட்டுச்சிரிப்புத்தான்.

கேட்டது தவிர, பார்க்க முடியவில்லை.

“ஒருத்தருக்கும் சொல்லமாட்டீங்கள் தானே?

“கண்டிப்பாய் இல்லை,” என்றேன்.

இருகணங்கள் கழித்து, “பகவத்சீதா,” என்றான்.

“ஆர் பகவத்கீதா..?” என்று அவசரமாய்க்கேட்டேன்.

“பகவத்கீதா இல்லை. பகவத்சீதா. ராமநாதனின் மனைவி.!!!!”

# சாதியை நிரூபிக்கும் அரச ஆவணம்




## அருணாசலம்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உயர்சாதி அல்லது மேட்டுக்குடியினர் என்று சொல்லப்படுகின்றவர்களால் "தாழ்த்தப்பட்ட" அல்லது "ஒடுக்கப்பட்ட" மக்கள் என்று சொல்லப்படுகின்றவர்கள் எழுதப்படாத ஒரு சட்டத்தின் மூலம் புறமொதுக்கப்பட்டனர்.

தாழ்த்தப்பட்ட அந்த மக்கள் உயர்சாதிக்காரரின் வீடுகளுக்கு முன்னால் செல்லும்போது காவோலையைக் கயிற்றில் கட்டி இழுத்துச் செல்ல வேண்டும் என்று பணிக்கப்பட்டது. காவேலையை இழுத்துச் செல்லும்போது அது சத்தத்தை எழுப்பும். அவ்வாறு காவோலைச் சத்தம் கேட்டால் தாழ்த்தப்பட்டவர்கள் தமது வீடுகளுக்கு முன்னால் செல்கிறார்கள் என்பதைத் தாம் உணர்ந்து கொள்ளமுடியும். தமது முழுவியளத்துக்கு ஆகாதவர்கள் (அவர்களால் தாழ்த்தப்பட்டவர்கள்) தெருவில் செல்கிறார்கள் என்பதால் தாம் வீட்டிலிருந்து வெளியில் வருவதைத் தவிர்க்கலாம் என்ற நோக்கத்திற்காகவே இந்தச் சத்தம் எழுப்பும் ஏற்பாடும் இருந்தது. அத்தோடு ஒடுக்கப்பட்ட மக்கள் நடந்து செல்லும் காற்தடங்களை அவர்களின் பின்னால் கட்டியிருக்கும் காவோலை அளித்துச் செல்லும் என்பதால் அவர்களின் கால் பட்ட வழியில் தாம் நடக்கத்தேவையில்லை என்ற புத்தியாலுமே அந்த ஏற்பாடு இருந்தது.

அதேபோல தாழ்த்தப்பட்ட பெண்கள் மேற்சட்டை அணியக்கூடாது என்ற சமூக நடைமுறையும் இருந்தது. 1960களின் ஆரம்பத்தில் மேற்சட்டை அணிந்த தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த பெண் ஒருவரின் மேற்சட்டையைச் சுன்னாகம் பேருந்துத் தரிப்பிடத்தில் வைத்துக் கொக்குச் சத்தகத்தால் கொழுவி இழுத்து வெட்டிய சம்பவம் நடந்தது.

பின்னர் அதற்கு எதிராகக் கம்யுனிஸ்ட் கட்சியினர் போராட்டம் ஒன்றையும் நடத்தினர். அதில் கலந்து கொண்ட கரவெட்டியைச் சேர்ந்த சிவராஜா என்பவர் இதுபற்றி விரிவாக விளக்கினார்.

இவ்வாறாக யாழ்ப்பாணத்தில் தொடராக மேட்டுக்குடியினரின் ஒடுக்குமுறைகள் நடந்தேறியுள்ளன. அவை எல்லாவற்றையும் உறுதிப்படுத்தும் வகையில் 1973ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 15ஆம் திகதியன்று இலங்கை அரசால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ஒன்று இன்றுவரை நல்லதோர் ஆவணமாக இருக்கிறது. இந்த அடையாள அட்டையானது அன்று மேட்டுக்குடியினரிடம் நிலவிய மேற்சட்டை களைவு விவகாரத்தை உறுதிப்படுத்துகிறது.

> 1973இல் இலங்கையின் தேசிய அடையாள அட்டை வழங்குவதற்கான படப்பிடிப்பின்போது சாதிமான்கள் மேலாடை அணியாது படம்பிடிக்க வேண்டும் என அவரை வற்புறுத்தியதால் அவ்வாறே படம் பிடிக்கப்பட்டது.

இந்த அடையாள அட்டையில் காணப்படும் பெண்மணி 21.04.1908 ஆம் ஆண்டு பிறந்தவர். 21.09.1998இல் காலமானார். தாழ்த்தப்பட்ட பெண்கள் மேலாடை அணியக்கூடாது என்ற மேட்டுக்குடியினரின் ஒடுக்குமுறை எண்ணத்தை எதிர்த்து பாதிக்கப்பட்ட பெண்கள் 14.4.1924இல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அந்தப் போராட்டத்தில் தேசிய அடையாள அட்டையிலுள்ள இந்தக் குறிப்பிட்ட பெண்ணும் கலந்துகொண்டு போராடி மேலாடை அணிந்திருக்கிறார்.

எனினும் பின்னர், 1973இல் இலங்கையின் தேசிய அடையாள அட்டை வழங்குவதற்கான படப்பிடிப்பின்போது சாதிமான்கள் மேலாடை அணியாது படம்பிடிக்க வேண்டும் என அவரை வற்புறுத்தியதால் அவ்வாறே படம் பிடிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் வடமராட்சியில் நடந்தது. அப்போதைய காலத்தில் கிராம உத்தியோகத்தர்களாக மேட்டுக்குடியினரே அதிகம் இருந்தார்கள். அதனால் கிராம அலுவலர் அலுவலகங்களில் தாழ்த்தப்பட்டவர்கள் மீது வற்புறுத்தல்கள் நடந்தேறின.

அவ்வாறே இந்தப் பெண்மணியும் பழிவாங்கப்பட்டார். இப்போது சாட்சி பகரும் இந்தப் படம் மேட்டுக்குடி மக்களை மட்டுமல்லாது எல்லாத் தமிழர்களையும் தலைகுனிய வைத்திருக்கிறது.

1957இல் இலங்கை நாடாளு மன்றில் தீண்டாமை ஒழிப்புச் சட்டம் கொண்டு வரப்பட்டது. இது கொண்டுவரப்பட்டு 11ஆண்டுகளின் பின்னரே (1968) அடங்காத் தமிழன் என வர்ணிக்கப்படும் பி.சுந்தரலிங்கத்தின் தலைமையில் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலுக்குள் தாழ்த்தப்பட்ட மக்களை அனுமதிக்கக்கூடாது என்று போராட்டம் நடத்தப்பட்டது.

தீண்டாமை ஒழிப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டு 16 வருடங்களின் பின்பே இலங்கையில் தேசிய அட்டை முதல் முதலாக வழங்கப்பட்டது.

அத்தகைய இலங்கை அரசின் உத்தியோகபூர்வ அடையாள அட்டையிலேயே மேற்குறிப்பிட்ட மேலாடையின்றிய பெண்ணின் ஒளிப்படம் உள்ளது. தமிழ்ச் சாதிமான்கள் மட்டுமல்லாது இலங்கை அரசும் இதை அனுமதித்திருப்பது கொடுமையானது.

# தோற்றுத் தான் போனோமா?



சிவப்பிரகாசம் சிறீதரன் (லண்டன்)

சொல்லொணா வேலைச்சுமை. தவணைப் பரீட்சைக்காலம். நிறைய வினாத்தாள் திருத்தங்கள். மூளை விரைவில் களைத்துப் போகின்றது. நண்பர் சிவகுமார் குறித்து எழுத முடியவில்லை. இறந்த ஞாபகங்களும், மங்கலான நினைவுகளுமாய் மனம் சஞ்சலிக்கிறது. எல்லாரையும் எல்லாவற்றையும் வலிந்து உள்ளிழுக்கும் அரசியல் "கருந்துளை" (Black Hole) சிவகுமாரையும் விட்டு வைக்கவில்லை. அரசு என்பது சாராம்சத்தில் பலாத்கார அதிகாரமே. சமூகம் தனது செல்வங்களை நுகரும் அதிகாரத்தை ஓரிரு சிறுபான்மை வர்க்க கூட்டுகளிடம் கொடுத்து பெரும்பான்மை உழைக்கும் மக்களை ஏதிலிகளாக்கும் போக்கை எதிர்க்கும் உள்ளுணர்வே சிவகுமார் எனும் போர்க்குரலின் துவக்கம்.

அந்த துவக்கத்தின் வடிவம் ஓர் பத்திரிகையாளனே. பத்திரிகையாளன் என்றால் எழுதும் ஆற்றலும் உள்ளடங்கியதே. அவரது ஆரம்ப பதின்ம வயதிலேயே அவர் எழுதுவதோடு தன்னுடையதும் தன் நண்பர்களுடையதும் ஆக்கங்களை கையெழுத்துப் பிரதிச் சஞ்சிகையாக வெளிக்கொணர்ந்தார். பெயர் ஞாபகமில்லை. உடும்பிராய் இந்துக் கல்லூரி எம் சமகால மாணவர்கள் யாராவது நினைவுபடலாம். அவரது முத்து முத்தான மணிபோன்ற எழுத்துக்கள் செழித்து பரவி நின்ற சீ.ஆர் கொப்பி தாள்கள் இன்றும் கண்முன் பிம்பங்களாய். சிறுகதைகள், பெருங்கதைகள், கட்டுரைகள் என அடர்ந்த காடு அவரது. பல்வேறு வண்ண மைப்பேனாக்கள் வரைந்த வானவிற்களின் தொகுப்பே அப்பிரதிகளாம்.

தலையங்கம்,உபதலையங்கம், பத்தி பத்தியாய் உள்ளடக்கம் என அவர் ஒரு மிகச்சிறந்த "பிரதியாக்கியோனாயும்" வெளிப்பட்டார். இத்தனிச் சிறப்புக்கள் அவருள் வெளிப்பட்ட போது நானறிய அவர் 9ஆம், 10ஆம் ஆண்டு மாணவரே. பெற்றோர் இருவரும் ஆசிரியர்கள் (திரு, திருமதி சிவசுப்ரமணியம்). நாவலப்பிட்டியில் பணியாற்றியவர்கள். அங்கேயே அவரது எழுத்தாற்றல் முளைவிட்டிருநதிருக்கலாம் எனக்குத் தெரியாது.

நான் அவரை ஒன்பதாம் வகுப்பிலேயே சந்திக்கிறேன். பேச்சாற்றலும் நகைச்சுவையும் நாடகமும் பாடுதலும் எனது இயல்பாய் இருந்தன. எழுத்தாற்றல் என் இயல்பு அல்ல. சிவகுமாரின் கரைச்சல் தாங்க இயலாது என்றோ எங்கோ பிரசுரமாய் இருந்த ஒரு கதையை தழுவி (அப்படியே சுட்டு அல்ல) நான் ஒரு கதை எழுதிக் கொடுத்தேன். ஒரு பத்திரிகையாளன், பிரதியாக்கி, எழுத்தாளன் என்று பல ரூபம் கொண்டவர் எத்துணை வாசகராய் இருந்திருப்பர் என்பது நான் சொல்லித் தெரியத் தேவையில்லை. அவருக்கு அந்த மூலக்கதை ஞாபகம் வந்து தொலைக்க, கலங்கியவன் தான், இன்றுவரை எழுதுதல் அரிது.

என்னிடம் சைக்கிளும், வசதியும் இருந்ததில்லை. சிவகுமாரின் சைக்கிளும் நட்பும் இருந்தது. எனக்கு இருந்த சிறிய நட்பு வட்டம் கூட சிவகுமாரை மையம் கொண்டதே. ஒரு மையமாக செயற்படும் தலைமைப் பண்பை அவரிடம் நான் கண்டேன். பாடசாலை விட்டதும் அவரது சைக்கிளில் அவர் போகும் இடங்களிற்கு போவேன். அவரது சிறந்த தனிமனித பண்புகள், முற்போக்கான சமூகப் பார்வை, பெரியார், அண்ணாத்துரை எழுத்துகளூடாக அவர் சுவீகரித்துக் கொண்ட பகுத்தறிவுக் கோட்பாடு, சமூக சமத்துவ சீர்திருத்தப் பார்வை இன்னபிற அவர் தன்மைகள் ஆவன, சிறுவயது முதலே கம்யூனிச கருத்தாளரை சுற்றிவரக்கொண்டும் (எனது தாய்வழி சிறிய தந்தையார்கள் பொன்னுத்துரை,

**பத்திரிகை அடிக்க காசு சேர்க்க வேண்டி நாவற்குழி வீடமைப்புத் திட்டத்தில் கல்லுத் தூக்கும் மேசன் வேலை செய்தோம். நண்பர்கள் சிறீஸ்கந்தராஜா (France), தோழர் சுகு சிறீதரன் (இலங்கை), வைகுந்தநாதன் (Canada), செல்வச்சந்திரன் (France) கற்கள் தூக்கியதாக ஞாபகம் (தெளிவில்லை). தூக்க முடியாத பெரிய கொங்கிறீற் கட்டிகள். கால் புதையும் மணல் வேறு. விழுந்தெழும்பி இரண்டாம் கிழமை கிளம்பினோம். சிவகுமார் என்ற பத்திரிகை லட்சியவாதியை வெளித்தெரிவிக்க மேற்தகவலும் சாட்சி பகரும். என் நினைவு சரியானால் மூன்று "மாணவர் குரல்" களை அச்சேற்றினார்.**

**அவர் கவிஞர் செழியனாதெல்லாம் அரசியல் சுழலால் சூழப்பட்ட பின்னரே. அவரது "மாணவர் குரல்" பத்திரிகையே "ஈழமாணவர் குரல்" ஆயிற்று.**

அப்புத்துரை) சுற்றிவரக் கண்டும் (மிக அண்மையில் பேரிழப்பான கம்யூனிஸ்ட் கௌரிகாந்தன் தோழர் உள்ளிட்ட கம்யூனிஸ்ட் சமூகவியக்கத்தில் செயற்பட்ட இலங்கைத்தீவுதழுவிய தோழர்கள்) வளர்ந்த என்னை சிவகுமார் மீது ஈர்த்ததில் ஆச்சரியமில்லை. சுருங்கக் கூறின் எங்கள் நட்பை கட்டிப் போட்டிருந்தது கருத்துச் சங்கிலிகளே.

மாணவர்களுக்கான ஒரு அச்சுப் பத்திரிகை கொண்டுவர எண்ணினார். அப்போது அவர் AL மாணவர். யாழ் நகரில் ஓர் அச்சகத்திற்கு சென்றிருந்தோம். உரிமையாளரை சந்தித்தோம். ஆயிரமோ ஐநூறோ பிரதிகளிற்கு என்ன செலவாகும் என்று கேட்டறிந்தார். புறப்படும்போது பேச்சோடு பேச்சாக அந்த அச்சகத்தின் விலையையும் கேட்டார். அதிர்நதது நான் மட்டுமல்ல, அச்சக உடமையாளருந்தான். நான் முதலில் கூறியது போலே அவர் ஒரு பத்திரிகையாளராக பரிமளித்திருக்க வேண்டும்.

பத்திரிகை அடிக்க காசு சேர்க்க வேண்டி நாவற்குழி வீடமைப்புத் திட்டத்தில் கல்லுத் தூக்கும் மேசன் வேலை செய்தோம். நண்பர்கள் சிறீஸ்கந்தராஜா (France), தோழர் சுகு சிறீதரன் (இலங்கை), வைகுந்தநாதன் (Canada), செல்வச்சந்திரன் (France) கற்கள் தூக்கியதாக ஞாபகம் (தெளிவில்லை). தூக்க முடியாத பெரிய கொங்கிறீற் கட்டிகள். கால் புதையும் மணல் வேறு. விழுந்தெழும்பி இரண்டாம் கிழமை கிளம்பினோம். சிவகுமார் என்ற பத்திரிகை லட்சியவாதியை வெளித்தெரிவிக்க மேற்தகவலும் சாட்சி பகரும். என் நினைவு சரியானால் மூன்று "மாணவர் குரல்" களை அச்சேற்றினார்.

அவர் கவிஞர் செழியனாதெல்லாம் அரசியல் சுழலால் சூழப்பட்ட பின்னரே. அவரது "மாணவர் குரல்" பத்திரிகையே "ஈழமாணவர் குரல்" ஆயிற்று. ஒரு சுதந்திரமான பல்துருவ பத்திரிகையாளராக மலர்ந்திருக்கலாம்..... அல்லது சென்ற இடத்திலாவது பத்திரிகைத் துறையுடன் தன்னை வரையறுத்து செயற்பட்டிருக்கலாம். ஆரம்பத்தில் இருந்தே, எனது பார்வையில் நண்பர் சுகு சிறீதரன் ஓர் அரசியலாளர். எனது கணிப்பு இன்றுவரை தவறாகவில்லை.

எனது, உலகளாவிய கம்யூனிசம் மீதான ஓர் ஈர்ப்பே, எனக்குள் பாயத் தருணம் பார்த்துப் பதுங்கியிருக்கும், அப்பப்போ தலைகாட்டும், "அகச்சிதைவை" தடுத்து வருகின்றது என்றால் மிகையாகாது.

மேதமை நிறைந்த தோழர் கௌரிகாந்தனின் எழுத்துக்களும், ஆளுமை சிதையா நண்பர்களும் (வண்ணன், சதீஸ் மச்சான், புதியவன், துரை, எனது இணையர் மேரி சரோஜா, சிறீகாந்தன் போன்ற) எனக்கான அகச்சிதைவுத் தடுப்பை பலப்படுத்தி வருகிறார்கள். இவர்களை பெயரிடுதல் அவசியமே. உயரிய கருத்துக்களை தொடர்ந்து வாசித்தல், சிறந்த தோழர்கள், நண்பர்கள் உறவுகளை தொடர்ந்து பேணல் இவைகளே சிறந்த மருந்துகளாம் எனக்கு. இடதுசாரி இயக்கங்கள் கட்சிகள் கொடூர அடக்குமுறைக்குள்ளாக, கனவு கலைந்து கட்டறுந்து போன உறவுகளை தோழர்களை கண்கூடாக கண்டிருக்கிறேன்.

அன்றொரு காலத்தைய "பொற்காலத் தமிழ்த் தேசியம்" அகச்சிதைவுறும் தேசியமாக நாசகாரப் பரிமாணம் எடுத்தபோது, ( தமக்குள் "உள்-உளவு" கட்டிய அனைத்து அமைப்புகளுக்கும் இது பொருந்தும்),

"தோற்றுத்தான் போவோமா? " என அன்றே கலங்கி நின்ற என் நண்பன் நினைவுகள் என் மூளை இறக்கும்வரை நிறைந்திருக்கும்.



# அஞ்சலிக் குறிப்புகளின் அப்பாலும் தொடர்ந்து பேசப்பட வேண்டியவர் செழியன்

**கற்சுறா**

*1990 களின் இறுதிக்காலம் என்று நினைக்கிறேன். செழியனின் "குழந்தைகளிடம் பொய்களைச் கூறாதீர்கள்" என்ற கவிதைத் தொகுப்பு ஒன்று வெளிவந்ததாக அறிந்தேன்.*

*"ஒரு மனிதனின் நாட்குறிப்பு" என்ற தனது ஈழவிடுதலைப் போராட்ட வாழ்வும் அதிலிருந்து உயிர் தப்பிய கதையையும் எழுதிய செழியன் எப்படி இதனை எழுதமுடியும்? எப்படி நம்மவர்கள் தமது குழந்தைகளிடம் தம்மைப் பற்றிய உண்மைகளைச் சொல்லமுடியும்? எனக் கேட்டு ஒரு "மறுகவிதை" எழுதியிருந்தேன்.*

*நித்திரைப் பாயில் குறுக்கு வெட்டு வடிவத்தில் கழுத்தறுத்து பிரித்தெடுத்த கதையையும் கொடுவாளால் வயிற்றைக் கிழித்து குழந்தையை எடுத்து அருகிலிருந்த மரத்தில் அறைந்து தொப்பூழ் கொடி அறுத்த கதையும் தமது கதைகள் தானென்று இவர்கள் எப்படித் தமது குழந்தைகளுக்கு உண்மைகளைச் சொல்வது? என்று எழுதியிருந்தேன்( அந்தக் கவிதை தற்பொழுது என்னிடம் இல்லை. ஞாபகத்திலுள்ள கரு இது)*

*அவரை நேரே ரொரண்டோவில் கண்டபொழுது இந்தக் கதையை அவரிடம் சொல்லிய பொழுது "அதுவும் சரிதான். குழந்தைகளிடம் உண்மைகளையும் சொல்லாதீர்கள் என எழுதிவிட வேண்டியதுதான்" என்று சொல்லிச் சிரித்தார்.*

*"மரணம்" என்ற அவரது கவிதையை ஈழத்தில் பலரும் பல்வேறு தளங்களிலும் கொண்டோடித்திரிந்த காலத்தில் மல்லாவி என்ற வன்னிக் கிராமத்தில் எனக்கும் வாசிக்கக் கிடைத்தது.*

*ஈழவிடுதலைப் போராட்டம் என்பது நயவஞ்சகமாக மாறியிருந்த காலத்தில் எழுதப்பட்ட வரிகள் அவை. அந்த வரிகளைக் காடுகள் பூராவும் காவித்திரிந்தேன். அல்லது திரிந்தோம்.*

*பின்னர், அந்தக் கவிஞனை ரொரண்டோவில் நான் சந்திப்பேன் எனக் கனவிலும் நினைத்ததில்லை.*

*அவரைச் சந்திக்கக் கிடைத்த நேரத்தில் ரொரண்டோவில் அரங்க அளிக்கையில் மிக முக்கியமாகச் செயற்பட்டுக் கொண்டிருந்தார்.*

*"மனவெளி" நிகழ்த்திய அரங்காடலில் அவர் "பெருங்கதையாடல்" என்ற ஒரு நாடகத்தை எழுதி ரொரண்டோ இலக்கியச் செயற்பாட்டாளர்களுடன் முரண்பட்டுக் கொண்டிருந்த நேரம் அது.*

> **"**
>
> *அவருடைய ஈழவிடுதலைப் போராட்டத்தின் நகர்வுகள் மற்றும் இலக்கிய நகர்வுகள் அனைத்தையும் உங்களுடைய லாபநட்டக் கணக்குப் பார்க்காது உரையாட வேண்டும். செழியனை எம் நெஞ்சருகில் நிறுத்தி நம்மை மறுசீரமைக்க வேண்டும்.*

*அந்தக் காலத்தில் அவரை எமது "எக்ஸில்" இதழிற்காக அந்த நாடக முறை பற்றி ஒரு சிறிய இடைமறிப்புச் செய்தேன். அப்பொழுது நான் எடுத்த படங்களே இவை.*

*அந்த இடை மறிப்பில் உங்களது பெருங்கதையாடல் நாடகத்தை ரொரண்டோ இலக்கியச் சூழல் நிராகரித்த ஒரு தன்மையை உணரக்கூடியதாவுள்ளது இது ஏன் நடந்தது? என்ற தொனியில் கேட்டிருந்தேன்*

*அதற்கு, "ரொரண்டோ இலக்கியச் சூழலைப் பெருங்கதையாடல் நாடகம் பாதித்திருக்கிறது என்பது உண்மைதான். மாற்றுக் கருத்துக்காக வேலை செய்பவர்களிற்கு எதிரான கருத்தை இந்த நாடகம் வெளிப்படுத்துகிறது. பெருங்கதையாடல் ஒரு "bull shit". இதை மேடையேற்றியதன் மூலம் மனவெளி தீவிர நாடகப் போக்கிலிருந்து தவறிவிட்டது. ஞானம் லம்பேட்டின் நாடகத்தைத் தாக்குவதற்காக மேடையேற்றப்பட்ட நாடகமே இது. நவீனங்களுக்கு எதிரானது இந்த நாடகம். என்று உணர்ச்சிவசப்பட்டு சர்ச்சைப்பட்டார்களே தவிர எழுத்து வடிவில் அறிவுபூர்வமாக எந்த எதிர் விமர்சனங்களும் இன்று வரை முன்வைக்கப்படவில்லை. ஏன் இந்த உணர்ச்சிவசப்பட்ட சர்ச்சை? என்று கேட்டால், அதற்குப் பதில் இவர்கள் நாடகத்தினைத் தவற விட்டுவிட்டார்கள் என்பதாகும். ஏன் தவற விட்டார்கள்*

என்பதனை அவர்கள் மட்டுமே கூறமுடியும்." என்றார் செழியன்.

ஆனால் ரொரண்டோவின் இலக்கியச் சூழல் அந்தத் தளத்திலிருந்து இன்றுவரை மாறவில்லை. தமக்கு எதிராக ஒரு படைப்போ அல்லது எதிர் விமர்சனமோ தோன்றும் போது அதனைத் தர்க்க ரீதியாக எதிர்கொள்வதில்லை. மாறாக கோபம் கொள்வதும் தூற்றுவதுமே நடைபெறும். இதுதான் பெருங்கதையாடல் நாடகத்திற்கும் நடந்தது.

ஈழவிடுதலைப் போராட்டத்தில் செழியன் ஒரு ஆளுமை. அந்த ஆளுமையை மனங்கொள்ளும் பல்வேறு சந்தர்ப்பங்கள், மறந்து விட முடியாத பல்வேறு கவிதைத் துண்டுகள் ஈழவிடுதலைப் போராட்டத்தின் நினைவுகளைத் தொடர்ந்தும் தட்டியெழுப்பிக் கொண்டிருப்பவை. அவ்வாறான ஒரு மனிதனை இந்த ரொரண்டோ சமூகம் தகுந்த முறையில் நினைத்துக் கொள்வதில்லை. இறுதிவரை தத்தமது நோக்கங்களுக்காக அந்த ஆளுமையை அலைக்கழித்தவர்கள் இவர்கள்.

மனித நேயம் கொண்ட ஒரு சினேகிதனைச் சீரழிய விட்டு வேடிக்கை பார்த்தவர்கள் இந்த இலக்கிய மேதைகள். அவரை நினைவு கொள்ளும் இடம் இது என்பதால் இத்தோடு நிறுத்துகிறேன். மிகவும் விசாலமாகச் செழியன் என்ற ஆளுமை குறித்துப் பேசவேண்டியதொரு காலத்தை நாம் உருவாக்க வேண்டும்.

2018இல் ரொரண்டோவில் உள்ள நண்பர்கள் இணைந்து "தோழமை என்றொரு சொல்" என்பதாக செழியனுக்கான நினைவஞ்சலி நூலினை வெளியிட்டார்கள். பலர் அதில் எழுதியிருந்தார்கள். அது மிகச்சிறப்பான செயல். ஆனால் அவருடைய ஈழவிடுதலைப் போராட்டத்தின் நகர்வுகள் மற்றும் இலக்கிய நகர்வுகள் அனைத்தையும் உங்களுடைய லாபநட்டக் கணக்குப் பார்க்காது உரையாட வேண்டும். செழியனை எம் நெஞ்சருகில் நிறுத்தி நம்மை மறுசீரமைக்க வேண்டும். அதுவே "அதிசிறப்பு" என்று நான் கருதுவேன். ஆனால் அப்படியொன்றை நம்மவர்கள் ஒருபொழுதிலும் செய்யப் போவதில்லை என்பதுதான் கடை கெட்ட நிலை.



# செழியன் ஒரு மனித நேயன்!

**செல்வன்**
**(மனவெளி உறுப்பினர்)**

செழியன் ஒரு மனித நேயன். அதன் பிறகு தான் அவரது இலக்கியம், அரசியல் குறித்துப் பேச முடியும் . இருந்தாலும் அது எனது பணியுமல்ல.

90 களில் கவிஞராக பலராலும் அறியப்பட்டிருந்த செழியன் எவ்வாறு ஒரு சிறந்த நாடகப் பிரதி எழுத்தாளராகப் பரிணமித்தார் என்பதனை இங்கு தருவது பொருத்தமானது.

90 களில் மனவெளிகலையாற்றுக் குழு பல மேடை நாடகங்களை அரங்காடல் நிகழ்வின் மூலம் மேடையேற்றி வந்த காலம். நாடகப் பிரதிகளுக்கும் கடும் பஞ்சம் . இலங்கையிலிருந்து பிரதிகளையும் ,மொழிபெயர்ப்புப் பிரதிகளையும் பெரும்பாலும் தங்கியிருக்க வேண்டிய நிலை.

அந்தக் காலத்தில் வார விடுமுறைகளில் "கும்மாள"ங்களுக்கும் குறைவில்லை. செழியனும் அதில் எங்களுடன் கலந்து கொள்வார். அப்போதைய பொழுதுகளில் நண்பர் பாபு கொடுத்த அலுப்புத்தான் செழியனை நாடகப் பிரதி ஒன்றினை எழுத வைத்தது. அவ்வாறு எழுதப்பட்டதுதான் பெருங்கதையாடல். ரொறன்ரோ தமிழ் நாடகச் சூழலில் பலத்த சர்ச்சையைத் தோற்றுவித்த இந்த நாடகத்துடன் செழியனின் நாடகங்களுக்கென ஒரு ரசிகர் பட்டாளம் உருவாகின்றது. தொடர்ந்து வேருக்குள் பெய்யும் மழை, என் தாத்தாவுக்கொரு குதிரை இருந்தது, தீர்ப்பிட்ட விரலே (மேடையேற்றப்படாதது), சவரக் குறிப்புகள், பூச்சியப் பெருவெளி, கடலில் இருந்து கையளவு மேகம் போன்ற காத்திரமான நாடகங்களை அரங்காடலூடாகத் தமிழ் நாடக உலகுக்குத் தந்தவர்.

செழியன் நாடகம் எழுத ஆரம்பிக்கும் போது உருவாகும் பிரதி பின்னர் பல ஒத்திகைகளின் பின்னர் பரிணாமம் அடைந்து அது மேடையேற்றம் பெறும் போது ஒரு கனமான பிரதியாக மேடையேறும். தவறாமல் தனது நாடக ஒத்திகைகளுக்கு வந்து நெறியாளர்களுடனும், நடிகர்களுடனும் கலந்து பேசி அவசியம் தேவையான மாற்றங்களைச் செய்து கொடுக்கத் தயங்காதவர். அதோடு நெறியாளர்களுக்கான பூரண சுதந்திரத்தையும் வழங்கியிருப்பார்.

செழியனின் நாடகங்களில் நடிக்க வேண்டும் என ஆசைப்பட்ட நடிகர்களையும், அவரது பிரதிகளை நாடகமாக்க வேண்டும் என விரும்பிய நெறியாளர்களையும் நான் அறிவேன்.

அ.புராந்தகன், கா.சுகந்தன், க.நவம் (நவம் மாஸ்டர்) மற்றும் துஷி ஞானப்பிரகாசம் போன்ற சிறந்த நெறியாளர்களின் நெறியாள்கையில் மனவெளி செழியனின் பெரும்பான்மையான நாடகங்களை மேடையேற்றியதில் பெருமை கொள்கின்றது.



# 'விட்டுத் துலையுங்க!' எனும் செழியன்

ஜெபா

ஒரு கவிஞராகவும் தாயக விடுதலைப் போராளியாகவும் எழுத்தாளராகவும் இன்னும் பல ஆளுமைகளுடன் இனிமையாகப் பழகுதல், நகைச்சுவையுடன் பேசுதல் போன்ற பண்புகளைக் கொண்டிருந்தவர் செழியன். அத்தகைய நல்ல குணங்களால் நாங்களும் தொடர்ந்து அவருடன் பழகக்கூடியதாக இருந்தது. தனது கருத்துக்கள். எழுத்துக்கள் போல் வாழ்க்கையையும் மிகவும் எளிமையாக வாழ்ந்து சென்றுள்ளார். அத்தகைய ஒருஅற்புதமான மனிதரின் இழப்பு எம் எல்லோருக்கும் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

செழியனுக்கும் எங்கள் குடும்பத்திற்கும் 2002 ஆண்டில் இருந்து மிக நெருக்கமான நட்பு இருந்து வந்தது,. நாங்கள் இங்கு வந்த காலங்களில் இருந்து ஓவியர் கருணாவுடன் இணைந்தே அவரை நான் அதிகம் பார்த்திருக்கிறேன்.எங்கள் வீட்டிற்கும் கருணாவுடன் சேர்ந்தே வருவார். செழியன் வந்த நாட்களில் அவர் சொல்லிய பகிடிகளைக் கேட்டு நாங்கள் சிரித்து களைத்து விடுவோம். ஆனால் அவரது நகைச்சுவைகளால் நாங்கள் எத்தனையோ கவலைகள் கஸ்டங்களை மறந்தோம். எப்போதெல்லாம் எங்கள் வீடு அமைதியாக இல்லாது அல்லது நாங்கள் சோர்வாக இருக்கிறோம் என அறியும் போது செழியனும் கருணாவும் ஒன்றாக வருவார்கள். அவர்களால் வீடு களை கட்டிவிடும். மிக நீண்ட நேரம் உரையாடல் இருக்கும். நாடகம் அரசியல் இலக்கியம் தனிப்பட்ட கொசிப்பு, என மாறி மாறி அதிகம் பேசுவோம்.

அப்பொழுது ஒரு சிறிய வீட்டில் மிக எளிமையாக நானும் கற்சுறாவும் மகனும் வாழ்ந்து வந்தோம். எங்களிடம் விருந்தாளிகள் என வந்து போபவர்கள் பெரும்பாலும் கருணாவும் செழியனும் மட்டுந்தான். அந்த வாழ்க்கைமுறையின் சில தருணங்கள் கருணாவினால் சமாளிக்கமுடியாமல் போன போனது. செழியன் அதையும் பகிடிவிட்டு சிரித்து இரசித்து இயல்பாக்கிவிடுவார்.

வாழ்வின் பல்வேறுபட்ட தளங்களில் பணியாற்றிய அனுபவங்கள் இருந்ததாலோ என்னவோ துன்பங்களிலும் துயரங்களிலும் செழியனுடைய "விட்டுத் துலையுங்க" என்ற வார்த்தை எனக்கு மிகப் பெரும் ஆறுதலாக இருந்தது.

கனடா வந்த காலத்தில் நாங்கள் நம்பிப் பழகிய பல இலக்கிய நண்பர்களால் மன உளைச்சலுக்குள்ளான போது அவர்களுக்குள்ளிருந்த நஞ்சை ஒரு சிறிய நகைச்சுவையால் சுட்டிக்காட்டி எங்களை மன உளைச்சலிலிருந்து விடுபடச் செய்த ஒரு நம்பிக்கைக்குரிய மனிதன்.

செழியனின் நகைச்சுவை மொழி பல்வேறு இடங்களில் அளவு கணக்கில்லாது சிரிக்க வைத்தாலும் அதற்குள் இருக்கின்ற உள்ளுணர்வு மிக முக்கியமானது என்று என்னைப்போல் அவருடன் பழகியவர்கள் அறிந்திருக்கக் கூடும். அவரது நகைச்சுவை யாரையும் காயப்படுத்தாது. செழியனுக்கு உள்ளநல்ல மனித நேயம் அவரது அனுபவம் அவர் எதையும் நேர்கொள்ளும் விதம் எங்களுக்குச் சொல்லும் ஆலோசனைகள் எல்லாமே பயனுள்ளதாக இருக்கும்.

மனவெளியின் அரங்காடல் நிகழ்வுகளிற்காக செழியன் நாடகப் பிரதிகளை எழுதியிருக்கிறார். அந்த நாடகங்களின் சில உரையாடல்களை எங்கள் வீட்டில் வைத்து நிகழ்த்துவார்கள். அன்று முழுவதும் வீடு கலகலப்பாக இருக்கும்.. நான் செழியனின் நாடகப் பயிற்சிகள் நடைபெறும் இடத்திற்குச் சில தடவைகள் சென்று பார்த்திருக்கிறேன். மிகவும் சீரியசாக உற்றுக் கவனித்தபடி இருப்பார்.

ஆனாலும் இவ்வாறான செழியனை தனியே நகைச்சுவையாளனாக மட்டும் அடையாளப்படுத்திவிடமுடியாது என்பதே உண்மை.

"விட்டுத் துலையுங்க!" என்பது ரொரண்டோ இலக்கியச் சூழலுக்கு இன்றும் தேவையான வார்த்தைதான்.



# பாப்லோ நெருடாவும் பாலியல் பிறழ்வுகளும்

**ஜோர்ஜ் இ.**

சிற்றிதழ் இலக்கியக் கூட்டத்திற்கு ஒவ்வொரு காலத்திற்கும் ஒவ்வொரு வழிபடு கற்கள், idols, தோன்றிக் கொண்டே இருப்பார்கள். அவற்றை வழிபடுவதைப் பெருமையாகக் கருதும் போலித்தனம் அவர்களின் எழுத்தில் எப்போதும் நிறைந்திருக்கும். இந்த வழிபடு கற்கள் காலத்திற்கு காலம் மாறிக் கொண்டே இருப்பார்கள்.

இப்போது ஹரூகி முகாரமி, ஓர்ஹான் பாமுக் மாதிரி, ஒரு காலத்தில் பாப்லோ நெருடா இவர்களின் ஆதர்ஷ புருஷராக இருந்தார். அவரது கவிதைகளை தங்கள் சஞ்சிகைகளில் பிரசுரிப்பதையும், மேற்கோள் காட்டுவதையும் பெருமையாக கருதிய காலம் ஒன்றிருந்தது.

இப்படி தங்களைப் புத்திஜீவிகள் என்ற நெனப்போடு திரிந்தவர்கள் எல்லாம் தங்களுக்கு பாப்லோ நெருடாவைத் தெரியும் என்பதை இலக்கியத் தகுதியாகக் கருதிக் கொண்டிருந்தார்கள்... ஏதோ அவர் தங்களோடு சேர்ந்து குடித்துக் கொண்டு திரிந்தவர் மாதிரி!

எல்லாமே நன்றாகத்தான் போய்க் கொண்டிருந்தது.

இந்த ஹார்வி வைன்ஸ்டைனுக்கு ஆப்பு வைக்கப்படும் வரைக்கும்.

ஹொலிவூட்டின் ஆடைகள் இல்லாத சக்கரவர்த்தி அவர். ஒஸ்கார் விருதுகளை மோசடியான முறைகளில் அள்ளிக் குவித்த அவர், திரைப்படங்களைத் தயாரித்து, வினியோகித்த மிராமாக்ஸ் நிறுவன உரிமையாளர். தனது பதவியையும் செல்வாக்கையும் வைத்துக் கொண்டு, ஹொலிவூட்டின் பல நடிகைகளையும் வேறு பெண்களையும் பாலியல் வல்லுறவு, தொந்தரவுகளுக்கு ஆளாக்கியதாக நீண்ட காலமாக பகிரங்க ரகசியம் ஹொலிவூட்டில் உலாவிக் கொண்டிருந்தது.

நடிகைகளை பாலுறவுக்கு நிர்ப்பந்திக்கும் Casting couch எனப்படும் இந்த விவகாரம் தமிழ்நாட்டு சினிமாத் துறையிலும் இருப்பதாகச் செய்திகள் வெளிவந்திருந்தன. இப்படி அது பற்றிய தகவல்கள் வெளிவந்த போதெல்லாம் தனது செல்வாக்கைப் பாவித்து, குற்றம் சாட்டியவர்கள் பற்றிய அவதூறுகளை வெளியிட்டு அமுக்கியவர். பின்னர் அது பற்றி துப்பறிந்து வெளிவந்த பத்திரிகைச் செய்திகளோடு, சக்கரவர்த்தியின் நிர்வாணம் பகிரங்கமானது.

இப்படி சுமார் எண்பது பெண்கள் தங்களோடு இவர் தவறான முறையில் நடந்து கொண்டார் என்று குற்றம் சாட்ட முன்வந்தனர்.

இதன் பின்னர் தான் இந்த #MeToo சமூக வலைத்தளப் போராட்டம் ஆரம்பித்து, பெரும் பிரபலங்கள் எல்லாம் தங்களுடன் தவறான முறையில் நடந்து கொண்டது பற்றி உலகெங்கும் பெண்கள் பொதுவெளியில் துணிச்சலோடு சொல்ல முன்வந்தார்கள். இதனால், பல பிரபலங்கள் சமூக வெளியில் துகிலுரியப்பட்டு அவமானப்படுத்தப்பட்டனர். பதவி இழந்தனர். பலரின் கலை உலக வாழ்வு அஸ்தமனமானது. பலர் சமூகப் பிரதிஷ்டம் செய்யப்பட்டனர். ஏன் சிலர் சிறையும் சென்றனர்.

இதை Weinstein effect என்று சொல்லும் அளவுக்கு அதன் ஆரம்பத்திற்கு காரணமானவர் தான் ஹார்வி வைன்ஸ்டைன்.

இதன் எதிரொலியாகத் தான் நம் இலக்கிய உலகின் ஆதர்ஷ புருஷன் பாப்லோ நெருடாவிற்கும் ஆப்பு வைக்கப்பட்டது. #MeToo களேபரத்தில் நெருடாவின் தலை

உருள்வதற்கு அவர் தற்போதைய காலத்தில் உயிருடனும் இல்லை. 1973 இலேயே அவர் காலமாகி விட்டார். (அவருக்கு நச்சு ஊசி ஏற்றப்பட்டு கொலை செய்யப்பட்டார் என்ற சந்தேகங்கள் தற்போது கிட்டத்தட்ட உறுதி செய்யப்பட்டிருக்கின்றன.)

சிலியின் ஜனாதிபதியாக இருந்து, புரட்சிச் சதியின் போது கொல்லப்பட்ட அலண்டேயுடன் நெருக்கமானவராகவும், இடதுசாரியாகவும் இருந்த இவருக்கு, ட்ரொஸ்கியின் மரணத்தில் பங்குண்டு என்ற குற்றச்சாட்டும் உண்டு.

நெருடா நாற்பது வருடங்களுக்கு முன்னர் எழுதிய தனது சுயசரிதை ஒன்றில், தான் இலங்கையில் இருந்தபோது நடந்த ஒரு சம்பவம் பற்றி விபரித்திருந்தார்.

தனது வீடு இருந்த பகுதியில் மலசல கூடங்களைச் சுத்திகரிக்கும் தூய்மைப்பணி செய்யும் பெண் ஒருத்தியை (‘பறைய இனத் தமிழ்ப் பெண்’) அவளது விருப்பத்திற்கு முரணாக உறவு கொண்டது பற்றி அதில் குறிப்பிட்டிருந்தார்.

அந்தப் பெண்ணின் கண்ணில் படக்கூடியதாக அன்பளிப்புப் பொருட்களை வைத்த நெருடாவை அந்தப் பெண் உதாசீனம் செய்ததால், பலவந்தமாக அந்தப் பெண்ணைக் கையில் இறுக்கிப் பிடித்து படுக்கையறைக்கு இழுத்துச் சென்று உறவு கொண்டதைப் பற்றி எழுதியிருக்கிறார். தனது இயலாமை காரணமாக, எதுவும் பேசாமல் அந்தப் பெண் வெறும் சிலை போல முழு நேரமும் கண்ணைத் திறந்தபடியே இருந்ததாகவும் அந்தப் பெண் தன்னை வெறுத்ததில் நியாயம் உண்டு என்று என்றும் எழுதியிருந்தார்.

இதையெல்லாம் நம் இலக்கியவாதிகள் வாசித்திராமல் இருந்திருக்கக் கூடும். அல்லது, அவர்கள் எங்காவது மொழி பெயர்க்கப்பட்ட கவிதைகளை மட்டுமே வாசித்து நெருடா மேல் மையல் கொண்டிருக்கக் கூடும். அல்லது தாங்களும் இவ்வாறான இயல்புகளைக் கொண்டிருப்பது குறித்து, தங்களையும் நெருடா ரேஞ்சில் வைத்து பெருமை கொண்டிருக்கவும் கூடும்.

இந்தப் பெருமை எல்லாம் #MeToo இயக்கத்தின் எழுச்சியின் பின்னால் தகர்ந்து விட்டன. நெருடாவின் சொந்த நாடான சிலியிலேயே பெண்ணிய இயக்கங்கள், இது வரை காலமும் கருத்தில் எடுக்கப்படாமல் இருந்த, நெருடாவின் இந்த பால் வல்லுறவு வரலாற்றைத் தேடியெடுத்து, அதற்கு எதிராக போராட்டங்கள் நடத்தத் தொடங்கினர்.

‘Body of a woman, white hils, white thighs you look like a world, lying in surrender. My rought peasant’s body digs into you and makes the son leap from the depth of the earth.'

அத்துடன் நெருடாவின் கவிதைகள் மீள்வாசிப்புக்கு உள்ளாக்கப்பட்டன.

பெண்ணில் உடலை வெறும் போகப்பொருளாகக் கருதும் சிந்தனை கொண்ட இவ்வாறான கவிதைகள் மீள்வாசிப்புக்குள்ளாகி கண்டனங்களுக்குள்ளாகின.

இப்படியாக, அவரது தாய்நாட்டில் அவருடைய நூல்கள் பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், நூலகங்களில் புறக்கணிக்கப்படத் தொடங்கின. சிலியின் தலைநகர் சந்தியாகோ விமானநிலையத்திற்கு நெருடாவின் பெயரை வைப்பதற்கான முயற்சி தொடங்கிய போது, அதற்குப் பலத்த எதிர்ப்புக் கிளம்பியிருந்தது. தற்போது அந்த முயற்சி கைவிடப்பட்டிருக்கிறது.இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொண்ட ஒரு மாணவி தெரிவித்தது... நெருடாவை வழிபடுவதை நிறுத்தி, அவர் ஒரு துஷ்பிரயோகி என்ற உண்மை பற்றி கதைக்க வேண்டிய நேரம் வந்து விட்டது, அவர் ஒரு பிரபல இலக்கியவாதி என்பது, அவரை ஒரு பால்வல்லுறவாளன் என்பதிலிருந்து விதிவிலக்கு அளித்து விடாது!

(“It is time to stop idolizing Neruda and talk about the fact that he was abusive. Just because he is a famous artist does not exempt him from being a rapist.” )

இதையும் விட, தனது திருமணத்தின் மூலமாகப் பிறந்த பெண் குழந்தை குறைபாடுகளுடன் பிறந்த போது, அந்தக் குழந்தையைப் பராமரிக்கும் முழுமையான பொறுப்பை தன் மனைவியிடம் சுமத்தி, அவர்களைக் கைவிட்டு விட்டார். மூளையில் திரவம் நிறைவதால், தலை பெருத்து, நோய் வாய்ப்பட்ட அந்தக் குழந்தை ஒன்பது வயதில் நெதர்லாந்தில் இறந்து விட்டது. ஆனால், அருகில் உள்ள பிரான்சில் வசித்த நெருடா அந்தக் குழந்தையை மீண்டும் பார்த்ததில்லை.

> நெருடாவை வழிபடுவதை நிறுத்தி, அவர் ஒரு துஷ்பிரயோகி என்ற உண்மை பற்றி கதைக்க வேண்டிய நேரம் வந்து விட்டது, அவர் ஒரு பிரபல இலக்கியவாதி என்பது, அவரை ஒரு பால்வல்லுறவாளன் என்பதிலிருந்து விதிவிலக்கு அளித்து விடாது!

இப்படியாக, தனது சொந்த வாழ்வில் தனக்கான கடமைகளை மறந்த அவரை, அவர் நோபல் பரிசு பெற்றிருந்த போதும், தற்போது சிலி நாட்டினர் முன்பு போல போற்றிப் புகழத் தயாராக இல்லை. முன்பு எல்லாம் அவரது கவிதைகளைப் பாடமாக்கி ஒப்பிப்பது என்பது கூட பாடத்திட்டங்களில் இருந்து வந்தது. தற்போது பாடசாலைகளில் அவரைப் பற்றிக் கற்பிப்பது கூடக் குறைந்து வருகிறது.

இளைய தலைமுறை இவ்வாறான ஒருவரை ஒரு பாலியல் குற்றவாளியாக அடையாளப்படுத்தி, புறக்கணிக்கிறது. அவரை முன்நிலைப்படுத்துவது குறித்து கோபம் கொள்கிறது.

ஒரு காலத்தில் அதிகாரத்திற்கு எதிரானதும் புரட்சியினதுமான குறியீடாகவும், பொதுமக்களின் மனநிலையைப்பிரதிபலிப்பவராகவும் புகழ்ந்தேத்தப்பட்ட ஒரு கவிஞர், தனது சொந்த வாழ்வில் கொண்டிருந்த தகாத இயல்புகளால்

புறம் தள்ளப்பட்ட நிலையில், தற்போது அதே நாட்டில் இன்னொரு கவிஞர் முக்கியத்துவம் பெறுகிறார்.

ஒரு காலத்தில் ஏற்றுக் கொள்ளப்படாத சமூக நடைமுறை, ஒழுங்குகளுக்குள் இருந்து வந்த ஒருவர், அதுவும் அதே நாட்டில், நெருடாவுக்கு முன்பாக 1945 இல் லத்தீன் அமெரிக்காவில் இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்ற பெண் கவிஞர்.

கல்வியாளரும் ராஜதந்திரியுமான **Gabriela Mistral** தான் அந்தக் கவிஞர். பெண்கள், மாற்றுப்பாலினத்தவர், ஏழைகள் என்று பல்வேறுபட்டோரின் பிரச்சனைகளை அவர் தொட்டுச் சென்றிருப்பதால், தற்போது சிலியில் அவர் மக்களின் மனநிலையைப் பிரதிபலிப்பவராக முன்னெடுக்கப்படுகிறார். அதுவும் எவ்வளவோ காலத்தின் பின்னர்.

சிலி ஜனாதிபதி இவரைத் தனக்குப் பிடித்தமான கவிஞர் என்று கூறி, அவரது கவிதைகளை மேற்கோள் காட்டுகிறார். ஏற்கனவே சிலியின் பணத் தாளில் இவரது படம் இருக்கிறது. இவரது பெயரில் வீதிகள் இருக்கின்றன. ஆயினும் இவர் நெருடா போல, முன்பு பரவலாகப் பேசப்பட்டதில்லை.

பாப்லோ நெருடா குறைபாடுடன் பிறந்த தன் குழந்தையைக்கைவிட்டிருந்தாரல்லவா!? கபிரியேலாவுடைய தந்தை அவரது குடும்பத்தைக் கைவிட்டுச் செல்ல, இவரது தாயார் தான் இவரைத் தனியே வளர்த்திருந்தார். ஆரம்பக் கல்வியை முடிக்காவிட்டாலும், இவரது வீட்டில் உள்ளவர்கள் எழுத வாசிக்கத் தெரிந்தவர்களாக இருந்தார்கள். அந்த நேரம் சிலியில் மூன்றில் ஒரு பகுதியினர் மட்டுமே எழுத வாசிக்கத் தெரிந்தவர்களாக இருந்த காலம்.

அங்கு ஒரு ஆசிரியரின் உதவியாளராக இருந்த இவர், தனது ஓய்வு நேரங்களில் கவிதைகள் எழுதி பத்திரிகைகளுக்கு அனுப்பிக் கொண்டிருந்தார். 17 வயதில் இவரது கவிதை பத்திரிகை ஒன்றில் வெளிவந்தது. முழுமையான




பட்டங்கள் எதுவும் பெறாமலேயே அவர், ஆசிரியராக இருந்து சிலியின் பல இடங்களில் கற்பித்து வந்தார். பின்னர் மெக்சிக்கோவில் கல்வி முறையை சீர்படுத்தும் முயற்சிக்காகத் தெரிவு செய்யப்பட்டு மெக்சிக்கோ வந்த அவர் சிலிக்குத் திரும்பிச் செல்லவில்லை. ஸ்பெய்ன், போத்துக்கல், பிரான்ஸ், இத்தாலி, பிரேசில் என்று பல்வேறு நாடுகளில் பல்கலைக்கழங்களில் கற்பித்ததுடன் அமெரிக்காவில் கொலம்பியா பல்கலைக்கழகத்திலும் கற்பித்தார். அத்துடன் நெருடாவைப் போன்றே, ராஜதந்திரியாகவும் பணியாற்றியிருந்தார்.

வெளிநாடுகளில் அவர் பிரபலமானபோதும், தன் சொந்த நாட்டில் பெரிதாகப் பேசப்படவில்லை. அவரது நான்கு கவிதை நூல்களில் ஒன்று மட்டுமே சிலியில் வெளியிடப்பட்டது. ஆயினும் குழந்தைகள்

பற்றிய அவரது கவிதைகள் சிலியில் பாடப்புத்தகங்களில் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

பெண்கள், ஆதிக்குடிகள், விளிம்பு நிலையோர் பற்றிய அவரது அரசியல் கட்டுரைகள் பெரும் முக்கியத்துவம் கொடுக்கப்படாமலேயே இருந்தன.

ஆனால், இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றிய போது, பாப்லோ நெருடா புரட்சியின் குறியீடாக இருந்தார். இதை உடைக்க, இராணுவம் கபிரியேலாவின் கவிதைகளையும் குறியீட்டையும் தனக்குச் சாதகமாக்க முயன்றது.

அவரது உருவத்தை பணத்தாளில் கூட அச்சிட்டு அவரை தனது நலன்களுக்காக முதன்மைப்படுத்த முயன்றது. அவரை ஒரு பாடசாலை ஆசிரியை, தாய் போன்ற புனிதக் கட்டமைப்பை மக்கள் மனதில் உருவாக்க முயன்றது.

பின்னர் 90 களில் இராணுவ ஆட்சி முடிவுக்கு வந்த பின்னர், இந்த தாய் போன்ற உருவகக் கட்டமைப்பு கேள்விகுள்ளாக்கப்பட்டது. அத்துடன் கபிரியேலா தன் பாலீர்ப்புக் கொண்டவர் என்ற சந்தேகங்களும் வெளியிடப்பட்டன. தன்னிலும் 31 வயதான தன் பெண் உதவியாளருக்கு இவர் எழுதிய கடிதங்கள் வெளியிடப்பட்ட போது, அவர் மீதான கபிரியேலாவின் அன்பு ஒரு தாய் மகள் மீது காட்டும் அன்பைப் போலவும், ஒரு காதலி மீது காட்டும் பொறாமை போலவுமான கருத்தை ஏற்படுத்தும் விதத்தில் இருந்தன.

ஆனால், கபிரியேலா தான் தன்பாலீர்ப்பாளர் என்பதை மறுத்திருந்தார்.

தற்போது பாப்லோ நெருடாவின் falling from grace மண் கவ்வலின் பின்னால், தற்போது சிலியின் பெண்ணியவாதிகளால் கபிரியேலா பெண்ணியவாதியாகவும், மாற்றுப்பால் ஈர்ப்பாளர்களின் செயற் பாட்டாளராகவும் அடையாளப் படுத்தப்படுகிறார். ஆனால் கபிரியேலா தன்னை ஒரு போதும் பெண்ணியவாதியாகக் கூட அடையாளப்படுத்தியதில்லை.

இப்படி தற்போது இந்த #MeToo புரட்சியின் பின்னால், நெருடா ஓரம் கட்டப்பட, கபிரியேலா முக்கியத்துவம் பெறுகிறார்.

நோபல் பரிசு பெற்று, தூக்கி வைத்துக் கொண்டாடப்பட்டு, நாட்டுக்குப் பெருமை சேர்த்தாலும், தன் சொந்த வாழ்வில் அறநெறிகளுக்கு முரண்பட்டு வாழும் போது, அதே சமூகமே தூக்கி எறிந்து விடுகிறது. ஒரு காலத்தில் விளிம்பு நிலையினராக ஒதுக்கப்பட்டவர்கள், இன்னொரு காலத்தில் அதே சமூகத்தால் முன்னிலைப்படுத்தும் நிலையும் உருவாகிறது.

உலகம் இப்படித் தான் இயங்குகிறது என்பதை இலக்கிய மேதகுக்கள் உணர்ந்து கொள்வதில்லை.

சரி, பாப்லோ நெருடா மண் கவ்வியது பற்றி நம் இலக்கியவாதிகள் கவலை கொள்ளத் தேவையில்லை.

அவர்களுக்கு கபிரியேலா உருவில் வழிபடு கல் ஒன்றை அறிமுகப்படுத்தியிருக்கிறேன்.

இனியென்ன? அவரது படைப்புகளைத் தேடிப் பிடிப்பார்கள். சஞ்சிகைகளில் அவரது கவிதைகள் பிரசுரமாகும். லத்தீன் அமெரிக்காவின் புதிய விடிவெள்ளி என்று பெயர் வைப்பார்கள். மேற்கோள் காட்டுவதில் பெருமை கொள்வார்கள். அவரைத் தங்களுக்குத் தெரியும் என்பதை வைத்து தங்களையும் புத்திஜீவிகள் என்று காட்ட முயற்சிப்பார்கள்.

எங்காவது ஒரு அரச மரத்துக்கு கீழ் அதை வைத்து, சூலமும் குத்தி உண்டியலும் வைப்பார்கள்.

கொஞ்ச நாளைக்கு பிழைப்பு ஒகோ என்று ஓடும்.

அத்தோடு, முக்கியமாக...

பாப்லோ நெருடா என்று ஒருவரை தங்களுக்குத் தெரிந்ததாகவே இவர்கள் காட்டியும் கொள்ள மாட்டார்கள்.

"My solitary bungalow was far from any urban development. When I rented it, I tried to find out where the toilet was; I couldn't see it anywhere. Actually, it was nowhere near the shower, it was at the back of the house. I inspected it with curiosity. It was a wooden box with a hole in the middle, very much like the artifact I had known as a child in the Chilean countryside. But our toilets were set over a deep well or over running water. Here the receptacle was a simple metal pail under the round hole.

The pail was clean every morning, but I had no idea how its contents disappeared. One morning I rose earlier than usual, and I was amazed when I saw what had been happening. Into the back of the house, walking like a dusky statue, came the most beautiful woman I had yet seen in Ceylon, a Tamil of the pariah caste. She was wearing a red-and-gold sari of the cheapest kind of cloth. She had heavy bangles on her bare ankles. Two tiny red dots glittered on either side of her nose. They must have been ordinary glass, but on her they were rubies.

She walked solemnly toward the latrine, without so much as a side glance at me, not bothering to acknowledge my existence, and vanished with the disgusting receptacle on her head, moving away with the steps of a goddess. She was so lovely that, regardless of her humble job, I couldn't get her off my mind. Like a shy jungle animal she belonged to another kind of existence, a different world. I called to her, but i was no use. After that, I sometimes put a gift in her path, a piece of silk or some fruit. She would go past without hearing or looking. That ignoble routine had been transformed by her dark beauty into the dutiful ceremony of an indifferent queen.

One morning, I decided to go all the way. I got a strong grip on her wrist and stared into her eyes. There was no language could talk with her. Unsmiling, she let herself be led away and was soon naked in my bed. Her waist, so very slim, her full hips, the brimming cups of her breasts made her like one of the thousand-year-old sculptures from the south of India. It was the coming together of a man and a statue. She kept her eyes wide open all the while, completely unresponsive. She was right to despise me. The experience was never repeated."

**(Memoirs by Pable Neruda)**



# Vanished in the blink of an eye

Akaraa Bourassa

I often reflect on the past and wonder how this pastime developed. I used to be that one kid in fourth grade who had a weird fixation with horror and thriller movies. I used to stay there all day long watching film after film. At that moment, I had the thought that I wanted to pursue a career as a criminal defense attorney. My dream career changed after a few years since I was still in love with thriller movies and wanted to work in forensics, be involved in cases, and collaborate with police to solve mystery crimes.

That's when my father came to me one day and informed me about a case that had gone unresolved for a number of years. He also mentioned that a podcast was now airing on the case and its investigation. I didn't let my passion in criminology and thrillers stop me from visiting that website right away. The topic of the episode was Sharmini Anandavel, a young woman who has been reported missing. Every day, as I sat there, I listened to every episode of the podcast and it continued to lead me all the way through. I was quite interested in researching this situation. Since then, I've dug up a lot of old articles and case studies regarding this case as if I were actually a part of it.

In the summer of 1999, Sharmini, a 15 year old, was about to start a new job that morning. Her parents planned on taking her there, but they were abruptly pulled away to care for an ill family member. They requested that she submit her employer's phone number and address. She had previously informed them that it was a nearby job answering phones. Sharmini, however, had shared with her close friends a different story, claiming that a police officer had offered her a position as an undercover drug operator paying $12 per hour. The Anandavels struggled to make ends meet, much like many other families who had sought asylum in Canada. Eloornayagam, Sharmini's father, had relocated his family to Toronto from Sri Lanka in 1994 in order to start a new life. He soon became able to sponsor his wife Vasanthamalar and his three children, Dinesh, who was twelve,



Toronto Star 01.06.11

## Still no answers two years later

### Police considering reward to help find Sharmini's killer

BY MICHELLE SHEPHARD
CRIME REPORTER

A patch of overgrown weeds and underbrush beside a fast-flowing stream will be adorned tomorrow with flowers, candles and gifts to mark the second anniversary of 15-year-old Sharmini Anandavel's disappearance.

That's the spot where her skeletal remains were found four months after she left her North York apartment on June 12, 1999.

Since her death, her parents and two brothers have left Toronto for Ottawa, only visiting on various anniversaries. The friends who burned a candle in her honour during their Grade 8 graduation are now in high school.

One detective who investigated her case has transferred out of the homicide division to teach at police college. His partner, now a staff sergeant in charge of uniformed officers at a north-end division, has also left the city's downtown homicide office.

People have moved on, but no one involved in the investigation or Sharmini's life has forgotten. And they believe an arrest is still imminent.

With boxes of evidence gathered during a two-year investigation, homicide detectives are now considering a cash reward to get the final tip they need for an arrest.

"I think a reward would help," said Sharmini's father, Eloornayagam Anandavel, in a recent interview. "Anything to get that person arrested."

Last June, police had a new break in the case when forensic specialists with the York Region police force found a small piece of the shirt Sharmini was wearing the day she disappeared.

Police had already scoured the area where hikers found her remains on the damp banks of the Don River, near Leslie St. and Finch Ave. E.

Although various items were immediately sent for testing, York Region detectives found the small piece of fabric months later when there was no ground cover of leaves or snow. They hoped it would yield a DNA sample, but police will not disclose the results of that test.

On June 12, 1999, Sharmini left her fifth-floor apartment for her first day of work at a new job, which police now believe was set up as a ploy to lure her out of the building. When they later searched her bedroom they found a form for a bogus company called the Metro Search Unit.

One of Sharmini's classmates was waiting at home for a phone call from her that Saturday morning because she had promised to also get the friend a job. The friend later told Sharmini's mother and police a neighbour had arranged this employment.

This former neighbour, who has since moved east of the city, was questioned by police in the early morning hours following Sharmini's disappearance and remained under surveillance for weeks.

In various interviews with The Star over the past two years, this neighbour has said he knows nothing about Sharmini's disappearance but did know the teenager and other kids in the neighbourhood.

"I went swimming with her a few times with her brother and other tenants and I was talking to some employees there about summer jobs and (Sharmini and her friends) said 'Oh, can you get me a job?' and I said you'd have to fill out an application," he said during one interview.

A week before she went missing he gave her an application for a job at a North York pool, he said, but had never heard of a company called the Metro Search Unit.

Sharmini's absence was treated as a missing persons case until Oct. 12, 1999, when dental records determined the bones found in a North York park were the teenager's remains.

The homicide case remains open.

"We want our daughter's soul to be at peace," said Sharmini's father. "We need the judgment. We need to hear from the person who did this, why?"

PETER POWER/TORONTO STAR FILE PHOTO

SAD ANNIVERSARY: In the two years since Sharmini Anandavel disappeared, parents Eloornayagam and Vasanthamalar have left Toronto and detectives in the case have moved to other jobs.

Kathees, who was eight, and Sharmini, who was ten. The entire family put in a lot of effort to start over in Toronto. Helping their father deliver newspapers had the children occupied for quite a while. The Anandavels were successful, and the children did well in school. Sharmini was particularly intelligent and spiritually gifted. Her smile can be seen in the yearbook pages; she attended Woodbine Junior High from years 7 through 9.

Around the same time Sharmini had left, Stanley Tippett was passing by the structure at about the same time. Tippett, who was 23 at the time, shared a floor with the Anandavels with his wife and young boy. He and his family had just moved to Oshawa a few weeks prior, but he still had a job in the region, so he returned that Saturday.Tippett, who was well-liked in the building, particularly among the kids, was thought by Sharmini's family to have helped her land a job. He only performed odd jobs, therefore he frequently hung out. He would teach them judo while taking the children in the building swimming at a pool in North York. His appearance stood out as well. His eyes slant down away from his nose, he has a receding chin, and his ears are noticeably small because he has Treacher Collins syndrome, a genetic disorder that impairs the bone growth of his face. He had hearing aids when he was a little child. Tippett's mother, Susan Anderson, claims that Tippett experienced severe bullying when he was a young child. "They would beat him up and make fun of the way he looked", claimed Susan. Tippit was also known for fabricating tales.

He once pretended to be a police officer and told a group of lads in the building that he required one of their bikes for an investigation. Even though Tippett had never worked with the police and was not an officer, some of the kids, including Kathees, thought he had been one in the past. He frequently conducted building patrols while sporting a police outfit. Later, he admitted to having purchased it at a flea market. These odd stories surrounding Tippit shaped him to be one of the prime suspects early on in Sharmini's investigations.

Sharmini's parents became worried when she didn't return from her new job that evening. She wasn't often late. They rushed down to Tippett's place and pounded on his door because they were unaware that he had moved. The Anandavels dialed 911 when there was no response. The suspicion towards Tippit became stronger in his absence.

Michelle Sheppard was a crime reporter for the Toronto Star at the time of Sharmini's abduction. On June 16, after Sharmini had been gone for four days, she first met the Anandavels. The family was still holding out hope that Sharmini would return. She didn't seem like the kind to run away, but perhaps she had a double life? Perhaps a boy was present? Perhaps she had been taken hostage and was being held for ransom. Even psychics who were consulted by her parents confirmed that she was still alive. Multiple rumors within the community were spreading like wildfire.

Everything about Sharmini's case suggested that she had been kidnapped. She wasn't going to be found alive, in my opinion.Tippett was swiftly identified as the main suspect, and police were following him everywhere. They learned that he had sold his car to a junkyard and took possession of it before it was destroyed. But there were no hints left in the car. The removal of the trunk liner was the only thing that raised suspicion. Police failed to discover it. To find Tippett, Michelle teamed up with Dale Brazao, a seasoned investigative reporter for the Star and they once followed him into a Canadian Tire in Oshawa from his apartment. Tippett approached them in the parking lot and demanded to know why they were following him. He assumed they were police and he became at ease and sat on a car's trunk when they revealed that they were journalists. He appeared to enjoy the spotlight. He was courteous and well-spoken as he carefully detailed what transpired after Sharmini vanished.

The case was given to Toronto homicide investigators Matt Crone and Greg McLane. They found the most significant piece of information in Sharmini's bedroom, not at the location of her burial. A fraudulent application for the Metro Search Unit was submitted. Authorities suspect that her killer may have used a fake employment offer as a pretext to tempt her away from her house. Crone felt certain a familiar face was behind the crime.

Tippett informed Michelle that he had sent Sharmini the pool job application, and I knew he had a history of posing as police officers. Yet the fact that he was a suspect seemed too convenient. Sharmini was killed after a series of prominent false convictions. Tippet was discovered causing trouble with other individuals in his communities a few years later.Later in 2004 he was detained for criminal harassment as a result of a neighbor's complaint against him that proved to be accurate. Michelle assumed that Sharmini had experienced the same thing after learning that Tippet had been exposed for submitting phony resumes to other women in his neighborhood.

The killer of Sharmini Anandavel has not been found as of yet. Stanley Tippett is simply a leading suspect in this case; his guilt or innocence has not yet been established.





# கண்ணீர்ப்புகை பங்கருக்குள் சலசலக்கும் ரணில்

*இலங்கை அரசாங்கத்தின் அண்மைக்கால அடக்குமுறைப் பாதையின் முன்னணி அடியாட்களாக கண்ணீர்ப்புகைச் சன்னங்களும் கண்ணீர்ப்புகை குண்டுகளும் அணிவகுக்கின்றன. நியாயமான உரிமைகளை மறுத்து போராட்டங்களை கலைத்து போராட்டக்காரர்களை ஒடுக்கும் கலாசாரத்தை கண்ணீர்ப்புகை மூலம் நிரந்தரப்படுத்துவதற்கு பலவிதமான ஒத்திகைகள் பார்க்கப்படுகின்றன.*

போராட்டங்களை கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரைப் பிரயோகத்தின் மூலம் அடக்குவதை வாடிக்கையாக மாற்றுவதற்கும் மக்களை அதை ஏற்றுக்கொள்ளச் செய்விப்பதற்கும் அரசாங்கம் பாரிய பிரயத்தனங்களை மேற்கொள்கின்றது. போராட்டத்தை ஒடுக்க கண்ணீர்ப்புகைத் தாக்குதலை மேற்கொள்வதென்பது ஒரு சர்வ சாதாரணமான விடயமென்ற சித்திரத்தை ரணில் ராஜபக்ஷ அரசாங்கம் வரைய முற்பட்டுள்ளது.

அதை தொடர்கதையாக்கி போராட்டத்தின்போது தவிர்க்கமுடியாத ஓர் அங்கமாக அதைப் புகுத்த இக்கும்பல் முயற்சிக்கிறது. அதை மக்களுக்குப் பழக்கப்படுத்த முனைகிறது. இவ்வாறான ஜனநாயக விரோத போக்கை மக்கள் மீது திணிக்க முற்படுகின்ற ரணில் ராஜபக்ஷாக்களை கண்டிக்கும் பதிவே இது!

நாட்டு மக்கள் உடல் அரிக்கிறது என்பதற்காக வீதியில் இறங்கிப் போராட்டத்தில் ஈடுபடவில்லை. பல்கலைக்கழக மாணவர்கள் தமது கல்வி நடவடிக்கைகள், பல்கலைக்கழக பிரச்சினைகள் மற்றும் உரிமைகளுக்காக வீதியில் இறங்கிப் போராடுகிறார்கள். சாதாரண மக்கள் மின்கட்டணம், தண்ணீர் கட்டணம் உள்ளிட்ட அதிகரித்துள்ள வாழ்க்கைச் செலவுக்கு நியாயம் கேட்டு போராடுகிறார்கள். மத்தியத்தர வர்க்கம், அரச உத்தியோகத்தர்கள், தொழில்வாண்மையாளர்கள் மற்றும் தொழில் முயற்சியாளர்கள் உள்ளிட்டோர் அரசாங்கத்தின் படுமோசமான வரிக்கொள்கைக்கு எதிராக அதாவது வரிச்சுரண்டலுக்கு எதிராக போராட்டக்களத்தில் குதித்திருக்கிறார்கள். வங்கிகளின் வட்டி விகிதத்தை சரமாரியாக அரசு உயர்த்தியுள்ளதால் அரசு ஊழியர்களின் மாதாந்த சம்பளத்தில் பெரும்பகுதி வங்கிக் கடன் செலுத்தவே தீர்ந்து போய்விடுகிறது.

ஆனால் சம்பளம் அதிகரிக்கப்படவில்லை. இதற்கு எதிராக பாரிய போராட்டம் முன்னெடுக்கப்படுகிறது. வரிக்கொள்கை, சர்வதேச நாணய நிதியத்திடம் நாட்டை அடகு வைக்கும் அரசாங்கத்தின் செயற்பாடு, நட்டமென்று கூறி அரச ஆதனங்களை தனியார்மயப்படுத்த முனையும் அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கைக்கு எதிராக தொழிற்சங்கங்கள் போராடுகின்றன. எதிர்கட்சிகள் அரசியலமைப்பின் பிரகாரம் உடனடியாக உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை நடாத்து என்று வலியுறுத்தி போராட்டத்தில் இறங்கியுள்ளன. இவ்வாறான நியாயமான அமைதிவழிப் போராட்டங்களை சட்டத்துக்கு முரணாக அடக்கமுற்படும் கொலைகார அரசாங்கத்துக்கு எதிராக சட்டத்தரணிகள் போராடுகின்றனர். ஆக, எவரும் இங்கு அரிப்பெடுக்கிறது என்பதற்காக போராட்டத்தில் ஈடுபடவில்லை. இங்கு அரிப்பெடுத்திருப்பது ரணில் ராஜபக்ஷ அரசாங்கத்திற்காகும்.



சதீஸ் செல்வராஜ்

கடந்த பொதுத் தேர்தலின்போது நாட்டு மக்களால் தோற்கடிக்கப்பட்டு வீட்டிற்குள்ளேயே அமரச் செய்யப்பட்ட ரணில் விக்ரமசிங்கவின் கூட்டமும், 69 இலட்சம் வாக்குகளைப் பெற்று ஆட்சிக்கு வந்து ஊழல், மோசடி உள்ளிட்ட அதிகார துஷ்பிரயோகங்களைப் புரிந்து நாட்டை நாசமாக்கியதன் காரணத்தால் மக்களால் வீட்டுக்கு விரட்டியடிக்கப்பட்ட ராஜபக்ஷாக்களின் கூட்டமும் தற்போது கூட்டுசேர்ந்துகொண்டு ஒரே உள்ளாடையை அணிந்துகொள்ளும் பால்ய நண்பர்கள் போல நடந்துக்கொள்வதைப் பார்க்கையில் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் அரிப்பை பற்றி புரிந்துகொள்ள முடிகிறது.

இவர்களது இன்றைய கேலிக்கூத்தைப் பார்க்கையில் அவர்கள் வழங்கிய பழைய தேர்தல் வாக்குறுதிகள் எல்லாம் நினைவுக்கு வந்துபோகிறது. 2015 இல் ரணில், மைத்திரி கூட்டணி ராஜபக்ஷாக்களின் ஊழல், மோசடி குறித்து விமர்சனத்தை முன்வைத்து சட்டநடவடிக்கைகளை எடுப்பதாகக் கூறி ஆட்சிக்கு வந்தது. அதன் பின்னர் 2019 இல் கோட்டாபயவை முதன்மைப்படுத்திய ராஜபக்ஷாக்கள் தமது தேர்தல் பிரச்சாரத்தின் போது பிணைமுறி மோசடி புரிந்த ரணில் விக்ரமசிங்கவுக்கு தண்டனை வழங்குவதாகவும், ஈஸ்டர் தாக்குதலால் பாதிக்கப்பட்டர்களுக்கு நியாயத்தை பெற்றுத் தருவதாகவும் கூறி ஆட்சியமைத்தனர். இவ்வாறு எதிரெதிரான கருத்துக்களை மக்களிடத்தில் கூறி, தாங்கள் இருவேறு முகாம்கள் என்று மக்களுக்கு கண்ணாமூச்சு காண்பித்து ஆட்சிக்கு வந்தவுடன் தங்களுக்குள் ஒருவரையொருவர் பாதுகாத்துக் கொள்ளும் கொந்தராத்துடன் அரசியலில் ஈடுபட்ட இக்கும்பல் தற்போது தமது முகத்திரையைக் கிழித்துக்கொண்டு, “நாங்களெல்லாம் ஒன்னுக்குள்ள ஒன்னு” என்று கூடிக்குலாவி வட்டமேசை மாநாட்டை நடத்திக் கொண்டிருப்பது தன்னிச்சையாக நடந்தவொன்றல்ல!

பரம்பரைப் பரம்பரையாக ஆண்டப் பரம்பரையான இவர்களை மக்கள் இன்று புறக்கணித்து தமக்கான அரசியலை இலங்கையில் நிறுவ முற்பட்டுள்ளதன் விளைவாக இவ்வனைத்தும் நடந்தேறிது. தமது அதிகார இருப்பு நக்கிக்கொண்டு போகப்போகிறது என்று அஞ்சியே இதுவரையில் மாறி மாறி ஆட்சி புரிந்த எல்லா கயவர்களும் ஒரே கொட்டகைக்குள் தற்போது புகுந்து தந்திரத் திட்டங்களை வகுத்துக் கொண்டிருக்கின்றனர். தொடர்ந்து தாமே ஆட்சியில் இருப்பதற்கான வியூகங்களை தீட்டிக்கொண்டிருக்கின்றனர். அதிலொரு வியூகம்தான் மக்கள் மத்தியில் இருந்து எழும் போராட்டங்களை அரச இயந்திரங்களைப் பயன்படுத்தி அடக்கியொடுக்குவதும் எப்பேர்பட்டாவது தேர்தலை பிற்போடுவதும் ஆகும். அதன்படி, ரணில் ராஜபக்ஷாக்களின் திட்டத்தின் ஒரு கட்டமாக தற்போது போராட்டக்காரர்களை இலக்கு வைத்து கண்ணீர்ப்புகை தாக்குதல் வரைமுறையின்றி மேற்கொள்ளப்படுகிறது.


**கண்ணீர்ப்புகை என்றால்?**

பேச்சுவழக்கிலும், அன்றாட சொல்லாடலிலும் நாம் கண்ணீர்ப்புகை என்று பயன்படுத்தினாலும் அது புகை கிடையாது. அது இரசாயன பதாரத்தங்களின் கலவையாகும். உலகில் கண்ணீர்ப்புகை பாதையின் வரலாறு 100 வருடங்களை விட பழமையானது. பல்வேறு நாடுகள் பல்வேறு காரணங்களுக்காக பல்வேறு உள்ளடக்கங்களை பாவித்துள்ளன. தொடக்கத்தில் மிளகுத்தூள் கலவை கூட பாவிக்கப்பட்டுள்ளன. உலக யுத்தத்தில் நச்சுக்கள் அடங்கிய கண்ணீர்ப்புகை குண்டுகளும் பயன்படுத்தப்பட்டுள்ளமை பதிவாகியிருக்கிறது.

உள்நாட்டில் எழும் கலவரங்களை கலைப்பதற்காக கண்ணீர்ப்புகை பயன்படுத்தப்படுகிறது. எவ்வாறாயினும், தற்காலத்தில் கலவரங்களை அடக்குவதற்கு பயன்படுத்தப்படுகின்ற கண்ணீர்ப்புகையில் CS எனும் இரசாயன பதார்த்தம் உள்ளடக்கப்பட்டுள்ளது. CS என்பது ஆவியாகக் கூடிய திரவமாகவும் அறை வெப்பநிலையில் திண்மக் கலவையாக அமைகின்ற 2-chlorobenzalmalo nonitrile ஆகும். இது 1928 ஆம் ஆண்டு Ben Corson. Roger Stoughton ஆகிய அமெரிக்கர்களால் தொகுக்கப்பட்டது. அந்த இரசாயனப் பதார்த்தத்தின் பெயர் CS என குறிப்பிடப்ப ட்டுள்ளமைக்கான காரணம் அந்த விஞ்ஞானிகள் இருவரின் குடும்ப பெயர்களின் முதல் எழுத்துக்களின் காரணமாகவாகும்.

அதற்கு மேலதிகமாக Oleoresin capsicum (OC), Chlorobenzylidene malononitrile (CS&), Dibenzoxazepine (CR) எனும் இரசாயன பொருட்கள் அடங்கிய கண்ணீர்ப்புகை சன்னங்களும் குண்டுகளும் உலகளவில் அதிகமாக பயன்படுத்தப்படுகின்றன.

எது எவ்வாறாயினும் கலவரங்களை அடக்குவதற்காக பயன்படுத்தப்படுகின்ற இந்தக் கண்ணீர்ப்புகை பல நாடுகளிலும் அமைதிவழிப் போராட்டத்தைக் கலைப்பதற்காகவும் பயன்படுத்தப்படுகிறது. இலங்கையின் அண்மைக்கால நிலையும் இதுவே. அரசாங்கத்தின் இந்த அராஜகப் போக்கை எதிர்த்து “உரிமைக் குரலுக்கான பதில் இரசாயன ஆயுத தாக்குதலா?” என்ற தலைப்பில் அமைதிவழிப் போராட்டங்களும் இளைஞர்களால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.



## கண்ணீர்ப்புகை தாக்குதலின் பாதிப்புகள்

கண்ணீர்ப்புகை தாக்குதலின் பாதிப்புகளை குறுகிய கால நிலைமைகள், நீண்ட கால நிலைமைகள் மற்றும் அபாயகரமான நிலைமைகள் என்று வகைப்படுத்தலாம். கண்ணீர்ப்புகை எறியப்பட்டவுடன் ஒருவருக்கு சாதாரணமாக கண் எரிச்சல், தோல் எரிச்சல், சுவாசிப்பதில் சிரமம், மயக்கம், வாந்தி போன்றன ஏற்படும். ஆனால், 2023 இல் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட கண்ணீர்ப்புகைத் தாக்குதலில் இருவர் உயிரிழந்துள்ளனர். “அரசியலமைப்புச் சட்டத்தின்படி தீர்மானிக்கப்பட்ட திகதியில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்து!” என்று வலியுறுத்தி, நீதிமன்ற சட்டங்களை மதித்து அமைதிவழியில் தேசிய மக்கள் சக்தியால் 2023 பெப்ரவரி 26 ஆம் திகதி முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தின்போது ரணில் ராஜபக்ஷ அரசாங்கத்தின் கட்டளைப்படி மேற்கொள்ளப்பட்ட தாக்குத்தலில் நிமல் அமரசிறி உயிரிழந்தார். தாக்குதல் நடத்தப்பட்டு சற்று நேரத்தின் பின் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்றுவந்த நிலையிலேயே அவர் உயிரிழந்தார்.

அதனையடுத்து கொழும்புப் பல்கலைக்கழக மாணவர்கள் மீது கடந்த 2023 மார்ச் 07 ஆம் திகதி கண்ணீர்ப்புகைத் தாக்குதலை மேற்கொண்டது மட்டுமல்லாது, பல்கலைக்கழ வளாகத்திற்குள்ளும் (சட்டப்பீடத்துக்குள்) கண்ணீர்ப்புகை குண்டுகளை எறிந்ததன் காரணத்தால் போராட்டத்துடன் எவ்விதத்திலும் சம்பந்தப்படாத பல்கலைக்கழக காவலர் உயிரிழந்துள்ளார். அதனால், அரசாங்கம் பயன்படுத்துகின்ற கண்ணீர்ப்புகை எவ்வாறான இரசாயனக் கலவையைக் கொண்டுள்ளது? அவை காலாவதியானவையா? என்ற நியாயமான சந்தேகங்கள் எழுந்துள்ளன. ஏனெனில், கடந்த கோல்ஃபேஸ் போராட்டத்தின்போதும் காலாவதியான கண்ணீர்ப்புகை பயன்படுத்தப்பட்டமை குறித்த ஆதாரங்கள் சமூக வலைத்தளங்களில் வெளியாகியிருந்தன.



## கண்ணீர்ப்புகை கொள்வனவு பற்றிய அரசாங்கத்தின் அறிக்கை

இலங்கைப் பொலிஸினால் 2012 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரையில் 4 சந்தர்ப்பங்களில் கண்ணீர்ப்புகை கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக ஆவனங்களில் பதிவாகியுள்ளன. 2012 இல் 20,000, 2017 இல் 5000, 2019 இல் 15,000 மற்றும் 2020 ஆம் ஆண்டில் 5000 கண்ணீர்ப்புகை சன்னங்களும் குண்டுகளும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

2012 ஆம் ஆண்டு 10,000 கண்ணீர்ப்புகை சன்னங்களுக்கும் 10,000 கண்ணீர்ப்புகை குண்டுகளுக்கும் 61,080,000 ரூபா செலவாகியுள்ளது. 2017 ஆம் ஆண்டில் 5000 கண்ணீர்ப்புகை சன்னங்களை கொள்வனவு செய்வதற்காக Securatec Lanka (Pvt) எனும் கம்பனி விதப்புரை செய்யப்பட்டிருந்தது. அதன் வெளிநாட்டுக் கம்பனி Korea CNO Tech Co. ltd என்பதாகும். இந்தக் கொள்வனவுக்கு 10,809,814 ரூபா செலவாகியுள்ளது. 2019 இல் 15,000 கண்ணீர்ப்புகை சன்னங்களை கொள்வனவு செய்வதற்கு ACE International என்ற கம்பனிக்கு அங்கிகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதன் வெளிநாட்டுக் கம்பனி C-Rich Global Leader என்பதாகும். இந்தக் கொள்வனவுக்கு 39,399,006 ரூபா செலவாகியது. 2020 இல் 5000 கண்ணீர்ப்புகை குண்டுகளை கொள்வனவு செய்வதற்கான அங்கிகாரம் ACE International கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்த்து. அதன் வெளிநாட்டுக் கம்பனி Navigation Marketing pte ltd ஆகும். இந்தக் கொள்வனவின் மொத்தச் செலவு 50,812,310 ரூபா ஆகும். 2022 இல் கண்ணீர்ப்புகை கொள்வனவு செய்யப்படவில்லை என்றும் பதிவாகியுள்ளது.

2012 முதல் 2022 வரை கண்ணீர்ப்புகை வாங்குவதற்கு செலவழித்த மொத்தத் தொகை ரூ 162,101,131.66. மார்ச் 31, 2022 முதல் ஜூலை 17, 2022 வரை பயன்படுத்தப்பட்ட கண்ணீர்ப்புகை சன்னங்கள் மற்றும் குண்டுகளின் மதிப்பு 26,706,578.17 ரூபாவாகும்.

அதேநேரம் 2016, 2019 மற்றும் 2020 இல் கண்ணீர்ப்புகை கொள்வனவு செய்யப்படும்போது அதன் மாதிரிகள் பரிசோதனை செய்யப்படவில்லை. இது பெறுகை வழிகாட்டுதல்களை மீறும் செயற்பாடாகும். கண்ணீர்ப்புகை சன்னங்கள் வேலை செய்கிறதா என்பதை மாத்திரம் களுத்துறை பொலிஸ் பயிற்சி கல்லூரியில் பரிசோதிக்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட தொழினுட்ப மதிப்பீட்டு குழுவில் கண்ணீர்ப்புகை உள்ளடக்கம் பற்றி நிபுணத்துவம் பெற்ற ஒருவர் கூட பங்கேற்கவில்லை.

அதன்படி, இலங்கையில் பயன்படுத்தப்படுகின்ற கண்ணீர்ப்புகை மனித உடலுக்கு ஊறுவிளைவிக்குமா இல்லையா என்பதை கூட உறுதிப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை.

## காலாவதியான கண்ணீர்ப்புகை

கடந்த 2022 ஆம் ஆண்டு நாட்டில் நிலவிய பலவிதமான போராட்டங்களின் போதும் காலாவதியான கண்ணீர்ப்புகைகள் பயன்படுத்தப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது. கொழும்பு தெற்கு பிரிவு, கல்கிஸ்ஸ பிரிவு, கொழும்பு மத்திய பிரிவு, மட்டக்களப்பு, கண்டி, அனுராதபுரம், கேகாலை, மாத்தறை, பொலன்னறுவை மற்றும் தங்காலை ஆகிய பகுதிகளில் 2022 இல் காலாவதியான கண்ணீர்ப்புகைத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறித்த ஆவணங்கள் இருப்பதாக சமூக கிறிஸ்தவ ஒன்றியம் (ecuminical centre) தெரிவிக்கின்றது. 2022 இல் வீசப்பட்ட கண்ணீர்ப்புகையில் 2000, 2010, 2011, 2012, 2014, 2016, 2017, 2018, 2019, 2020 ஆண்டுகளில் வாங்கப்பட்ட அல்லது பகிரப்பட்ட கண்ணீர்ப்புகை

சன்னங்களும் குண்டுகளும் உள்ளன. ஆவணங்கள் சம்பந்தப்பட்ட ஆதாரங்கள் இல்லாவிட்டாலும் 2005 ஆம் ஆண்டு உற்பத்தி செய்யப்பட்ட கண்ணீர்ப்புகை பயன்படுத்தப் பட்டமைக்கான புகைப்பட ஆதாரங்கள் உள்ளன.

ஒரு கண்ணீர்ப்புகை சன்னம் மற்றும் கண்ணீர்ப்புகை குண்டுகளின் ஆயுட்காலம் 5 வருடங்கள் ஆகும். இவ்வாறான காலாவதியான கண்ணீர்ப்புகையின் உள்ளடக்கம் இரசாயன மாற்றத்திற்கு உள்ளாகி ஆபத்தான நிலைமையினை உருவாக்கிவிடும் என்றும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர். நாட்டில் கண்ணீர்ப்புகைத் தாக்குதல் மற்றும் காலாவதியான கண்ணீர்ப்புகையைப் பயன்படுத்துவதற்கு எதிரான கருத்துக்களும் சட்டநடவடிக்கைகளும் மேலோங்குவதால், தற்போது காலாவதியான கண்ணீர்ப்புகை சன்னங்களும் குண்டுகளும் செயலிழக்கச் செய்விக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளன.

பிரதி பொலிஸ்மா அதிபர் ஜகத் குமாரசிறியின் கூற்றுப்படி, 2022 ஆம் ஆண்டில் சுமார் 15,000 கண்ணீர் புகை குண்டுகள் காலாவதியாகியதன் காரணமாக செயலிழக்கச் செய்விக்கப்பட்டுள்ளன. காலாவதியான மற்றுமொரு தொகை கண்ணீர்ப்புகை குண்டுகளை அழிப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியிருக்கிறார். ஆக, காலாவதியான கண்ணீர்ப்புகை ஆயுதங்கள் அவர்களது கைவசம் இருப்பது உறுதியாகிறது.

## 2012 ஆம் ஆண்டிற்குப் பின்னர் எழுந்த போராட்டத்தின் தொடர்ச்சி

2010 ஜனாதிபதித் தேர்தலின் பின்பு மஹிந்த ராஜபக்ஷவின் ஜனாதிபதி பதவியின் இரண்டாவது காலப்பகுதியில் நாட்டில் பல எதிர்ப்பு போராட்டங்கள் எழுந்தன. அதில் 4 போராட்டங்கள் மிக முக்கியமானவை.

முதலாவது, 2011 ஆம் ஆண்டு இடம்பெற்ற கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலய ஊழியர்களின் போராட்டம். இந்தப் போராட்டத்தில் ரொஷேன் சானக்க என்ற தொழிலாளர் கொல்லப்பட்டார். இரண்டாவது, 2012 ஆம் ஆண்டு இடம்பெற்ற சிலாபம் மீனவர்களின் போராட்டம். இதன்போது அந்தனி பெர்னாண்டோ என்ற 28 வயது இளைஞர் அரச இயந்திரத்தால் கொலை செய்யப்பட்டார்.




மூன்றாவது, 2013 ஆம் ஆண்டு இடம்பெற்ற கம்பஹா, வெலிவேரிய ரத்துபஸ்வல போராட்டம். தம்மிக்க பெரேராவின் கையுறை தொழிற்சாலையின் கழிவு காரணமாக குடிநீர் மாசடைவதாக கூறி, சுத்தமான குடிநீரைக் பெற்றுத்தருமாறு வழியுறுத்தி பிரதேச மக்கள் அமைதிப் போராட்டம் நடத்திய வேளையில் ராஜபக்ஷ அரசாங்கம் இராணுவத்தை ஈடுபடுத்தி அந்தப் போராட்டத்தை ஒடுக்கியது. அதன்போது துப்பாக்கிச்சூட்டுப் பிரயோகத்தில் 2 பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட மூவர் படுகொலை செய்யப்பட்டனர்.

நான்காவது, அழுத்கம தர்கா நகரில் இடம்பெற்ற எதிர்ப்பு. இதன்போது துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாக ஊடகங்களில் பதிவாகியுள்ளன.

2015 ஆம் வருடம் ரணில், மைத்திரி அரசாங்கத்தின் போதும் நாட்டில் பல போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. குறிப்பாக பிணைமுறி ஊழல், சைட்டம் தனியார்மயக் கல்வி, MCC உடன்படிக்கை போன்ற நடவடிக்கைகளுக்கு எதிராக பாரிய மக்கள் போராட்டங்கள் எழுந்தன. அதேநேரம், ராஜபக்ஷ கும்பலினால் இனவாத, மதவாத ரீதியிலான கருத்தியல்கள் வளர்க்கப்பட்டதுடன், நாட்டில் கலவரங்கள் ஏற்படவும் வழிவகுத்தன. கண்டி திகன கலவரம், டொக்டர் ஷாபி மீதான பொய்க் குற்றச்சாட்டு, மலட்டுக் கொத்து மற்றும் மலட்டு உள்ளாடை போன்ற பிரச்சாரம் என்பன முஸ்லிம் சமூகத்துக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டன. ஈஸ்டர் தாக்குதல் ஆட்சி மாற்றத்துக்கும் வழிவகுத்தது.

தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதாகவும், சிங்கள மக்களை பாதுகாப்பதாகவும் உறுதிமொழி வழங்கி 2019 இல் கோட்டாபய ராஜபக்ஸ ஆட்சிக்கு வந்ததன் பின்னர் மீண்டும் மக்கள் போராட்டங்கள் எழுந்தன. கொவிட் பெருந்தொற்று காலத்தில் முறையான விஞ்ஞான ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளாததன் காரணத்தால் முதல் எதிர்ப்பு எழுந்தது. ஜனசா விவகாரத்தை உருவாக்கி சிங்களவர்களை முஸ்லிம்களுக்கு எதிராக தூண்டிவிடவும், ஆறுகளில் மந்திரித்த சட்டிகளை மிதக்கவிடுதல், குண்டலினி சக்தி, தம்மிக்க பாணி என்று மக்களை மூடநம்பிக்கையில் மூழ்கடிக்கவும் அரசாங்கம் முயன்றது. இது தமது இயலாமையை மூடிமறைப்பதற்காக முன்னெடுக்கப்பட்ட தான்தோன்றித் தனமான செயலாகும்.

கொவிட் பின்னணியில் இடம்பெற்ற கள்ளவியாபாரம், கொந்தராத்து, கருப்புப்பண கொடுக்கல் வாங்கல், மக்கள் சொத்துக்களை விற்றல், ஊழல் மோசடி என்று ராஜபக்ஷ அரசாங்கத்தின் கேடுகெட்ட நடவடிக்கைகளினால் நாட்டின் பொருளாதாரம் வங்குரோத்து நிலையை அடைந்தது. இதற்கு எதிராக நாட்டு மக்கள் ஒன்றுசேர்ந்து பாரிய போராட்டங்களை முன்னெடுத்தனர். 2019 ஆம் வருடத்தில் நவம்பர் மாதத்தில் தான் அதிகளவான

போராட்டங்கள் இடம்பெற்றுள்ளன. 2021 கடைசியில் மாத்திரம் 400 போராட்டங்கள் இடம்பெற்றுள்ளன. 2022 ஆம் வருடமென்பது இலங்கையின் தீர்வு கட்டமான காலப்பகுதியாக இருந்தது. இவ்வருடத்தில் முதல் மூன்று மாதங்களில் வெவ்வேறு இடங்களில் பாரிய போராட்டங்கள் எழுந்தன.

யானை, மனித மோதல் மற்றும் உரப்பிரச்சினைக்கு எதிரான விவசாயிகளின் போராட்டம், சிங்கராஜ வன அழிப்பிற்கு எதிரான போராட்டம், அதிபர்கள்-ஆசிரியர்களின் மிகப்பெரிய தொழிற்சங்க போராட்டம், ஐக்கிய மக்கள் சக்தியால் 2022 மார்ச் 15 இல் ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக மேற்கொள்ளப்பட்ட போராட்டம் போன்றன முக்கியமானவை. அதற்கடுத்து 2022 மார்ச் 18 அன்று சோஷலிச இளைஞர் சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட போராட்டம் கோட்டாபய அரசாங்கத்துக்கு எதிரான மிகப்பெரிய முதலாவது இளைஞர் போராட்டமாகும். இதன்பின்னரே கோட்டாபயவுக்கு பயந்திருந்த மக்கள் பயத்தை விட்டு போராடுவதற்கு வீதிக்கு இறங்கினர். அதன்படி, மார்ச் 31 நுகேகொடை, மிரிஹானவில் அமைந்துள்ள கோட்டாபய ராஜபக்ஷ வின் இல்லத்திற்கு முன்பாக இடம்பெற்ற போராட்டம் முக்கிய பங்குவகித்தது.

அதிலிருந்து போராட்டம் உக்கிரமடைந்து ஜூலை 9 கோட்டாபய ராஜபக்ஷ விரட்டியடிக்கப்படும் வரையில் வளர்ந்தது. இதன்போது, ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகம், அலரி மாளிகை உள்ளிட்ட கட்டடங்கள் போராட்டக்காரர்கள் கைவசம் இருந்தன. 2022 போராட்டங்களை தடுப்பதற்கு பாதுகாப்பு பிரிவு பல முயற்சிகளை மேற்கொண்டன. இதன்போது 10 பேர் உயிரிழந்தனர். 100 பேர் வரை காயமுற்றனர். ஏறக்குறைய 5000 பேர் கைது செய்யப்பட்டனர்.

இந்தக் காலப்பகுதியில் இடம்பெற்ற போராட்டங்களை கலைப்பதற்கு கண்ணீர்ப்புகை ஏராளமாக பயன்படுத்தப்பட்டது. அதன்படி, 2022 மே மாதம் பல போராட்டங்கள் இடம்பெற்றதுடன், அவற்றை கலைப்பதற்கு கண்ணீர்ப்புகை பயன்படுத்தப்பட்டன. அதில் பலருக்கும் ஒவ்வாமைநிலை ஏற்பட்டு பாதிப்புற்றனர். அதனால், எதிர்ப்பினை அடக்குவதற்கு கோட்டாபய




அரசாங்கம் நச்சுத்தன்மைவாய்ந்த கண்ணீர்ப்புகையை கொள்வனவு செய்ததாக சந்தேகம் எழுந்தது.

இந்தப் போராட்டத்தின் போது பல சந்தர்ப்பங்களிலும் காலாவதியான கண்ணீர்ப்புகை பயன்படுத்தப்பட்டுள்ளது. 2012 முதல் 2022 ஜனவரி முதலாம் திகதி வரையான காலப்பகுதியில் அதிகளவான கண்ணீர்ப்புகை பயன்படுத்தப்பட்டிருப்பது 2017 ஆம் ஆண்டிலாகும். இது ரணில், மைத்திரியின் நல்லாட்சி காலப்பகுதியாகும். இத்தாக்குதல் பல்கலைக்கழக மாணவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டது. 2022 ஜனவரி மாதத்திற்குப் பின்னரே இலங்கை வரலாற்றில் மக்கள் போராட்டத்தின் மீது அதிகளவான கண்ணீர்ப்புகைத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2022 மார்ச் 31 கோட்டாபய ராஜபக்ஷவின் இல்லத்துக்கு அருகில் இடம்பெற்ற போராட்டத்தின் போது 328 கண்ணீர்ப்புகை குண்டுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. 2022 ஏப்ரல் 3 ஆம் திகதி பேராதனை பல்கலைக்கழ மாணவர்களின் போராட்டத்தை கலைப்பதற்காக 116 கண்ணீர்ப்புகை சன்னங்களும் குண்டுகளும் பாவிக்கப்பட்டன.

2022 மே மாதம் 9 ஆம் திகதி அலரி மாளிகைக்கு அருகில் 480 கண்ணீர்புகை குண்டுகளும் 2022 ஜூன் 9 ஆம் திகதி பொலிஸ் தலைமையகத்திற்கு அருகில் நடைபெற்ற போராட்டத்தில் 109 கண்ணீர்ப்புகை குண்டுகளும் பயன்படுத்தப்பட்டுள்ளது. 2022 ஜூலை 08 அன்று வங்கி மாவத்தைக்கு அருகில் நடைபெற்ற பல்கலைக்கழக மாணவர்களின் ஆர்ப்பாட்டத்தின்

மீது 232 கண்ணீர்புகை சன்னங்களும் குண்டுகளும் வீசப்பட்டன.

உயரமான கட்டிடங்கள் சூழ்ந்த இடத்தில் இடம்பெற்ற போராட்டத்தின் மீதே இவ்வாறு தாக்குதல் தொடுக்கப்பட்டது. 2022 ஜூலை மாதம் 09 ஆம் திகதி பாரோன் ஜயதிலக்க மாவத்தையில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் மீது வீசப்பட்ட கண்ணீர்ப்புகை குண்டுகளின் அளவு 788 ஆகும். 2022 ஜூலை 13 அன்று, பொல்துவ சந்தியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் மீது 660 கண்ணீர் புகை குண்டுகள் வீசப்பட்டன.

2022 மே 9 ஆம் திகதி பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஓடியொளிந்ததையடுத்து மே 12 ஆம் திகதி அன்றைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் ரணில் விக்ரமசிங்க பிரதமராக நியமிக்கப்பட்டார். இதன் பின்னரே இலங்கையில் அதிகளவு கண்ணீர்ப்புகை தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2022 ஜூலை 09 கோட்டாபய ராஜபக்ஷ விரட்டியடிக்கப்பட்டதையடுத்து, ரணில் விக்ரமசிங்க தந்திரமாக ஜனாதிபதி கதிரையில் அமர்ந்துகொண்ட பின்னர் இரவோடு இரவாக கோல்ஃபேஸ் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு போராட்டக்களம் அரசாங்கத்தால் கைப்பற்றப்பட்டது. இதன்போது அதிகளவு கண்ணீர்ப்புகை பயன்படுத்தப்பட்டது. இதன்போது பீபீசி ஊடகவியலாளரும் தாக்கப்பட்டிருந்தார்.

அதனைத் தொடர்ந்து இன்று வரையிலும் அமைதியான வழியில் முன்னெடுக்கப்படுகின்ற எல்லா போராட்டங்களின் மீதும் ரணில் ராஜபக்ஷ அரசாங்கம் வெறித்தனமான கண்ணீர்ப்புகைத் தாக்குதலை மேற்கொண்டு வருகிறது. உள்நாட்டு மற்றும் சர்வதேச சட்டங்களையும் மீறி இவ்வாறு தாக்குதல்களை மேற்கொள்கிறது. ரணிலும் ராஜபக்ஷாக்களும் இணைந்து மக்களை பழிவாங்குவதாகவே இவற்றை பார்க்கையில் எண்ணத்தோன்றுகிறது.

வயது முதிர்ந்தவர்கள், வலது குறைந்தவர்கள், கர்ப்பிணி பெண்கள், விஷேட தேவையுடையவர்கள் அடங்கிய அமைதிவழி போராட்டங்களின் மீது கண்ணீர்ப்புகைத் தாக்குதல் மேற்கொள்ளப்படுகிறது. நீதிமன்றம் விதித்த கட்டளைக்கு அமைய சோஷலிச இளைஞர் சங்கம் (2022 செப்.25), தேசிய மக்கள் சக்தி (2023 பெப். 26) ஆகியன முன்னெடுத்த போராட்டத்தின்போது சட்டவிரோதமாக கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரைப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. இதற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருப்பதுடன், அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையை மனித உரிமைகள் ஆணைக்குழுவும் கண்டித்தது.

> இன்று வரையிலும் அமைதியான வழியில் முன்னெடுக்கப்படுகின்ற எல்லா போராட்டங்களின் மீதும் ரணில் ராஜபக்ஷ அரசாங்கம் வெறித்தனமான கண்ணீர்ப்புகைத் தாக்குதலை மேற்கொண்டு வருகிறது. உள்நாட்டு மற்றும் சர்வதேச சட்டங்களையும் மீறி இவ்வாறு தாக்குதல்களை மேற்கொள்கிறது. ரணிலும் ராஜபக்ஷாக்களும் இணைந்து மக்களை பழிவாங்குவதாகவே இவற்றை பார்க்கையில் எண்ணத்தோன்றுகிறது.

வன்முறைப் போராட்டங்களை கலைப்பதற்கே கண்ணீர்ப்புகை பயன்படுத்தப்பட வேண்டும். ஆனால், அமைதிவழிப் போராட்டங்களின் மீது தாக்குதல் தொடுப்பது மட்டுமல்லாது, போராட்டக்காரர்களை கலைப்பதற்கு பதிலாக அவர்களை கண்ணீர்ப்புகையால் சிறைப்படுத்தும் வகையில் தாக்குதல் மேற்கொள்ளப்படுகிறது. மக்கள் குடியிருப்புகள், வைத்தியசாலைக்கு அருகில் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

உலக யுத்தத்தின் போது கூட பல்கலைக்கழகங்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளக்கூடாது என்று கட்டளை விதிக்கப்பட்டிருந்த நிலையில், 2023 மார்ச் 07 பல்கலைக்கழக வளாகத்துக்குள்ளும் கண்ணீர்ப்புகைத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதன்போது கல்வி நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போராட்டத்துடன் சம்பந்தப்படாத பல்கலைக்கழக மாணவர்கள் உள்ளிட்டோர் பாதிப்படைந்தனர். இந்த தாக்குதலில் பாடசாலை முடிந்து திரும்பிய றோயல் கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்கள், வீதியில் பயணித்துக் கொண்டிருந்தவர்கள், துப்புரவுத் தொழிலாளர்கள் என்று பலரும் பாதிப்புற்றனர். இது முற்றிலுமாக மனித உரிமை மீறலாகும்.

கண்ணீர்ப்புகை மண்டலத்துக்குள் சிக்குபட்டிருந்த காகங்கள் கூட அலறி கத்திப் பறந்தன.

இலங்கையில் ஆட்சி மாற்றமானது தற்போது இறுதி கட்டத்தை அடைந்திருக்கிறது. இனிவரப்போகும் ஆட்சி மாற்றமானது வெறுமனே மண்டைகளை மாற்றுவதாக இல்லாது அரசியல் கலாசாரத்தின் மாற்றமாக அமையப்போகிறது. அதாவது, ஆளும் மேல்தட்டு வர்க்கத்தின் ஆட்சிக்குப் பதிலாக மக்களாட்சி நிறுவப்படப் போகிறது. அதற்கு மக்களும் தயாராகிவிட்டனர். ஒருசிலர் ஆளும் கூட்டத்திற்கு ஆதரவாக கொக்கரிக்கின்ற போதிலும், மண்ணின் நிலைமை முற்றிலுமாக மாறிப்போயுள்ளது.

ஆக, ரணில் ராஜபக்ஷ அரசாங்கம் எத்தகைய முயற்சிகளை எடுத்தாலும் அவையனைத்தும் முறியடிக்கப்படப் போவது உறுதி. மீளவும் ஒரு வன்முறை நிலைமையை உருவாக்குவதற்கும், அதன் மூலம் அரச பயங்கரவாதத்தை கட்டவிழ்த்துவிட்டு மக்களுக்கான அரசியல் இயக்கத்தை ஒடுக்குவதற்கும் அரசாங்கம் முயற்சிக்கலாம். அதற்கெல்லாம் இப்பொழுது காலம் கடந்துவிட்டது என்றுதான் சொல்லவிருக்கிறது. இனிமேலும், அவ்வாறான பொறிகளில் சிக்கிக்கொள்ள யாரும் தயாராக இல்லை. மக்கள் ஜனநாயகத்துடன் பயணிக்கிறார்கள். அதனால், ஆளும் கூட்டமானது ஜனநாயக ரீதியாக விரட்டியடிக்கப்படும். இதை தவிர்க்கவியலாது.

கண்ணீர்ப்புகை மூலம் காலங்காலத்துக்கும் அதிகாரக் கதிரையை தக்கவைத்துக் கொள்வதென்பது முட்டாள்த்தனமானது. அது சாத்தியமற்றது. தொடர்ச்சியாக கண்ணீர்ப்புகை மூலம் மக்களது உரிமைகளை மறுக்கவும் முடியாது. ஆக, ரணில் ராஜபக்ஷ அரசாங்கம் தமது தோல்வியை ஒப்புக்கொண்டு, அவர்களே தயாரித்துக்கொண்ட அரசியலமைப்புச் சட்டத்திற்கிணங்கவும், முதலாளித்துவ ஜனநாயகப்படியும் செயற்படுவது நாட்டுக்கு நன்மையை விளைவிக்கும். ஆக, மக்களது தீர்ப்பினைப் பெற தேர்தலுக்கு செல்லவேண்டியதே மிகச்சரியானதாக இருக்கும்.-

கண்ணீரும் சோறும் 2

# ஈழ விடுதலையின் தரித்திரம்

கட்டிய மனைவி கதறுகிறாள்
இனி என்ன செய்வேனென்று.

பச்சைக் குழந்தைகள் சிரிக்கின்றன
இறப்பை அறியமுடியாத வயது.

உற்றோரும் மற்றோரும்
விழி பிதுங்கப் பார்க்கின்றனர்

சற்குணத்திற்கும் ஒரு புருட்டஸ்
இருந்ததை எண்ணி.

சற்குணசிங்கம் கந்தையா. (வயது-33) 26-04-1988 அன்று மல்லாவிச் சந்தியில் வைத்துப் புலிகளால் மின்கம்பத்தில் கட்டிச் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார்.

இவர் எனது தந்தையின் கடைசித் தம்பி. எனது சித்தப்பா. மல்லாவிச் சந்தியில் "கோணேஸ் மெக்கானிக் சொப்" வைத்து நடத்தி வந்தவர். நான்கு குழந்தைகள். மூத்த மகனின் பெயரையே அந்தக் கடைக்கு அவர் வைத்திருந்தார். ஊரிலுள்ள அனைவரும் அவரைச் சற்குணம் என்றே அழைத்தார்கள்.

சமயச் சடங்கு முறையில் தனது தகப்பனுக்குச் சடங்கு செய்ய அவரது மூத்த மகனுக்கு உடலில் தைரியம் கூட இருக்கவில்லை. கொள்ளிச் சட்டியை ஏந்திக் கொண்டு நடக்கும் "சக்தி" அவன் கையில் இருக்கவில்லை. அவனுக்குச் சம்பந்தம் இல்லாத அளவில் ஒரு வேட்டியைக் கட்டிவிட்டார்கள் சமயப் பெரியோர்கள். கொள்ளிச் சட்டிக்கு அருகே அவன் அந்த வேட்டியை இழுத்து நடக்கவே கஸ்ரப்பட்டான்.

மல்லாவிச் சந்தியில் சித்தப்பாவைக் கட்டிச் சுட்டுக் கொன்ற அதே மின் கம்பத்தைத் தாண்டி நாங்கள் அனிச்சியன் குளம் சுடலையை அடைந்தோம். சுடலையில் வைத்தும் சடங்குகள் நடந்தன. அவனைத் தந்தையின் பிரேதத்தைச் சுற்றி மூன்று முறை நடக்க வைத்தார்கள். அவனைக் கொள்ளிக் குடம் உடைக்க வைத்தார்கள். எதையுமே கிரக்கித்துக் கொள்ளும் பக்குவம் அவனிடம் இருக்கவில்லை. தந்தையின் பெட்டிக்குள் கையிலேந்திய கொள்ளியைச் செருகிவிட்டுத் திரும்பிப் பார்க்காது நடக்கச் சொன்னார்கள். கொள்ளியைத் தனது தந்தையின் பெட்டிக்குள் அவன் செருகும் போது உற்றோரும் மற்றோரும் "ஓ!" வென்று கத்தியழுதார்கள்.

அவன் அழவில்லை.அவனால் திரும்பிப் பார்க்காது நடக்க முடியாதும் இருந்தது. அவன் பார்த்தான். திரும்பித் திரும்பிப் பார்த்தான். அவனது தலையைத் திரும்பிப் பார்க்காதவாறு அவனது கையையும் தலையையும் இறுகப் பற்றி அணைத்துக் கொண்டு எனது அக்கா அழைத்துச் சென்றாள். பற்றி வைத்திருந்த எனது அக்காவின் கைகளைப் பிரித்தெடுத்து தனது தந்தையைக் கொண்டு வந்த பாடையைக் கைளால் காட்டினான். அதிலிருக்கும் குரும்பட்டிகளையும் சோடனைக் கடதாசிகளைகளையும் எடுத்துத் தாருங்கள் என என் அக்காவிடம் கெஞ்சியழுதான். அதனை எடுக்கக் கூடாது எனச் சொன்னாள் அக்கா. அவன் சிணுங்கியழுதான்.

**கற்சுறா**

அதனைதான் எடுக்காது விட்டு வந்த கவலையில் முகத்தை "ம்" எனச் சோகமாய் வைத்தபடியே திரும்பி வீடுரை வந்து சேர்ந்தான். வீட்டில் வந்து தாயிடம் தனது கவலையைச் சொல்லி அழுதான். தாயும் அழுதாள். நாமும் அழுதோம்.

ஒரு கொலையை ஒரு மரணத்தை அறியமுடியாத வயதில் அறிய வைத்த அயோக்கியத்தனம் நமது தமிழீழத் தேசிய விடுதலையிடந்தானே இருந்தது. இறப்பை அறியமுடியாத வயதில் போராட்டம் என்ற பெயரில் குழந்தைகளைக் கொல்லக் கொண்டு போனதுபோல், அந்த வயதில் அவர்களது பெற்றோரைக் கொன்று குழந்தைகளை நிர்க்கதியாக்குவதற்கும் "ஈழவிடுதலை" எனப் பெயர் சொன்னார்கள்.

அதற்கு ஒரு பெரும் முட்டாள் கூட்டம் தலைமரியாதை செலுத்தியது. அந்தப் பெரும் முட்டாள் கூட்டத்திற்குள் தான் கலைஞன் என்ற பெயரிலும் கவிஞன் என்ற பெயரிலும் ஊடகவியலாளன் என்ற பெயரிலும் கதை சொல்லிகள் என்ற பெயரிலும் பலர் உலா வந்தார்கள். இன்றும் அந்த அயோக்கியர்கள் நமது சமூகத்திற்குள் அன்றாடம் வலம் வருகிறார்கள்.

இவ்வாறான கொலைகள் எல்லாம் ஈழத்தின் நிலங்களில் பரவலாக அரங்கேறிக் கொண்டிருந்த பொழுது இந்தப் "புத்திசாலி முட்டாள் கூட்டம்" என்ன கதை சொல்லிக் கொண்டிருந்தது என்று நாம் ஆவணப்படுத்தவேண்டிய காலம் இது.

இந்த வகைக் கொலைகள் ஈழவிடுதலை என ஆரம்பித்த காலத்தில் மட்டுமல்ல அது முள்ளி வாய்க்காலில்

முடியும் தருவாய் வரை நடந்தது என்பதுதான் அதன் சிறப்புரிமை.

சித்தப்பா,வாகனத் திருத்த வேலையில் நல்ல திறமை கொண்டவர் என்பதால் மல்லாவி மக்களுக்கு மட்டுமல்ல அதனைச் சுற்றியிருக்கின்ற ஊர்களைச் சேர்ந்தவர்களுக்கும் வெளியிடங்களிலிருந்து அங்கே வந்து செல்கின்றவர்களுக்கும் அவரை நன்கு தெரிந்திருந்தது.

ஊருக்குள்ளே அதிகமாக அவர் திருத்துவதும் வருமானம் ஈட்டுவதும் சைக்கிள் என்றாலும் கனரக வாகனங்களைத் திருத்துவதில் மிகவும் கைதேர்ந்தவராக இருந்தார். உழவு இயந்திரங்கள், லொறிகள், பஸ் வண்டிகள் என்று பல பொழுதுகளில் அவரின் கடைவாசலில் தரித்து நின்றதை நான் கண்டிருக்கிறேன். மல்லாவி என்ற அந்தச் சிறியதொரு பின்தங்கிய கிராமத்தில் அப்படியொருவரது கடை இருந்தது என்பது ஆச்சரியமே. அவரது கடையில் இருந்த திருத்த உபகரணங்களும் கனரக வாகனங்களைப் பழுது பார்க்கக் கூடிய மிகவும் விலை உயர்ந்த உபகரணங்களாக இருந்தன.

80களின் நடுப்பகுதியில் அனைத்து இயக்கங்களினது வாகனங்களைப் பழுது பார்க்கும் ஒரு தளமாக அந்தக் கோணேஸ் மெக்கானிக் சொப் விளங்கியதை அந்த ஊர் மக்கள் நன்கு அறிவார்கள். அதைவிடவும் "றெட்பானா" நிறுவனத்தினர் கிராமங்கள் தோறும் குழாய்க் கிணறு தோண்டக் கொண்டு வந்த அதிநவீன வாகனங்களும் மல்லாவியில் அவரது மெக்கானிக் சொப் இன் முன் நின்றதனையும் அவர்கள் அறிவார்கள். அவ்வாறான ஒரு திறமைசாலி அவர்.

80 களின் பிற்காலத்தில் அனைத்து இயக்கங்களையும் வேட்டையாடி அழித்த புலிகள் தனித்தோங்கி நின்றனர். அக்காலத்தில் அவர்களுடைய பல்வேறு வாகனங்களைப் பழுது பார்த்துக் கொடுத்தவர் அவர்தான். அவரைப் புலிகள் பல சந்தர்ப்பங்களில் தமது பாண்டியன்குளம் பிரதான முகாமிற்குஅழைத்துச் சென்று தமது வாகனங்களைப் பழுது பார்க்க வைத்த சந்தர்ப்பங்களும் உண்டு.

1988 காலப்பகுதி இந்திய இராணுவம் எமது கிராமத்தை முற்றுகையிடப்போவதாக ஓர் கதை ஊலாவி ஊர் மக்கள் அனைவரும் பதகழித்துத் திரிந்த நேரம். எங்கே



ஓடி ஒழிப்பது என்றும் யார் யாரைக் காப்பாற்றப் போகிறோம் என்றும் சிந்திக்க முடியாத நேரம். வயதானவர்களைத் தவிர இளையோர்கள் எல்லோரும் ஏதோ ஒரு திக்கில் இடம் மாற்றி நிற்க வேண்டியிருந்தது. அந்தக்காலத்தில் எனது பெற்றோர் என்னை யாழ்ப்பாணத்திலுள்ள உறவினர்கள் வீட்டிற்கு அனுப்பி வைத்தார்கள்.

எனது சித்தப்பா தன்னுடைய கடையிலிருந்த பொருட்களை ஏற்றித் தன்னுடைய வீட்டில் பூட்டி வைத்து விட்டு அவர் குடும்பமாக கொல்ல புளியங்குளத்திலிருந்த எனது மாமியின்- அதாவது அவரது சகோதரியின் வீட்டிற்குச் சென்று தங்கினார்கள். ஆனால் அதன் பின்னர் இந்திய இராணுவத்தின் முற்றுகையோ அல்லது சிறு அசம்பாவிதங்களோ அக்காலத்தில் அங்கு எதுவும் இடம்பெறவில்லை.

இடம்பெயர்ந்து சென்றவர்கள் மெல்ல மெல்ல ஊருக்குத் திரும்புகிறார்கள். அதே போல் சித்தப்பாவும் திரும்புகிறார். ஆனால் அவர் வீட்டிலிருந்த அவரது மெக்கானிக் சொப் இன் பொருட்கள் மட்டுமல்ல வீட்டிலிருந்த நெல்லு மூட்டை மற்றும் கோழிகள் அனைத்தும் களவாடப்பட்டு இருந்தன.

ஓரிரு தினங்களில் யார் களவு செய்தது. தற்பொழுது யார் வீட்டில் அந்தப் பொருட்கள் இருக்கின்றன. யார் யார் நெல்லு மூட்டையைப் பிரித்துப் பங்கு செய்தது. யார் கோழியை உரித்துக் கறி வைத்தது என்று சகல தகவலையும் அறிந்து விட்டார். அவருக்குக் கோழி மற்றும் நெல் மூடையைப் பற்றிக் கவலை இருக்கவில்லை. ஆனால் அவருடைய மெக்கானிக் சொப் இன் சாமான்களை எடுத்தால் தான் அவரால் கடையைத் திறக்க முடியும். வருமானத்தைப் பெற முடியும் குடும்பத்தை நடத்த முடியும். பிள்ளைகளுக்குச் சாப்பாடு கொடுக்க முடியும்.

அப்பொழுதுதான் அவர் மல்லாவியில் பொறுப்பாளராக இருந்த விடுதலைப்புலி அமைப்பாளனை நாடுகிறார். அவன் மூலமாக மட்டுமே அதனை எடுக்க முடியும் என்று நம்புகிறார். அந்தக் காலத்தில் அதனை விட வேறு சாத்தியங்கள் இல்லை. அவர் மீண்டும் ஊருக்குத் திரும்பி ஒரு மாதமாகியும் அவரால் கடையைத் திறக்க முடியாதிருக்கும் அவல நிலையைச் சொல்லி அந்தப் பொருட்களை மீட்டுத் தருமாறு மீண்டும் சொல்கிறார். புலிகள் தரப்பில் எந்தப் பதிலும் இல்லை.

சில நாட்கள் கழித்து "எனது பொருட்கள் இந்த இடத்தில் இருக்கிறது" என்று சொல்லி இடத்தையும் காட்டி அதனை எடுத்துத் தரும் படி கேட்கிறார். அதற்கும் அவர்கள் தரப்பிலிருந்து எந்தவித உரிய பதிலும் அவருக்குச் சொல்லப்படவில்லை.

அவர் கொல்லப்படுவதற்கு ஒரு கிழமையிற்கு முன்பு யாழ்- வைமன் றோட்டில் இருந்த எமது மாமி வீட்டில் நடைபெற்ற ஒரு சிறு கொண்டாட்டத்தில் அவரை இறுதியாகச் சந்தித்தேன். பொருட்களை எடுத்தாச்சா என்று விசாரித்தேன். "இல்லையடா! இப்ப போய் முதல் வேலை அதுதான். சாமான்கள் இல்லாமல் கடை திறக்க முடியாதிருக்கிறது. இந்தக் கிழமைக்குள் அவங்கள் எடுத்துத் தரா விட்டால், நானே போய் அதனை எடுக்கப் போகிறேன்" என்று சொன்னார்.

அதன் பின் மல்லாவி சென்ற சில நாட்களில் அவரது நண்பன் "றைவர் பாலன்" என்பவருடன் பாண்டியன்குளத்திலுள்ள புலிகளின் மெயின் காம்பிற்குச் சென்று அதேபோல் சொல்லியிருக்கிறார். "இன்று 5மணிக்கு முன்பு நீங்கள் எனது கடைப் பொருட்களை எடுத்தருவதாக இருந்தால் தாருங்கள். இல்லையேல் அதன் பிறகு நீங்கள் தலையிடக் கூடாது. அதனை நான் பார்க்கிறேன்" என்று இறுக்கமாகப் பேசிவிட்டுத் திரும்பியிருக்கிறார்.

திரும்பும் பொழுது அவர்கள் இலகுவான மூன்றாம் யூனிற் பாலியாற்றுப் பாதையைப் பயன்படுத்தாது ஒட்டன்குளப் பாதையால் வந்து

கொத்தம்பியாகுளத்திலுள்ள கள்ளுத் தவறணையில் கள்ளு வாங்கிக் குடித்து விட்டுத் தான் வந்திருக்கிறார்கள். அது மதியம் தாண்டிய நேரம். நண்பன் பாலன் அவரது வீட்டிற்குச் செல்ல சித்தப்பா தன்வீட்டிற்கு வந்து மதிய உணவினைச் சாப்பிட்டுக் கொண்டிருந்த பொழுது வாகனத் திருத்த வேலைக்காக அவரை அழைத்துச் செல்ல வருபவன் அன்றும் வந்து அவரை அவசரமாக அழைத்துச் சென்றான். அவனது பெயர் வசந்தன். அவனைப் புலிகள் "மடார்" என்றே அழைப்பார்கள். புலிகளின் அத்தனை வன்முறைகளையும் அதிகமாக மல்லாவியில் அவனே நிகழ்த்தினான்.

மல்லாவிச் சந்திக்கும் சித்தப்பாவின் வீட்டிற்கும் இடையில் - மல்லாவிப் பிரதான வீதியில்த் தான் எங்கள் வீடும் இருக்கிறது. அன்று சித்தப்பாவை வசந்தன் ஏற்றிப் போனதை எனது அம்மாவும் கண்டிருக்கிறா. இது அவ்வப்போது காணும் சம்பவம் என்பதால் அம்மா எதனையும் வித்தியாசமாக யோசித்திருக்கவில்லை.

எனது அப்பா வேலை செய்யும் மிருகவைத்திய கந்தோர் மல்லாவிச் சந்திக்கும் எங்கள் வீட்டிற்கும் இடையிலிருக்கிறது. வேலையிலிருந்த அப்பாவிற்கு மல்லாவிச் சந்திப்பக்கமிருந்து வெடிச்சத்தம் ஒன்று திடீரெனக் கேட்டிருக்கிறது. சிறிது வினாடிகள் கழித்து இன்னொரு வெடிச்சத்தம் கேட்டிருக்கிறது. கந்தோரை விட்டு வெளியில் வராது கந்தோரின் குசினிப் புகட்டிற்குள் சிறிது நேரம் ஒழித்திருந்திருக்கிறார்.

அப்பொழுது திடீரென இராணுவம் மல்லாவிச் சந்திக்குள் வந்து விட்டது என்பதே அவர் நினைப்பாக இருந்திருக்கிறது. பின்பு நீண்ட நேரம் எந்தச் சத்தமும் இல்லாத போது மெல்ல வெளியில் வந்து பார்த்து, வீதிக்கு வந்து பார்த்து, எந்த வித்தியாசமும் தெரியாததால் மல்லவிச் சந்திக்கு நடந்து போயிருக்கிறார்.

சந்தியில் சனம் கூட்டமாக நின்றிருக்கிறது. கூட்டத்தை விலத்தும் போதுகூட அவரால் எதையும் உணர முடியாதிருந்திருக்கிறது. யாரையோ புலிகள் சுட்டிருக்கிறார்கள் எனக் கிட்டப் போனபோதுதான் தனது தம்பி என்பதனை அவர் உணர்ந்து கொண்டார்.

இந்த உடலை யாரும் தொடக் கூடாது என்றும் மீறுபவர்களுக்கு மரணதண்டனை என்றும் ஒரு மட்டையை அதில் அவர்கள் கட்டியிருந்தார்கள்.

சுற்றி நின்று வேடிக்கை பார்த்தவர்களுக்கு மட்டுமல்ல அத்தனை மல்லாவி மக்களுக்கும் யார் சற்குணம் என்பது நன்றாகத் தெரியும். ஆனால் யாரும் மறுத்தோ எதிர்த்தோ ஒரு சிறு கேள்வியும் கேட்கமுடியாத சூழலாய் அன்றைய காலத்தைப் புலிகள் உருவாக்கி வைத்திருந்தார்கள்.

இன்று மல்லாவிச் சந்தியில் பல்வேறு இடங்களிலிருந்து இடம்பெயர்ந்து வந்தவர்கள் வியாபாரம் செய்கிறார்கள். ஈழ யுத்தம் பலரைப் பல்வேறு இடங்களுக்கு மாற்றி மாற்றி இடம்பெயர வைத்திருக்கிறது. இருந்த இடத்தை மாற்றிவிட்டிருக்கிறது. ஆனாலும் அன்றைய காலத்தில் மல்லாவியில் கடை வைத்திருந்த பல பழைய மல்லாவியார்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு அன்றைய கதைகள் அனைத்தும் நன்கு தெரியும்.

சற்குணம் சித்தப்பாவை சைக்கிளில் ஏற்றி வந்தவன் எவ்வாறு அழைத்து வந்தான் என்றும் மின் கம்பத்தில் கட்டும் போது எவ்வாறு கட்டினான் என்றும் சகலதையும் நேரடியாகப் பார்த்தவர்கள் அவர்கள். அவர்களில் பலருடன் அண்மையில் உரையாடினேன். அன்று சொன்ன கதைகளை இத்தனை வருடங்கள் கழித்தும் ஒரு சிறு தகவலும் தவறாது அப்படியே சொன்னார்கள்.

புலிகள் அதனை ஒரு விளையாட்டாகவே நிகழ்த்தினார்கள். தினமும் ஏற்றிச் செல்லும் வசந்தன் என்பவன், எவ்வாறு அவருடன் பகிடியாகப் பழகுவானோ அதே போல் சிரித்துச் சிரித்தே கம்பத்தில் கட்டியிருக்கிறான். இறுதி வரை தன்னைச் சுடப் போகிறார்கள் என அவர் எண்ணவேயில்லை. அதனை அவருக்கு உணர்ந்து கொள்ளும் சந்தர்ப்பத்தை அவர்கள் கொடுக்கவில்லை. வெறும் ஒரு விளையாட்டாக அதனை நிகழ்த்தினார்கள். வாகனத் திருத்த வேலைக்கு அழைத்துச் செல்வது போலவே அழைத்து வந்தார்கள். அவரது கண்ணைக் கட்டவில்லை. மின்கம்பத்தில் இறுகக் கட்டியதன் பின்பே வசந்தன் அவரது காதிற்குள் எதையோ கேட்டிருக்கிறான். "அதுக்கு இப்ப என்ன?" என்று பதில் கேள்வி கேட்டிருக்கிறார் சித்தப்பா. உடனே வெடி வைத்துவிட்டான். இத்தனை சம்பவங்களையும் பார்த்து நின்றவர்கள் முன்னிருந்த கடைக்காரர்கள். இப்பொழுது கேட்டாலும் நெஞ்சைப் பிடித்தபடி



கதை சொல்கிறார்கள்.

சற்குணத்தைக் கண்ணைக் கட்டிக் கொண்டு வரமுடியாது அவர்களால். மரணதண்டனை விதிக்கப்பட்டது என்றும் அவர்களால் சொல்ல முடியாது. அதன் விபரீதங்களை அவர்கள் அந்தக் கணமே எதிர் கொள்ள நேரிடும். சித்தப்பா இரண்டு மூன்று மாதங்களாகத் தனது கடையைத் திறக்கமுடியாமல் புலிகளுடன் பேச்சு வார்த்தையிலிருக்கிறார் என்பதுவும் பலருக்குத் தெரிந்த விடயம். அதனால் அவரைத் துரோகி எனச் சொல்லிச் சுட்டுக் கொல்ல இருப்பதாக அவரிடம் சொன்னால் அதன் விளைவு வேறு மாதிரியாக உருவெடுக்கும், அவர்களது மானம் போகும் என்பது அவர்களுக்கு நன்கு தெரியும். அதனால்த் தான் அவ்வாறான சூழ்ச்சியைச் செய்தார்கள்.

இந்த ஊருக்கு அவங்கள் செய்த நாசம் கொஞ்சமில்லை. நாம் பார்த்தவையெல்லாம் இன்றும் பதறவைப்பவை என்று ஆழ்ந்த கவலையுடன் சொல்கிறார்கள் அந்தப் பழைய கடைக்காரர்கள்.

இந்தக் கொலையின் முக்கிய சூத்திரதாரியாக அனைவரும் கருதுவது அன்றைய அந்த ஊரின் புலிகளது பொறுப்பாளன். (மிக அண்மையில்தான் இறந்தான். அவனது குடும்பம் பிள்ளைகள் நன்மை கருதி அவன் பெயரை இங்கே தவிர்க்கிறேன். அவனை வெளிநாட்டில் ஒருமுறை சந்தித்தபொழுது அவனை நேரடியாகக் குற்றஞ் சாட்டினேன்.)

சித்தப்பாவின் வீட்டில் களவு எடுத்தவர்கள் அவனுக்கு நெருக்கிய உறவினர்களும் வேண்டியவர்களாகவும் இருந்தார்கள் என்ற ஒரே காரணமே அவரின் கொலைக்கான பின்னணி. அந்தப் பொருட்கள் இருந்ததும் அவர்களது வீட்டிற்கு அருகிலுள்ள இன்னொரு வீட்டில்தான்.

குறித்த விடயம் சார்ந்து தொடர்ந்தும் மழுப்பல் கதைகளோடு காலத்தைக் கடத்திவந்தவர்களுக்கு, பாண்டியன் குளத்திலுள்ள புலிகளது மெயின் காம்பிற்கே சித்தப்பா சென்று இறுதிச் சந்தர்ப்பத்தை இறுக்கமாகத் தெரிவித்து வந்த பின்னால் அவர்களால் பொறுமை காக்க முடியவில்லை. மிகுந்த அவமானத்தை எதிர் கொள்ள வேண்டும் என்பதுடன் தாம் சுட்டுக் கொல்ல வேண்டியவர் தமக்கு நெருக்கமான குடும்பத்து உறவினர்களாக இருக்கும் என்பது அவர்களுக்கு மிகுந்த நெருடலைக் கொடுத்திருக்கும். அதனைத் தடுக்கத் தயாரிக்கப்பட்டுச் செய்யப்பட்ட கொலைதான் சற்குணத்தின் கொலை என்பது அன்றிருந்த மக்கள் அனைவருக்கும் தெரியும். ஆனால் அன்றிருந்த மற்றய புலிகளுக்கோ அல்லது அன்றிருந்த அவர்களின் வாலுகளுக்கோ தெரிந்திருக்க நியாயம் இல்லை. தெரிந்தாலும் அவர்கள் எங்கும் அதனை வெளிப்படையாகச் சொல்லப் போவதில்லை.

ஆனால் அண்மையில் மல்லாவியில் நான் சந்தித்த பழைய மல்லாவிக்காரர்கள் அனைவரும் இந்தக்கதையினை இம்மியளவும் மறந்துவிடாது அப்படியே என்னுடன்நினைவூட்டிப் பேசினார்கள். அந்த இரக்கமற்றகாலத்தில் இருந்த தமது கையறு நிலை குறித்து மிகவும் கவலைப்பட்டார்கள்.

அண்மையில் யமுனாவின் தந்தையான பி.ரி. பாக்கியநாதன் சேர் கூட இந்தக்கதையின் பின்னணியை முழுவதுமாக என்னிடம் விபரித்திருந்தார்.

கிட்டத்தட்ட அரை நூற்றாண்டுக் கதை. ஆனாலும் யார் மனதிலிருந்தும் சிறு மறுவும் மாறாதிருக்கிறது என்பதுதான் அந்தத் துயரின் வலி.

சற்குணம் அவர்களைச் சுட்டுக் கொன்ற பின் அந்தப் புலிகள் சொன்ன காரணம் அவரின் சைக்கிள் கடையிலிருந்து தாம் ஒரு வோக்கிடோக்கியைக் கைப்பற்றியது என்பதுதான். அது இந்திய இராணுவத்துடனான தொடர்புக்கு அவர் பயன்படுத்தினார் என்பதுதான். இந்தக் கெட்ட கதையைக் கேட்க புலிகளைத் தவிர யாருக்கும் மனம் ஒப்பவில்லை என்பது எனக்கு நன்றாகத் தெரியும். ஆனால் மரணபயம் என்பதை அவர்கள் ஒவ்வொருவரது வாயிற்குள்ளும் திணித்து வைத்திருந்தார்கள்.

மல்லாவியில் தட்டிவான் வேலாயுதம் என்பவர் தான் யாரும் ஏற்ற மறுத்த சித்தப்பாவின் பிரேதத்தை மல்லாவிச் சந்தியிலிருந்து அவரது வீடுவரை ஏற்றிக் கொண்டு வந்தவர். “சற்குணத்தை ஏற்றாத வான் தனக்குத் தேவையே இல்லை பூராசா நீ ஏற்று” என்று மின்கம்பத்திலிருந்த உடலை அவிழ்த்து வைத்திருந்த அப்பாவிடம் சொல்லி ஏற்றிவந்தவர்.

செத்தவீடு நடைபெற்றுக் கொண்டிருந்த நாட்களில் மட்டுமல்ல அவரது 41ம் நாள் வரை புலிகளின் ஒற்றன் ஒருவன் வந்து போனபடியே இருந்தான். யார் என்ன பேசுகிறார்கள் என்பது அவர்களுக்குத் தேவையாகவே இருந்தது. 41ம் நாளின் சடங்குக்காக வெளியிடப்பட்ட கல்வெட்டின் பின் மட்டையில்
எனது தந்தை

கட்டிய மனைவி கதறுகிறாள்
இனி என்ன செய்வேனென்று.

பச்சைக் குழந்தைகள் சிரிக்கின்றன
இறப்பை அறியமுடியாத வயது.

உற்றோரும் மற்றோரும் விழி
பிதுங்கப் பார்க்கின்றனர்
சற்குணத்திற்கும் ஒரு புருட்டஸ்
இருந்ததை எண்ணி.

என்று ஒருசில வரிகளை எழுதியிருந்தார்.



அதனை வாசித்த புலிகளுக்கு எல்லாம் விளங்கியது என்றும் கடைசியில் இருந்த புருட்டஸ் என்றால் என்னவென்றும் சொல்லி புலிகளால் அனுப்பப்பட்ட ஒருவன் வந்து இந்த புருட்டஸ் என்றால் என்னவென்று வினாவினான். அவனை இருக்கச் செய்து 41ம் நாள் சடங்குச் சாப்பாடு கொடுத்துச் சாப்பிடச் சொல்லி அனுப்பி வைத்தார்கள். ஆனால் அவன் திரும்பிப் போகும் போது கூட அவனால் இந்த புருட்டஸ் என்றால் என்வென்று கண்டு கொள்ளவே முடியாது திரும்பிப் போனான்.

26 ஏப்ரல் எனது தந்தையின் பிறந்த நாள். அன்றேதான் சித்தப்பா கொல்லப்பட்டார். நாங்கள் எங்கள் தந்தைக்குப் பிறந்தநாள் கொண்டாடும் போதெல்லாம் சித்தப்பாவின் பிள்ளைகள் தங்களது தந்தைக்கு இறந்த நாளை நினைவு கூர்ந்து கொண்டேயிருக்கிறார்கள்.

இதுதானே ஈழவிடுதலையின் தரித்திரம்.

மல்லாவியில் தட்டிவான் வேலாயுதம் என்பவர் தான் யாரும் ஏற்ற மறுத்த சித்தப்பாவின் பிரேதத்தை மல்லாவிச் சந்தியிலிருந்து அவரது வீடுவரை ஏற்றிக் கொண்டு வந்தவர். “சற்குணத்தை ஏற்றாத வான் தனக்குத் தேவையே இல்லை பூராசா நீ ஏற்று” என்று மின்கம்பத்திலிருந்த உடலை அவிழ்த்து வைத்திருந்த அப்பாவிடம் சொல்லி ஏற்றிவந்தவர்.
செத்தவீடு நடைபெற்றுக் கொண்டிருந்த நாட்களில் மட்டுமல்ல அவரது 41ம் நாள் வரை புலிகளின் ஒற்றன் ஒருவன் வந்து போனபடியே இருந்தான்.
யார் என்ன பேசுகிறார்கள் என்பது அவர்களுக்குத் தேவையாகவே இருந்தது.



ஜோர்ஜ் இ.

# பிரமிக்க வைத்த பிளேஸ்டேஷன்

முழு உலகமும் பொன்னியின் செல்வன் முதல் நாள் முதல் ஷோ பார்த்து செல்பி போட்டுக் கொண்டிருந்த போது, எனக்கு ஏகப்பட்ட வேலைகள் இருந்தது.

எந்த முட்டாளும் செய்யக் கூடியதைச் செய்வதற்கு நான் எதற்கு?

கட்டவுட்டுக்கு பால் ஊத்தி, மண் சோறு சாப்பிடுகிற முட்டாள்களுக்கும், முதல் நாள் செல்பி போட்டு சுய இன்பம் பெறும் அல்லக்கைகளுக்கும் பெரிய வித்தியாசம் இல்லை.

ஆனா, கட்டவுட் பால் கூட்டத்திற்கு ஹீரோ கடவுள். சுய மோக செல்பி கூட்டத்திற்கு தான் தான் ஹீரோ!

பேராண்டிகளுக்கு எப்போதும் பெரிய நெனப்புத் தான்.

அதெல்லாம் கிடக்க, பள்ளிக்கூட நாட்களில் பக்கத்து தேநீர்க்கடையிலோ, சைக்கிள் கடையிலோ கண்ட மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன் போஸ்டர் இன்றைக்கும் நினைவில்.

நான் வாத்தியார் ரசிகன் தான். இருந்தாலும், முதல்நாள் படம் பார்த்து செல்பி போடும் அளவுக்கு இல்லை. பள்ளிக்கூடம் கட் பண்ணி படம் பார்த்த விசயம் வீட்டில் தெரிந்தால், முதல் நாள் முதல் ஷோவாக முதுகு உரிந்திருக்கும்.

> “இவ்வாறான மன்னர் காலச் சரித்திரப் படங்கள் என்றாலேயே... ‘மன்னா, ஓலை வந்திருக்கிறது’க்கும்... ‘அத்தான், வந்து விட்டீர்களா?’ வுக்கும் இடையில் நடக்கும் அடித்து விடும் கதை சொல்லல் தானே?
>
> உண்மையோ, தர்க்க நியாயங்களோ தேவைப்பட இவை என்ன வரலாறுகளா?”

ஊருக்கு உழைப்பவன் முதல் நாள் பார்த்த ஞாபகம்.

ம.மீ.சு.பா வில் ஜெயச்சந்திரன், வாணி ஜெயராமின் அமுத தமிழில் பாடல் எனக்கு மிகவும் பிடித்த ஒன்று.

‘உன்னை ஒரு கணமும் என்னை மறுகணமும் உள்ளம் நினைப்பதென்ன?’.

வாலியாக இருக்கக் கூடும். இன்றைக்கும் உட்பெட்டிக்குள் சரசம் பேச உதவுகிறது.

எனவே, சுந்தரபாண்டியனை எதற்கும் பார்த்து விடுவோம் என்று முடிவு.

அனாவசியமாக இரண்டு மணிநேரத்தை வீணாக்க முடியாது. வீட்டில் பயன்படாமல் இருக்கும் டிவியை தூசு தட்டி, றிமோட் கொண்ட்ரோலைத் தேடிப் பிடித்து பட்டரி மாற்றி, யூடியுப்பிலிருந்து நேரடி ஒளிபரப்பு.

உடற்பயிற்சி சைக்கிள் ஓடியபடியே. பார்த்து முடிய இரண்டு நாட்கள் சென்றன.

வாத்யார் காரண காரியம் இல்லாமல், பாறைகளின் மேல் பாய்ந்து பாய்ந்து வாள் வீசினார். வழமையில் தென்னை மரத்தில் சாய்ந்திருக்கும் நாயகி விலகிப் போக, மரத்தை முத்தமிட்டு துள்ளிசை பாடுகிறவர், ஒரு புதுமைக்காக யானையின் மீதேறி காதல் டூயட்டுப் பாடினார். லதா இறந்து போக, சத்தியகலாவாக இருக்க வேண்டும்,

மாலை சூடினார்.

இவ்வாறான மன்னர் காலச் சரித்திரப் படங்கள் என்றாலேயே...

'மன்னா, ஓலை வந்திருக்கிறது'க்கும்...

'அத்தான், வந்து விட்டீர்களா?' வுக்கும் இடையில் நடக்கும் அடித்து விடும் கதை சொல்லல் தானே?

உண்மையோ, தர்க்க நியாயங்களோ தேவைப்பட இவை என்ன வரலாறுகளா?

எங்காவது பண்ணையாராக இருந்திருக்கக் கூடிய கட்டப்பொம்மன் வரலாற்று நாயகனானது சினிமா செய்த புண்ணியம் தானே!?

மதுரைச் சுந்தரபாண்டியன் ராஜஸ்தான் ஜெய்பூர் அரண்மனையில் ஊர் கோலம் போனால் தான் என்ன?

சுந்தர பாண்டியன் கோட்டை திராவிடச் சிற்பக் கலை கொண்டதாக இருக்க வேண்டும் என்பது பற்றி, டைரக்டரும் ஆர்ட் டைரக்டரும் கவலைப்படாத போது, நாம ஏன் கவலைப்பட வேண்டும்?

வரலாற்றை அறிந்து கொள்ளவா இதையெல்லாம் பார்க்கிறோம்?

வாத்யாரின் காலிலிருந்து மேலே கமெரா போகும்போது விசிலடிக்கவும், அவர் றொட்டிக்கு மா குழைப்பது போல கதாநாயகியரைக் குழைந்து எடுக்கும் போது ஜொள்ளு வடிக்கவும் தானே!?

வரலாறையே வாத்யாருக்காக மாற்றியமைக்கும் போது, கதையாவது, சிகையாவது?

அந்த நேரத்து பிரமாண்ட தயாரிப்பு பற்றிய பெரிய திரைப் பிரமிப்புத் தானே. இப்போது உள்ளங்கையில் திரை வந்த விட்டது.

சிரிக்காமல், பிரமிக்கவா முடியும்?

இங்கேயும் வாத்தியார் மாறுவேடத்தில் வந்திருந்தார்... கவிஞராக! எங்களுக்குப் பார்க்கச் சிரிப்பாக இருக்கும்.

ஆனால், வில்லர்களிடம் ஒரு போதுமே அவரின் மாறுவேடம் கலைவதில்லை. அவரது 'பைப்பிருக்கு, பம்பில்லே!' குரலும் பிடிபடுவதில்லை.

> “வரலாற்றை அறிந்து கொள்ளவா இதையெல்லாம் பார்க்கிறோம்? வாத்யாரின் காலிலிருந்து மேலே கமெரா போகும்போது விசிலடிக்கவும், அவர் றொட்டிக்கு மா குழைப்பது போல கதாநாயகியரைக் குழைந்து எடுக்கும் போது ஜொள்ளு வடிக்கவும் தானே!? வரலாறையே வாத்யாருக்காக மாற்றியமைக்கும் போது, கதையாவது, சிகையாவது?”

அப்படி கண்ணிலும் காதிலும் மண்ணைத் தூவுவார்.

தொழில்நுட்ப விடயங்கள் குறித்து கருத்துச் சொல்ல... கமெரா பிரதி நன்றாக இருக்கவில்லை.

இரண்டு மணி நேரம் வீணாகியது பற்றிய கவலை இல்லை. சில மைல்கள் சைக்கிள் ஓடி விட்டிருந்தேன்.

ஜெயச்சந்திரன் பாட்டுக்கான வீடியோவையும் முதல் தரம் பார்த்தேன்.

ஆகவே, முதல் நாள் முதல் ஷோ உலக மகாகாவியம் பார்க்கப் போன அல்லக்கைகள் மாதிரி, குறை சொல்லும் அளவில், பெரிய எதிர்பார்ப்புகளோடு நான் இல்லை.

பொன்னியின் செல்வன் பார்க்க முன்னால், முன்னர் நிலுவையில் உள்ளதைப் பார்த்து முடிக்க வேண்டும் என்ற முடிவு.

அவ்வளவு தான்.

அந்தக் காலத்து அலுமாரிப் பெட்டி சைஸ் டிவியோடு இணைந்திருந்த Audio system, தற்போதைய தட்டைத் திரை டிவி வாங்கிய போது, அதற்கு இணைப்புக் கொடுக்க முடியாததால், வாங்கிய புதிய Audio system தொலைக்காட்சியோடு இணைக்கப்படாமல் வருடக் கணக்கில் கிடந்திருக்கிறது. முன்பு சினிமா பைத்தியமாக இருந்த காலத்தில் Surround sound உடன் பார்க்க வேண்டும் என்று வாங்கிய செட்டப்.

சினிமா ஆர்வம் போய், டிவி பார்த்து கன காலம். தேர்தல் இரவுகளில் மட்டுமாவது பார்த்ததைக் கூட நிறுத்திக் கனநாள்.

சரி, சும்மா கிடக்கிறதே, ஒரு வார இறுதியில் அதையெல்லாம் பொருத்தி சுற்றிச் சூழ வரும் ஒலியோடு படம் பார்க்கலாமே என்று பொருத்திய பின், பொருத்தியது வேலை செய்கிறதா என்று பார்க்க வேண்டுமே?

மகனுக்கு அமசோன் பிரைம் இருக்கிறது, எதையாவது பார்ப்போம் என்றால்...

நம்ம பிரமாண்டப் பொன்னியின் செல்வன்!

பிரமாண்டமான தயாரிப்புகள் எல்லாம் அந்தக் காலத்தில் சினிமாஸ்கோப்பு ராஜராஜ சோழன் தான். பிறகு சங்கரின் பம்மாத்துப் பிரமாண்டங்கள்.

எனக்கோ பிரமாண்டங்கள் Cecil B.DeMille வில் தொடங்கியது. ராணி தியேட்டரில் பார்த்த The Ten Commandments, Ben Hur.

பிறகு கனடாவில் David Lean.

Lawrence of Arabia, Doctor Zhivago, The Bridge On The River Kwai.

றிச்சாட் அட்டன்பரோவின் Bridge Too Far. காந்தி.

Francis Ford Coppola வின் Apocalypse Now, The Godfather.

இப்படி Gladiator, ஷான் கொணரி நடித்த The Man Who Would be King என்றெல்லாம் இரண்டாயிரத்தின் முதல் தசாப்தம் வரைக்கும் பிரமாண்டங்கள் நிறையப் பார்த்திருக்கிறேன்.

இதையெல்லாம் பார்த்த பின்னால், சங்கரின் பிரமாண்டங்கள் எல்லாம் எனக்கு பட்டிக்காட்டான் பட்டணம் பார்த்த பிரமாண்டங்கள் தான்.

சங்கரின் பிரமாண்டம் ஏதோ ஒன்றில் Star Wars Storm Trooper கள் கண்ட ஞாபகம்.

அட, கொப்பி தான் அடிக்கிறீங்க. அதில் இருந்த ஈயையுமாடா!?

இப்படி நான் பார்த்த பல படங்கள் பல பெரும் ஹீரோக்களைப் போட்டு எடுத்தவை.

யாழ்ப்பாணத்தில் இருந்த காலத்தில் பார்த்துப் பிரமித்த,



றிச்சாட் பேர்ட்டன், றோஜர் மூர் நடித்த Wild Geese கூட பெரிய all star cast படம் தான்.

பின்னர் வந்த George Clooney யின் Ocean's Eleven, சில்வஸ்டர் ஸ்டலோனின் Expendables எல்லாம் நான் பார்த்ததில்லை.

இவ்வாறான பிரமாண்டமான, All star cast உடனான தயாரிப்பு என்பது தமிழ் கூறு நல்லுலகத்திற்கு பிரமிப்பை ஏற்படுத்தியிருக்கக் கூடும். எனக்குள் எந்த சலனத்தையும் ஏற்படுத்தியதில்லை.

எங்களுக்கு ரஜனியும் பிரபுவும் நடித்தாலேயே அது பெரும் நட்சத்திரப் பட்டாளம்!

சிவாஜியும் எம்.ஜி.ஆரும், கமலும் ரஜனியும் சேர்ந்து நடித்தால் வரலாறு.

தமிழ் சினிமாவும் அதன் ரசிகர்களின் எதிர்பார்ப்பும் என்னவோ 'ஒரு வகையானது' தான். வாத்தியாரின் காலிலிருந்து மேலே போய் கதாநாயகனை அறிமுகப்படுத்தும் காலத்திலிருந்து, ஸ்லோமோஷன் நடைக்கு தற்போது மாறிவிட்டிருக்கிறது. அவ்வளவு தான்!

ஷோலே போல, பெரும் நடிகர்களை வைத்து படம் எடுத்தாலும் அந்தக் கதையைக் கிளப்பிய மூலமான அக்கிரா குறோசோவாவின் Seven Samurai போன்று நல்ல கதை அமைப்போடு இருந்திருந்தது.

இங்கே பொ.செவில் பெரும் நட்சத்திரப் பட்டாளங்கள் இருந்தும் உணர்ச்சிகளை கிளர்ந்தெழுப்பும் அளவுக்கு கதையும் இருக்கவில்லை. நடிகர்களின் நடிப்பை மெச்சும் அளவுக்கு அவர்களுக்கான திரை நேரமும் நீண்டதாக இருக்கவில்லை. கதை யாரைச் சுற்றி வருகிறது என்பதே தலை சுற்றலாக இருந்தது.

எங்கெங்கோ நிற்கும் ஒவ்வொருவரின் கதையும் தனித்தனியாக ஓடிக் கொண்டிருக்கும் போது, ஒரு கதை நடக்கும் போது, மற்றக் கதையின் தொடர் விட்டுப் போகிறது.

ஆக, ஜெயராம் மட்டும் எல்லா இடத்திலும், தூணிலும் துரும்பிலும் இருக்கும் தேசியத் தலைவராக நிற்கிறார்.

அதற்கு மூலக்கதை இன்னொரு பெரும் தடையாக இருந்தது.

பொன்னியின் செல்வனை தொடராக வாசிக்காமல் வாழ்நாளில் பாதியை இழந்திருந்த என் போன்றவர்களுக்கு கண்ணைக் கட்டிக் காட்டில் விட்ட கதையாக இருந்தது.

இதை விளங்கிக் கொள்ள, முன்னம் ஒரு காலத்திலே ஒரு ராசா இருந்தாராம் என்ற அம்புலி மாமா கதை எனக்குத் தேவைப்பட்டது.

கல்கியில் கதையைப் பொறுமையாகத் தொடர்ந்து வாசித்து, ஏற்கனவே அந்தக் கதாபாத்திரங்களோடு ஒன்றித்து இத்தனை வருடங்களின் பின்னாலும் பலத்த எதிர்பார்ப்போடு இருந்தவர்களுக்கும், எனக்கும் வேறுபாடு இருந்திருக்கும்.

படமே ஏற்கனவே கதை தெரிந்திருந்தவர்களுக்காகத் தான் எடுக்கப்பட்டிருந்தது போல. எனவே அடிநுனி புரியவில்லை.

வழமையில் இவ்வாறான வரலாறுகள் நாவல்களிலிருந்து படமாக்கப்படும் போது, அவற்றின் படங்களுக்கான adaptation மூலக்கதையில் இருந்து நிச்சயமாக வேறுபட்டிருக்கும். வேறுபட்டிருக்க வேண்டும்.

காரணம் நாவலும் சினிமாவும் கதை தான் சொல்கின்றன. ஆனால் வேறுவேறு வடிவங்கள். அவற்றுக்கான கதை சொல்லல் மொழிகள் அவற்றுக்கு தனித்துவமானவை.

நாலு பக்க எழுத்தை ஒரு வெறும் பிரேமிலேயே தேர்ந்த சினிமாக் கதை சொல்லியால் சொல்லி விட முடியும். அதே போல, கற்பனைக்கு அணை போடுகின்ற சினிமா பிரேமை விட, வாசிக்கின்ற ஒவ்வொருவரும் தனது கற்பனையை விரிய விடும் எழுத்தினால் நல்ல எழுத்தாளன் கவர்ந்து விடவும் முடியும்.

இரண்டு மொழிகளிலும் பாண்டியத்தியம் பெற்றிருந்தால் தான் ஒன்றிலிருந்து மற்றதற்கு மொழி பெயர்க்க முடியும்.

இதனால் பெரும்பாலும் நாவல்கள் சினிமாவாகும்போது, மையக்கருத்தை மட்டும் வைத்துக் கொண்டு, பழையன கழிந்து, புதியன புகுத்தித் தான் படமாக்கப்படுகின்றன.

முலக்கதையின் ஈயடிச்சான் கொப்பிகளாக அவை இருப்பதில்லை. மூலக்கதையில் இல்லாத விடயங்கள் எல்லாம் படத்தில் வரும்.

இதனால் தான் அவை film adaptation எனப்படுகின்றன.

அதற்கு ஒவ்வொன்றிலும் திறமை வாய்ந்தவர்களைக் கொண்ட கதை இலாக்காக்களைத் தான் ஸ்ரூடியோக்கள் அமர்த்தி கதை எழுதுகின்றன.

வெளிநாட்டுப் படங்களைக் கொப்பியடிக்கும் சங்கர்ப் பிரமாண்டங்கள் Star Wars Storm Troopers ஈயடிச்சான் கொப்பிகளை வெட்கமில்லாமல் செய்யும் போது, 'தமிழ்நாட்டின் ஸ்டீவன் ஸ்பீல்பேர்க்' மணி ரத்தினத்திடம் எனக்கு எந்த எதிர்பார்ப்பும் இல்லை.

தலையணை சைஸ் புத்தகத்தில் வரும் கதையை மூன்று மணி நேரத் திரைக்குள் அடக்குது என்பது சாதாரணமான விடயமும் இல்லை.

எனவே, கல்கி வாசகர்கள் மனதில் கட்டி வைத்திருந்த பிம்பங்களை நாயகர்கள் வெளிப்படுத்தும் அளவுக்கு நீண்ட திரை நேரத்தையோ, தொடர்ச்சியையே கொண்டிருக்கவில்லை. கதை இலாகா அந்த விடயத்தில் கோட்டை

விட்டிருக்கிறது என்று தான் சொல்வேன்.

போதாக்குறைக்கு கதை இலாகாவில் ஆசான் வேறு. தனது வசனத்திற்கு ஒஸ்கார் விருது தரப்படவில்லை என்பதற்கான எரிமலைக் குமுறலை ஏன் இன்னமும் ஆசான் வெளிப்படுத்தவில்லை என்பது தெரியவில்லை.

இயல் விருதே போதும் என்ற பொன் செய்யும் மருந்தான மனமாகக் கூட இருக்கலாம். அல்லது நாட்டு நாட்டுக்கு கொடுக்கப்பட்ட அந்தப் பழம் புளிக்கும் என்று சீச்சீ, வேண்டாம் என்று கூட இருக்கக் கூடும்.

ஆசான் வசனம் எழுதியிருக்கிறார். மனதில் நிற்கும்படியாக வசனங்கள் இருப்பதாகத் தெரியவில்லை.

ஹீரோக்களின் பஞ்ச் டயலாக்கை யாரும் எதிர்பார்க்கவில்லை என்றாலும், மனதில் நிற்கக் கூடிய வசனங்கள் என எதுவும் காதில் கேட்டதாக நினைவில்லை.

அதிலும், சிரிப்பு மூட்டுகிறேன், பேர்வழி என்று ஆசான் புறப்பட்ட தருணங்களில் எல்லாம் falling flat on his face.

தன்னைக் கேலி செய்யத் தெரியாதவர்களுக்கு நகைச்சுவை உணர்வு வராது என்று நினைக்கிறேன். தன்னை ஒரு சீரிய சிந்தனாவாதி என்று சதா கன்னத்தில் கை வைத்து வேறெங்கோ பார்க்கும் ஆசானுக்கு நகைச்சுவை உணர்வு ஒரு போதும் வராது.

பூச்சி கொல்லி மருந்து அடித்துக் கவிஞர்களைக் கொலை செய்தாலும்!

இருந்தாலும், எனக்கு ஒரு சந்தேகம்.

இந்தச் சோழர்கள் எல்லாம் ராஜராஜன் என்றே அறியப்பட்டவர்கள்.

இதற்குள் சக்கரவர்த்தி என்ற சொல் அனாவசியமாகப் புகுத்தப்பட்டதன் காரணம் என்னவாக இருக்கும்?

உங்கள் ஊகத்துக்கே விட்டு விடுகிறேன்.

நீங்களாச்சு! கல்கி ஆச்சு! ஆசானாச்சு!

ஒரு ஹீரோவைப் பற்றி அறிந்து கொள்வதற்குள் மற்ற ஹீரோவுக்கு கதை தாவுகிறது.

நாயகர்களாகவும் மற்றும் நடிகர்களாகவும் திரையை நிரப்பும் ஆண்களின் நிலையும் எவரையும் மனதில் நிறுத்தும் பாத்திரப் படைப்புகளோடு இருக்கவும் இல்லை.

வெறும் 'உள்ளேன், ஐயா!' தான்.

வந்திருந்த நாயகிகள் எல்லாம் வெறும் eye candy ரகத்தினராக, glamour girls ஆகவே இருந்தனர். அவர்கள் நடிக்கக் கூடியவர்களாக அறியப்பட்டதும் இல்லை. கதாபத்திரங்களுக்கு பொருத்த மானவர்களாகத் தெரிந்ததும் இல்லை. அதையும் மீறி நடிப்பற்கு, கதையில் அவர்கள் நடிக்கக் கூடியளவுக்கு சந்தர்ப்பம் இருந்ததாகவும் தெரியவில்லை. எத்தனை பிரபலங்களுக்கு என்று நேரத்தைப் பிரித்துக் கொடுக்க முடியும்?

ஐஸ்வர்யா ராய் நீண்ட கால் அழகியாக யாராவது ஹீரோவுடன் கால் தெரியும் நீண்ட ஆடையுடன் தொங்கிக் கொண்டிருக்க வேண்டியவர். அவருக்கு இருந்த conniving witch பாத்திர அமைப்புக்குரியபடி பார்ப்பவர்களுக்கு வெறுப்பேற் படுத்தக் கூடியதாகவோ, அல்லது காதலன் பாண்டியன் கொல்லப்பட்டதால் பழிவாங்கும் உணர்வு கொண்டார் என்று அனுதாபப்படக் கூடியதாகவோ, நடிப்புத் திறன் இருந்திருக்குமா என்பது எனக்குச் சந்தேகம்.

என்னுடைய மட்டுப் படுத்தப்பட்ட தமிழ்ப்பட அறிவில் முதல் மரியாதை வடிவுக்கரசியின் அளவுக்குக் கூட கொஞ்சமாவது நடிக்கத் தெரிந்த மாதிரி ஐஸ் எனக்குப் புலப்படவேயில்லை.

திரிஷா அன்ரியும் அப்படியே தான். மற்றவர்களின் பெயர் எனக்குத் தெரியாது.

இவர்களைக் கிட்டத்தட்ட எலிசபெத் டெய்லரின் கிளியோபாட்ராக்கள் ஆக்கத் தான் மணி ரத்தினம் முயற்சித்திருக்கிறார் போல.

Fell on his face.

செம்படவப் பெண் குயிலி பெரும் கடலோடி போலக் காண்பிக்கப்படுகிறார். வெறும் ஆறுகளையும் ஏரிகளையும் கடக்கின்ற படகு வைத்திருக்கும் பெண் தனியே இலங்கைக்கு புயலுக்குள்ளால் கடல் போக்குவரத்துச் செய்வது போலக் காட்டுவது, அதிகம் போலத் தான் எனக்குப் படுகிறது.

அதற்காக கலாரசிகர்களோ, பெண்ணியவாதிகளோ பொங்கத் தேவையில்லை.

செம்படவப் பெண்கள் பற்றி எனக்குப் படிந்த உருவம் அது. இல்லை, Women empowerment என்று பெண்களின் பெருமையை உயர்த்திக் காட்ட மணி ரத்தினத்தின் முயற்சி என்று மல்லுக் கட்டினால், ஆட்சேபனையோ, பொல்லாப்போ இல்லை.

இப்படியாக, வெறும் catwalk models மாதிரியாக வந்து போனார்கள். இவர்களின் பாத்திரங்களில் இன்றைக்கு திரையை ஆக்கிரமித்து இருக்கும், எனக்குப் பெயரும் முகமும் ஒன்றாகத் தெரியாத எந்த ஒரு மலையாள இறக்குமதி நடிகையும் நடித்திருக்கலாம். எந்தப் பாதகமும் இருந்திருக்காது.

தலை முறை தாண்டிப் பிறந்த இவர்களை மதுரையை மீட்ட சுந்தர பாண்டியனில் வாத்தியார் தனது நாயகிகளாகப் போட்டிருக்கலாம்.

நடிப்பை வெளிக்காட்டக் கூடிய தேவை இல்லாமல்!

ஆனால், அவர் மாக் குழைப்பதற்கு வசதியாக வாளிப்பான உடல்கள் இல்லை என்பது ஒரு மைனஸ் பொயின்டாக இருந்திருக்கும்.

சில நேரங்களில் பாத்திரங்கள் வசனம் பேசுவது நம்ம ஊர் அலாவுதீன் நாடக பாத்திரங்கள் மாதிரி, ஒருவர் நிற்க மற்றவர் குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டு பேசும் பாணியில் இருந்தது. குறிப்பாக நிலக் கீழ் அறை ஒன்றில் நடக்கும் சம்பாஷணை எனக்கு சிரிப்பாக இருந்தது.

இசை என்பது காட்சிகளுக்குப் பொருத்தமாயும், காதுக்கு இனிமையாகவும், மனதை

நிறைப்பதாகவும் சொல்லும்படியாக காதில் கேட்கவில்லை.

இத்தனைக்கும் ரஹ்மான் ஒஸ்கார் விருது பெற்ற இசை அமைப்பாளர்.

அதை ஏன் சொல்கிறேன் என்றால், முப்பது வருடங்களுக்கு முன் ஹொலிவூட்டின் பிரமாண்டப் படங்களுக்கான இசை அமைப்பாளர் என்றால் அது ஜோன் வில்லியம்ஸ் தான். அந்தக் காலத்தில் நான் பார்த்த எந்த ஒஸ்கார் விருது வைபவம் என்றாலும் அவருக்கு ஏதோ ஒரு படத்திற்கு இசைக்கான விருதுக்கு பரிந்துரைக்கப்பட்டிருக்கும்.

பின்பு நீண்ட காலம் நான் ஒஸ்கார் விருது நிகழ்வைப் பார்க்காமல் விட்டு, இம்முறை பார்த்தபோதும் ஸ்பீல்பேர்க்கின் The Fabelmans படத்திற்காக இசையமைத்ததற்காக பரிந்துரைக்கப் பட்டிருந்தார். இத்தனை வருடங்களின் பின்னாலும் அவரின் திறமைக்கு குறைவு இருக்கவில்லை என்பது எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது.

இளையவரான ரஹ்மானின் கையிருப்பு விற்றுத் தீர்ந்திருக்கக் கூடும்.

பாடல்கள்? ஹ்ம்.

அந்த பொன்னி நதி பார்க்கணுமே பாட்டைக் கேட்கும் போது என்னை அறியாமலேயே 'போறாளே பொன்னுத்தாயி' பாட்டு ஏனோ என் மனதில் ரீங்காரித்துக் கொண்டிருந்தது. ஏன் என்று தெரியவில்லை.

ஒளிப்பதிவு என்பதில் பெரும் குறைபாடாக நான் கருதுவது முழுப்படத்தின் வண்ணம்.

ஒவ்வொரு பிரமாண்டமான படமும் ஏதோ ஒரு வண்ணத்தை படம் முழுவதும் கொண்டிருக்கும்.

குளிர் காலமாயின் நீலம், பாலைவனமாயின் மண் நிறம், வியட்னாம் யுத்தமாயின் பச்சை நிறம் என்று சூழலை எங்களை அறியாமலேயே உணர்வுக்குள் கொண்டு வரப் பயன்படுத்தப்படுகின்றன.

To create the mood.

Crouching Tiger, Hidden Dragon படம் முழுக்க முழுக்க ஒரு நீலத் தன்மையைக் கொண்டிருந்தது. அந்தப் படம் நான் வேலை செய்த Deluxe Laboratory யில் தான் கழுவி, பிரிண்ட் எடுக்கப்பட்டது. அந்தப் படத்திற்கு சிறந்த ஒளிப்பதிவிற்கான ஒஸ்கார் விருது கொடுத்த போது, அதன் ஒளிப்பதிவாளர், அங்கு வேலை செய்த, எனக்குத் தெரிந்த, கோவாவைச் சேர்ந்த இந்தியரான லெஸ்லிக்கு ஒஸ்கார் மேடையில் வைத்து நன்றி சொல்லியிருந்தார். அந்தப் படத்திற்கு colorist ஆக இருந்தது லெஸ்லி தான். அந்த வண்ணமும் அதன் வெற்றிக்கு ஒரு காரணமாக அவர் கருதியிருக்க வேண்டும்.

(2000ல் வெளிவந்த அந்தப் படத்தில் இம்முறை சிறந்த நடிகைக்கான ஒஸ்கார் விருது பெற்ற மிஷேல் யியோ நடித்திருந்தார்.)

சோறுடைத்த சோழ நாடு, பச்சைப் பசேல் என்ற பூமியாக, சம தரையாக எங்கள் கண்ணில் காட்டப்பட்டிருக்க வேண்டும். படத்தில் எங்கேயும் அவ்வாறான காட்சிகளைக் கண்டதில்லை

இயக்குனரும் கோட்டை கொத்தளங்களைக் காட்ட வேண்டும் என்பதற்காக ராஜஸ்தான் பக்கம் போய் படம் பிடித்திருக்கிறார். தமிழர்களுக்கான திராவிட கட்டடக்கலை ஒன்று இருந்திருக்கிறது. ஆனாலும், கோயில்கள் தவிர்ந்து கோட்டை கொத்தளங்கள் என்று எதுவும் இன்றும் இருப்பதாகத் தெரியவில்லை. அன்றும் இந்த கங்கை கொண்டான், கடாரம் வென்றான்களும் இப்படிக் கோட்டைகளைக் கட்டியதாகவும் இல்லை. கட்டியிருந்தால், எச்சங்களாவது மிஞ்சியிருக்க வேண்டுமே?

லெமூரியா கண்டத்தோடு கடல் கொண்டு போய் விட்டது என்று கதை சொல்ல முடியாதபடிக்கு, இதெல்லாம் வெறும் ஆயிரம் ஆண்டுக்கு முந்திய கதை.

இதற்கு ஸ்கொட்லாந்தில் இருக்கும் பத்தாம் நூற்றாண்டுக் கோட்டைகளிலோ, ஜேர்மனியில் இருக்கும் மத்திய காலக் கோட்டைகளிலோ படம் பிடித்திருந்தால், எந்த வேறுபாடும் இருந்திருக்காது.

யாரும் கேள்வி கேட்டிருக்க மாட்டார்கள்.

அவ்வளவுக்கு வெவரமானவங்க நம்ம ரசிகர் திலகங்கள்.

வெளிநாட்டு லொகேஷன் படப்பிடிப்பு என்று பீற்றியும் இருக்கலாம்.

தற்போதைய Computer Generated Imagery யுகத்தில், ஒளிப்பதிவாளரின் பணி என்பது மட்டுப்படுத்தப்பட்டு, Computer graphic artists இல் பெருமளவு தங்கியிருப்பதாக இருக்கிறது. முழுமையாக அதில் தங்கியிருக்கும் இவ்வாறான படங்களில் ஒளிப்பதிவாளரின் திறமை என்பது கமெராவுக்குள்ளால் வராமல் கம்பியூட்டர்களுக்குள்ளால் வருவதாகவே இருக்கிறது. எனவே, ஒளிப்பதிவு மலைப்பை ஏற்படுத்தும் விதத்தில் இருக்கவில்லை.

இந்தப் படத்தில் பயன்படுத்தப்பட்ட வண்ணமும் படங்களும், உயிர்த் துடிப்பு இல்லாமல், ஒரு video game பார்த்த உணர்வையே எனக்குத் தந்திருந்தது.

இப்படி எல்லோரும் விதந்துரைத்த இந்தப் பிரமாண்டமான படைப்பு எந்தப் பிரமிப்பையும் எனக்குத் தரவில்லை.

சுந்தரபாண்டியனுக்கு இருந்த துணிச்சல் கூட சோழனுக்கு இருக்கவில்லை. மமீசுபா வில் வாத்தியார் புலிக்கொடியைக் காட்டுவார். மணிரத்தினம் பொசெயில் புலிக்கொடியைக் காட்டின மாதிரியும், காட்டின மாதிரி இல்லாமலும் காட்டியிருக்கிறார்.

எல்லாம் காலம் செய்த கோலமாகவும் இருக்கலாம்.

எனக்குப் பிரமிப்பைத் தந்தவர், இந்தப் படத்திற்கு PS1 என்று பெயர் வைத்தவர் தான். வீடியோ விளையாட்டுகளுக்குப் பெயர் போன, PS 1 என்று அழைக்கப்படும் Sony Playstation பெயரை, ஒரு வீடியோ விளையாட்டுப் போன்ற படத்துக்குப் பொருத்தமாக வைத்துப் பிரமிக்க வைத்த...

அந்த ஜீனியஸைத்தான் தேடிக் கொண்டிருக்கிறேன்,

முத்தம் கொடுப்பதற்கு!

# கைப்பிடியளவு கடல்



## பிரமிள் பற்றி கால சுப்ரமணியம்

கால சுப்ரமணியம், இலக்கியச் சூழலில் பெரிதும் அறியப்பட்டவர். பிரமிளின் வாசகனாகத் தொடங்கி அவரது கவிதைகளை முனைவர் பட்ட ஆய்விற்காக எடுத்ததிலிருந்து, அவருடன் நீண்டகாலம் நட்பாக இருந்து, அவருக்காகவே "லயம்" என்ற நவீன இலக்கியச் சிறுபத்திரிகையை நடத்தி, அவரது புத்தகங்களைப் பிரசுரித்து, அவரது மரணம் வரை பயணித்தவர்.

அண்மையில் "பிரமிள் படைப்புகள்" என்ற நூல் தொகுதிகளாக பிரமிளின் அனைத்து எழுத்துகளையும் திரட்டி, தனது லயம் பதிப்பகத்தினூடு வெளிக்கொண்டு வந்தவர் கால சுப்ரமணியம் அவர்கள். பிரமிளின் எழுத்துக்களுக்கப்பால் அவரது வாழ்வு முறையைப் பற்றி நாம் அறியவும் அதனை அவர் எங்களுக்குச் சொல்லவும் ஆயிரம் கதைகள் இருக்கும்.

தற்பொழுது ஒரு திரைக்கதை வேலையாக நேரமின்றி இருந்த அவரை "அபத்தம்" இதழிற்காக இடைமறித்துக் கேட்ட நாலே நாலு கேள்விகளே இவை.



## இடைமறிப்பு கற்சுறா

**கற்சுறா:**

இந்த உரையாடலில் பிரமிளின் இலக்கிய எழுத்துகள் குறித்தோ அவரது கவிதைத்தனம் குறித்தோ வெளிப்படுத்தாது அவரது தமிழ்நாட்டு வாழ்வுமுறை குறித்தே அறிய வேண்டும், பதியப்பட வேண்டும் என்ற விருப்புடன் தொடங்குகிறேன். அவற்றை வெளிப்படையாகப் பேசக்கூடியவரும், பல இடத்தில் பிரமிள் அதனைத் தெரிவித்திருந்தாலும், "அபி, பிரம்மராஜன், பிரேதா - மூவரும் என் கவிதைகளை இமிட்டேட் செய்திருக்கிறார்கள். வெளிப்படையாகத் தெரிகிற விடயம் இது" என்று உங்களது "லயம்" இதழில் (டிசம்பர் 1995 - இதழ் : 14) சொல்லியிருக்கிறார்.

"மேலும் சில ரிப்பேர்கள்": என்ற அந்தக் கட்டுரையை அப்பொழுது

தமிழ்நாட்டு இலக்கிய உலகம் எப்படி எதிர் கொண்டது? இன்று இத்தனை ஆண்டுகள் கழித்து இப்படியான பேச்சினை எவ்வாறு புரிந்து கொள்வார்கள்? கதைகளும் கவிதைகளும் பலருக்குத் தானே எழுதிக் கொடுத்தேன் என்று பிரேதா இன்று சொல்லும் அந்தச் சொல்லுக்குப் பின்னால் இருக்கும் இலக்கிய அயோக்கியத் தனத்தையாவது தமிழ்நாட்டு இலக்கிய உலகு வெளிப்படையாக இன்றுவரை சிறு விவாதமாகத் தன்னும் பேசவில்லையே? அது ஏன்?

**கால சுப்ரமணியம்:**

சென்னையிலிருந்து வெளிவந்த சி.சு.செல்லப்பாவின் "எழுத்து" சிறுபத்திரிகையில் அதன் இரண்டாம் ஆண்டில் (1960) பிரசுமான மூன்று மரபார்ந்த கவிதைகளுக்குப் பின் பிரமிள் தன் "ஐந்து கவிதைகள்" (டிசம்பர் 1961) என்ற புதுக் கவிதைகளைத் திருகோணமலையிலிருந்து எழுதினார்.

அதன் பின்புதான் படிமம், கவிதைப் படிமம், படிமக் கவிதை என்பன பற்றிய புதிய கருத்துக்கள் "எழுத்து"வில் எழுந்தன. பிரமிள் படிமம் பற்றித் தெரிந்து எழுதவில்லை. அப்போதைய படிமவியல் இயக்கம் பற்றி சுமார் இருபது வயதில் அவர் தெரிந்து வைத்திருக்க முடியாது. ஆனால் ந.பிச்சமூர்த்தி, தி.சோ.வேணுகோபாலன், நகுலன், சி.மணி ஆகியோர் "எழுத்து" முதலாண்டு இதழ்களில் எழுதியிருந்த சில புதுக்கவிதைகளின் சில அடிகளில் வந்திருந்த கவிதைப் படிமங்களைக் கவனித்திருக்கலாம். இவர்களில் சுமார் 25 வயதேயுள்ள ஆங்கில முதுகலை வகுப்பு மாணவராய் இருந்த சி.மணி, படிமவியல் பற்றியோ டி.எஸ். எலியட் பற்றியோ சிறிது முன் அறிமுகம் கொண்டவராய் இருந்திருக்கலாம்.

பிரமிள் கத்தை கத்தையாய் அனுப்பிய படைப்புகளில் ஒரு கவிதையை மட்டும் போட்டுவிட்டு, விமர்சனத்துக்காகவே தொடங்கிய பத்திரிகை என்பதால் பிரமிளின் ஒரு கட்டுரையை (சொல்லும் நடையும், கவிதை வளம்) இரண்டாக்கிப் பிரசுரிக்கிறார் செல்லப்பா. "ஐந்து கவிதைகள்"என்ற தேர்வுத் தலைப்பும், முதலிரு கட்டுரைகளின் தலைப்பும் செல்லப்பா இட்டவையே. விமர்சனத்துக்காகவே தொடங்கிய "எழுத்து" பத்திரிகையில் தற்செயலாக புதுக்கவிதை மறுமலர்ச்சி கண்டது.

இந்த ஐந்து படிமக் கவிதைகளுக்கு முன்பு த.சி.ராமலிங்கம், தர்மு சிவராமு என்ற பெயர்களில் "நான்" (ஜனவரி 1960), "பயிர்" (நவம்பர் 1960), "கேள்விகள்" (ஜுலை 1961) என்று கிளாசிகல் மரபிலும் நாட்டுப்புறப் பாடல் மரபிலும் மரபு வடிவிலிருந்து புதுக்கவிதை வடிவுக்கு மாறும் இடைப்பட்ட போக்கிலும் எழுதியிருக்கிறார். அதாவது அவர் அனுப்பிவைத்த ஏராளமான கவிதைகளிலிருந்து செல்லப்பா தேர்ந்தெடுத்தே இவற்றை வெளியிட்டிருக்கிறார்.

பிரமிள் கத்தை கத்தையாய் அனுப்பிய படைப்புகளில் ஒரு கவிதையை மட்டும் போட்டுவிட்டு, விமர்சனத்துக்காகவே தொடங்கிய பத்திரிகை என்பதால் பிரமிளின் ஒரு கட்டுரையை (சொல்லும் நடையும், கவிதை வளம்) இரண்டாக்கிப் பிரசுரிக்கிறார் செல்லப்பா. "ஐந்து கவிதைகள்" என்ற தேர்வுத் தலைப்பும், முதலிரு கட்டுரைகளின் தலைப்பும் செல்லப்பா இட்டவையே. விமர்சனத்துக்காகவே தொடங்கிய "எழுத்து" பத்திரிகையில் தற்செயலாக புதுக்கவிதை மறுமலர்ச்சி கண்டது. இரண்டாம் ஆண்டுக்குப் பின்தான் இது பற்றிய விழிப்பு செல்லப்பாவுக்கு ஏற்பட்டது.

அமெரிக்கப் புதுத்திறனாய்வைத் தீவிரமாகப் படித்துத் தன்னைத் தகுதிப்படுத்திக் கொண்டிருந்த செல்லப்பா, நியூ பொயட்ரி இயக்கத்தையும் பற்றி அலசி ஆராய்ந்து, புதுக்கவிதை என்றால் என்ன, படிமம் என்றால் என்ன என்பதைப் பற்றிய தமது குறிப்புகளை "எழுத்து"வில் வெளியிடுகிறார்.

புதுக்கவிதை பற்றியும் எழுத்துவில் மலர்ந்துள்ள புதிய கவிஞர்களைப் பற்றியும் பிச்சமூர்த்தியோடு விவாதித்துத்தான் செல்லப்பா தன் பிரசுரங்களைத் தீர்மானித்தும் உள்ளார். பிச்சமூர்த்தியும்,




வேணுகோபாலனும் பிரமிளும் மரபுக் கவிதைகளை நிறைய எழுதிய பின்பே புதுக்கவிதைக்கு வந்தார்கள். எனவே அவர்களுக்கு யாப்பு பற்றித் தெரியும். புதுக்கவிதையை ஏற்கமுடியாதவர்கள் தான் யாப்பறிவு இல்லாததால் புதுக்கவிதையை எளிதாக எழுத வந்தார்கள் என்று வீண்பழி சுமத்தினார்கள்.

"யாப்பியல்" என்ற இலக்கண நூலையே எழுதி புதுக்கவிதை இலக்கணத்தையும் வரையறை செய்திருக்கிறார் சி.மணி. மரபுக்கவிஞர்கள் தாம் பாரதி, பாரதிதாசனை மீறி ஏதும் படைக்க முடியவில்லை. நீர்த்துப்போன இவர்களுள் திறமையுள்ள ஒரேயொருவரான ச.து.சு.யோகி, மேலைப் புதுக்கவிதையின் பிதாமகரான வால்ட் விட்மனின் கவிதைகளை "மனிதனைப் பாடுவேன்" என்ற தலைப்பில் ஒரு நூலாகவே படைத்துள்ளார். எனவே இமிட்டேஷன் கவிஞர் என்றால் முதலில் இந்த மரபுக் கவிஞர்களைத்தான் சொல்ல வேண்டும். இன்ஸ்பிரேஷன் என்றுதான் குறிப்பான எழுத்துக் கவிஞர்களின் கவிதைகளைக் குறிப்பிட முடியும்.

"நான்" என்ற முதல் கவிதையிலேயே மணிவாசகரின் சிவபுராணம், காரைக்காலம்மையாரின் தாண்டவப் பாடல்கள், பாரதியின் உக்கிரம் போன்றவற்றை காணமுடியும் இவைகளில் பக்திமார்க்கம் சார்ந்த முதலிருவரில் இல்லாத ஒரு தத்துவ ஆன்மீக விசாரத்தொனியும் "நான்" கவிதையில் வெளிப்படும்.

"விடிவு" கவிதையை இமிட்டேட் செய்து எழுத்துவிலேயே எஸ். வைதீஸ்வரனும், கி.அ.சச்சிதானந்தமும் தலா ஒரு கவிதை எழுதியிருக்கிறார்கள்.

மின்னல் கவிதையை இமிடேட் செய்து அப்துல் ரகுமான் மின்னல் என்ற தலைப்பிலேயே ஒரு கவிதை எழுதியிருக்கிறார். ரகுமான் கவிதையின் ஒற்றைப்பரிமாண அர்த்தமும் அலங்காரப் படிமமும் வெளிப்படையானவை. பிரமிளுடையது பல பரிமாணம் கொண்டதாய் சர்ரியலிச அருபப் படிமங்களாகவும் இருக்கும் - தலைப்பை நீக்கிவிட்டால் அக்கவிதை மின்னலைப் பற்றியது என்பதே புரியாது. தன்னை அதிசயிக்க வைத்த கவிஞர் என்று அப்துல் ரகுமானே சாகித்ய அகாதமி வெளியிட்ட இந்திய இலக்கியம் பற்றிய ஒரு ஆங்கிலத்தொகுப்பில் கட்டுரை எழுதியிருக்கிறார். ஞானிக்கு அன்னம்விடு தூதுவில் அளித்த பேட்டியில், நீங்களே அதிசயிக்கத்தக்க கவிஞர், உங்களையே அதிசயிக்க வைத்த கவிஞர் யார் என்ற ஞானியின் கேள்விக்கு தர்மு சிவராம் (பிரமிள்) என்று பதிலிளித்திருக்கிறார் ரகுமான். அவரது முதல் கவிதை நூலான "பால்வீதி" யில் பிரமிளின் பாதிப்பு வெளிப்படையாகத் தெரியும். அப்துல் ரகுமானின் மாணவர் அபி. எனவே அபியிடம் பிரமிள் பாதிப்பு மறைமுகமாகவேனும் இருப்பதை அவதானிக்க முடியும்.

என்றாலும் தம்மை இமிட்டேட் செய்த மூவரில் அபி, தனித்தன்மை கொண்டவர் என்று பிரமிளே சான்று வழங்கியுள்ளதைக் காணலாம்.

பரிதிக் கவிஞர் என்று பிரமிளை ஆரம்பத்தில் யாரோ ஒருவர் குறிப்பிட்டார். பரிதி என்ற சொல் பாரதியிடமிருந்து வந்திருக்கலாம் (பார்.. சுடர்ப் பரிதியை,,,) சூரியன், கதிரவன் போன்ற சொற்கள் அன்றே பூரித (கிளிஷே) நிலையை அடைந்துவிட்டன. முன்பே சூரிய நாரயண சாஸ்திரியாரும் பரிதிமாற் கலைஞர் என்றே ஆகியிருந்தார்.

"காலவெளி" போன்ற புதிய சொல்லாட்சியையும் பிரமிள் கையாண்டார். இன்றைக்கு அது உடல்வெளி, நாடகவெளி என்றெல்லாம் வெளிப்படக் காரணமாயுள்ளது. ஏனெனில் "ஸ்பேஸ் டைம்" என்ற சொல்லுக்கு வெளியின் காலம் என்பதுதான் சரியான தமிழாக்கம். வானியலும் அப்பொருளில்தான் பயன்படுத்துகிறது கவித்துவ லைசென்சுடன் அதை மாற்றிச் சுருக்கி காலவெளியாக்கியிருக்கிறார் பிரமிள். (காலமும் வெளியும் காலத்தின் வெளி என்ற தொகைச்சொல்). "காலமே வெளி" என்றும் ($E=MC^2$) ஒரு கவிதையில் விரிக்கிறார்.

பிரமிளின் ("உளவியல் ஒரு துறையாகாதா?" என்ற தமிழவன் "சதங்கை" கட்டுரைக்கு அதே இதழில் வெளியான பதில் கட்டுரை போன்றவை) விமர்சனத்தாக்குதலால் நிலைகுலைந்த தமிழவன், "பிரக்ஞை பத்திரிகையில் எலியட், மாயாகோவ்ஸ்கி. ராபர்ட் பிராஸ்ட்டிலிருந்து சில வரிகளைத் திருடிவிட்டார் என்று நிரூபிக்கப் பார்த்தும், அது யாரும் சீண்டுதலற்றுப் போயிற்று.

பிரம்மராஜன் ஒரு சூடோ கவிஞர், கட்டுரையாளர். ஆங்கிலம் அறியா வாசகர்களால் பிரமை கொள்ளப்பட்டவர். பிரம்மராஜன் நிறைய மேலைக் கவிதை வரிகளை அப்படியே எடுத்தாண்டிருக்கிறார் என்று சிலர் விரித்துக் காட்டியுள்ளார்கள்.


பிரேம் தாம் படிக்கும் புத்தகக் கருத்துக்களை குறித்து வைத்துச் சேர்த்துத் தனதாக எழுதுவார் என்று அருகிருந்து கவனித்த கவிஞர் அமிர்தராஜ் கூறியுள்ளார். பெரும்பாலும் பிரேம் எங்கிருந்து எடுத்தது என்று எப்போதும்




சுட்டமாட்டார். (முழுமையாகத் திருப்தி தராவிட்டாலும் பின்நவீனத்துவம், காந்தி, அம்பேத்கர், பன்மை பற்றிய கட்டுரைகள் போன்றவற்றில் யாரையும் விடவும் விமர்சனக் கட்டுரைகள் எழுதுவதில் திறமையானவர் பிரேம் என்பது வேறு விஷயம்.)

பிரேமும் ரமேஷும் ஆரம்பத்தில் பிரேதா என்ற புனைபெயரில் சேர்ந்து எழுதியகாலத்தில் பிரேதாவின் ஒரு நெடுங்கவிதையை பிரசுரத்துக்காகவென்று காருநிவேதிதா எனக்கு அனுப்பி ("புதைக்கப்பட்ட கபாலங்களும் மறைக்கப்பட்ட பிரதிகளும்" என்பது போன்ற தலைப்புடைய கவிதை அது. பின்பு அது பிரேதாவுக்காகவே சாருநிவேதிதா நடத்திய "கிரணம்" பத்திரிகையில் பிரசுரம் பெற்றது), தமிழவன் தமது "இங்கே இன்று" பத்திரிகையில் அபூர்வமான அதை கொத்துபுரோட்டா போட்டுவிட்டார் என்றும் அதை "லயம்" பத்திரிகையில் வெளியிடவேண்டும் என்றும் எழுதியிருந்தார். கூடவே தன்னை அபிமானித்து பிரேம் எழுதிய சில நீளமான கடிதங்களின் பிரதிகளையும் அனுப்பியிருந்தார். அவைகளில் ரமேஷ், மாலதி பற்றி ஆரம்பகால பிரேமின் மதிப்பீடுகளும், தான் பின் அமைப்பியலையும் கற்றுவரும் உத்வேகங்களையும் பற்றியும் விவரிப்புகள் இருந்தன. அந்த நெடுங்கவிதையின் போலித்தனமான தொனியும் தோரணையும் பாவனையும் பிடிக்காததாலும் பிரமிள்

“பிரேமும் ரமேஷும் ஆரம்பத்தில் பிரேதா என்ற புனைபெயரில் சேர்ந்து எழுதியகாலத்தில் பிரேதாவின் ஒரு நெடுங்கவிதையை பிரசுரத்துக்காகவென்று காருநிவேதிதா எனக்கு அனுப்பி ("புதைக்கப்பட்ட கபாலங்களும் மறைக்கப்பட்ட பிரதிகளும்" என்பது போன்ற தலைப்புடைய கவிதை அது. பின்பு அது பிரேதாவுக்காகவே சாருநிவேதிதா நடத்திய "கிரணம்" பத்திரிகையில் பிரசுரம் பெற்றது), தமிழவன் தமது "இங்கே இன்று" பத்திரிகையில் அபூர்வமான அதை கொத்துபுரோட்டா போட்டுவிட்டார் என்றும் அதை "லயம்" பத்திரிகையில் வெளியிடவேண்டும் என்றும் எழுதியிருந்தார்.”




கவிதை நடையின் சில சொற்களையும் சொல்முறைகளையும் இமிட்டேட் செய்து இருந்ததாலும் நான் நாசுக்காக "கவிதையின் தரத்துக்கும் லயத்தின் தரத்துக்கும் ஒத்துவரவில்லை" என்று மறுத்துவிட்டேன்.

திருப்பியனுப்ப ஸ்டாம்ப் ஒட்டிய உறை ஏதும் வைக்காததாலும் அதுவே பிரதி எடுத்து அனுப்பியதுதான் என்பதாலும் திருப்பியனுப்பும் வீண்செலவு வேண்டாம் என்று அந்தக் "கபாலப் பிரதி" கவிதையை திருப்பாமல் வைத்திருந்தேன்.

அச்சமயத்தில் எனது (நகலூர்) கிராமத்துக்கு வந்திருந்த பிரமிள், அதை மேலோட்டமாக வாசித்தார். இமிட்டேஷன் அப்போதே அவருக்குப் புலப்பட்டிருக்கும். அதன் போலியான பிகுவைப் பார்த்திருப்பார்.

நான் நாசுக்காக மறுத்த சொற்களைக் கேட்டுச் சிரித்தார். முள்ளில் சிக்கிய உடையைச் சேதமில்லாமல் எடுப்பதுபோன்ற ஏதோ ஒரு உவமையைச் சொல்லிக் கிண்டல் செய்தார்.

சாரு, இந்தப் பிரசுர மறுப்பு எரிச்சலையூட்டுகிறது என்று ஏதோ சொன்ன நினைவு. இப்போது சில ஆண்டுகளுக்கு முன், எனக்கும் பிரேமுக்குமான ஒரு முகநூல் விவாதத்தில், தன்னை வேண்டுமென்றே திட்டமிட்டு இருட்டடிப்பு செய்துவிட்டதாக என்னையும் பிரமிளையும் சாடிக் கொதித்துக் கடும் வார்த்தைகளை வெளியிட்டார் பிரேம். பிரமிள் கவிதை (பாரதி கவிதை போலவே) பஜனைக் கவிதை என்றார். தனது பிரேம் என்று பெயரைத்தான் மதிப்புடன் பிரேமிள் என்று வைத்துக்கொண்டார் என்று அவர் (பிரேமானந்தன்) மொழிந்தது இதில் உட்சபட்ச அங்கதம்.

பிரமிள் என்ற பெயர் காளிதாசனில் வரும் ஒரு பாத்திரப் பெயர் என்று பிரமிளே என்னிடம் குறிப்பிட்ட ஞாபகம். எழுபதுகளின் ஆரம்பத்திலேயே அவர் பிரமிள் என்ற பெயரின் பல வடிவங்களைக் கையாள்கிறார். நான்தான் ஒருவிதமாக பிரமிள் என்ற வடிவத்தை மட்டும் நிலை நிறுத்த முயன்றுவருகிறேன். அவருக்குப் பிடிக்காத விஷயம் இது என்று தெரியும்.

இதே சமயத்தில் இதேபோன்ற ஒரு முகநூல் விவாதத்தில், எம்டி.எம்முக்கும் எனக்கும் நடந்த மற்றொரு விவாதத்தையும் சொல்லவேண்டும். கலாப்ரியா நடத்திய குற்றாலம் கவிதைப்பட்டறையில் பிரமிளுக்கும் நாகார்ஜுனன், எம்.டி.முத்துக்குமாரசாமிக்கும் இடையில் எழுந்து நடந்த ஒரு சொல்லாடல் களேபரத்தையும் பற்றி எழுந்தது இந்தப் பிரச்சனை. இது பற்றி விரிவாக "மீறல்" பிரமிள் பேட்டியில் இருக்கிறது. பிரெஞ்சிலிருந்து நேரே இறங்கி வந்துவிட்டோம், தமிழுக்கு வர கொஞ்சம் காலம் பிடிக்கும் என்ற தோரணையில் (பிரெஞ்சின் பூட்ஸ் நுனியைக்கூட நக்கத் தகுதியற்றவர் இவர்கள் என்று பின்பு பிரமிள் இதைப்பற்றி எழுதியுள்ளார்) பேசிய நாகார்ஜுனனை, "ஆட்டோ ஓட்டுவதும் கவிதை எழுதுவதும் ஒன்று என்கிறீர். நான்தான் விவரம் அறியாதவன் என்று வைத்துக்கொள்ளுங்கள்" என்று பிரமிள் இடைமறித்துக் கேட்டுக் கொண்டிருந்தபோதே, எம்.டி.எம். "எங்களுக்கும்தான் எதுவும் தெரியாது" என்று ஆரம்பித்தார். சட்டென்று பிரமிள் "தட் இஸ் நாட் எ நியூஸ்" என்று மடக்கினார். அதாவது, தனக்கு ஒன்றும் தெரியவில்லை என்று சொன்னால் அது ஒரு புதிய தகவல். உங்களுக்கு ஒன்றும் தெரியாது என்பது உலகறிந்தது தானே என்ற சொற்சிலம்பம்.

"தங்கள் நற்செய்திக்கு நன்றி (சுவிசேசத்தின் குட்நியூஸ், அருள்வாக்கு)" என்பதுபோல் எதையோ குளறிவிட்டு எம்டி.எம்மும் நாகார்ஜுனனும் இப்படிப்பட்ட விதண்டாவாதக் கூட்டத்தில் தாம் பேசமுடியாது என்று எழுந்து வெளிநடப்புச் செய்துவிட்டனர். பிரமிளும் தான் இனி கூட்டத்தில் கலந்துகொள்ளப்போவதில்லை என்று சொல்லிவிட்டு தம் அறையிலேயே தங்கிவிட்டார். பிறகுதான் மாலை கூட்டத்தில் எம்டி.எம்மும் நாகார்ஜுனனும் கலந்துகொண்டனர்.

அப்படி தம் அறையில் பிரமிள் இருந்தபோதுதான் ஜெயமோகன் போய் பிரமிளைச் சந்தித்தது. அந்தச் சந்திப்பில் நான் இறுதியில் தான் கலந்துகொண்டேன். பின்பான நடையின் போது, "என்ன இந்த ஆள் என் கவிதை பற்றி இப்படிப் புகழ்கிறானே?" என்று பிரமிள் என்னிடம் கேட்டதுக்கு, "ஜாக்கிரதையாக இருங்கள், அவர் சுந்தரராமசாமியின் ஆள். உங்கள் விமர்சனம் மேல் கிஞ்சித்தும் ஆமோதிப்புக் கிடையாது அவருக்கு" என்று நான் எச்சரித்தேன்.

அப்படி தம் அறையில் பிரமிள் இருந்தபோதுதான் ஜெயமோகன் போய் பிரமிளைச் சந்தித்தது. அந்தச் சந்திப்பில் நான் இறுதியில் தான் கலந்துகொண்டேன். பின்பான நடையின் போது, "என்ன இந்த ஆள் என் கவிதை பற்றி இப்படிப் புகழ்கிறானே?" என்று பிரமிள் என்னிடம் கேட்டதுக்கு, "ஜாக்கிரதையாக இருங்கள், அவர் சுந்தரராமசாமியின் ஆள். உங்கள் விமர்சனம் மேல் கிஞ்சித்தும் ஆமோதிப்புக் கிடையாது அவருக்கு" என்று நான் எச்சரித்தேன்.

**"நானறிந்தவரை பிரமிள் நல்ல ஆசிரியர் அல்ல. அவருடைய குணம் விசித்திரங்கள் கொண்டது. முற்றிலும் நிலையற்ற மனிதர். சுந்தர ராமசாமி மகத்தான ஆசிரியர்" என்று ஜெயமோகன் இப்போது சொல்லியுள்ளாரே...**

**குற்றாலத்தில் அந்த ஒருமணிநேரம் பேசிக்கொண்டிருந்ததுதான், "நான் அறிந்தவரை" என்பதன் அவையடக்கப் பொருள். (பிறகு சுரா சொன்ன பிரமிள் பற்றிய தற்பார்வைக் கதைகள் மட்டுமே ஜெயமோகனை மழுங்கடித்துள்ளன. அந்தக் தற்பார்வைக் கதைகளை நம்பாத, பெரிதாக எடுத்துக்கொள்ளாத சுராவுக்கும் பிரமிளுக்கும் நெருக்கமான பல நண்பர்களை எனக்குத் தெரியும்)**
**மற்றபடி அவருக்கும் பிரமிளுக்கும் இடையில் சில கடிதப்போக்குவரத்துக்களில் விவாதங்கள் (யோகி ராம்சுரத்குமார், ஒரு மலையாள இலக்கிய இதழில் ஜெயமோகன் பிரமிள் கவிதைகளை மொழிபெயர்க்க அனுமதி கேட்டு மறுக்கப்பட்டது என்று..) நடந்தன.**



"நானறிந்தவரை பிரமிள் நல்ல ஆசிரியர் அல்ல. அவருடைய குணம் விசித்திரங்கள் கொண்டது. முற்றிலும் நிலையற்ற மனிதர். சுந்தர ராமசாமி மகத்தான ஆசிரியர்" என்று ஜெயமோகன் இப்போது சொல்லியுள்ளாரே... குற்றாலத்தில் அந்த ஒருமணிநேரம் பேசிக்கொண்டிருந்ததுதான், "நான் அறிந்தவரை" என்பதன் அவையடக்கப் பொருள். (பிறகு சுரா சொன்ன பிரமிள் பற்றிய தற்பார்வைக் கதைகள் மட்டுமே ஜெயமோகனை மழுங்கடித்துள்ளன. அந்தக் தற்பார்வைக் கதைகளை நம்பாத, பெரிதாக எடுத்துக்கொள்ளாத சுராவுக்கும் பிரமிளுக்கும் நெருக்கமான பல நண்பர்களை எனக்குத் தெரியும்) மற்றபடி அவருக்கும் பிரமிளுக்கும் இடையில் சில கடிதப்போக்குவரத்துக்களில் விவாதங்கள் (யோகி ராம்சுரத்குமார், ஒரு மலையாள இலக்கிய இதழில் ஜெயமோகன் பிரமிள் கவிதைகளை மொழிபெயர்க்க அனுமதிகேட்டு மறுக்கப்பட்டது என்று..) நடந்தன. (நானும் அவையடக்கம், இடம் அறிந்துதான் விவாதம் என்று அதைத் சொல்கிறேன். அந்தக் கடித விவகாரங்களை விரிவாகப் பின்புதான் தனியாகச் சொல்லவேண்டும்.

ஹென்றி மில்லரை இமிட்டேட் செய்து "மர்மக் கதை" (அஸ்வமேதா இதழில்) என்ற சிறுகதையில் ஒரு பத்தி எழுதியிருந்தார் எம்.டி.முத்துக்குமாரசாமி. அதை எனக்கு எடுத்துக் காட்டினார் பிரமிள். ஆம், எங்கேயோ படித்ததுபோலிருக்கிறது என்றேன். யார் என்று இனங்காண முடியவில்லை.

ஹென்றி மில்லரின் (டிராபிக் ஆஃப் கேன்சர்) "கடகரேகை" நாவலில் வரும் முதல் பக்கப் பத்தி அது. (பின்பு அந்த முதல் அத்தியாயத்தை மொழிபெயர்த்தும் எனக்குத் தந்திருந்தார் பிரமிள். ஆனால் அது எப்படியோ காணாமல் போய்விட்டது.) இன்டர் டெக்ஸ்ட்டுவாலிட்டி உத்தி என்று எம்.டி.எம். அந்த எடுத்துரைப்பை மழுப்பிப்காட்டினார். அப்போது எழுதப்பட்டதுதான் "இது என்ன பிறகு?" (தீட்சண்யம் இதழ்) என்ற கட்டுரை. அதில் ஊடிழைப் பிரதிக்கும் தழுவலுக்கும் திருட்டுக்கும் உள்ள வித்தியாசத்தை விளக்கியுள்ளார் பிரமிள்.

சீரியஸ் இலக்கியம் படிக்கும் ஆங்கில வாசகனுக்கு ஹென்றி மில்லரின் புகழ்பெற்ற வரிகள் என்பது தெரியும். நம் வாசகன் நிலை நமக்கே தெரியும். இங்கே இப்படி பெயரில்லாமல் எடுத்து எழுதினால் அது ஏமாற்று. திருட்டு. மேலும் இப்படி ஒன்றை எடுத்தெழுதுவது அந்த விஷயத்தை மேம்படுத்துவதாக இருக்கவேண்டும் அல்லது வேறு பரிமாணத்தைக் காட்டவேண்டும். கீழிறக்கினால் அது எந்த உத்தியானாலும் ஏமாற்றுத் திருட்டுத்தான் என்று விளக்கியிருந்தார்.

முன்பே உள்ள ஒரு கதைக்கருவைப் பயன்படுத்தும் போதும் இதே நிலைதான் பிறக்கிறது. ஷேக்ஸ்பியர் நார்வீஜிய "ஹாம்லெட்" கதையை எடுத்து மிக மேலான நிலைக்கு எடுத்துச் சென்றிருக்கிறார். வால்மீகியை விட கம்பன் மேலானவன் தானே? பாஞ்சாலி சபதத்தில் பாரதியின் உச்சம் விளங்குகிறதல்லவா? அகலிகையின் கதையை புதுமைப்பித்தன் உன்னதமாக்கவில்லையா? (ஞானியின் "கல்லிகை" நெடுங்கவிதை கீழிறக்கித் தடுக்கி விழுந்த ஒன்று. குழந்தையின் "இராவணகாவியம்" நோக்கு மாறுபட்டதாயிருந்தாலும் படைப்புத்திறனில் குப்பை) ஆனால் இவை பற்றியெல்லாம் கவனிக்கும் சீரிய வாசகர், விமர்சகர் வட்டம் அறவே இல்லை என்பதுதான் இங்கே துரதிருஷ்டம்.

"மேலும் சில ரிப்பேர்கள்" கட்டுரையில் பிரம்மராஜன், பிரேதா, அபி போன்றோர் தம்மை இமிடேட் செய்தவர்கள் என்று பிரமிள் எழுதி வெளியானபோது, அபிப்ரியா என்று தன் பெயரை அப்போது வைத்துக்கொண்டிருந்த அய்யனார், இல்லவேயில்லை, அபி சுத்த சுயம்பு என்று எழுதியிருந்தார். அதற்குப் பதிலாகத் தான் பிரமிள், இமிட்டேஷன் என்றால் என்ன, இன்ஸ்பிரேஷன் என்றால் என்ன, காப்பியடித்தல் என்றால் என்ன என்று விளக்கி எழுதியிருந்தார். அதை நான் சுருக்கியே வெளியிட்டேன். பிறகு "பிரமிள் படைப்புகள்" தொகுத்தபோது அந்த விரிவான கட்டுரையை அப்படியே தந்திருக்கிறேன்.

*2*

**கற்சுறா:**

ஆனால் தமிழ் தமிழ் இலக்கிய உலகில் சிலர் தாங்கள் தான் “நம்பர் வண்” என்பதாகப் படம் காட்டுவது மட்டுமல்லாது, தாங்களே அதிசிறந்த எழுத்தாளர்கள் என்பது போல் பாவனை காட்டுவதற்காக சமூகம் சார்ந்து, அனைத்து விடயங்கள் பற்றியும் கருத்துச் சொல்லக் கூடிய நிலைக்கு வந்திருக்கிறார்கள். ஆனால் மறுபுறம் அவர்கள் யாருமே தங்கள் மீது வைக்கும் சிறு எதிர்க்கதைகளைக் கூட அவற்றிற்குப் பதில் சொல்ல வேண்டியதில்லை என்பது போலவும், அவற்றைத் தாம் பார்க்காதது போலவும் பாவனை செய்து கடந்து செல்கிறார்கள். ஒரு முறை பாரிசில் ஞானக்கூத்தன் அவர்களைச் சந்திக்கக் கிடைத்த போது பிரேமிளின் கருத்துக்கள் பற்றி அவருடன் உரையாட முடிந்தது. அப்பொழுது “நான் பிரமிளின் எழுத்துக்கள் எதையும் வாசிப்பதில்லை. ஆனால் நான் ஒரு கவிதை எழுதியவுடன் அதனை வாசித்து உடனேயே அதற்கான மறுப்பைப் பிரமிள் எழுதிவிடுவார்” என்றார். அப்பொழுது பிரெஞ்சு அரசினால் கவிஞர் என்ற பெயரில் ஞானக்கூத்தனும் கனிமொழியும் அழைக்கப்பட்டிருந்தார்கள். அங்கே வாசிக்கப்பட்ட இருவரது கவிதைகளும் கவிதை என்று நாம் யாரும் பாராட்டும் படியாக இருந்ததில்லை. அதிலும் ஞானக் கூத்தனின் “மூலை”, “தலையணை” என்ற கவிதைகள் படு நிந்தனை. இவர்களைப் பாரீஸ் வரை அழைத்தது இந்தக் கவிதைகளுக்காகவா என ஆதங்கப்பட்டோம். இவ்வாறான தெரிவுகள் எங்கிருந்து ஆரம்பிக்கப்படுகிறது?

அத்தோடு பிரமிளின் ஆசை தான் பரீஸ் சென்று அங்குள்ள ஓவியர்களுடன் இணைந்து ஒரு ஓவியனாக வாழ்ந்து முடிவது என்பதாக இருந்தது என்று யாரோ சொல்லக் கேள்விப்பட்டேன். அவர் தன்னை ஓர் ஓவியராகவே இனங்கண்டார் என்றும் சொல்கிறார்கள். கவிதையின் பக்கம் ஈர்த்ததும் கவிதையில் உன்னத இடத்தைக் கண்டதும் தமிழ்நாட்டில் அவர் கண்ட இலக்கியப் போலிகளைக் கண்டுணர்ந்த கோபத்தினால் நடைபெற்றது என்றும் ஒரு கதை இருக்கிறது. அது உண்மையா? பாரீசிற்குப் போன மண்ணாந்ததைக் கவிதையான “லூரஸ்கியோவஸ்கி” கவிதையின் பின்பக்கக் கதை என்ன? பிரமிள் பாரீஸ் செல்லமுடியாது போனதற்கு அவரிடம் வந்து சேர வேண்டிய “பாஸ்போட்” அவருக்கு வராது போனது ஒரு முக்கிய காரணம் என்று சொல்லப்படுகிறது. அப்படியொரு கதை இருப்பது உண்மையா? அவருக்கு ஏன் அவருடைய “பாஸ்போட்” கிடைக்காது போனது? அதற்கு யார் காரணம்?

“ஓவியத்தில்தான் அவருக்கு ஆரம்பத்தில் ஈடுபாடு இருந்தது. ஆனால் எழுத்துத் துறையில் தமக்கு இயல்பாக இருக்கும் ஆற்றலைக் கண்டுகொண்டே இதில் தீவிரமாக இறங்கினார். ஓவியராகவே வாழ விரும்பினாலும் இலங்கையிலும் தமிழகத்திலும் இருந்த கலைச்சூழல்கள் அவரை அதில் முழுமையாக ஈடுபட விடவில்லை.”

**கால சுப்பிரமணியம்:**

பிரமிள் சிறுவயதில் திருகோணமலையில் சில பிராமணர்களின் தொல்லைக்கு ஆளாகியிருக்கிறார். தந்தையை மிகச் சிறுவயதிலேயே இழந்தவர் அவர். தாய்க்கு இரு குடிசைகள் மட்டுமே இருந்ததாகவும் ஒன்றை வாடகைக்கு விட்டும் வீட்டிலிருந்தே சிறுசிறு வேலைகளைச் செய்துமே லட்சுமி அம்மாள் அவரைப் பராமரித்து வந்ததாகத் தெரிகிறது. எனவே பள்ளிக்குச் செல்ல வசதியில்லாமல் இராமகிருஷ்ணமடம் நடத்திய இரவுப் பாடசாலையில் தான் படிக்க வேண்டியதாயிற்று. பள்ளி இறுதி மட்டுமே பயின்றிருக்கிறார். அவருக்குச் சீனியரான அமரசிங்கம் நடத்திய “யாழ்” கையெழுத்துப் பத்திரிகையை பிரமிள்தான் முழுக்க ஆக்கிரமித்திருக்கிறார். தயாரித்தல், படைப்புகள், சித்திரங்கள் என்று. சிவசேகரம் சக மாணவர். கந்தசாமி, டாக்டர் ராமச்சந்திரன் போன்றோர் நண்பர்கள். இளமையில் தபால் வழி ஒரு லண்டன் ஓவியப்பள்ளியில் படித்து ஒரு டிப்ளமோ சர்ட்டிபிகேட் வாங்கியிருக்கிறார் பிரமிள்.

வீட்டுக்கு அருகிலிருந்த கோவில் சார்ந்த பிராமணர்கள், அவரது நிலத்தை அபகரிக்கப் பல முயற்சிகளையும் மிரட்டல்களையும் இடைஞ்சல்களையும் தந்திருக்கிறார்கள். ஒருமுறை தீ வைத்ததாகவும் தெரிகிறது. தாயும் மறைந்த பிறகு அந்த வீட்டை விற்றுவிட்டு தமிழகத்துக்கு புலம் பெயர்ந்தார். அந்தக் கோயில் பிரமணர்கள் அதிக விலைகொடுக்கத் தயாராக இருந்தும், தம் நண்பர் ஒருவருக்குக் குறைந்த விலையில் தந்துவிட்டு அப்பணத்துடனேயே தமிழகம் வந்தார். அந்த தொகையில் பாதியை பாலசுப்ரமணியம் என்ற பிரான்சிலிருந்த நண்பரிடம் தந்து பாரிஸ் வந்துவிட ஏற்பாடு செய்யும்படி கேட்டுக்கொண்டு மீதித் தொகையுடனேயே சென்னை வந்தார். அந்த பாலசுப்பிரமணியம் பின்பு கனடாவில் இருந்ததாகவும் அவரது கடிதங்கள் சிலதை என்னிடம் பிரமிள் காட்டியதாகவும் நினைவு. அந்தக் கடிதங்களில் ஒன்று என்னிடம் இன்றும் இருக்கலாம். அவரால் பாரிஸ் செல்லும் ஏற்பாட்டைச் செய்யமுடியவில்லை. ஏனென்றால் பிரமிளிடம் எந்தச் சான்றிதழ்களும் இல்லை. பாஸ்போர்ட் எடுக்க முயன்றும் முடியவில்லை. பிற்காலத்தில் சென்னையில் குடியிருந்த சில சான்றுகளை வைத்து ஒரு ஏஜன்சி மூலம் பாஸ்போர்ட் வாங்க முயன்றபோதும் முடியவில்லை. அதற்காக தீயில் சிதைந்துபோனதாக அவர் தயாரித்திருந்த சில சான்றுகள் என்னிடம் இன்றும் இருக்கின்றன.

ஓவியத்தில்தான் அவருக்கு ஆரம்பத்தில் ஈடுபாடு இருந்தது. ஆனால் எழுத்துத் துறையில் தமக்கு இயல்பாக இருக்கும் ஆற்றலைக் கண்டுகொண்டே இதில் தீவிரமாக இறங்கினார். ஓவியராகவே வாழ விரும்பினாலும் இலங்கையிலும் தமிழகத்திலும் இருந்த கலைச்சூழல்கள் அவரை அதில் முழுமையாக ஈடுபட விடவில்லை. தமக்கு எதில் என்ன திறமையிருக்கிறது என்பதை ஆரம்பத்தில் கண்டுகொள்ளாமல் இருந்த மௌனி, தனது புருஷார்த்தம் என்ன என்பதைப் பிற்காலத்தில் பிறர் தம் எழுத்தை ஆராதிப்பதைக் கண்டுகொண்டு மட்டுமே மீண்டும் எழுத முயன்றார் என்பதைப் பிரமிள் கண்டு சொல்லியிருக்கிறார். எனவே தனது எழுத்தாற்றல்தான் தான் மேற்கொள்ளவேண்டிய களம் என்பதை நிச்சயம் கொண்டே அவர்

எழுதினார் என்பதில் சந்தேகம் ஏதும் இல்லை. தம் முதன்மை ஈடுபாடு ஆன்மநோக்கம்தான் என்றும் தம் எழுத்து அதற்கு இரண்டாம் பட்சம்தான் என்றும்கூட சொல்லியிருக்கிறார்.

கொழும்பில் பிரமிளின் பிரெஞ்ச் தூதரக நண்பர் வழியாக தனது ஒரு ஓவியக் கண்காட்சிக்கு ஏற்பாடு செய்திருக்கிறார். தமிழகத்தில் அவர் மறைந்த பிறகுதான் காஞ்சனை ஆர்.ஆர்.சீனிவாசன் முயற்சி மூலம் சென்னை பிரெஞ்ச் தூ தரகத்தில் ஒருவாரம் பிரமிளின் ஓவிய, புகைப்படக் கண்காட்சியை என்னால் நடத்தமுடிந்தது. மிகச் சிறப்பாகவும் விரிவாகவும் நடந்த நிகழ்ச்சி அது. அதற்காகப் படி எடுத்துச் சட்டகப்படுத்திய நூற்றுக்கணக்கான ஓவியங்களையும் புகைப்படங்களையும்தான் இப்போது திருநெல்வேலியில் மயன் ரமேஷ்ராஜா வைத்துள்ள பிரமிள் நூலகத்தில் காட்சிப்படுத்தச் செய்துள்ளேன். சென்னை ஓவியக்கலைஞர்கள் யார்மேலும் பிரமிளுக்கு அவ்வளவாகப் பிடிப்புக் கிடையாது. ஆதிமூலம் உயிரற்ற கோடுகளை வரைபவர் என்பார். ஓவியர் சந்ருவுக்குப் பிரமிள் மேலும் அவரது படைப்புகள் மீதும் மிகுந்த ஈடுபாடு உண்டு. தற்போது அம்பாசமுத்திரத்தில் அவர் குருவனம் என்று கலைச்சோலைவனத்தை கட்டியமைத்துள்ளார். அதில் நூற்றுக்கணக்கில் பல்துறை ஆளுமைகளை சிலை வைத்து வரிசையாக காட்சிப்படுத்தியுள்ளார். அவ்வரிசையில் புதுமைப் பித்தனுக்கு அடுத்து பிரமிளை அவர் வைத்திருப்பார். அதைப் பார்த்துவிட்டு, பிரமிள் மறைந்த வேலூருக்கு அருகிலுள்ள கரடி குடியில் முன்பு (1997) வைத்த சமாதிபீடம் சிதைந்திருந்ததால், அதைச் செம்மைப்படுத்தி சிறுமணிமண்டபம் கட்டி அதில் பிரமிள் உருவச்சிலை ஒன்றை வைக்கலாம் என்று பிரமிள் டாக்குமெண்டரி ஒன்றைப் படைத்துவரும் இயக்குநர் தங்கம் என்பவர் வெற்றிமாறன் உதவியுடன் முனைந்தபோது நான் சந்துருவிடம் சொல்லி பிரமிள் உருவச்சிலையை செய்யவைத்துள்ளேன். இன்னும் சில மாதங்களில் சமாதி மண்டபம் நிறைவேற்று உருவச்சிலை வைக்கப்படும் என்றும் ஆவணப்படம் முழுமையாக நிறைவேறும் என்று நம்புகிறேன்.

"பிரமிள் படைப்புகள்" 6 தொகுதிகளை மிகச் சிறப்பாக சுமார் 5 லட்சம் செலவு செய்து நான் 2018ல் கொண்டுவந்தபோது, தங்கம் தான் வெற்றிமாறன் உதவியுடன் அதற்கு சென்னையில் பெரிய அளவில் வெளியீட்டுவிழா நடத்தினார். "விகடன் தடம்" வெயில் போன்றோர் முயற்சியால் அந்த ஆண்டின் சிறந்த புத்தகத் தயாரிப்புக்கான விகடன் விருதும் ஒரு பிரம்மாண்டமான விழாமேடையில் அந்த பிரமிள் படைப்புகள் தொகுதிக்குக் கிடைத்தது. அந்தப் புத்தகத்தொகுதி வெளிவர ஆர்.ஆர்.சீனிவாசனும் தமிழினி பதிப்பக வசந்தகுமாரும் அளவிடமுடியாத உதவிகளைச் செய்து துணையிருந்தனர். அச்சமயத்தில் தமிழ் இந்துவில் இருந்த ஷங்கரராமசுப்பிரமணியம், ஆசை போன்றோர் பிறந்த நாளுக்கும் நினைவுநாளுக்கும் என பிரமிள் பற்றிய கட்டுரைகளை வெளியிட்டு பிரமிளை வெகுஜன தளத்தில் நினைவூட்டிக் கொண்டேயிருந்தனர். தமிழினியின் விற்பனை உதவியில்லாமல் நான் பிரமிள் நூல் தொகுதியை விற்பனை விநியோகம் செய்திருக்க முடியாது. இப்படி, அவர் இருந்தகாலத்தின் சிறுபத்திரிகைச் சூழல் அவரைத் திட்டமிட்டு மறைக்க முயன்றாலும் அவற்றை மீறியே தனது ஆளுமையாளும் படைப்பாற்றலாலும் சிலரது அபாரமான அபிமானத்தாலும் தொடர்ந்து இன்றும் இங்கே ஒரு முக்கிய இலக்கிய ஆளுமையாக நிலைகொண்டுள்ளார் பிரமிள். இன்றைய வெகுஜன பத்திரிகை, இணைய இலக்கிய உலகில் அவருக்கான இடம் புதிய புதிய வாசகர்களால் பெருகிக்கொண்டுதான் இருக்கிறது. பாரதி, புதுமைப் பித்தனுக்குப் பிறகு தமிழில் தோன்றிய ஒரு இலக்கிமேதை பிரமிள் என்பதில் இன்று பலருக்கும் ஏற்பு உண்டு.

இலங்கையில் பிரமிள் பிறந்திருந்தாலும் தமிழகத்து எழுத்தாளராகவே அவர் சிறப்புப் பெற்றிருக்கிறார். "பதினொரு ஈழத்துக் கவிதைகள்" என்ற தொகுப்பை க்ரியா வெளியிட்டபோது, அதன் முன்னுரையில் பிரமிளின் படைப்பு வாழ்க்கை தமிழகத்துக்கே உரியது என்பதால் அவரை இத்தொகுப்பில் சேர்க்கவில்லை என்றே குறிப்பிடப்பட்டது. இப்போது சில ஆண்டுகளுக்கு முன் மைக்கேல் காலின்ஸ் தம் "மகுடம்" இதழை பிரமிள் சிறப்பிதழாகக் கொண்டுவந்த பின்தான் புதியவர்கள் பார்வை பட்டு, பிரமிளும் இலங்கை பெருமைப்படத்தக்க எழுத்தாளர் தான் என்று பார்வை எழுந்துள்ளது என்று நினைக்கிறேன். அந்த மகுடம் சிறப்பிதழுக்காக நான் துணைபுரிந்தேன். அதை தமிழகப் பதிப்பாகவும் கொண்டுவந்தேன் (அதற்கான ராயல்டித்தொகையை இன்னும் மகுடம் ஆசிரியருக்கு அளிக்கமுடியவில்லை என்ற மனக்குறையும் உள்ளது. ஏனென்றால் வெளிவர அதற்கு உதவியவர்களுக்கு இதழ்களைப் பிரித்துத் தந்துவிட்டதால் கைவசம் ஏதும் தொகை மிஞ்சிச் சேரவில்லை. என்றாலும் வேறுவகையில் அவருக்கு சமம் செய்ய வேண்டும்.)

அவரது காலத்தில் அவரை நெருக்கமாக உணர்ந்த சிசுசெல்லப்பா, டேவிட் சந்திரசேகர், ராஜமார்த்தாண்டன், தேவதேவன், ராஜசுந்தரராஜன், விஷ்ணுநாகராஜன், சுரேஷ்குமார் இந்திரஜித், அழகியசிங்கர், கோணங்கி, எஸ்.ராமகிருஷ்ணன், புதுவை பிரெஞ்சு நிறுவன நூலகர் கண்ணன் எம்., பொதியவெற்பன், இயக்குநர் தங்கம் போன்றோரும் பின்பு அவரை அபிமானித்த ஆர்.ஆர்.சீனிவாசன், குட்டி ரேவதி,

"சிறுபத்திரிகைச் சூழல் அவரைத் திட்டமிட்டு மறைக்க முயன்றாலும் அவற்றை மீறியே தனது ஆளுமையாளும் படைப்பாற்றலாலும் சிலரது அபாரமான அபிமானத்தாலும் தொடர்ந்து இன்றும் இங்கே ஒரு முக்கிய இலக்கிய ஆளுமையாக நிலைகொண்டுள்ளார் பிரமிள். இன்றைய வெகுஜன பத்திரிகை, இணைய இலக்கிய உலகில் அவருக்கான இடம் புதிய புதிய வாசகர்களால் பெருகிக்கொண்டுதான் இருக்கிறது. பாரதி, புதுமைப் பித்தனுக்குப் பிறகு தமிழில் தோன்றிய ஒரு இலக்கிமேதை பிரமிள் என்பதில் இன்று பலருக்கும் ஏற்பு உண்டு."

பவா செல்லத்துரை, மைக்கேல் காலின்ஸ், சேலம் ஆர். குப்புசாமி, சு,வேணுகோபால் போன்றோரும் வாசகர்களாக மட்டுமே நெருங்கியிருந்த பெங்களூர் மகாலிங்கம், டி.வி. ராமச்சந்திரன், முகமது அலி, தினமணி எஸ்.சிவகுமார், துறையூர் சரவணன், அவரைக் கடைசிகாலத்தில் கரடிக்குடி சமுதாய மருத்துவமனையில் பராமரித்த டாக்டர் சிவமணி போன்றோரும் இலக்கியம் அல்லாது அவரிடம் நேசிமாக இருந்த திரிகோணமலை டாக்டர் ராமச்சந்திரன், கந்தசாமி ஆகிய அவருடைய சிறுவயது அத்யந்த நண்பர்கள், டேவிட் சந்திரசேகரின் நண்பர் வெங்கடேசன், அவரை இறுதியில் மருத்துவமனையில் பராமரித்த சரவணன், நெல்லையில் பிரமிள் நூலகம் வைத்துப் பெருமைப்படுத்திய தொழிலதிபரும் “அஸ்வமேதா” இதழ் சார்ந்தவருமான மயன் ரமேஷ்ராஜா போன்றோரும் நினைவில் வைத்துப் போற்றவேண்டியவர்கள். இதில் சிலர் தமது அபிமான அபிமான எழுத்தாளர்களுடன் இவரையும் பாராட்டி வந்தவர்களும் உண்டு. வெளியே தெரியவராமல் அவரது எழுத்தின்மேல் பிரேமை கொண்டவர்களும் பலர் இருக்கலாம், எனவே இங்கே குறிப்பிடப்படாத பலரும் இப்படி நினைவுக்கு வருகிறார்கள்.

நவீன இலக்கிய உலகில் அவரைத் தெரியாதவர்கள், தெரியாமலே போனவர்கள் பலர் என்றாலும் அவருக்கு நேர்எதிரானவர்கள், நெருக்கமாக இருந்து பின் எதிரானவர்கள், கண்டுகொள்ளாதவர்கள், ஒதுக்கியவர்கள், வெறுத்தவர்கள் என்று பலர் உண்டு. வெங்கட்சாமிநாதன், சுந்தரராமசாமி (அவரது அபிமானிகள் மற்றும் காலச்சுவடு), நகுலன், ஞானக்கூத்தன், ந.முத்துசாமி, கி.அ.சச்சிதானந்தம், வேதசகாயகுமார், தமிழவன், எஸ்.வி.ராஜதுரை, க்ரியா ராமகிருஷ்ணன், சா.கந்தசாமி, அசோகமித்திரன், வல்லிக்கண்ணன், திகசி, பிரமிளின் கவிதைகளை மட்டும் பாராட்டிவிட்டு அவரது விமர்சன எழுத்தை இனம்புரியாமலேயே வெறுத்தொதுக்கும் ஜெயமோகனும் சாருநிவேதிதாவும், எம்.டி.முத்துகுமாரசாமி, பிரேம், ஜமாலன், யமுனா ராஜேந்திரன், ஜடாயு என்று ஏராளம் உண்டு. முன்பு மறுத்து பின்பு ஏற்றுக்கொண்ட ஞானி, அ.மார்க்ஸ், ராஜ்கௌதமன், ரவிக்குமார் என்று ஒரு பட்டியலும் உண்டு. இரண்டாயிரத்துக்குப் பின்பான இன்றைய புதிய தலைமுறை பற்றி இங்கே தவிர்க்கிறேன்.

“

பிரமிளின் கவிதைகளை மட்டும் பாராட்டிவிட்டு அவரது விமர்சன எழுத்தை இனம்புரியாமலேயே வெறுத்தொதுக்கும் ஜெயமோகனும் சாருநிவேதிதாவும், எம்.டி.முத்துகுமாரசாமி, பிரேம், ஜமாலன், யமுனா ராஜேந்திரன், ஜடாயு என்று ஏராளம் உண்டு. முன்பு மறுத்து பின்பு ஏற்றுக்கொண்ட ஞானி, அ.மார்க்ஸ், ராஜ்கௌதமன், ரவிக்குமார் என்று ஒரு பட்டியலும் உண்டு....

தளையசிங்கம், மு.பொன்னம்பலம், வில்வரத்தினம் போல சில கட்டுத்திட்டங்களுடன் பாராட்டியவர்களும் உண்டு. இப்படித்தான் என்று கருத்தே சொல்லாத கந்தசாமிகள் பட்டியலில் முத்துலிங்கம், பத்மநாப ஐயர் போன்றவர்களும் உண்டு.

”

புலம் பெயர்ந்த இலக்கியம் சார்ந்த தமிழகத்தார், ஈழத்தமிழர் பற்றி எனக்கு அதிகம் தெரியாது. புலம்பெயராமல் ஈழத்திலேயே உள்ள எழுத்தாளர்கள் பற்றியும் எனக்குச் சரியாகத் தெரியாது. அங்கே உள்ள பிரமிளைப் பற்றிய நீங்கள் சொன்ன சில வதந்திகளும் மிகையானவையாகவே எனக்கு தோன்றுகின்றன. வெளியில் உள்ளவர்களில் ஒருசிலர் வேறு வழியில்லாமல் அவரை ஏற்பவர் போலவே தெரிகின்றனர். பலர் இதில் எந்தக் கருத்துமற்றவர்கள். தளையசிங்கம், மு.பொன்னம்பலம், வில்வரத்தினம் போல சில கட்டுத்திட்டங்களுடன் பாராட்டியவர்களும் உண்டு.

இப்படித்தான் என்று கருத்தே சொல்லாத கந்தசாமிகள் பட்டியலில் முத்துலிங்கம், பத்மநாப ஐயர் போன்றவர்களும் உண்டு. பிரமிளின் படைப்புகளை பௌசர், சேரன் போன்றோரும் சில வாசகர்களும் வாங்கியுள்ளனர். அவர்களது எண்ணவோட்டமும் எனக்குத் தெரியாது. அங்குள்ள இலக்கியச்சூழலும் வசதிவாய்ப்புகளும் பற்றித் தெரியாது. இலங்கையிலிருந்து வந்த நம்மவர் ஒருத்தரைப் பெரிதாகப் பேசுகிறார்களே என்று கவனம் கொடுக்கிறவர்களாகவே பலரும் இருக்கிறார்கள். மலேசியா, சிங்கப்பூரில் நவீன் போன்றவர்களுக்கு ஜெயமோகன் சொல்லும் கருத்துத்தான் பிரமிள் பற்றி என்று தெரிகிறது. அங்கு ரெ.பாண்டியன் மட்டுமே பிரமிளிடம் கவனம் கொண்டுள்ளார். அங்கு பிரமிள் பற்றிய அவதானம், தனிக்கருத்து எதுவும் பிறந்துள்ளதாகத் தெரியவில்லை.

நீங்கள் மட்டும்தான் தனித்து நின்று பிரமிளைப் பற்றி இங்கே அக்கறை கொள்கிறீர்கள் என்றே எனக்கு மனப் பதிவு. என்னுடைய அங்கலாய்ப்பு எல்லாம், பிரமிளின் அனைத்துப் படைப்புகளும் இப்போது கிடைக்கின்றன. நீங்களே படித்துப் பார்த்து உங்கள் மறுப்பையோ எதிர்ப்பையோ ஏற்பையோ அபிமானித்தலையோ கொள்ளுங்கள் என்பதுதான். சுயம்புவான பார்வைகளை மேற்கொள்ளுங்கள் என்பதுதான். ஏனென்றால் பிரமிள்மேல் நல்லதும் கெட்டதுமான புகைமூட்டம் மிகையாகச் சூழ்ந்துள்ளது. அவை விலகி வெளிச்சத்தில் சரியான தோற்றம் விளங்கவேண்டும் என்பதுதான்.

பிரான்சில் நடந்த ஒரு கலை விழாவுக்கு பிரமிளை அழைக்க எப்படியோ ஏற்பாடு நடந்ததாகவும் அதற்கு தமிழகப் பிரதிநிதியாக இருந்த க்ரியா ராமகிருஷ்ணன் அவரைத் தவிர்த்துவிட்டு சுந்தர ராமசாமியை அனுப்பியதாகவும் ஒரு வதந்தி எழுந்தது அதை அப்போது “பாலம்” என்ற இதழில் நாகார்ஜுனன் புனைபெயரில் தெரிவித்திருந்ததாக நினைவு. (கிழித்துவைத்த அந்தப் பக்கம் எங்காவது என்னிடம் இருக்கும்.) அல்லது புதிய ஜீவா என்று எனக்குத் தெரிந்த வேறொரு நண்பர் எழுதியதாகவும் இருக்கலாம்.

அந்த இதழ் வெளியிட்ட ராசக்கிளி அச்சகத்துக்கு அப்போது பிரமிளும் நானும் “லங்காபுரி ராஜா” புத்தகம் வெளியிடச் சென்று வந்து கொண்டிருந்ததாகவும் நினைவு. இதை வைத்தே பிரமிள் தமது பேட்டியிலும் பாரிசுக்குப்போன மண்ணாந்தை

கவிதையிலும் சாடியிருக்கிறார். உண்மை என்னவென்று தெளிவில்லை. தன்னைப் போன்ற ஓவியக்கலைஞனும் விமர்சகனும் ஆன ஒருவனுக்கு பாரிசில் பார்த்து ரசித்து எழுதுவதற்கும் அவர்களுக்கு தமிழ் இலக்கியச் சிறப்பை எடுத்துக்கூறுவதற்கும் ஏராளமான வாய்ப்பு உள்ளது. அதை அங்கே போன, போகிற, போகும் இலக்கிய பிரமுகர்களால் கிஞ்சித்தும் நிறைவேற்றமுடியாது என்பதுதான் அவரது எதிர்வினைக்குக் காரணம். இன்றைக்கும் அரைகுறைகளுக்குத்தான் மேலை கீழை உலகம் முழுதும் இப்படிச் செல்லும் வாய்ப்புக்கிடைக்கிறது என்பதுதான் தெரிந்ததாயிற்றே!

பிரமிளுக்கு விளக்குப் பரிசு கிடைத்தது பற்றியும் பல விகட விடம்பனங்கள் உண்டு. கடைசி காலத்தில் பிரமிளைப் பராமரித்த அழகு சிவானந்தம் என்ற லாயர், அழகு திருநாவுக்கரசு என்ற அரசியல்வாதியின் தம்பி. அவருடைய இன்னொரு சகோதரர் விளக்கு பரிசுக் கமிட்டியில் அமெரிக்காவில் இருந்தார்.

இங்கேயிருந்து போன கோ. ராஜாராம் தான் அதன் முக்கியபொறுப்பில் இருந்தார் என்று நினைக்கிறேன். அப்போது இடதுசாரியாகவும் இப்போது இந்துத்துவராகவும் இருக்கும் அவருக்கு பிரமிள் மேல் ஒரு மரியாதை உண்டு. ஆனால் அவரோடு இருந்த தமிழவன் போன்றோருக்கு கடும் விரோதமே உண்டு.

திருச்சிக்கார ராஜாராமுக்கு தமிழகத்தில் திருச்சிக்காரரான வெளி ரெங்கராஜன் தான் விருது நிகழ்ச்சிகளைக் கவனித்துக்கொண்டார். அவருக்கும் பிரமிள் மேல் மரியாதை உண்டு (பிரமிளுக்கு அஞ்சலியாக தமது நாடகவெளி இதழைக் கொண்டுவந்தபோது ”கருடனூர் ரிப்போர்ட்” என்ற நீண்ட தொலைக்காட்சித்தொடரை நான்தான் தந்து வெளியிடவைத்தேன். அதன் அட்டையில் வெளியிடத் தந்த பிரமிளின் மிகநல்ல போட்டோ ஒன்று பின்பு எனக்குத் திரும்பக் கிடைக்கவேயில்லை. )

இதுவரை விருது பெறாத சிறந்த இலக்கிய ஆளுமைகளுக்கு விருது தருவது என்ற லட்சியத்துடன் தொடங்கிய விளக்கு விருது சி.சு.செல்லப்பாவுக்கு முதலில் வழங்கப்பட்டது. விருதுகள் எதையும் வாங்கமறுக்கும் செல்லாப்பா முதலில் அதை மறுத்துவிட்டார். எனவே அடுத்து பிரமிளுக்குத்தான் விருது என்று தினமணியிலிருந்து எனக்குத் தனிப்பட்ட முறையில் செய்தி தெரிந்தது. ஆனால் விருதுத் தொகையை செல்லப்பாவின் ஒரு புத்தகத்துக்காகத் தந்துவிடுவதாகக் கூறி செல்லப்பாவை ஒத்துக்கொள்ளவைத்து அவருக்கே விருது வழங்கினர். அந்த விருதுவிழாவுக்கு பிரமிளும் (செல்லப்பா விரும்ப ரெங்கராஜன் நேரில் சந்தித்து) அழைக்கப்பட்டார். அந்த அழைக்கப்பட்டோர் பட்டியலை விமர்சித்து கலந்து கொள்ளமாட்டேன் என்று செல்லப்பாவுக்குக் கடுமையான கண்டனக் கடிதத்தை எழுதினார் பிரமிள். (அதை செல்லப்பா பற்றிய பிரமிள் விமர்சனம் செய்து நான் வெளியிட்ட “விமர்சன மீட்சிகள்” என்ற சிறுவெளியீட்டில் காணலாம்). நான் அந்த வெளியீட்டு விழாவுக்குப் புறப்பட்ட போது தானும் வருகிறேன் என்று கிளம்பினார் பிரமிள். விழா அரங்கின் வாசல் வெளியில் வந்து வரவேற்ற செல்லப்பாவிடம் தன் மறுப்பைத் தெரிவித்து விட்டு அப்படியே திரும்பிய பிரமிளிடம் வெங்கட்சாமிநாதன் வந்து பேசமுயன்றார். அதை அலட்சியப்படுத்திவிட்டு பிரமிள் போய்விட்டார். நான் மட்டும் இருந்து கூட்டத்தைக் கவனித்து விட்டுச் சென்றேன்.

அடுத்த விருது அறிவிக்கும் சமயத்தில் பிரமிள் மரணப் படுக்கையில் மருத்துவமனையில் இருந்தார். மருத்துவச் செலவுக்குக் கொஞ்சம் பயன்படும் என்று வெளிரெங்கராஜன் ஏற்பாட்டில் பிரமிளுக்கு விருது தரப்பட்டதாகத் தெரியவந்தது. செல்லப்பாவே முன்வந்து பேச்சற்றுப் படுக்கையிலிருந்த பிரமிளுக்கு அந்த விருதை மருத்துவமனையில் வழங்கினார். ஆனால் ஞானியை அச்சமயத்தில் நான் சந்தித்தபோது வேறொரு கதையைச் சொன்னார். ஞானிக்குத்தான் விருதுவழங்க தமிழகப் பொறுப்பாளர்களில் ஒருவரான தமிழவன் வற்புறுத்தியதாகவும் தான்தான் வேண்டாம் எனக்கு அடுத்தமுறை வழங்குங்கள், பிரமிளுக்கு இப்போது அவசியத்தேவை என்று வலியுறுத்தி பிரமிளுக்கு வழங்கவைத்ததாகவும் ஞானி கூறினார். இதுபற்றிய உள்விஷயங்கள் தெரியவில்லை.

*3*

**கற்சுறா :**

“பதினொரு ஈழத்துக் கவிஞர்கள்” தொகுப்பில் எழுதியவர்களையும், அதனைத் தொகுத்து அதற்கு முன்னுரை எழுதியவர்களையும், அதன் எழுத்துக்களையும் நீங்கள் கவனித்தீர்களானால் அதில் பிரமிளின் கவிதைகளை இணைத்து விடாதது பற்றி நாங்கள் புரிந்து கொள்ள முடியும். அது ஒரு தற்குறித்தனமான கவிதைத்தொகுப்பு என்றே புரிந்து கொள்ள முடியும். அதில் பிரமிளின் கவிதைகளை அவர்கள் ஒருபொழுதிலும் இணைத்திருக்கவே முடியாது என்பதன் தர்க்கத்தை நாம் உணர்ந்து கொள்ள முடியும். இந்த வகைப் போக்கிற்குள் உள்ளடங்கியிருப்பவர்கள் தான் இப்பொழுது காலச்சுவட்டுப் பரிபாலனசபைக்குள் மறைமுகமாகவேனும் இணங்கிப் போயிருந்து கொண்டு இன்றுவரை எவ்வளவு பித்தலாட்டம் செய்ய முடியுமோ அவ்வளவு செய்தபடி இருக்கிறார்கள். ரொரண்டோவில் ஒருமுறை சுந்தரராமசாமியின் நினைவு அஞ்சலிக் கூட்டத்தில் பிரமிளைத்

*அந்த விருதுவிழாவுக்கு பிரமிளும் (செல்லப்பா விரும்ப ரெங்கராஜன் நேரில் சந்தித்து) அழைக்கப்பட்டார். அந்த அழைக்கப்பட்டோர் பட்டியலை விமர்சித்து கலந்து கொள்ளமாட்டேன் என்று செல்லப்பாவுக்குக் கடுமையான கண்டனக் கடிதத்தை எழுதினார் பிரமிள். (அதை செல்லப்பா பற்றிய பிரமிள் விமர்சனம் செய்து நான் வெளியிட்ட “விமர்சன மீட்சிகள்”என்ற சிறுவெளியீட்டில் காணலாம்). நான் அந்த வெளியீட்டு விழாவுக்குப் புறப்பட்ட போது தானும் வருகிறேன் என்று கிளம்பினார் பிரமிள். விழா அரங்கின் வாசல் வெளியில் வந்து வரவேற்ற செல்லப்பாவிடம் தன் மறுப்பைத் தெரிவித்து விட்டு அப்படியே திரும்பிய பிரமிளிடம் வெங்கட்சாமிநாதன் வந்து பேசமுயன்றார். அதை அலட்சியப்படுத்திவிட்டு பிரமிள் போய்விட்டார்.*

“துரோகி” என விழித்து உரையாற்றிக் கொண்டிருந்தார்கள் அவர்களில் சிலர். பிரமிளும் சுந்தரராமசாமியும் வாழ்ந்த காலத்தில் இவர்கள் யாரும் தமிழ் நாட்டில் வாழ்ந்ததாக அறியவில்லை. இவர்கள் யாருடைய கதைகளைக் கைப்பற்றி இதனைச் சொல்கிறார்கள் என்றால் சுரா வினதும் அவரது மகன் கண்ணனினதும் கதைகளைக் கேட்டு அவர்களுக்காக உழைக்க முனைக்கிறார்கள். அவர்களது அடியாட்களாக இருப்பதன் மூலம் தமக்கான இலக்கியத் தராதரத்தை குறுக்குவழியில் இலகுவாகப் பெற முனைகிறார்கள். இன்று காலச்சுவட்டின் பக்கம் “அலுவல்” பார்க்கும் புலம்பெயர்ந்த ஈழத்தவர்களைக் கண்ணுற்றால் உங்களுக்கே அவை இலகுவாகப் புலப்படும். தங்களது எழுத்துக்களைக் காலச்சுவடு பதிப்பித்தால் தகுந்த அந்தஸ்து கிடைத்துவிடும் என இவர்கள் நினைக்கிறார்கள். மற்றப்படி அவர்களது எழுத்துக்களின் தரம் அவர்களுக்கே தெரியும். ஈழ எழுத்தாளராக பிரமிளை அடையாளம் காணமுடியாது எனச் சொல்பவர்கள், அவரது “அங்குலீமாலா” சிறுகதையைப் வாசிக்காதவர்களாகவும் அதனைப் புரிந்து கொள்ள முடியாதவர்களாகவுமே இருப்பார்கள். ஆனால் எனது கேள்வி இவையல்ல.

பிரச்சனை, அவரை ஈழ எழுத்தாளராகவோ தமிழ்நாட்டு எழுத்தாளராகவோ அடையாளம் கொள்ளத் தேவையில்லை. எழுத்தின் தர்க்கத்தில் அவரை இவர்கள் மறுதலிக்கும் புள்ளி பற்றியதே. இந்த வகைப் புள்ளிகளுக்கு, புலம் பெயர்ந்த இலக்கிய அடியாட்கள் தமிழகத்திற்கு வந்து ஈழயுத்தம் குறித்தும் புலம்பெயர் அவலம் குறித்தும் இலக்கியம் இலக்கியமாய்க் கதை சொல்லிப் போகும் வரை உங்குள்ளவர்கள் வேடிக்கை மட்டும் பார்க்கவில்லை.

பெரும் வணிகச் சிந்தனையுடன் இயங்கும் பதிப்பகங்கள் இவர்கள் எழுதும் போலிப் பிரசங்கங்களைப் பதிப்பித்து இவைதான் உன்னத இலக்கியம் என்று கதை சொல்லும் நிலைக்கு “ஆமாம்” போடுவதைப் போல் மவுனமாகவும் இருக்கிறார்கள்.

தமிழ்நாட்டின் இலக்கியச் செழுமை என்பது கொண்டாட்டங்களுக்குக் கிடாய் ஆடு அறுப்பதுபோல் கண்காட்சிக்கு என்று மட்டும் புத்தகங்களைப் பதிப்பிக்கும் நிலைக்குக் கொண்டு வந்து விட்டவர் யார்? இந்த அயோக்கியத் தனத்தை காலச்சுவடு போன்ற பதிப்பகங்கள் மட்டுமல்ல அதனை மறுத்து நிற்கும் கருப்புப் பிரதிகள் போன்ற பதிப்பகங்களும் காலச்சுவட்டின் சிந்தனையைக் கொண்டிருப்பது அபத்தம் அல்லவா?

“ அக்கதையில் வரும் வெளிநாட்டுப் பெண் கதை கூட பிரமிளின் வாழ்வில் வேறுவிதத்தில் நடந்த ஒரு கதைதான். “உனக்கு என்னப்பா.. வெளிநாட்டுப் பெண்களாகக் கிடைத்திருக்கிறார்கள். பாவம் எங்களைச் சொல்லு..” என்று ந.முத்துசாமி பொறாமையுடன் சொன்னதாகப் பிரமிள் சொல்லியிருக்கிறார். நா.பார்த்தசாரதிக்குள்ள பெண் வாசகர்களைப் பற்றி சு.ரா. கூறி, நமக்குத்தான் அப்படி வாசகிகள் வாய்க்கமாட்டேன் என்கிறார்கள் என்று பொருமியதாக பிரமிள் குறிப்பிட்டிருக்கிறார். ”

எழுத்தின் தர்க்கத்திற்குள் பிரமிளின் கால வாழ்விற்கும் இன்றிருக்கும் வாழ்விற்கும் பெரும் இடைவெளி உண்டுதானே. அன்று ஒரு கவிதைக்காக எவ்வளவு உரையாடல் நடைபெற்றது? இன்று அப்படியென்ன இருக்கிறது? பதிப்பகம் கையிலிருந்தால் எதையாவது எழுதிப் பதிப்பித்து எழுத்தாளனாகும் நிலையை உருவாக்கிச் சீர் கெட்ட பின்னணி என்ன?

**கால சுப்ரமணியம் :**

“அங்குலீமாலா“ நெடுங்கதையை பிரமிள் முதலில் 5 பக்கத்தில் “சீலன்” என்ற பெயரில் என்றோ (1975களில்) எழுதி வைத்திருந்தார். அவர் அறையில் ஃபைல்களைப் புரட்டிக்கொண்டிருக்கும்போது அடிக்கடி அதைப் பார்ப்பேன். “லயம்” (1985) பத்திரிகை ஆரம்பித்தபோது சில இதழ்களுக்குப் பின் அதைப் போடும்படி கொடுத்தார். ஆனால் நான் போடவில்லை. அபூரணமாகத் தெரிந்ததே காரணம். ஏழெட்டு ஆண்டுகளுக்குப் பிறகுதான், அது “மீறல்” பிரமிள் சிறப்பிதழில் “அங்குலீமாலா” என்ற பிரமாதமான கதையாக வெளிவந்தது.

ஆல்பர்ட் காமு, சிசிபஸ் தொன்மத்தைத் தம் கொள்கைக்கு விளக்கிய கட்டுரை நமக்குத் தெரியும். வாழ்வின் அபத்தச் செயலை அதில் குறியீடாக்கியிருப்பார். அவர் நாவல்களிலும் அந்த இருத்தலியல் அபத்தம் வெளிப்படும். ஆனால் பிரமிள் இந்த அங்குலிமாலனின் பௌத்தக் கதையை நேரடியாகவே கதைக்குள் கொண்டுவந்து அதன் விளக்கமாகத் தம் கதையையும் விரித்திருப்பார்.

ஓடாதே நில் என்ற அங்குலிமாலனுக்கு நீதானே ஓடிக்கொண்டிருக்கிறாய். நான் நிற்கத்தானே செய்கிறேன் என்ற புத்தரின் கூற்று பிரமிளின் இருத்தலியல் ஆன்மீகக் கொள்கைப் பிரகடனமாகவே வெளிவிளக்கம் பெறுகிறது எனலாம்.

அக்கதையில் வரும் வெளிநாட்டுப் பெண் கதை கூட பிரமிளின் வாழ்வில் வேறுவிதத்தில் நடந்த ஒரு கதைதான். “உனக்கு என்னப்பா.. வெளிநாட்டுப் பெண்களாகக் கிடைத்திருக்கிறார்கள். பாவம் எங்களைச் சொல்லு..” என்று ந.முத்துசாமி பொறாமையுடன் சொன்னதாகப் பிரமிள் சொல்லியிருக்கிறார்.

நா.பார்த்தசாரதிக்குள்ள பெண் வாசகர்களைப் பற்றி சு.ரா. கூறி, நமக்குத்தான் அப்படி வாசகிகள் வாய்க்கமாட்டேன் என்கிறார்கள் என்று பொருமியதாக பிரமிள் குறிப்பிட்டிருக்கிறார்.

சில நாட்களுக்கு முன் குட்டிரேவதி, பிரமிளின் செக்ஸ் லைஃப் பற்றி சொல்லுங்கள் என்றபோது அரைமணி நேரத்துக்குமேல் அதைப் பற்றி விவரித்துக்கொண்டிருந்தேன். தடையற்றுப் பொங்கிவந்த இந்நினைவுகளை பேட்டியாக வீடியோ செய்ய வேண்டும் என்றார். முன்பே சென்னை புத்தகவிழா சமயத்தில் மணிக்கணக்கில் பிரமிள் நினைவுகளை ஆர்ஆர். சீனிவாசனும் குட்டிரேவதியும் வீடியோ செய்திருக்கிறார்கள். கவிதை பற்றி அடுத்தும் பிற விஷயங்கள் பற்றி அடுத்தடுத்தும் சில வீடியோக்களை

*மீ டூ பிரச்சனை ஒருசமயம் பற்றியெரியும் செய்தியாக இங்கே எழுந்தபோது சில பெண் எழுத்தாளர்கள் இலக்கிய உலகில் பிரமிள் தான் இந்தப் பட்டியலில் முதலில் வைக்கவேண்டியவர் என்று குழறியபோது, அம்பையே அது வேறுபிரச்சனை என்று அவர்களை தடுத்தாட் கொண்டதாகக் கேள்வி. அம்பை குட்டிரேவதியிடம் இருவருக்கும் இடையில் நிகழ்ந்த விவரங்களை சொல்லியிருக்கிறார். அவர் மூலம் எனக்கும் தெரியும். பிரமிளும் இது விஷயமாகச் சில சொல்லியிருக்கிறார்.*

*சுந்தர ராமசாமி பிரமிளின் இந்த வகைச் சம்பவங்களை அவர் பாணியில் புனைந்து திருக்குறள் மணிவிளக்கவுரை செய்து தம் வாசக நண்பர்களிடமெல்லாம் சொல்லிவந்திருக்கிறார். ஜெயமோகனைத் தவிர யாரும் அதைப் பொருட்படுத்தவில்லை.*

எடுக்கவேண்டும் என்றிருக்கிறார்கள். நான் சென்னை வரும்போதெல்லாம் வாரக்கணக்கில் அவர்கள் வீட்டில்தான் தங்குவேன்.

கணையாழி கி.கஸ்தூரிரங்கன் கேட்டதற்கிணங்கி "தினமணி கதிரு"க்காக எழுதிய ஐந்து வாரத் தொடரில் முதல் ஜனரஞ்சகக் கதையாக எழுதிய "மெஹ்ரா" சிறுகதையில் வரும் பெண் பற்றி சித்தரிப்பும் கடைசிமுடிவுப்பகுதி தவிர அவரது வாழ்வில் உண்மையாக நிகழ்ந்தது தான். என்னை ஒரு முறை அந்தப் பகுதியில் செல்லும் போது அந்த பெண் இருந்த வீட்டுக்கும் அழைத்துச்சென்று தெருவில் நின்று காட்டினார். பக்கத்தில் இருந்த வீட்டின் பெயரை (மெஹர்பாபா பவன்) அக்கதைக்கு வைத்திருந்தார். அந்தப் பெண் வேலை செய்த தியாசபிகல் சொசைட்டி நூலகத்துக்கும் ஒருமுறை அழைத்துச் சென்றார். அன்று அவர் லீவு. பின் ஊட்டியில் எங்கோ பணிமாறுதல் பெற்று இருப்பதாகவும் கடிதங்களில் எழுதியிருக்கிறார்.

இலங்கையிலிருந்து வந்த ஒரு பெண் தியாசபிகல் சொசைட்டியில் தங்கியிருந்தவர் அவரை தொடர்ந்ததையும் வற்புறுத்தியதையும் நேரிலும் கடிதச் செய்திகளிலும் அறிந்திருக்கிறேன். அம்பைக்கும் பிரமிளுக்கும் ஏற்பட்ட பிரச்சனைகள் வேறுவிதத்தில் புனைவாக்கம் பெற்றுள்ளன "பாறை சிறுகதை, பட்டறை நெடுங்கவிதை, அதையொட்டிய "புரட்சிக்காரி பின்னுரை தருகிறாள்" கவிதை,

"நட்சத்ரவாசி" நாடகம் என்று. நடந்த விஷயங்கள் புனைவாகும் போது விவாதவடிவெடுக்கும் என்ற போதமற்றவர்கள் அப்படி எழுதி அவரை அவமதித்துவிட்டார் என்றே நினைத்தார்கள். மீ டூ பிரச்சனை ஒருசமயம் பற்றியெரியும் செய்தியாக இங்கே எழுந்தபோது சில பெண் எழுத்தாளர்கள் இலக்கிய உலகில் பிரமிள் தான் இந்தப் பட்டியலில் முதலில் வைக்கவேண்டியவர் என்று குழறியபோது, அம்பையே அது வேறு பிரச்சனை என்று அவர்களை தடுத்தாட் கொண்டதாகக் கேள்வி. அம்பை குட்டிரேவதியிடம் இருவருக்கும் இடையில் நிகழ்ந்த விவரங்களை சொல்லியிருக்கிறார். அவர் மூலம் எனக்கும் தெரியும். பிரமிளும் இது விஷயமாகச் சில சொல்லியிருக்கிறார்.

சுந்தர ராமசாமி பிரமிளின் இந்த வகைச் சம்பவங்களை அவர் பாணியில் புனைந்து திருக்குறள் மணிவிளக்கவுரை செய்து தம் வாசக நண்பர்களிடமெல்லாம் சொல்லிவந்திருக்கிறார். ஜெயமோகனைத் தவிர யாரும் அதைப் பொருட்படுத்தவில்லை. அவருடைய நினைவோடையிலும் இதுதொடர்பான சில பதவுரை பொழிப்புரைகளைக் காணலாம். சென்னையில் படித்துக் கொண்டிருந்த சுராவின் பெண் ஒருவரை பிரமிள் வைதது தொடர்பாக ஒரு கதை எப்படி விநோத வடிவெடுத்திருக்கிறது (கருப்பாக வாந்தியெடுத்தது எப்படி வதந்தியாக உருமாறி காக்காய் காக்காயாய் வாந்தியெடுத்த கதையாக விஸ்வரூபம் பெற்றது என்ற கதை உங்களுக்குத் தெரிந்திருக்கும்) என்பது எனக்கே தெரியும். ஏனென்றால் பிரமிள் அந்தப் பெண்ணிடம் சத்தமிட்டுக்கொண்டிருந்தபோது நானும் கூட இருந்தேன். இந்தச் சம்பவம் போலவே பிற சம்பவங்களும் உருப்பெருக்கப்பட்டிருக்கலாம் என்ற சம்சயம் அதனால்தான் எனக்குப் பிறந்தது எனலாம்.

எஸ்.வி.ஷங்கரலிங்கம் என்ற இலங்கையிலிருந்து வந்தவரை எப்படி எழுத்தாளராக உருவாக்கலாம் என்று பிரமிள் வழிகாட்டிய கதை தனி. அவர் எதிரணியில் சேர்ந்து அபாண்டமும் அபத்தமுமான ஒரு கட்டுரையை எழுதினார். அவரை இப்படி தூஷித்து அபத்தமாக எழுதிய தேவகிகுருநாத், ரவி போன்றோரும் தாம் எழுதியதை சிலர் திருத்தி வெளியிட்டதாகவே சொல்லியிருக்கின்றனர். தேவகி குருநாத் விஷயம் தினமணி சிவகுமாருக்கு நன்றாகத் தெரியும். ரவி என்னிடமே பின்பு மனம் திருந்தி மன்னிப்புக்கேட்டு கடிதத் தொடர்பு வைத்திருக்கிறார்.

விமலாதித்தமாமல்லன் "சண்டை" யின் பிரமிள் வாக்குமூலமும் மாமல்லன் தரப்பு பிரதிவாதமும் எனக்கு நேரிடையாகத் தெரியும். ஷங்கரலிங்கம் ஒரு எல்லையில் பிரமிள் நபும்சகர், இம்பொட்டன்ட் என்றார். ஏன் எட்மண்ட் வில்சன் போன்ற ஜாம்பவான்களே நபும்சகர்கள் தானே? என்று என்னிடம் கேலி செய்திருக்கிறார் பிரமிள். தன்னால் காதலிக்காத ஒருபெண்ணிடம் உறவு கொள்ளவே முடியாது என்றிருக்கிறார் பிரமிள். எனவே அவர் விலைமாதரை நினைத்துப் பார்த்ததில்லை (திருமணமான ஜி.நாகராஜனின் குறத்திமுடுக்கு விஷயங்களிலிருந்து இது மாறுபட்டது). ஆனால் ஷங்கரலிங்கம், ரவி கட்டுரைகளைத்தான் இன்றைக்கும் பிரமிளின் விமர்சன ஆளுமையை மறுப்பதற்கான ஆவணமாக ஜெயமோகன் வைத்திருக்கிறார்.

அத்தனைக்கும் ஞானமார்க்கம், பூசகமார்க்கம் என்ற பிரமிள் கோட்பாட்டை ஏற்றுக்கொண்டு பயன்படுத்தும் ஒரே எழுத்தாளரும் அவர்தான். தளையசிங்கத்திடமிருந்துதான் பிரமிள் தன் ஆன்மீகத்தைப் பெற்று வளர்த்தார் என்று சிறுபிள்ளைத்தனமாக நினைத்திருக்கும் தளையசிங்கத்தின் தம்பி மு.பொன்னம்பலம் போல அல்லது எதிராக ஜெயமோகன் தன்

ஆன்மீகத்தை அவருக்கும் மேலானதாக தானே சுத்தசுயம்புவாய் கண்டடைந்ததாக வாதிடலாம்.

லோப்சாங் ரம்பாவின் "மூன்றாவது கண்" நூலைப் படித்துவிட்டு தான் ஆன்மீகத்துக்கு வந்ததாகச் சொல்லும் தளையசிங்கத்தின் ஆன்மீகவாதம், மேலை ஆன்மீக உலகில் நியூ ஏஜ் இயக்கம் என்று பிரமாண்டமாக கிளைவிரித்ததன் தழுவல். மெய்யுள் சிமிழிக்குள் ஜினியை அடைத்துவைத்த அலாவுதீன் கதையின் குறளிவித்தை. தன் தம்பி மு.பொ.வின் முதல் கவிதைத் தொகுப்பு "அது" வை பிரமிளிடம் தந்து மு.த. கொஞ்சம் பார்த்து எழுதுங்க என்றபோது அதெப்படி ஒரு விமர்சனத்தை அப்படி பார்த்து எழுதமுடியும் என்று மறுத்ததுதான் பிரமிளுக்கும் தளையசிங்கத்துக்கும் மு.பொன்னம்பலத்துக்கும் இடையில் இடையில் ஏற்பட்ட பிளவுக்கு ஒரு காரணம்.

முதல் சிறுபத்திரிகையான "எழுத்து", சி.சு.செல்லப்பா என்ற தனி மனிதரால்தான் (புதுக்கவிதை,நவீன விமர்சனம், நாடகம், மொழிபெயர்ப்பு கல்வித்துறை அரவணைப்பு என்று) இத்தனை சாதனைகளைத் தரமுடிந்தது. அதை அடுத்துத் தோன்றிய "நடை" கூட சி.மணியோடு சேர்ந்த நான்கைந்து பேர்களால் (இலக்கியத்தோடு நாடகம், சினிமா என்ற பிற கலைகள், ஆன்மீகம்) உருவானதுதான். அப்போதே ஒரு குழு என்ற மனப்பான்மை பிறந்துவிட்டது. "கசடதபற" வுடன் இந்த குழு மனப்பான்மை வேரூன்றி வளர்ந்துவிட்டது (இலக்கியம், நவீன ஓவியம். பிற கலைகள், இலக்கிய அரசியல்). ஜெயகாந்தன், இந்திரா பார்த்தசாரதி, வெங்கட் சாமிநாதன், பிரமிள், அசோகமித்திரன், சா.கந்தசாமி இவர்களுக்கிடையில் எழுந்த இலக்கிய அரசியல் "இலக்கிய ஊழல்கள்" என்ற வெசாவின் சிறு நூலே பிறந்து இந்தக் குழுமனப்பான்மையை வெளிப்படையாக விமர்சித்தது. "பிரக்ஞை" இலக்கியத்தோடு அரசியலையும் நவ கோட்பாடுகளையும் இணைத்து ஒரு குழுவாகப் பிறந்ததுதான். பிறகு "படிகள்" சமூகவியலையும் தமிழவனின் ஸ்டக்சுரலிசத்தையும் இணைத்த குழுவானது. முதன் முதலில் "படிகள்" தான் இலக்கு என்ற இலக்கிய அமைப்பை நிறுவி இந்த சிறுபத்திரிகை இயக்கத்தை ஒன்றிணைக்கப் பார்த்தது. அதனால் சில காலமே நீடிக்க முடிந்தது.

அஃக் (பரந்தாமன்), ஞானரதம் (இப்ராகிம்), சதங்கை (வனமாலிகை) போன்ற தனிமனிதர்களால் நடத்தப்பட்ட பத்திரிகைகள், பலரையும் ஆசிரியபீடத்தில் அமர்த்தியும் பல்வேறுவித படைப்பாளிகளைப் பங்கேற்கவும் வைத்தன. பல குழு விவாதங்களையும் ஒருங்கிணைக்கப் பார்த்தன. இதற்குள் வெங்கட்சாமிநாதன், பிரமிள், சுந்தரராமசாமி, ஞானக்கூத்தன், ந.முத்துசாமி, அசோகமித்திரன், இடதுசாரிகளான திகசி, ஞானி, தமிழவன், எஸ்.வி.ராஜதுரை போன்றவர்களுக்குத் தனித்தனிக் குழுக்கள் உருவாகி இயங்கத் தொடங்கிவிட்டன.

பார்க்கப்போனால் பிரமிள் குழு என்று ஒன்றில்லை. சில இதழ்கள் சிலகாலம் வரை அவரது விமர்சனங்களுக்கும் இலக்கிய அரசியல் விவாதங்களுக்கும் இடம் கொடுத்தன. ஆரம்பத்தில் அவருக்கு "எழுத்து" தளம் அமைத்துத் தந்தது. ஆசிரியரான செல்லப்பாவைத் தவிர அதில் அதிகம் எழுதியவர் பிரமிள்தான். 1967க்குப்பிறகு அதில் புதிதாக பிரமிள் ஏதும் எழுதச் சுணங்கியபோது, பிரமிள் முன்பு ஏராளமாக எழுதி அனுப்பி இருப்பில் வைத்திருந்த கட்டுரைகளையே செல்லப்பா "நீஅனுப்பாவிட்டால் என்ன? பழையவைகளில் இருந்து போடுகிறேன்" என்று பிரசுரிக்கலானார்.

அடுத்து அவருக்கு அதிக இடம் தந்த "கொல்லிப்பாவை" ராஜமார்த்தாண்டன் சுந்தரராமசாமியின் சீடர். வெசாவிடம் இணக்கமாயிருந்தவர். ஆனாலும் அவர்களை மீறியே பிரமிளைத் துணிந்து அவர் பிரசுரித்தார். வெசாவுக்கு "யாத்ரா" விரிந்த ஒரு தளத்தை ஏற்படுத்தித் தந்தது. உண்மையில் யாத்ரா, பிரமிளுக்கும் வெசாவுக்குமாக ஏற்படுத்தப்பட்டதுதான். யாத்ரா என்ற பெயரையே பிரமிள் தான் சூட்டினார். ஆனால் தொடக்கத்திலேயே அது வெசாவின் கைக்கு மாற்றப்பட்டுவிட்டது. நான் 1980களில் இதையெல்லாம் கவனித்துக்கொண்டிருந்து பிரமிளை மட்டுமே தேர்ந்து, பிரமிளுக்காகவே "லயம்" பத்திரிகையை ஆரம்பித்தேன். பிரமிள் குழு என்றுசொல்லப்போனால் நான் மட்டுமே - ஒன்மேன் ஆர்மி எனலாம்.

> தன் தம்பி மு.பொ.வின் முதல் கவிதைத் தொகுப்பு "அது" வை பிரமிளிடம் தந்து மு.த. கொஞ்சம் பார்த்து எழுதுங்க என்றபோது அதெப்படி ஒரு விமர்சனத்தை அப்படி பார்த்து எழுதமுடியும் என்று மறுத்ததுதான் பிரமிளுக்கும் தளையசிங்கத்துக்கும் மு.பொன்னம்பலத்துக்கும் இடையில் இடையில் ஏற்பட்ட பிளவுக்கு ஒரு காரணம்.

அப்போது பிரமிளுக்கு பொருளாதார ரீதியில் துணை நின்றவர்கள் யாத்ராவை ஆரம்பித்துப் பின் பிரிந்து பிரமிளின் புரவலராகவே விளங்கிய வாசகரான டேவிட் சந்திரசேகர், ஜனரஞ்சமாகவே தம் எழுத்தை அமைத்துக்கொண்ட விஷ்ணுநாகராஜனும் வி.எஸ். சத்தியாவும் எனலாம். பிறகுதான் பொதியவெற்பன், ஆர்.ஆர்.சீனிவாசன் போன்றவர்கள் இணைந்தனர். ஞானியும் பிரமிள்மேல் அவரது இறுதிக்காலத்தில் மதிப்புச் செலுத்தினார். எஸ். ராமகிருஷ்ணன். கோணங்கி போன்றோர் அவரைப் போற்றினர். இப்போதும் ஆர். கே. எனப்படும் சேலம் ஆர். குப்புசாமி என்ற தத்துவ அறிஞரும் இன்றைய இணைய இளய தலைமுறையில் பாலா கருப்புசாமி போன்றோரும் அவர்மேல் பெரும் ஈடுபாடு கொள்கின்றனர். இணைய தலைமுறை எழுத்தாளர்களில் போகன் சங்கர் போன்ற சிலரே வெளிப்படையாக அவரை மதிப்பவர்கள் எனலாம்.

பெண் எழுத்தாளர்களில் குட்டி ரேவதி மட்டுமே அவரை ஆதர்சனமாகக் கொண்டவர். தலித் எழுத்தாளர்கள், தமிழிய எழுத்தாளர்கள், இடதுசாரி எழுத்தாளர்கள் தம்மைப் பற்றிய பிரமிளின் சாதகமான பார்வைகளைக் கொண்டே மதிப்பிடுவார்கள். பாதகமான பார்வைகளை கணக்கில் எடுத்துக்கொள்ள மாட்டார்கள். பிரமிளுக்கு நடந்த வெளிப்படையான ஒதுக்குதல் இன்று எனக்கும் மறைமுகமாகவே நடந்துதான் வருகிறது. போனால் போகிறது என்பதைப் போலவே என்னை நடத்துவார்கள்.

இன்று முன்தலைமுறை போல் நல்ல விமர்சகர்கள் இல்லை. நுனிப்புல் வாசகர்கள் பெருகிவிட்டார்கள். குழுக்களுக்குள் இயங்குகிறார்கள்.

கும்பல்களில் தனித்துத் தெரியும் திறமையற்றவர்கள் பெருகிவிட்டனர்.

பிரமிள் திரும்பத்திரும்ப சிலரையே விமர்சிப்பது பற்றிக் கேட்டபோது கூட, அவர்கள் தானே பொருட்படுத்தத் தக்கவிதத்தில் எதையாவது சொல்கிறார்கள். மற்றவர்களிடம் ஒரு மண்ணும் இல்லையே என்பார். இலக்கியம் இன்று இணையக் குழுக்களுக்குள் தூண்டில்களுக்குள் கூண்டுகளுக்குள் மூழ்கித் தத்தளிக்கிறது.

*4*

**கற்சுறா:**

இது இந்த உரையாடலின் இறுதிக் கேள்விதான். பிரமிள் மரணப்படுக்கையில் இருக்கிறார். இலக்கியத்தின் பல்வேறுபட்ட தளத்தில் தர்க்கங்களை உருவாக்கி அதன் விமர்சனத் தளத்தில் வேறுபட்ட வடிவங்களினூடாக உரையாடலை நகர்த்திச் சென்றவர் அவர். தன்னோடு பயணித்த வெ.சாவுக்கே அவரது விமர்சனப் பாணியை மறுத்து "எங்கிட்டு வெங்கிட்டு?" என்ற விமர்சனக் கவிதையில் "என்னைப்பார் என் கவிதையைப் பார் என்றேன். குனிந்து நின்றுன் செருப்பைத் தேய்த்தாய். எங்குட்டுப் பார்க்கிறே வெங்கிட்டு விமர்சகா?" என்று எழுதியவர். பசுவய்யா(சு.ரா.)வின் நடுநிசிக் கவிதை குறித்து உன் பெயர் நடுவில் ஒரு "வ", என்பெயர் முடிவில் ஒரு "ள்" உன்னை நான் பகலின் பகிரங்கத்தில் நிறுத்திக் குரைத்தால், உன்பதில் நடுநிசி ரகசியக் குழுக்களில், பதுங்கிய "வள்". என்று எழுதிப் போனவர். எழுத்தை எழுத்துக்களால் எதிர் கொள்ளும் மனநிலை அன்றிருந்த பலரிடம் இல்லாது போனதாவே அவரது இறுதிக் காலங்கள் இருந்ததாக அறிய முடிந்தது. அவரது இறுதிக் காலங்களில் உடன் நின்றவர்கள், ஆதரவு தந்தவர்கள் இறுதிவரை இருந்தவர்கள் என்று யாரையெல்லாம் சொல்வீர்கள்? அவருடன் இருந்த, அவருக்காக இருந்த "வண் மேன் ஆர்மி"க்கு அதிக கதைகள் சொல்ல இருக்கும் என்றே நினைக்கிறேன். பிரமிளின் அந்த இறுதிக் காலங்கள் எப்படியானதாக இருந்தது?

**கால சுப்ரமணியம் :**

பிரமிள் சிறுவயதிலிருந்து ஏழ்மையில் வளர்ந்தவர். சரியான சரிவிகித உணவு கிடைத்ததா தெரியவில்லை. குடும்பத்தில் இல்லாத வழக்கமாக மீன் உணவை சிறுவயதில் எடுத்ததால் வந்ததாக தோல்நோயைச் சொல்வார். ஒருவித சொரியாசிஸ் வகை தோல் நோய் இருந்திருக்கிறது. எதையும் எங்கும் சாப்பிடுவார். பீப், போர்க் கூட தவிர்த்ததில்லை. இனிப்புகளைச் சாப்பிடுவதில் மிகுந்த விருப்பமுண்டு. ஒயின் மட்டுமே ஓரிருமுறை சாப்பிட்டதைப் பார்த்திருக்கிறேன். நான் அவரிடம் வந்திருக்கும்போது விதவிமாக உணவுகளைச் சமைத்துத் தருவார். எல்லாமே மேல்நாட்டு முறைகள், அபூர்வ அயிட்டங்களாகத்தான் இருக்கும்.

கடைசிகாலத்தில் மருத்துவ மனையில் அவரை சரவணன் உடல் முழுதும் நீரால் துடைத்துவிடும் போது தொடை இடுக்குப்பகுதியில் வெண்மையாக உரிந்ததுபோல் சொரியாசிஸ் இருந்த தடையங்களைப் பார்த்திருக்கிறேன். பற்கள் சில விழுந்து கட்டியிருந்தார். மெலிந்த உடல். உதரவிதானத்திலிருந்த புற்றுநோயால் தான் அவர் காலமானார். அது இருமுறை கடுமையான மஞ்சள் காமாலையாக அறிகுறிகாட்டி வாட்டியிருக்கிறது. புற்று எத்தனை வருடங்களாக உள்ளடங்கியிருந்தோ தெரியாது - சென்னை மருத்துவமனையிலிருந்த பலமாதங்களுக்குப் பின்தான் விரைவாகப் புடைத்தெழுந்தது. மிக முற்றிய நிலை. எனவே டாக்டர் சிவமணி கடைசிகாலத்தை கஷ்டமின்றி கழிக்க வழிசெய்தார்.

அவர் சைவப் பிள்ளை என்று நினைத்து திருநெல்வேலி சைவப்பிள்ளை எழுத்தாளர்கள் சிலர் அவரைக் கொண்டாடுவதாகவும் கேள்வி. ஆனால் அவர் தாயார் தமிழகத்தில் முதலியார் என்று அழைக்கப்படும் சைவப்பிள்ளை வகுப்பைச் சார்ந்தவர் என்று அவரது உறவினரான எழுத்தாளர் சட்டநாதன் தெரிவிக்கிறார். தந்தை செட்டியார் வகுப்பைச் சேர்ந்தவராக இருக்கலாம் என்பது பிரமிளின் பேச்சிலிருந்து நான் அநுமானித்தது. அம்மா மூலம் அறிந்த சாது அப்பாத்துரைச் செட்டியார்தான் அவரது ஆன்மீகச் சிந்தனைகளுக்கு வழிகாட்டியவர். அவர் இல்லாவிட்டால் தான் ஒரு அடாவடிக்காரனாக ஒரு கிரிமினலாகத்தான் மாறியிப்பேன் என்று சொல்லியிருக்கிறார் பிரமிள். நீ உண்மையைக் கண்டறிந்து அடையமுடியாவிட்டாலும் உண்மையைக் கண்டறிந்தவர்களை அடையாளம் கண்டுகொள்ளமுடியும் என்று அப்பாத்துரை சொன்னதாகவும் கூறியிருக்கிறார்.

நான் பிரமிளை அநுசரிப்பதைப் பார்த்துவிட்டு முன்றில் அரங்கநாதன் என்ற சைவ எழுத்தாளர், நான் சைவப்பிள்ளை என்பதால் அவரை இப்படி ஆதரிக்கிறேன் என்று கூறியுள்ளார். அவர் கூற்றுக்குப்பின் தான் அவர் இப்படிச் சொல்கிறாரே என்று பிரமிள் என்னிடம் கிண்டல் செய்ய, நான் என்ன இனம் என்று சொன்னேன். (மிகவும் பிற்படுத்தப்பட்ட தொட்டிய நாயக்கர் இனம் என்று) பெரும்பாலும் பிராமணர் ஆதிக்கத்தில் தான் தமிழ் நவீன இலக்கிய உலகம் இருந்தது. முற்போக்காகவும் புரட்சிகரமாகவும் காட்டிக்கொண்டாலும் பலரிடம் அந்த சாதி மேட்டிமை இருக்கத்தான் செய்தது, மௌனி, சுரா, வெசா, ஞாகூ, அமி என்று. கநாசு, சிசுசெவிடம் அது இருந்ததில்லை.

லௌகிகவாதியான, வியாபாரியான சுரா வழக்கத்துக்கு மாறான சராசரி வாழ்க்கை வாழ்பவர்களுக்கு விசித்திரமாகத் தெரியும் யாரையும் எதையும் லட்சியம்

> லௌகிகவாதியான, வியாபாரியான சுரா வழக்கத்துக்கு மாறான சராசரி வாழ்க்கை வாழ்பவர்களுக்கு விசித்திரமாகத் தெரியும் யாரையும் எதையும் லட்சியம் செய்யாத பிரமிளின் மனப் பாங்குகளைப் பற்றி பல கதைகளை ஜோடனை செய்து சொல்வார் என்றும் அவை என்ன என்றும் எனக்கு அவருக்கும் பிரமிளுக்குமான நண்பர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதையேதான் அப்பாவித்தனமாக தாம் அவரை மறுதலிக்க கிடைத்த சாக்குகளாகப் பிடித்துத் தொங்கிக்கொண்டிருக்கிறார்கள் சிலர்.

செய்யாத பிரமிளின் மனப் பாங்குகளைப் பற்றி பல கதைகளை ஜோடனை செய்து சொல்வார் என்றும் அவை என்ன என்றும் எனக்கு அவருக்கும் பிரமிளுக்குமான நண்பர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

அதையேதான் அப்பாவித்தனமாக தாம் அவரை மறுதலிக்க கிடைத்த சாக்குகளாகப் பிடித்துத் தொங்கிக்கொண்டிருக்கிறார்கள் சிலர். "விமர்சன ஊழல்கள்" நூலில் தமிழ் இலக்கியச் சூழல்களின் ஊழல் உலகை விமர்சித்தவர் பிரமிள். "விமர்சனாஸ்ரம்"-இல் வெசாவையும் "விமர்சன மீட்சி" களில் சிசுசெவையும் விமர்சித்திருக்கிறார். கவிதை விமர்சனம் (வானமற்றவெளி), இலக்கிய விமர்சனம் (வெயிலும் நிழலும்), சமூக, வரலாறு, மத, தத்துவ, ஆன்மீக விமர்சனம் (வரலாற்றுச் சலனங்கள், பாதையில்லாப் பயணம்), என்று அவரது உரைநடை எழுத்தைப் பிரித்துச் தனித்தனி பெரும் நூல்களாக முன்பு வெளியிட்ட நான் அவரது இலக்கிய அரசியல் (அழியும் சுவடுகள்) கட்டுரைகளை மட்டும் தனித்தொகுதியாகப் போடத் தயாரித்து வைத்திருந்தேன். வரவிருப்பதாக விளம்பரித்தும் அந்நூலை வெளிக்கொணர வாய்ப்பே கிடைக்கவில்லை. (இலங்கை பற்றிய எழுத்துக்களை மட்டும் தனியாகத் தொகுத்து பின்பு "தெற்குவாசல்" கடல் நடுவே ஒரு களம்" என்ற தொகுப்பாகக் கொண்டுவந்தேன்) பின்பு அக்கட்டுரைகளை காலவரிசையில் அடுக்கிச் சேர்த்தே "பிரமிள் படைப்புகள்" 6 தொகுதிகளும் கொண்டுவரமுடிந்தது.

பிரமிளை புரவலித்தவர்களாகவும் நண்பர்களாகவும் சில பிராமண வாசகர்கள் இருந்திருக்கிறார்கள். எழுதிச் சம்பதிக்க அவரால் முடியும். ஆனால் நண்பர்கள் சிலருடைய உதவியால் தான் அவர் வாழ்ந்தார். காசே தரமுடியாத சிறுபத்திரிகைகளில் தான் எழுதினார். அவருடைய பால்யகால நண்பர் (சென்னையிலும் அமெரிக்காவிலும் ராமையா மடத்தைக் கவனித்துவந்தவர்) கந்தசாமிதான் மாதவாடகைக்கான பிளாங் செக்குகளை வருடமொருமுறை அளித்து வந்தவர்.

ஆரம்ப காலத்தில் தன்னிடமிருந்த மீதித் தொகையைச் சீக்கிரமே தீர்த்து விட்டார். அஃக் வெளியிட்ட "கண்ணாடியுள்ளிருந்து" என்ற முதல் தொகுப்பை பிரமிள்

> **சரியான சாப்பாடு இல்லாமல் (1975) பல நாள் பட்டினி கிடந்திருக்கிறார். அதனால் தற்கொலை செய்துகொள்ளும் மனநிலைக்கும் சென்றிருக்கிறார். அவரது டைரியில் தற்கொலை மனநிலையிலிருந்தபோது எழுதியவை என்று மூன்று கவிதைகள் எழுதப்பட்டிருந்தன. முதல் முகத்தின் தங்கைக்கு, பச்சைக்கதை, மண்டபம் என்ற அவரது சிறந்த கவிதைகள் அவை என்று நினைக்கிறேன்.**

செலவில்தான் பரந்தாமன் வெளியிட்டார். சுந்தர ராமசாமியிடம் தன்னிடமிருந்த பணத்தை வைத்துக்கொண்டு குறைந்த வட்டியில் அவ்வப்போது கேட்கும் போது செலவுக்குத் தாருங்கள் என்றபோது, அவர் சுத்தமாக மறுத்துவிட்டார். (எனவேதான் பிற்காலத்தில் எதிராளியானபோது, தான் அவர் குடும்பத்துக்குப் பார்த்த நியூமராலஜி பெயர் மாற்றங்களுக்கு வம்படியாக பணம் கேட்டார் பிரமிள். அதையும் என் மூலம் அனுப்பினார்.)

சரியான சாப்பாடு இல்லாமல் (1975) பல நாள் பட்டினி கிடந்திருக்கிறார். அதனால் தற்கொலை செய்துகொள்ளும் மனநிலைக்கும் சென்றிருக்கிறார். அவரது டைரியில் தற்கொலை மனநிலையிலிருந்தபோது எழுதியவை என்று மூன்று கவிதைகள் எழுதப்பட்டிருந்தன. முதல் முகத்தின் தங்கைக்கு, பச்சைக்கதை, மண்டபம் என்ற அவரது சிறந்த கவிதைகள் அவை என்று நினைக்கிறேன். அவரது கவிதைத் தொகுப்பின் பின்குறிப்புகளில் அதைக் குறிப்பிட்டிருக்கிறேன். சரிபார்க்கவேண்டும்.

கடைசி காலத்தில் அவரது வசதியான ஆன்மீக அன்பர்கள் அவருக்கு எதையும் செய்யத் தயாராயிருந்தனர். அவர் அவர்களிடம் அளவாகவே அநாவசியமற்றுப் பெற்றுக்கொண்டார். இலக்கிய வாசகரல்லாத ஆன்மீக நாட்டத்தில் ஈடுபாடுடைய அன்பர்கள் வாய்த்தனர் கடைசியில். அவரைக் கடைசி காலத்தில் கரடிக்குடி சமுதாய மருத்துவமனையில் வைத்துப் பாராமரித்து சவ அடக்கத்துக்கும் ஏற்பாடு செய்த டாக்டர் சிவமணி, பிரமிளின் ஜே.கிருஷ்ணமூர்த்தி எழுத்துகளால் கவரப்பட்டவர்தாம். கடைசியில் நோய் உடல் பராமரிப்புகளை செய்த பவானி குமாரபாளையத்தைச்சேர்ந்த சரவணன், ஆன்மீகத் தேடல் நோக்கம் கொண்டவர் மட்டுமே - என்மூலம் அவரைச் சந்தித்துப் பழகியவர். அவரை கோமாவில் விழுந்தவுடன் சைதாப்பேட்டை தனியார் மருத்துவனை ஒன்றுக்கு எடுத்துச்சென்று ஐம்பதாயிரக்கணக்கில் (1996ல்) செலவுசெய்து காப்பாற்றியவர்கள் அழகு சிவானந்தம் என்ற வழக்கறிஞரும், "கிரேனைட் கல்" தொழில் செய்துவந்த துரையப்பாவும் தான். தினமணியில் செய்திவெளியிட்டு அவருக்கு உபகார நிதி வசூலித்தபோது சிறிதும் பெரிதுமாக பலர் உதவினர். மேலும் ஒரு லட்சம். (என்னால் முடிந்த தொகை, செலவல்ல என்பதால் இங்கே சேர்க்கவேண்டாம்.) நான் இதன் கணக்குப் பட்டியல் லயம் பிரமிள் நினைவுச் சிறப்பிதழில் (1997) வெளியிட்டிருக்கிறேன்.

வெளி ரங்கராஜனும் அழகியசிங்கரும் சேர்ந்து விளக்கு பரிசு தர முயற்சிசெய்து மருத்துவச் செலவுக்கு உதவினர். மருத்துவமனையில் முதலுதவிகள் மிகப் பெரிய செலவில் செய்துமுடித்து, போன் வசதியில்லாத அக்காலத்தில் எப்படியோ என்னைப் பிடித்துப் பேசி, அழகு சிவானந்தம் தான் உயிராபத்திலிருந்து காப்பாற்றிவிட்டோம். இனி வந்து பொறுப்பை ஏற்றுக்கொள்ளுங்கள் என்று என்னை வரவழைத்து ஒப்படைப்பு செய்தார்.

நான் தமிழ்மண்ணில் கரடி குடியில் பிரமிளை ஒப்படைத்தேன்.

(தனித்தனிக்கேள்விகளாக எழுதிக்கேட்டு வேறுவேறு இடங்களிலிருந்து சரிபார்க்க வசதியற்றுப் பெற்ற பதில்கள் இவை என்பதால் முன்சொன்ன விஷயங்களே சில வரிகளில் மீண்டும் வந்திருக்கலாம்.)

# கவிதைகள் 5

girinav@gmail.com
வ.ந.கிரிதரன்

## விருட்சங்கள்!

திக்குகளெங்கும் ஓங்கி வளர்ந்த
விருட்சங்கள்!
எண்ணிலடங்கா விருட்சக் காட்டினுள்
தன்னந்தனியாக நான்
நடந்து கொண்டிருக்கின்றேன்.

வனமெங்கனும் கவிந்து கிடக்குமொரு
மோனம்.

கோடை வெயிலின் சுட்டெரிப்பில்
தகித்துக் கிடக்கும் விருட்சங்கள்
தகிப்பினை வாங்கித் தரும்
தண்மையின் கீழ் என் பயணம்
தொடரும்.

அமைதியான, ஆரவாரமற்ற
பெருந்தியாகம்!
பலன் கருதாப் புரியப்படும்
பணி!

எத்தனை விந்தையான உயிரினங்கள்!
அத்தனைக்குமோர் ஆதரவு!
அரவணைப்பு!

ஓங்கிய விருட்சங்களுக்குள்
ஒரு கோடி பிரிவுகள்! ஆயின்
ஒற்றுமையாய் ஒருமித்தவை தரும்
தண்நிழல்!

பிரமிப்பில் தொடருமென் பயணம்.

ஆறறிவு பிளந்து வைக்கும் மண்ணில்
கீழறிவின் பேரறிவு!

நன்மைக்காய்த் தனை மறக்கும்
இன்மனத்தினிருப்பிடமாயிவ்
விருட்சங்கள்!

தமையழித்த போதும்
தண்தரும் விருட்சங்கள்!

## விண்ணும் மண்ணும்!

விரிந்து கிடக்குமிந்த விசும்பு
ஓர் உளவியல் நிபுணரைப் போல்
பலருக்கு அறிவுரை பகரும் அதிசயத்தினைப்
பார்த்து ஒவ்வொரு முறையும்
அதிசயித்துப் போகின்றேன்.

“வானத்தைப் போல்.....”
அப்பொழுதெல்லாம் இவ்விதம் நான்
எனக்குள்ளேயே அடிக்கடி கூறிக்
கொள்வதில் ஒரு வித மகிழ்ச்சியில்
பூரித்துப் போகின்றேன்.

இவ்விதமான வேளைகளில் ஒரு மாபெரும்
நூலகத்தினைப் போல் இந்த வானம்
எவ்வளவு விடயங்களைத் தன்னுள்
தாங்கி வைத்திருக்கின்றதென்பதை
உணர்ந்து கொள்கின்றேன்.
கற்பதற்கெவ்வளவு உள.
கற்பதற்கெவ்வளவு உள.
காலவெளி நூலகத்தில்தான்
கற்பதற்கெவ்வளவு உள.

அளவுகளுக்குள்ளிருந்து
ஆகாயம் பார்க்கும் மண்பார்த்து
அப்பொழுதெல்லாம் இந்தவான்
தனக்குள் நகைத்துக் கொள்ளுமோ!

அப்பொழுதெல்லாம் கீழ்க்கண்டவாறு
நினைத்துக் கொள்வேன்:
"படைகளுக்குள்ளோரிருப்பு! மேலும்
படையெடுப்பெதற்கு?”

ஆகாயத்தின் இயல்புகளில் சில:
அகலம்! விரிவு!
அவை கூறும் பொருளெம்
அகம் உணர்தல் சாத்தியமா?
"அகத்தின் விரிவில், அகலத்தில்
மண்ணிலின்பம்! அட மானுடரே!”

தன்னியல்பினுள் விடைபொத்தி வைத்திருக்கும்
விசும்பு மண்ணின் கேள்விகள்
அனைத்துக்கும்.
விண்ணிலிருந்து மண்
கற்பதற்கு நிறைய உள.
கற்பதற்கு நிறைய உள.

## ஒட்டகங்கள்!

ஒட்டகங்கள் பாலைகளைக் கண்டு
துவண்டு விடுவதில்லை
தளர்வதில்லை.
வீசும் மணற்காற்றுகளைக் கண்டு
அஞ்சுவதில்லை.
நீர் தேக்கி, நீண்ட தொலைவுகளை நாடிப்
பயணிப்பதில் அதிக பிரியம் கொண்டவை
அவை.
உளப்புயல்கள் வீசியடிக்கையிலெல்லாம்,
நினைவுச் சுழல்களுக்குள் சிக்கும்போதெல்லாம்,
அகக்கடலில் படகுகளையிழந்து
நீச்சலடிக்கையிலெல்லாம்
நான் ஒட்டகங்களை நினைப்பதுண்டு.
ஒட்டகங்களைப்போல் நானிருக்க வேண்டுமென்று
நினைப்பதுண்டு.
எவை கண்டும் தளராத
அவை பற்றி அவ்வேளைகளில் சிந்திப்பதுண்டு.

ஓ! ஒட்டகங்கள்தாம் எத்துணை உடலுறுதி மிக்கவை.
ஓ! ஒட்டகங்கள்தாம் எத்துணை உளவுறுதி மிக்கவை.
ஓ! ஒட்டகங்களைப்போல் நானுமிருக்க வேண்டும்!
ஓ! ஒட்டகங்களைப்போல் வலிமையுடனியங்க வேண்டும்.

சிந்தனையில் மூழ்கிக் கிடக்கையில்
நண்பன் எனை நோக்கினான் கேட்டான்:

”என்ன யோசனை?”
“ஒட்டகங்கள் அற்புதமானவை: என்றேன்.

# சொப்பன வாழ்வினில் மயங்கி...

இரவில் மட்டும் பூத்திடும் தாமரைகளா!
யார் சொன்னது வருடத்தில் ஒரு முறைதான்
கார்த்திகைத் திருவிழா வருமென்று ?
இங்கு ஒவ்வொரு இரவும் திருவிழாதானே ?

யார் சொன்னது நட்சத்திரங்கள் கொட்டிக் கிடப்பது
விண்ணில் மட்டும் தானென்று ?
இந்த மண்ணிலும் தான்.

சுடர்களை மறைத்தன நகரத்துச்
சுடர்களே.
மரங்களை மறைத்தன நகரத்து
மரங்களே.

சுடரிழந்த விண்ணை ஈடு செய்யவா
சுடர் கொடுத்ததிந்த மண்.
நகரத்து மண்.

மரமிழந்த மண்ணை ஈடு செய்யவா
மரம் தந்ததிந்தவிண்.
நகரத்து விண்.

மண்ணில் வேரறுத்ததாலோ
விண்ணில் வேர் பதிக்கவெழுந்தன
இந்த மரங்கள்!

அடைய வந்த புட்கள் புல்லாகிப் போன
விந்தையென்னே!

விரையும் பேராறுகளை, கணமேனும் ஆறுதலற்றோடும்
பெரு நதிகளை நீங்கள் வேறெங்காவது கண்டதுண்டா ?

உங்கள் வேகத்தைக் கண்டு வெட்கப்பட்டுத தானோ
இருக்கும் ஒன்றிரண்டும் ஓடையாகி ஓரத்தில்
ஒதுங்கினவோ ?

சொப்பன வாழ்வினில் மயங்கி
நகரத்துச் சொப்பன வாழ்வினில் மயங்கி
உனை மறந்தோம் ?
இயற்கை உனை மறந்தோம்.
நாம் உனை மறந்தோம்.

# ஆனை பார்த்தவர்!

சொன்னார் நண்பர்
"சொல்லப்படாதவரிவர்" என்று.
அதற்கு நான் கூறினேன்
"ஆனை பார்த்த குருடர்களிடம்
அதற்கு விளக்கம் கேட்டிருக்கின்றீர்கள்.
அதனால்தானிந்த குழப்பம்" என்று.
"குழப்பமா? என்ன குழப்பம்?"
என்று தலையில் கை வைத்தார் நண்பர்.
"சொல்லப்படாதவர் பற்றிச் சொல்லியிருக்கின்றீர்களே"
"சொல்லியிருக்கின்றேன் சொல்லப்படாதவர் பற்றி.
ஆமாம்! நீங்கள் சொல்லுவது சரியே"
சொன்னார் பதிலுக்கு அவர்.
"அதுதான் கூறினேன் குழப்பமென்று" என்றேன்.
அதற்கும் அவர் "புரியவில்லை" என்று
மீண்டும் தலையில் கை வைத்தார்.

"ஆமாம்! நீங்கள் குழம்பிப் போயிருக்கின்றீர்கள்" என்றேன்.
"ஆமாம். நீங்கள் சொல்லியதால்" என்றார் அவர்.
"சொல்லப்படாதவர் பற்றிச் சொல்லியதால்...."
"சொன்னேன். ஆனால்.."
"சொல்லவந்ததைச் சொல்லி முடிக்கவில்லையே.
சொல்லுவேன் கேளுங்கள். பின் ஏதாவது
சொல்லுங்கள்" என்றேன்.
"சொல்லுங்கள். சொல்லி முடிக்கும்வரை ஏதும்
சொல்லாமலிருப்பேன்" என்றார்.
"சொல்ல வந்ததென்னவென்றால்..
ஆனை பார்த்த குருடர்கள் பற்றி"
என்றேன்.
"ஆமாம்! ஆனை பார்த்த குருடர்களைப்பற்றி.
அவர்களைப்பற்றிச் சொல்லுங்கள்" என்றார்.
"அவர்களைப்பற்றிச் சொல்ல உண்டு.
அவர்கள் ஆனை பார்த்த அந்தகர்கள்" என்றேன்.
"ஆமாம்! அவர்கள் ஆனை பார்த்த அந்தகர்கள்!
அந்தகர்கள் பார்த்த ஆனையில் இல்லாதவர் அவர்.
அவர் சொல்லப்படாதவர்" என்றார் அவர்.
"சொல்லிவிட்டீர்களே! சொல்லப்படாதவரைப்பற்றி"
என்றேன்.
"சொல்லிவிட்டேன் சொல்லப்படாதவரைப்பற்றி. ஆமாம்!
சொல்லிவிட்டேன்" என்றார்.
"ஆனை பார்த்தவர் நீங்கள்" என்றேன்.
"ஆனையைப் பார்த்தவன் நானா"
அவர் மீண்டும் தலையில் கை வைத்தார்.
"ஆமாம்! ஆனை பார்த்தவர்தான்.
அந்தகர்களுக்கு மத்தியில்" என்றேன்.

சொல்லப்படாதவரைப்பற்றிச் சொல்லியவர்
சொன்னார்:
"ஆமாம்! ஆனை பார்த்த அந்தகர்களுக்கு மத்தியில்.
ஆமாம்! ஆனை பார்த்த அந்தகர்களுக்கு மத்தியில்"
ஆடினார் அவர். பாடினார். அவர் ஆடியே பாடினார்.
ஆடினார் அவர். பாடினார். அவர் ஆடியே பாடினார்.
ஆடினார் அவர். பாடினார். அவர் ஆடியே பாடினார்.
"ஆமாம்! ஆனை பார்த்த அந்தகர்களுக்கு மத்தியில்.
ஆமாம்! ஆனை பார்த்த அந்தகர்களுக்கு மத்தியில்."

எங்கே போய் முட்ட!

# பெரும் குழுக்களாக இருக்கும் முட்டாள்களை குறைத்து மதிப்பிடாதீர்கள்!

சீமான் தமிழர்களின் இருத்தலியலுக்கான அச்சுறுத்தலாக (existential threat) தற்போதைக்கு கருதப்பட முடியாது என்பது என்னவோ உண்மை தான். இருந்தாலும் George Carlin சொல்வது போல Never underestimate the power of stupid people in large groups.

முட்டாள்கள் அதிகளவு எண்ணிக்கையில் இருப்பதால், ஒரு இனம் அழிந்து போவதற்கான சந்தர்ப்பம் இருப்பதற்கான உதாரணத்தைத் தேட அதிக தூ ரம் போகத் தேவையில்லை. யாழ்ப்பாணத்திற்குள்ளேயே அது உண்டு.

Village idiot கையில் அதிகாரம் கிடைப்பதால் வரும் அழிவு நாங்கள் எங்கள் கண் முன்னால் கண்டது. அந்த முட்டாளின் கையில் துப்பாக்கி இருந்தால், அதற்கு நண்பன், எதிரி வித்தியாசம் எல்லாம் தெரியாது.

Trigger-happy idiots அந்த முட்டாளின் பின்னால் 'தலைவா' என்றபடி அள்ளுப்படுவதும் தவிர்க்க முடியாதது. விளைவுகள் பற்றி கவலையே படாமல் குண்டைக் கட்டிக் கொண்டு போய் வெடித்தவர்களையே கண்டிருக்கிறோம்.

துப்பாக்கி தேவையில்லை. வெறும் மைக்கைக் கையில் வைத்துக் கொண்டு 'தமிழ் உணர்வாளர்களுக்கு' கிளுகிளுப்பு ஏற்ற, வசதிக்கு தகுந்த மாதிரி அவிழ்த்து விடலாம்.

மூக்கை நோண்டி, மீசையைத் தடவி, பின்னால் நிற்பவனைத் திரும்பிப் பார்த்து, 'பார்ரா இங்க! கொடுக்கிறேன் ஒரு பதிலடி!' புஹாஹா சிரிப்போடு.

பின்னால் நிற்பவன் அண்ணனோட அறிவைக் கண்டு பிரமித்துப் பல்லிளிப்பான்.

அப்படி நடிக்கத் தானே அதில் நிறுத்தப்பட்டிருக்கிறான்.

அண்ணன் முன்பு எங்கே, என்ன பேசினான் என்பது யாருக்குமே நினைவிருக்காது. விசிலடிப்பும் கரகோஷமும் விண்ணைப் பிளக்கும்.

அதிகாரத்தின் மீதான கோபத்தை, தங்கள் அன்றாட வாழ்வில் அனுபவிக்கும் துயரங்களால் ஏற்படும் வெறுப்பை தங்களுக்குச் சார்பாக மடை மாற்றுவது, இந்த உசுப்பேத்தும் உணர்ச்சிப் பேச்சாளர்களுக்கு இலகுவானது.

இவர்களிடம் நடைமுறைச் சாத்தியமான தீர்வு எதுவும் இருக்காது. உண்மையான பிரச்சனைகளிலிருந்து கவனத்தைத் திருப்பி, கற்பனையில் நிறைந்த ஒரு ஆட்சி அதிகாரத்தில் பாலும் தேனும் ஓடும் என்ற கனவை விற்பது தான் இவர்களின் தூண்டில்.

உணர்ச்சிப் பேச்சுக்கள் ஜிவ் என்று உணர்வுகளைக் கிளர்ந்தெழச் செய்யும். அடிப்போம், வெட்டுவோம், கொத்துவோம் என்று இளம் தலைமுறையை உசுப்பேத்தும் இவர்கள் எதையும் பிடுங்கி அடுக்குவதில்லை.

வெறும் வாயால் வெட்டி விழுத்துதல் தான்.

ஆனால், ஒரு அலை ஏற்பட்டால், சில நேரங்களில் மண் சரிவுகள் பெரும் வெற்றியாகி விடும்.

ஆளும் கட்சிகள் மீது ஊழல், குடும்ப அரசியல், வாரிசு அரசியல் காரணமாக, சலிப்பும் வெறுப்பும் வந்தால், சரியான மாற்றீடான எதிர்க்கட்சிகள் இல்லாது போனால், அதற்கான சாத்தியங்கள் மிகவும் அதிகம்.

இலக்கியப் பக்கத்தில் இந்தக் கோமாளித்தனம் குறித்து பெரும் எதிர்ப்பு அலைகளோ, ஏளனங்களோ எதுவும் இல்லை.

ஜோர்ஜ் இ.குருஷ்சேவ்

அவர்களுக்கு சமூகம் பற்றி என்ன கவலை?

அவர்களுடைய கவலை எல்லாம் விருதுகள், அங்கீகாரங்கள்.

ஆனால், நினைவிருக்கட்டும்.

பாஜகவிற்கு முதலில் கிடைத்தது இரண்டு ஆசனங்கள் மட்டும் தான்.

வாக்குகளைப் பிரிப்பதற்கான mouth for hire 'வாடகை வாய்' தான் சீமான். கொடு(கிடை)க்கும் பணத்திற்கு ஏற்ப, சீமானுக்கு யாருமே அண்ணன், அப்பா, சித்தப்பா, முப்பாட்டன்... ஏன் வந்தேறியாகக் கூட ஆகலாம்.

வந்தேறி என்று அண்ணன் மேடையில் வைத்து உணர்ச்சி பொங்க முழங்கலாம்.

வீட்டுப் படுக்கையில் வாயே திறக்க முடியாது.

தலை அணை 'போட்டுத் தள்ளி' விடும்.

அல்லது பச்சை மட்டை அடி!

நிலைமை அப்படி.

ஆனா, தமிழ்நாட்டைத் தமிழன் தான் ஆள வேண்டும் என்று அண்ணன் முழங்கினால் விசிலடிக்கிறவன் முட்டாள் தமிழனாகவே இருக்கிறான். தெரிந்து கொள்ளுங்கள்.

சீமான்
துப்பாக்கி இல்லாத
பிரபாகரன் இல்லை.

பிரபாகரன் தான்
துப்பாக்கி வைத்திருந்த
சீமான்!

சீமான் கோமாளி தான்.

ஞாபகம் இருக்கட்டும்.
பிரபாகரன் சீமானுக்கு அண்ணன்!

ஒரு கோமாளியை தோலுரிக்காமல் மற்றக் கோமாளியை விரட்ட முடியாது!

அந்தக் கோமாளியை நம்பி, பெருமையோடு கடைசி உணவை ஒரே மேசையில் உண்டு, தன்னைத் தானே வெடிக்க வைத்து இறப்பது சொர்க்கத்திற்கான வழி என்று நம்பிய அப்பாவிகள் நிறைய உண்டு!

> **சீமான்**
> **துப்பாக்கி இல்லாத**
> **பிரபாகரன் இல்லை.**
>
> **பிரபாகரன் தான்**
> **துப்பாக்கி வைத்திருந்த**
> **சீமான்!**
>
> **சீமான் கோமாளி தான்.**
>
> **ஞாபகம் இருக்கட்டும்.**
> **பிரபாகரன் சீமானுக்கு**
> **அண்ணன்!**

இப்போது விசிலடிக்கிறது எல்லாம் அந்த வயதுக் கூட்டம் தான்!

அண்ணன் ஆயுதம் ஏந்தினால், நாமும் களத்தில் என்ற கனவு இந்தக் கூட்டத்துக்கும் இருக்கும்.

ஆர்எஸ்எஸ், சிவசேனைப் பக்தாஸ் மாதிரி!

இதையெல்லாம் சிரித்துக் கொண்டே கோமாளித்தனமானது என்று கடந்து போகலாம்.

ஆனால்,

Never underestimate the power of stupid people in large groups!

•••

புலிகளோடு வெளிப்படையாகவே தன்னை அடையாளப்படுத்திக் கொண்ட புனித, நாட்டுப் பற்றாள, மாமனிதர் ஒருவர் சமீபத்தில் காலமாகி விட்டார்.

அவருக்கு இணையத்தின் லெட்டர்ஹெட் புலி இயக்கம், புலிக் கொடி போர்த்திக் கௌரவித்திருக்கிறது.

மாமனிதர் பட்டம் வழங்கப்பட்டிருக்கிறது போலும்.

எனக்கு இன்று நடந்தது போல, ஞாபகம் இருக்கிறது.

யுத்தம் முடியும் தறுவாய்.

அதிகாலை வேலைக்குப் போக எழும்பும்போது, அலாரம் வைத்து ரேடியோ அலறும். ஆறு மணிக்குச் செய்தி கேட்பதற்காக, தமிழ் வானொலி ஓடிக் கொண்டிருக்க, கண் முழிப்பேன்.

மே பதினெட்டு, 2009!

பிரபாகரன் இறந்து விட்டார் என்று செய்திகள் முதல் நாள் இரவு மற்ற ஊடகங்களில் வரத் தொடங்கியிருந்தன.

தற்போது காலம் சென்றவர், வானொலியில் கிறிஸ்தவ நற்சிந்தனை நடத்துகின்றவர். அவரது அன்றைய நற்சிந்தனையின் முக்கிய கருப்பொருள்...

இயேசுக்கிறிஸ்து உலகத்தின் பாவங்களுக்காகத் தன்னைப் பலி கொடுத்தவர் என்பது தான்.

ஏப்ரல் மாதம், தவக்காலம் முடிந்து, யேசு பெரிய வெள்ளியில் இறந்து, உயிர்த்து எழுந்த உயிர்த்த ஞாயிறும் முடிந்த பின்னால், மே மாதம் நடுப்பகுதியில்...

திரும்பத் திரும்ப அதையே சொல்லி எழுப்புதல் செய்து கொண்டிருந்தார்.

அதாவது, பிரபாகரன் இறந்ததைப் பகிரங்கமாகச் சொல்லாமல், பிரபாகரனும் இயேசுக் கிறிஸ்து போல, யாழ்ப்பாணிகளுக்காக தன் உயிரை ஈந்தார் என்பது தான் அன்றைய மலைப்பிரசங்கம்...

ஓ... வான் அலைப்பிரசங்கம்!

யாழ்ப்பாணி உசுப்பேத்தி, பப்பாளி மரத்தில் ஏற்றி, திரும்பி வர விரும்பினாலும் முடியாததால் அநியாயமாக உயிரிழந்த Village idiot ஐப் பற்றிக் கவலைப்படுவதா? அந்த முட்டாளை வைத்துப் பிழைப்பு நடத்தும் அயோக்கியர்கள் மீது கோபம் கொள்ளுவதா? என்ற எண்ணத்தோடு, எழுந்து வேலைக்குப் போனேன்.

மன உழைச்சலோடு!

கடைசியில் பிரபாகரன் மூன்றாம் நாளில் இல்லாமல், அடிக்கடி ஆங்காங்கே உயிர்த்தெழுந்தபடியே இருக்கிறார். அவரது ஆவிக்குரிய எழுப்புதல் கூட்டங்களும் அவ்வப்போது நடைபெற்றபடியே தான் இருக்கின்றன.

•••

தற்போதைய அமரருக்கு இங்கே ரொறன்ரோவில் பிரபலமான புலிவால் ஊளையிடலாளர்கள் இரண்டு பேர் சேர்ந்து ஒரு கவிதாஞ்சலி வெளியிட்டிருந்தார்கள்.

'எவ்வுலகு ஏகினாலும்
இறையருகே இருப்பார் எந்தை!'
என்று அந்தக் கவிதாஞ்சலி முடிகிறது.

இறந்தவர் கத்தோலிக்க குருவாக இருந்தவர், எனவே இயேசுக் கிறிஸ்துவின் வலப்பக்கம் வீற்றிருப்பார் என்று நீங்கள் விளக்கம் கொள்ளத் தேவையில்லை.

அவர்கள் சொன்ன இறை,

இறைவனுக்கு நிகரான சூரிய தேவன் பிரபாகரனைத் தான்!

அவர் செய்த பாவங்களுக்காக நரகத்தில் ஊழி நெருப்பில் உழன்றாலும், அவர் அருகே தான் இருக்க வேண்டும் என்று வாழ்த்துகிறார்களோ என்னவோ!?

'சரி, அப்ப தலைவர் செத்துப் போனார் எண்டதை ஒத்துக் கொள்ளுறியள் தானே?' என்று கேட்டுப் பாருங்கள்.

'நீ கண்டனியோ? நாங்கள் சொன்னனாங்களோ? என்று தான் தொடங்குவார்கள்.

ஏன் என்றால், இவர்களின் ஆளுமையும் பெருமையும் எல்லாம், பிரபாகரனின் பக்தர்கள் என்பதில் மட்டும் தான் தங்கியிருக்கிறது. புலிவால்கள் என்பதைத் தவிர, இவர்களுக்கு எந்த ஆளுமையும், பெருமையும், சமூக மரியாதையும் இல்லை.

அதைக் கழற்றி விட்டால்,

யாழ்ப்பாணி மொழியில் சொல்வதாயின், இவர்களை'நாயும் தேடாது!'.

**"இவர்களின் ஆளுமையும் பெருமையும் எல்லாம், பிரபாகரனின் பக்தர்கள் என்பதில் மட்டும் தான் தங்கியிருக்கிறது. புலிவால்கள் என்பதைத் தவிர, இவர்களுக்கு எந்த ஆளுமையும், பெருமையும், சமூக மரியாதையும் இல்லை. அதைக் கழற்றி விட்டால், யாழ்ப்பாணி மொழியில் சொல்வதாயின், இவர்களை'நாயும் தேடாது!'."**

•••

இவர்கள் தான் இலக்கியப் பெருந்தகை எடிட்டருக்கே எடிட்டர்கள். அவர் எழுதிக் கொடுப்பதை வெட்டிக் கொத்தி ஒப்பேற்றுகிறவர்கள்.

இவர்களில் ஒருவர், ரொறன்ரோ கல்விச்சபையின் தமிழ்ப் பாடவிதானத்தில் 'அ.முத்துலிங்கம் புலன் பெயர் இலக்கிய முன்னோடி' என்று எழுதி வைத்தவர். இதைப் பற்றி முன்னைய அபத்தம் இதழ் ஒன்றில் கற்சுறா எழுதியிருப்பார்.

புலிகளின் எதிர்ப் பக்கத்தில் இருந்தால், பிழைப்புக்கு சாத்தியமே இல்லை என்பதை தெரிந்து கொண்டதால், சேரிடம் அறிந்து சேர்ந்து கச்சிதமாக பிழைப்பு நடத்திக் கொண்டிருக்கிறார்.

மேடை, ஒலிவாங்கி...
limelight.

யாவாரம் ஓகோ என்று நடக்கிறது.

மற்றவர் என்னோடு பேஸ்புக் வட்டத்தில் இருந்தார்.

இலங்கையில் கோத்தாவுக்கு எதிரான மக்கள் புரட்சி நடந்து, ராஜபக்ஷ குடும்ப சொத்துக்கள் எரியூட்டப்பட்ட போது, 'ரொறன்ரோவில் கோத்தாவுக்கு சொந்தமான விருந்தினர் கொண்டாட்ட மண்டபம் ஒன்று இருக்கு' என்று தகவல் போட்டிருந்தார்.

எனக்கு கடுப்பாகி, அதற்கு நான், பேஸ்புக்கில் பதிவு போட்டிருந்தேன்.

'அந்த யாழ்ப்பாணி, யாழ்ப்பாணி எண்டு
சொல்லுவியே,
அது ஆர்? எண்டு
நெடுக கேட்பியள் அல்லே!?

'வாங்கடா, போய் எரிப்பம்!
ஆர் என்னோட
வரப் போறியள்!?' எண்டு
தலைமை தாங்கி
முன்னுக்குப் போகாமல்...

'மகிந்தவின் தமிழ் ஆதரவு
அரசியல்வாதிகளின்ர வீடுகளும்
அலுவலகங்களும்
யாழ்ப்பாணத்தில இருக்கல்லோ!?'

'கோத்தபாயாவுக்கு
கனடாவில கலியாண மண்டபம்
இருக்கல்லோ!?' எண்டு

ட்வீட்டியும் பேஸ்முக்கியும்
போட்டு...

ஆரும் முட்டாள்கள் இதை நம்பி
எரிக்கப் போய்
அதில செத்தாலோ,
மறியலுக்குப் போனாலோ....

அரசியல் நடத்தலாம்,
உண்டியல் குலுக்கலாம்,
தமிழ் உணர்வாளர் சீன் போடலாம்
எண்டு...

பத்தைக்குப் பின்னால
பத்திரமா நிண்டு...

மற்றவேயை கல்லெறியச்
சொல்லிறானல்லே...

அந்தப் பரதேசி தான்!

மற்றவேன்ரை பிள்ளையளை
இழுத்து கொண்டு போய்
பலி கொடுக்கிறது தான்
இவனின் புனிதப் போராட்டம்.
இண்டைக்கு இதை வைச்சு
பிழைப்பு நடத்த முடியாது எண்டா...

மாவீரரும் மயிரும்,
இன அழிப்பும், ...யும் என்று
தன் வேலையைப் பார்க்கப்
போயிருப்பான்.'

பிறகென்ன?

என்னை புளொக் பண்ணி விட்டு
ஆள் தலைமறைவு!

இதற்கு எல்லாம் எங்கே போய்
முட்டுவீர்களோ!?

•••

யாழ்ப்பாணிகள் திமுக என்றால், அது தான் திருத்த முடியாத கழுதைகள், யாழ்ப்பாணியின் அரசியல் அறவிட முடியாக் கடன் போல, written off விசயம்.

இன்னமும் தீர்வு கிடைக்கும், வாங்கித் தரப் போகினம் என்று நம்புகிற யாழ்ப்பாணிகள் தற்போது இறுகப் பற்றிக் கொண்டிருப்பது,

**சிதம்பரம் கோயிலில் நடராஜர் சிலையின் ஆடியபாதத்தின் கீழ் தான் பூமியின்ர காந்த மையப்புள்ளி இருக்கெண்டு, நாசா விஞ்ஞானிகள் அடைந்த அதிர்ச்சியிலிருந்து இன்னமும் மீளவில்லை என்று வாட்சப் அறிஞர்கள், ஆய்வாளர்களின் அறிக்கையை வாசிச்சனான்.**

**யாழ்ப்பாணம் பிரபஞ்சத்தின் மையம் எண்டபடியா, அங்க வைக்கிறது தான் சரியான பொருத்தம்.**

**ஆனா, அந்த மையப்புள்ளி வடமராட்சியிலயோ, இல்லாட்டி பெண் கொடு தீவிலயோ இருக்கெண்ட விசயத்தை கண்டுபிடிச்சு அங்க வைக்கிறது நல்லதல்லே.**

புதிதாக இந்துத்வா.

'இந்தியா காப்பாற்றும்!'

இந்துக்கள் ஒன்று திரள்வோம்!

யாழ்ப்பாணம் இரு மரபும் துய்ய வந்த தூய சைவ வேளாளர்களின் சிவபூமி.

கொஞ்ச நாளைக்கு முதல் சிவ பெருமான் சிவலிங்க வடிவில் தான்தோன்றீஸ்வரரானார்.

சபாஷ், பலே!

சரியான போட்டி!

ஆங்காங்கே அரச மரங்களுக்கு கீழே கிளம்பும் புத்தர் சிலைகளுக்கும் விகாரைகளுக்கும்!

தற்போது, நடராஜர் சிலை எழுந்திருக்கிறது.

ஆனையிறவில்!

ஆனையிறவில் பிள்ளையார் வராமல் ஏன் ஆடியபாதம் வந்தார் என்பது திருமுருகனார், வேலன், சச்சிதானந்த சற்குருவாகிய விமலர்களுக்குத் தான் வெளிச்சம்.

தமிழ்க் கடவுள் முருகனுக்குப் பதிலாக, நடராஜர்.

யாழ்ப்பாணத்தில் சிவன் சிறுபான்மை. சிவன் கோயில்களைச் சொன்னேன்.

அவருக்கு என்ன? இனிமேல் காலை மாலை அபிஷேகம் நடக்கும்.

சனி பகவான் வாகனங்களால் தான்!

சிதம்பரம் கோயிலில் நடராஜர் சிலையின் ஆடியபாதத்தின் கீழ் தான் பூமியின்ர காந்த மையப்புள்ளி இருக்கெண்டு, நாசா விஞ்ஞானிகள் அடைந்த அதிர்ச்சியிலிருந்து இன்னமும் மீளவில்லை என்று வாட்சப் அறிஞர்கள், ஆய்வாளர்களின் அறிக்கையை வாசிச்சனான்.

யாழ்ப்பாணம் பிரபஞ்சத்தின் மையம் எண்டபடியா, அங்க வைக்கிறது தான் சரியான பொருத்தம்.

ஆனா, அந்த மையப்புள்ளி வடமராட்சியிலயோ, இல்லாட்டி பெண் கொடு தீவிலயோ இருக்கெண்ட விசயத்தை கண்டுபிடிச்சு அங்க வைக்கிறது நல்லதல்லே.

இது பிரபஞ்ச காந்தப்புல மையம் சம்பந்தப்பட்டது.

மாறிக் கீறி வைக்கப் போனால், இசகு பிசகாப் போயிடும் அல்லே!?

இப்ப போதாக்குறைக்கு, வள்ளுவருக்கும் சிலை வந்திருக்கிறது. அதுவும் பட்டை நாமங்களோடு!

அந்தக் காலத்தில் ஆஸ்பத்திரிக்கு முன்பாக உந்தச் சிலைகளை வைக்க வேண்டும் என்று யோசித்து, யாழ்ப்பாணத்தை அழகுபடுத்திய துரையப்பா துரோகியாகி எல்லாம் முடிந்து, இப்ப அதே யாழ்ப்பாணிகள் வள்ளுவருக்கு திரும்பவும் சிலை வைக்கிறார்கள். இந்தியத் தூதுவரகத்திலிருந்து வந்து திறந்து வைத்திருக்கிறார்கள்.

உந்த யாழ்ப்பாணிகளுக்கு இன்னும் எத்தனை பேர் பட்டை நாமம் சாத்தப் போகிறார்களோ தெரியாது!

வள்ளுவருக்கு பட்டை நாமம் சாத்தி சைவப் பழம் ஆக்கியதற்கு காரணம் இருக்கிறது.

திருக்குறள் உலக திருமறையாக இருக்கலாம்.

ஆனால், திருவள்ளுவர் இரு மரபும் துய்ய வந்த தூய உயர் யாழ் சைவ வேளாளர் என்பதை உலகம் அறிய வேண்டாமா?

தற்போது கச்சதீவில் புத்தர் சிலை.

திடீரென்று, பௌத்தம் சைவத்தின் சகோதர மதம் ஆகி விட்டிருக்கிறது யாழ்ப்பாணிகளுக்கு.

போகிற போக்கில், யாருக்குத் தெரியும்?

சிங்கள எதிரிகளை நம்பினாலும், அந்நிய துரோகிகளை நம்ப முடியாது என்று...

வந்தேறி மதங்களை அழிக்க சரியான வழி... அதெல்லாம் முன்பு புத்த விகாரைகள் இருந்த இடம் என்று யாழ்ப்பாணிகள் தொடங்கினால்...

அதற்கு நான் ஜவாப்தாரியல்ல.

பட்டை நாமம் சாத்திய யாழ்ப்பாணிகள்,

மொட்டை அடித்து பிக்குகள் ஆகவும் கூடும்!

ஏன்னா,

சங்கியும் பிக்குவும் காவி தானே!?

இதற்குள் கவனிப்பாரற்றுக் கிடந்த கோயில் ஒன்றில் சிலை உடைக்கப்பட்டு பௌத்த மயமாக்கப்பட்டிருக்கிறது.

வழமை போல, யாழ்ப்பாணிகளே ஒன்று திரளுங்கள்...

இந்துக்களாக என்று யாழ் பத்திரிகை ஒன்று அறைகூவல் விடுத்திருக்கிறது.

இது இனப் பிரச்சனை இல்லை, மதப் பிரச்சனையாம்.

நாடும் மொழியும் நமதிரு கண்கள்.

இனிமேல் நாடும் மதமும் தான்!

•••

கடவுள்களின் சிலை தான் பிரச்சனை என்றால்...

சூரியதேவனுக்கும் பிரச்சனை!

பிரபாகரனுக்கும் சிலை வைத்திருக்கிறார்கள்.

பத்மநாபாவின் தலையோடு!
அகல, சகலமாக.
வழமை போல, துரோகி, ஒட்டுக்குழுவுக்கு சிலையா என்ற யாழ்ப்பாணிக் கேள்விகளோடும்,
உருவம் பற்றிய கிண்டல்களோடும்.

இருந்தாலும், தங்கள் தலைவன் என்று சொல்லி, நினைவு கூர்ந்து, தங்கள் பணத்தைச் செலவிட்டுச் சிலை வைக்க ஒரு கூட்டத்தை விட்டுச் சென்றிருக்கிறார்கள்.

உலகத் தமிழ்த் தேசியத்திற்கே தலைவர் என்று தாங்கள் கொண்டாடியவருக்கு ஒரு வெறும் படம் வைத்து விளக்குக் கொளுத்தவோ, பத்திரிகையில் நினைவு அஞ்சலி போடவோ முடியா விட்டாலும், உயிரோடு இருக்கிறார் என்று சொல்லி, அவரை வைத்துப் பிழைப்பு நடத்தலாம் என்ற நம்பிக்கையில் ஒரு கூட்டம் அலைகிறது.

அதெல்லாம் யாழ்ப்பாணிகளுக்கு பிரச்சனையாகத் தெரிவதில்லை.

ஏன்னா, அந்த அயோக்கியர்கள் எல்லாம் தமிழ்த் தேசிய செயற்பாட்டாளர்களும் உணர்வாளர்களும் ஆச்சே!?

அவங்கள் எங்கட ஆக்கள்!
என்னவோ,
இறுதி யுத்தம்
மாவிலாறில் தொடங்கி
முள்ளிவாய்க்காலில் முடியாமல்,
பொத்துவிலில் தொடங்கி
பொலிகண்டியில் முடிந்திருந்தால்…

தீர்வு கிடைத்து
'எல்லாம் சுபம்' ஆக முடிந்திருக்கும்!

•••

இலக்கிய மேதகுக்களின் எந்தப் படைப்பையும் பார்த்தாலும் 'நீரே எழுதினீரா? இல்லை, மண்டபத்தில் யாராவது?' என்று கேட்க வேண்டும் போலிருக்கிறது.

ஆசான், சாரு எல்லாம் மற்றவர்களின் எழுத்தைத் திருடி, தங்களதும் துணைவியரதும் பெயர்களைப் போட்ட கதை அடிக்கடி உலா வருகிறது.

தற்போது எஸ். ராமகிருஷ்ணனின் திரைக்கதை ஒன்று வேறு யாரோ எழுதியதைத் திருடியதாக கதை வந்திருக்கிறது. மாதவராஜ் எழுதிய கதையைப் போலவே, எஸ்.ராவின் அயோத்தி படக் கதை இருக்கிறது என்பது வெறும் கதைக்கருத் திருட்டோடு முடியவில்லைப் போலிருக்கிறது,

தனது சொந்த அனுபவத்தில், விபத்தில் சிக்கிக் கொண்டவர்களுக்கு உதவி செய்ய தான் அனுப்பியவர்கள் பட்ட கஷ்டங்கள் பற்றிய மாதவராஜின் தீராத பக்கங்கள் தளத்தில் வெளிவந்த மூலக்கதையில் வந்த அதே வரிகள் எஸ்.ராவின் திரைக்கதையில் வந்ததற்கு, great men thinking alike காரணமாகவும் இருக்கக் கூடும்.

அது எஸ்.ராவின் கதை இல்லை என்று எஸ்.ராவின் பேஸ்புக் பதிவில் யாரோ விட்ட பின்னூட்டம் அழிக்கப்படுகிறது. எஸ்ராவின் மறுப்பு மழுப்பலாகவே இருக்கிறது. விகடன் பேட்டியில் (விகடனுக்கும் அவருக்குமான உறவு பற்றி பின்பு!) பத்திரிகை செய்தியை அடிப்படையாகக் கொண்டது, தனக்கு யாரோ சொன்னது என்றெல்லாம் சடைகிறார். (யாழ்ப்பாண மொழி!)

'படம் மிகுந்த உணர்ச்சிபூர்வமான வரவேற்பைப் பெற்றுள்ளது. திரையரங்கினை விட்டு வெளியே வரும் பலரும் கண்ணீர் மல்கப் பாராட்டுகிறார்கள். ஊடகங்கள் படத்தைக் கொண்டாடுகிறார்கள். திரையுலகினைச் சேர்ந்த பலரும் எனக்குத் தொலைபேசியில் பாராட்டுத் தெரிவித்து வருகிறார்கள். எனக்கு மகிழ்ச்சியாக உள்ளது.' என்று எஸ்.ராவும் 'தன்னைப் புகழாத ஏஜன்சிக்காரன் இல்லை' என்ற மாதிரி தனது பேஸ்புக் பக்கத்தில் தன்னைத் தானே புகழ்ந்து தள்ளியிருந்தார்.

திருட்டைச் செய்து விட்டு பீற்றியும் கொள்ள,
தில் வேண்டும் தான்!

இலக்கிய மேதகுக்கள் எல்லாம் திருட்டும் தற்புகழ்ச்சியும் இயல்பாகவே வரும் அளவுக்கு அயோக்கியர்களாகவே இருக்கிறார்கள்.

வாயைத் திறந்தாலே பொய் சொல்கிறவர்களாக இருக்கிறார்கள்.

அறம் பற்றி அதிகமாக அலட்டிக் கொள்கிறவர்கள் தான் கடை கெட்ட அயோக்கியர்களாக இருக்கிறார்கள்.

•••

சாரு இலங்கை செல்கிறார்.

தான் இலங்கை செல்வதை விரும்பாத கூட்டம் சில ஐரோப்பிய நாடுகளில் உள்ளதாகவும், 'பலருக்கு எவரையாவது வெறுக்க வேண்டும், வெறுப்பது தான் அவர்களின் வாழ்வை அர்த்தமாக்குகிறது, அவர்களின் வாழ்வுக்கு அர்த்தம் தருவதற்கு வெறுப்பைத் தவிர வேறு எதுவும் இல்லை' என்று ரொம்பவும் கவலைப்படும் சாரு, அது பாசிசம் என்றும் எதிர்ப்பு பலமாக இருந்தால், தான் மாறுவேடத்திலாவது போய் வருவேன் என்கிறார்.

வாழ்வில் மற்றவர்கள் மீது வெறுப்பே இல்லாமல், கதவைத் திறந்து காற்றை உள்ளே வர விட்டபடி, 'அன்பே நித்தியம்!' என்கிறவர் இல்லையா?

சாரு பெரிய இலக்கிய மேதகு தானே!?
'என்பதை நண்பர்கள் மூலமாக அறிகிறேன்' தான்.
எல்லாம் கேள்விச் செவி ஞானம் தான். மற்றும்படி அடுத்தவர்களுக்குத் தெரியாமல், கழியறை வாசிப்பு மட்டும் தான்.

எனக்குத் தெரிந்து சாரு இலங்கைக்கு போகக் கூடாது என்று போர்க் கொடி தூக்கிய எவரையும் நான் கண்டு, கேட்டதில்லை.

யாராவது மண்டையைப் போட்டாலோ, இலங்கைக்குப் போனாலோ 'எமது மக்கள் கொத்துக் கொத்தாகக் கொல்லப்பட்ட போது என்ன செய்தார்கள்?' என்று போர்க்கொடி தூக்கும் யாழ்ப்பாணிகளுக்கும் சாரு என்றால் யார் என்றே தெரியாது.

'இரத்தம் காய முன் இலக்கியச் சந்திப்பா?' என்று சாரத்தை (லுங்கி) தூக்கிக் கட்டிய இலக்கிய யோக்கியர்கள் சாருவை எதிர்த்து தமது தமிழ்நாட்டுப் பிழைப்பைக் கெடுக்கப் போவதும் இல்லை.

ஐரோப்பிய நாடுகளில் என்பதால், கனடாவில் வாழும் நாங்கள் சந்தேக நபர்களாகக் கூட இல்லை.

சாருவுக்கு போட்டுக் கொடுத்த 'நண்பர்கள்' அந்த பாசிஸ்டுகள் யார் என்பதைச் சொன்னால், அவர்களோடு நாங்களும் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யலாம் என்றிருக்கிறோம்.

சாரு போன்றதொரு ஓசிக் குடிமகனுக்கு இலவசமாக எது கிடைத்தாலும், 'எனக்கும் ஒரு அப்பளம்!' தான்.

எதற்கு மாறுவேடம் எல்லாம்? போட்டாலும், தாடியும் தலைப்பாகையும் வைத்த குர்பா சிங் வாத்யார் மாதிரி உச்சரிப்பே காட்டிக் கொடுத்து விடும். படம் பார்க்கும் எங்களுக்குத் தெரியும். உட்கார்ந்திருக்கும் வில்லர்களுக்குத் தான் தெரியாது. (எது படம்? நினைத்ததை முடிப்பவன்?)

'முழு உடம்பும் பளபளவென மின்னும்' சுடிதார்களைக் கண்டு பல் இழித்து வழியும் போதே சாருவை அடையாளம் தெரிந்து விடுமே!?

அதற்குத் தானே அங்கே ஆமைக்கறி அண்ணன் இருக்காரே!?

அவருகிட்ட கேட்டா, எப்படி சிங்கள பாசிஸ்டுகளின் கண்ணில் மண்ணைத் தூவி விட்டு, எயர்போர்ட்டுக்குள்ளாலேயே போகிற வித்தையைக் கற்றுத் தர மாட்டாரா?

என்னவோ, வானத்தில் போகும் சனியனை ஏணி வைத்து இறக்கும் முயற்சியில் ஈடுபடும் ஈழத்து இலக்கியச் சான்றோர், சாருவின் பிரான்ஸ் பயணம் பற்றி கற்சுறா அபத்தத்திலும், தனது 'மற்றது' இணையப் பக்கத்திலும் எழுதியதைப் படிப்பது நல்லது.

யோக்கியன் வாரான், சொம்பை தூக்கி உள்ளே வை!

கமெரா, பச்சை மிளகாய்...

அத்தோடு, சுடிதார்களையும்!

•••

பெருமாள் முருகனின் மொழிபெயர்க்கப்பட்ட நாவல் புக்கர் பரிசுக்கு தெரிவாகக் கூடிய நாவல்கள் வரிசையில் தெரிவாகியிருக்கிறது.

**வானத்தில் போகும் சனியனை ஏணி வைத்து இறக்கும் முயற்சியில் ஈடுபடும் ஈழத்து இலக்கியச் சான்றோர், சாருவின் பிரான்ஸ் பயணம் பற்றி கற்சுறா அபத்தத்திலும், தனது 'மற்றது' இணையப் பக்கத்திலும் எழுதியதைப் படிப்பது நல்லது.**
**யோக்கியன் வாரான், சொம்பை தூக்கி உள்ளே வை!**
**கமெரா, பச்சை மிளகாய்...**
**அத்தோடு, சுடிதார்களையும்!**

(Long listed!)

சாரு தன்னுடைய இலட்சியமே அதுதான், புக்கர் பரிசுக்காக உழைக்கப் போகிறேன் என்று தான் சமீபத்திலும் சொன்னார்.

ஆசான் உள்ளே மனம் புழுங்கிக் கொண்டிருப்பார். கொஞ்ச நாளைக்கு முன் தான் மனுஷ்யபுத்திரன் விவகாரத்தில் பெருமாள் முருகனை இழுத்திருந்தார்.

விரைவில், பெருமாள் முருகன் என்ன பெரிய படைப்பாளியா? புக்கர் பரிசு என்றால் என்ன பெரிய கொம்பா? என்று இருவரும் புலம்புவதைக் காணலாம்.

சாரு தென்னமெரிக்காவில் புக்கர் பரிசு கொடுத்தால் அது தனக்குத் தான் என்பார். ஆசான் இந்திய இறைமைக்கு எதிரான ஏகாதிபத்திய சதி என்பார்.

மனுஷ்ய புத்திரனுக்கு கோவிச்சுக்க மாட்டார்.

அவருக்கு பெண் தோழிகளின் உட்பெட்டி உரையாடலே புக்கர் பரிசு மாதிரித் தான்!

•••

தமிழ்நாட்டில் பிரபலமான பெண் பேச்சாளர் கனடா வந்திருந்தார். கனடாவின் விருதுப்புரவலரான மூத்த எழுத்தாளரின் தரிசனம் கிடைத்து புல்லரித்துப் போயிருந்தார். அவர் முன்வரிசையில் வேறு உட்கார்ந்திருந்தாரே!?

போட்டாரே ஒரே போடாய்!

உலகத்திலேயே ஐந்து பெரிய தமிழ் எழுத்தாளர்களில் இவரும் ஒருவர் என்றார்.

ஆசான், சாரு, மனுஷ், எஸ்.ரா போன்ற யோக்கியர்கள் வரிசையில்...

இதற்கு எல்லாம் ஒரு ஜோக் கைவசம் இருக்கிறது. அது பின்னால் எழுத இருக்கும் ஒன்றுக்காக தற்போது தவிர்க்கப்படுகிறது.

அப்படி உலகின் ஐந்து பெரிய தமிழ் எழுத்தாளர்களில் ஒருவரான அவரை எழுத வைத்ததே தான் தான் என்று புத்தக விழாவில் சொன்னவர் தான், சின்னப் பையனான எனக்கும் தானே தான் வழிகாட்டியதாக கதை சொன்னார் அல்லவா!?

அப்போ, அவர் அந்த ஐந்து பேருக்கும் மேலேயா, கீழேயா?

இப்படி இலக்கிய உலகின் மேதகுக்களோடும் பெருந் தகைகளோடும் சரியாசனமோ, மேலே சிம்மாசனமோ பெறுவதில், நமக்கென்ன பொறாமை இருக்கிறது?

'ஏலே, மறந்திடாதீங்கடா. அக்காவுக்கும் விருது ஒரு பார்சல்!'

•••

ஓ!

அதானி குழும ஆதரவுடன் வழங்கப்பட்ட விருது ஒன்றை நிராகரித்த இலக்கிய உலகின் வேலு நாச்சியார் ஒருவரைப் பலரும் விதந்தோதியிருந்தார்கள்.

அவருக்கும் இயல் விருதின் ஏதோ ஒரு விருது வழங்கப்பட்டிருக்கிறது. அந்த இலக்கிய நோபல் பரிசை தான் வாங்கப் போவது பற்றி பெருமையோடு எழுதியிருந்ததைக் கண்டேன்.

விஸ்கி, விருது, விமானச்சீட்டு என தமிழ்நாட்டு அங்கீகாரத்தை தாங்கள் பெறுவதற்காக என்றே வழங்கப்படுகின்றதை, தன்னை அங்கீகரித்து வழங்கப்பட்டதாக பெருமைப்படுவதில் நமக்கு என்ன ஆட்சேபனை?

கொடுக்கிறாங்க.

வாங்கிறாங்க.

கொடுத்ததெல்லாம் கொடுத்தான்.

அவன் யாருக்காகக் கொடுத்தான்?

•••

ஒஸ்கார் விருதுகள் பார்த்தேன். ஊரில் கறுப்பு வெள்ளை டிவி வந்த காலத்தில் இதைப் பார்ப்பதற்கு நான் அலைந்ததை கதையாகவே எழுதலாம். பின்பு இங்கே வந்த பின்னால், தவற விடாமல் பார்த்தது.

பின்பு அதன் மீதான ஆர்வமும், நேரமும் இல்லாமலேயே போய் விட்டது. இதனால், பார்த்து நீண்ட நாட்கள். இம்முறை நாயும் கல்லும் ஒன்றாக அகப்பட்டது. உட்கார்ந்து பார்த்தேன்.

அப்படி ஒன்றும் புதிதாகவோ, சுவாரஷ்யமாகவோ இல்லை.

சர்வ மயமாய் கண்ணில் பட்டது,

பிரா போடாத பெண் பிரபலங்கள் தான்.

அட, இதைத் தானே டிக்டொக்கிலும், பேஸ்புக் றீல்களிலும் ஆயிரக்கணக்கில் இளம் பெண்கள் தளுக்கி குலுக்கிக் கொண்டிருக்கிறார்கள்!?

இதற்காக தூக்கத்தை இழக்க வேண்டுமா?

பொத்திக் கொண்டு படுத்து விட்டேன்.

•••

நாட்டு நாட்டுக்கு விருது கொடுத்தார்கள். அது பற்றிய உங்கள் சண்டைகள் உங்களுக்குள்.

பாட்டைக் கேட்டமா, கடந்து போனமா?

வாங்கிய மரகதமணி கீரவாணி, தான் Carpenters பாடலைக் கேட்டு வளர்ந்ததாகக் கூறியிருந்தார். பிபிசி தமிழ் செய்தி போட்டிருந்தது.

'தச்சுத் தொழிலாளர்களின் இசை கேட்டு வளர்ந்தேன்.'

அட, முட்டாள் பயலுகளா?

Carpenters என்பது ஒரு சகோதர, சகோதரி இணைந்த அமெரிக்க பாடற் குழு. அவர்களின் ஹிட் பாடலான Top of the world பாடலின் மெட்டில் கீரவாணி தனது பாடல் பற்றி ஒரு பாட்டையே பாடியிருந்தார். அதைக் கூட எழுதியிருந்த பிபிசி அது அந்த இசைக்குழுவின் பாடல் என்பதைக் கூட குறிப்பிடவில்லை.

பிபிசி விகடன் ரேஞ்சில் வந்து நிற்கிறது.

'ஆஸ்காரில் மரண மாஸ் காட்டிய கீரவாணி.

ஸ்கெட்ச் போட்டுத் தூக்கிய ராஜ மௌலி.

ஷாக் ஆன ஹாலிவூட்' என்று அழகு தமிழில் தலையங்கமும் போட்டிருக்கலாம்.

•••

இந்தியப் பெண்கள் இருவருக்கு The Elephant Whisperers படத்திற்கு விருது கொடுத்தார்கள். அது பற்றிக் கருத்துத் தெரிவித்த கவிஞர் இந்திரன் ராஜேந்திரன் 'பெண்கள் ஒருவர் மீது ஒருவர் பொறாமைப்படாமல் இணைந்து இயங்கினால் எதையும் சாதிக்கலாம் என்பது இதனால் நிரூபணம் ஆகிறது' என்று குறிப்பிட்டிருந்தார்.

என்னைப் பொறுத்தவரை அது ஒரு uncalled-for comment.

அதற்கு அம்பையும் லீனா மணிமேகலையும் ஆட்சேபம் தெரிவித்திருந்தார்கள். அதுவும் நியாயம் தான்.

பெரியவங்க, விசயம் தெரிஞ்சவங்க பேசிக் கொள்ளும்போது, நம்மைப் போன்ற ஞானசூனியங்கள் பேசாமல் கேட்டுக் கொண்டிருக்க வேண்டியதுதான்.

இலக்கிய மேதகுக்கள் இல்லையா? 'நீ கம்பியூட்டர் வைச்சிருக்கிற சின்னப் பையன். போய் அதில விளையாடு' என்று சொல்ல மாட்டார்களா?

இருந்தாலும், நமது பல்வகை அறிவுத் தேடலின் போது கண்ணில் அகப்பட்டது உளவியல் ஆய்வு பற்றிய ஒரு பதிவு.

*WOMEN TEND TO PERCEIVE OTHER WOMEN AS MORE COMPETITIVE IN ENVIRONMENTS WHERE RESOURCES ARE ABUNDANT, STUDY FINDS.*

அதன் இணைப்பைக் கொண்டு போய் பின்னூட்டத்தில் போட்டு வைத்தேன்.

புத்திஜீவிங்க உரையாடிக் கொண்டிருக்கும் போது, நம்மைப் போன்ற கற்றுக்குட்டிகள் கருத்துச் சொல்வதை கண்டுக்கவே மாட்டாங்க.

நமக்கென்ன? கொழுத்திப் போட்டு விட வேண்டியது தான். சண்டை அவங்களுக்குள்ளே தானே. நாம ஓரமா நின்னு வேடிக்கை பாக்க வேண்டியதுதான்...

கம்பியூட்டரில் விளையாடியபடியே!

•••

பெண்கள் தினம்
மார்ச் 8ம் திகதி.
வந்து போனது.

தோழர்கள் பலரும் தோழிகளைக் குஷிப்படுத்த ஆணாகப் பிறந்ததற்கு வெட்கப்படுகிறேன் என்று பேஸ்புக்கில் ஃபீல் பண்ணியிருக்கக் கூடும்.

ஆண் வர்க்கம் என்று எல்லா ஆண்களையும் சிலாவித் திட்டும் போது எல்லாம் எனக்கு கோபமோ, வெட்கமோ ஏற்படுவதில்லை.

ஆணாக இருப்பதால் எனக்கும் guilt by association ஏற்படுவதில்லை.

சிரிப்பு வரும்!

வெறும் கோஷங்களுக்கும் போராட்டங்களுக்குமான வேறுபாடு களும் தெரியும். இந்தக் கோஷங்களை மட்டுமே தங்கள் ஆளுமையாகக் கொண்டிருப்போரையும் தெரியும்.

கட்டற்ற பாலுறவு.

ஆண் செய்வதை எல்லாம் பெண்ணும் செய்வது தான் சமத்துவம்!

All men are dogs.

வார்த்தைகளை விட வாழ்வு முக்கியம் என்பதை மறந்து, வெறும் வார்த்தைகளை வைத்துக் கொண்டு, பெண்ணியம் தழுவும் தோழர்களையும், ஆணாதிக்க வாதிகளையும் பிரித்தறிந்து தீர்ப்பளிக்கும் வெற்றுக் கோஷப் பெண்ணியவாதிகளும், அந்தப் பெண்ணிய வாதிகளைக் குஷிப்படுத்திக் குலாவும் தோழர்களும் முழத்துக்கு முன்னூறு பேர்!


பெண்ணியம் தழுவும் தோழர்களின் மீ ரூ விவகாரங்களில் கள்ளமௌனம் சாதித்தோர், முட்டுக் கொடுத்தோரை எல்லாம் நீங்களும் காணாமலா விட்டிருப்பீர்கள்?

ஆனா,

பக்கத்தில் நிற்கும் செந்திலை 'எல்லாம் உன்னால தாண்டா, நாயீ!' என்று காரணமில்லாமல் கவுண்டமணி அறைவது போல, அறைய வேண்டும் போலிருந்தது...

பெண்கள் தினத்திற்கு
வைரமுத்து போட்ட
ட்வீட்டைப் பார்த்து!

# மட்டக்களப்புத் தமிழகம் என்னும் நாமம்: வரலாற்று தேடல்கள் 4




**எம்.ஆர்.ஸ்டாலின்**

Facebook: M R Stalin Gnanam

## மண்முனை இராசதானி

கிறிஸ்துவிற்கு முன்னரான பல நூற்றாண்டுகள் பழைமை வாய்ந்த கிழக்கின் அரசியல் வரலாறானது விஜயனின்-குவேனி காலத்திலிருந்து தீகவாவி மற்றும் உருகுணை ராச்சியத்துடன் ஒட்டியதாகவே நீடித்து வந்துள்ளது. உருகுணையின் அரசர்கள் சிங்கள மன்னர்களாக இருந்தபோதிலும் அதன் வடபுலமான கிழக்கிலங்கையில் பெரும்பாலும் தமிழ் மக்களே வாழ்ந்து வந்திருக்கின்றார்கள்.

உருகுணையின் கீழிருந்த மட்டக்களப்பு பிரதேசத்தில் ஏழுவகை சுயராச்சிய வன்னிமைகள் இருந்திருக்கின்றன. அவற்றை கலிங்கர், வங்கர், சிங்கர், போன்றோரின் தொடர்ச்சியில் முற்குக தமிழ் பிரதானிகளும் சிற்றரசர்களும் ஆண்டு வந்திருக்கிறார்கள். இவற்றை காரைதீவு, தம்பிலுவில், வீரமுனை போன்ற கண்ணகியம்மன் ஆலயங்கள் மற்றும் திருக்கோயில் கொக்கட்டிசோலை எனுமிடங்களிலுள்ள கோவில்களிலும் காணப்படுகின்ற கல்வெட்டுக்கள், பட்டயங்கள் போன்றவற்றின் ஊடாக அறியலாம்.

அவ்வகையில் சுமார் நான்காம் நூற்றாண்டளவில் மட்டக்களப்பு பிரதேசத்தை குணசிங்கன் என்பவன் ஆட்சி செய்து கொண்டிருந்த காலத்தில் இந்தியாவில் கலிங்கதேசத்தை (ஒரிசா) குகசேனன் என்பவன் ஆண்டுகொண்டிருந்தான். அவனுடைய புத்திரியான உலகநாச்சிக்கும் மட்டக்களப்பின் வரலாற்றுக்கும் நெருங்கிய தொடர்புகள் உண்டு.

அக்காலத்தில் புத்தரின் எலும்புகளும் தந்தங்களும் புனித பொருட்களாக கருதப்பட்டு கவனமாகப் பாதுகாக்கப்பட்டுவந்தன. அவை புத்தரின் நினைவாக இந்தியாவிலிருந்து பவுத்தம் பரவிய எல்லா நாடுகளுக்கும் கொண்டு செல்லப்பட்டன. அவ்வாறாக இந்த உலகநாச்சியூடாக இந்தியாவிலிருந்து பாதுகாக்கப்பட்டு கொண்டுவரப்பட்ட புத்தருடைய புனித தந்தத்தை அவள் மட்டக்களப்பு மன்னனாகிய குணசிங்கனிடம் ஒப்படைத்தாள். அந்தப் புனித தந்தமே இன்றுவரை கண்டி தலதா மாளிகையில் வைத்து வணங்கப்பட்டுவருவதாகும்.

“ உலகநாச்சியூடாக இந்தியாவிலிருந்து பாதுகாக்கப்பட்டு கொண்டுவரப்பட்ட புத்தருடைய புனித தந்தத்தை அவள் மட்டக்களப்பு மன்னனாகிய குணசிங்கனிடம் ஒப்படைத்தாள். அந்தப் புனித தந்தமே இன்றுவரை கண்டி தலதா மாளிகையில் வைத்து வணங்கப்பட்டுவருவதாகும். ”

உலகநாச்சியின் இப்பெரும் பணிக்கான பிரதியுபகாரமாக அவளுக்கு மண்முனை பிரதேசத்தை குணசிங்கன் பரிசளித்தான். இந்த உலகநாச்சியின் நிர்வாகத்தின் கீழே அப்பிரதேசம் வளம் பெற்று நின்றது. அப்போதுதான் கொக்கட்டிச்சோலை கோவில் உருவாக்கப்பட்டதாக மட்டக்களப்பு வரலாற்று நூல்கள் குறிப்பிடுகின்றன.

காலப்போக்கில் உலகநாச்சியின் ஆட்சிப் பிரதேசமான மண்முனை ஒரு இராசதானியாக வளர்ச்சி பெற்றது. மட்டக்களப்பின் பிரதான மையமாகவும் மண்முனை மாறியது. அவ்வேளையில் இன்றுள்ள மட்டக்களப்பானது புளியந்தீவு என்னும் சிறு கிராமமாக இருந்தது. இதன்காரணமாகவே இன்றுவரை மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பல பிரதேசங்களுக்கு மண்முனையை மையமாகக்கொண்டு அழைக்கப்படும் திசைக்குறிப்புப் பெயர்களே (மண்முனை-மேற்கு,மண்முனை-வடக்கு,மண்முனை-தெற்கு, மண்முனை- தென்மேற்கு) வழங்கப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறாக விஜயன்-குவேனி காலத்திலிருந்து சுமார் ஆயிரம் ஆண்டுகளாக நீடித்த உருகுணு

இராச்சியத்துடனான (கண்டி) கிழக்கிலங்கையின் அரசியல் ஒட்டுறவானது கி.பி எட்டாம் நூற்றாண்டில் பலமடைந்த இராசரட்டை ஆட்சியாளர்கள் தீகவாவியை கைப்பற்றியதன் ஊடாக முதன் முறையாக துண்டாடப்பட்டது. அதன்காரணமாக உருகுணை இராச்சியத்தின் அங்கமாக இருந்துவந்த கிழக்கிலங்கையின் பிரதேசங்கள் அனுராதபுரத்தை தலைநகராகக் கொண்ட இராசரெட்டை ஆட்சியின் கீழ் வந்தன.

11ஆம் நூற்றாண்டில் சோழரது படையெடுப்பு நிகழும்வரை சுமார் இரண்டு நூற்றாண்டுகள் இந்நிலை நீடித்தது. 1017 ல் இலங்கை மீது இந்தியப் படையெடுப்பு நிகழ்ந்தது. இப்படையெடுப்பின் காரணமாக சோழராட்சி இலங்கையில் ஏற்பட்டபோது கிழக்கிலங்கையும் இந்த சோழராட்சிக்குட்பட வேண்டியிருந்தது. இவ்வேளை சோழப்பேரரசின் சிற்றரசனாக இருந்த கதிர்சுதன் எனும் சிற்றரசனின் ஆட்சியின் கீழ் கிழக்குப் பகுதிகள் ஆளப்பட்டிருக்கிறன.

எனினும் 1070ஆம் ஆண்டுகளில் சோழப்பேரரசின் வீழ்ச்சியை தொடர்ந்து, மீண்டும் இராசரட்டையின் ஆட்புல எல்லைக்குள் கிழக்கிலங்கை வீழ்ந்திருக்கின்றது. விஜயபாகு, பராக்கிரமபாகு என்பவர்கள் கிழக்கிலங்கையை தமது ஆட்சியின் கீழ் கொண்டுவந்திருக்கிறார்கள். தீகவாவிகூட பொலநறுவையிலிருந்து ஆண்ட பராக்கிரமபாகுவின் ஆட்சியின்கீழ் வீழ்ந்திருக்கிறது.

1164ல் தொடங்கிய பராக்கிரமபாகுவின் ஆட்சிக்காலம் இலங்கையில் விவசாயத்துக்கும் தன்னிறைவுப் பொருளாதாரத்தை நோக்கிய திட்டங்களுக்கும் பெயர்போனதாகும். 12 ஆம் நூற்றாண்டில் கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் குளங்கள் கட்டப்பட்டு மழைநீரை சேகரித்து நீர்ப்பாசனம் மூலமான விவசாய முன்னெடுப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டு ஊக்கப்படுத்தப்பட்டுள்ளன. இக்காலத்தில் தான் பொலன்னறுவையிலுள்ள பராக்கிரம சமுத்திரம் போன்ற மிகப்பெரிய நீர்த்தேக்க குளங்கள் கட்டப்பட்டுள்ளன. பராக்கிரமபாகுவின் திறன்மிகு ஆட்சி காரணமாக இராமேஸ்வரம் கூட இலங்கையின் ஆளுகைக்கு உட்பட்ட காலமாக அது இருந்துள்ளது.

தினசிங்கனைக்கொன்று

12 ஆம் நூற்றாண்டில் கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் குளங்கள் கட்டப்பட்டு மழைநீரை சேகரித்து நீர்ப்பாசனம் மூலமான விவசாய முன்னெடுப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டு ஊக்கப்படுத்தப்பட்டுள்ளன. இக்காலத்தில் தான் பொலன்னறுவையிலுள்ள பராக்கிரம சமுத்திரம் போன்ற மிகப்பெரிய நீர்த்தேக்க குளங்கள் கட்டப்பட்டுள்ளன. பராக்கிரமபாகுவின் திறன்மிகு ஆட்சி காரணமாக இராமேஸ்வரம் கூட இலங்கையின் ஆளுகைக்கு உட்பட்ட காலமாக அது இருந்துள்ளது.

சமணத்தை அழித்த மாகோன் இந்தியாவின் கலிங்க தேசத்தில் (ஒரிசா) இருந்து பதின்மூன்றாம் நூற்றாண்டில் இலங்கை மீது படையெடுத்த மாகோன் என்பான் ஏறக்குறைய இலங்கையின் பெரும் பகுதிகளை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தான். அந்தவகையில் கிழக்கிலங்கையும் அவனது ஆட்சியின்கீழ் வந்தது. இந்த கலிங்க மாகோன் சுமார் நாற்பது ஆண்டுகள்(1215-1255) இலங்கையை ஆண்டானென அறியமுடிகின்றது. கலிங்க மாகோன் என அழைக்கப்பட்ட இவனது நீண்ட கால ஆட்சிக்காலத்தில் பழுகாமத்தில் இவனது உபராசதானி ஒன்றும் இருந்துள்ளது.

இலங்கையின் தமிழ் சிங்கள வரலாற்று நூல்களில் ஏறக்குறைய அனைத்திலும் தவறாது இடம் பெறும் அளவிற்கு இந்த கலிங்க மாகோனின் வரலாறு முழு இலங்கையையும் பொறுத்தவரையில் முக்கியத்துவமுடையதொன்றாகும். அதேபோல் மட்டக்களப்பின் வரலாற்றிலும் மாகோனின் ஆட்சியானது அழியாத தடயங்களை விட்டுச் சென்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அந்தவகையில் காலம் சென்ற எழுத்தாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான பண்டிதை தங்கேஸ்வரி அவர்கள் எழுதிய “மாகோன் வரலாறு” என்னும் ஆய்வு நூல் மட்டக்களப்பின் வரலாற்று நூல்வரிசைகளில் மிக முக்கியமானதொன்றாகும். அந்நூலில் அவர் மாகோனின் ஆட்சியானது மட்டக்களப்பு மண்ணிலே ஏற்படுத்திய சமூக கட்டமைப்பு மாற்றங்களை விலாவரியாக விபரித்துள்ளார்.

கலிங்க தேசத்திலிருந்து வந்து இலங்கையை ஆக்கிரமித்த மாகோன் கிழக்கிலங்கையின் வரலாற்றில் பெரும் பாதிப்பனை ஏற்படுத்தினான். இந்த மாகோன் இலங்கைக்கு வருகையில் சமணமும், பௌத்தமும், சைவமும் பெரும்பாலான மக்களின் நம்பிக்கைக்குரிய மதவழிபாடுகளாக இருந்தன. அவ்வேளை தினசிங்கன் எனும் முற்குக ராசன் மட்டக்களப்பை ஆண்டு கொண்டிருந்தான். மொழிரீதியாக தமிழையே பேசிய போதும் கிழக்கு வாழ்மக்கள் சமணத்தையும், பௌத்தத்தையும் பரவலாக வழிபட்டனர். இதனைக்கண்ணுற்ற மாகோன் சைவத்தை நிலைநாட்டுவதற்காக அரும்பாடுபட்டான் என விதந்தோதுகின்றார் பண்டிதையவர்கள்.

அதேவேளை இந்த மாகோனது படையெடுப்பு இலங்கையில் என்னசெய்தது என்பதை “யாழ்ப்பாணச் சரித்திரம்” இப்படி சொல்கிறது. (பக்-36)

1225 ல் மாகன் என்னுந் தமிழரசன் கலிங்க தேசத்திலிருந்து பெரும்படையோடு வந்து போர் செய்து இலங்கை முழுதையுந் தனதாக்கினான். ஈற்றில் யாழ்ப்பாணத்தையுங் கைக்கொண்டு இருபது வருஷம் அரசு செய்து இலங்கைக் குடிகளை வருத்தி அவர்களிடத்துள்ளதெல்லாங் கவர்ந்ததுமன்றிப் பௌத்தாலயங்களையும் விகாரங்களையுமழித்தும் கன்னியர்களை மானபங்கஞ் செய்தும் நிஷ்டூரனானான். இந்த மாகோனது படையெடுப்பின்போது மட்டக்களப்பினை தினசிங்கன் எனும் முற்குக இராசன் ஆண்டான். இவன் சமணசமயத்திற்கு பாதுகாவலனாயிருந்து அச்சமயத்தை வளர்த்தான் என்பதனால் இலங்கையை வென்ற மாகோன் இந்த தினசிங்கனை கொன்று சமண சமயத்தை கொடூரமாக அழித்துள்ளான் என்பதை அறிய முடிகின்றது.

மறுபுறம் பராக்கிரமபாகு ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட குளங்கள், மற்றும் நீர்ப்பாசனத்திட்டங்கள்

ஊடாக அனுராதபுரம், பொலநறுவை போன்ற பகுதிகள் மிகசெழிப்பான பூமியாக வளம்பெற்றிருந்தன. ஆனால் கலிங்க மாகோனின் படையெடுப்பு இப்பொருளாதார வளங்களை அழித்தொழித்த காரணத்தால் இப்பிரதேசங்கள் வரண்ட பகுதியாக மாறின.

பஞ்சமும் பசியும் பட்டினியும் தாங்காது இப்பகுதிகளில் வாழ்ந்த மக்கள் தெற்கு நோக்கி புலம்பெயர்ந்தனர். மாகோனின் நீண்டகால ஆட்சியில் கைவிடப்பட்டு காடுகள் மண்டிப் போனதன் காரணமாகவே அனுராதபுரம் போன்ற பகுதிகள் மனிதர்கள் வாழாத காடுகளாக மாறின எனவும் மகாவம்சம், சூளவம்சம் போன்ற நூல்கள் மாகோனைப்பற்றிக் குறிப்பிடுகின்றன. அதேவேளையில் கிழக்கிலங்கையில் சைவம் மீண்டும் தழைத்தது என்றும் ஆலயத் திருப்பணிகள் ஒழுங்கமைக்கப்பட்டன. திருகோணமலை கோணேஸ்வரர் ஆலயம், கொக்கட்டிச்சோலை தான்தோன்றிஸ்வரர் ஆலயம், திருக்கோவில் ஆலயம் போன்றவற்றை புனரமைத்து அவற்றையண்டிய குடியேற்றங்களும் இடம்பெற்றதனூடாக கிழக்கிலங்கையில் கேந்திர ஸ்தானங்களாக இம்மூன்று நகரங்களையும் வளர்த்தெடுத்ததில் மாகோன் ஆட்சியின் பங்களிப்பு இருந்தமையை அறியமுடிகின்றது.

மதங்களின் அடிப்படையில் கலிங்கத்தில் அவ்வேளையில் வளர்ந்துவந்த வீரசைவ வழிபாட்டு முறைகளே இங்கு அறிமுகமாகியுள்ளன. அதாவது லிங்க வழிபாட்டை முன்னிறுத்தும் லிங்கதாரிகளே இக்கோவில்களின் பூசகர்களாகும். அவர்களை சங்கமர்கள் என்றும் குருக்கள்மார் என்றும் அழைப்பர். இச்சங்கமர்களை கிழக்கிலே குடியேற்றி அக்கோவில்களின் பணிகளை செவ்வனே நிறைவேற்றுவதற்கு உதவியாக பலவிதமான குடிமைச்சாதிகளையும் மாகோன் கிழக்கில் குடியேற்றியுள்ளான். அதுமட்டுமன்றி கிராம நிர்வாகங்களுக்கு வன்னிமைகளை நியமித்து, கோவில் பணிகளில் ஒவ்வொரு சாதியினரின் பணிகளும் கடமைகளும் குறித்தொதுக்கப்பட்டு அவ்வப்பிரதேசங்களில் அவர்களைக் குடியேற்றி ஒரு ஆட்சியதிகார சமூகக்கட்டமைப்பை உறுதி செய்தவன் மாகோனேயாகும்.

இந்த மாகோனையே சைவத்தையும் தமிழையும் வளர்த்த

**கிழக்கிலங்கையினது சுமார் 2000 ஆண்டுகால வரலாற்றுப் போக்கில் இம்மாகாணம் ஒருபோதும் யாழ்ப்பாணத்துடனான ஆட்சி அதிகாரத் தொடர்புகளை வரலாற்றில் எந்தச் சந்தப்பத்திலும் கொண்டிருக்கவில்லை.**

பெருமகனென்று இந்நூல் புகழ்கின்றது. மறுபுறத்தில் பூர்வகுடிகளின் "பகிர்ந்துண்டு வாழ்தல்" என்னும் பண்பாட்டை சீர்குலைத்து, ஏற்றத்தாழ்வுகளைக் கொண்ட சாதியப்படிநிலை சமூகக் கட்டமைப்பை கிழக்கின் வரலாற்றில் அறிமுகம் செய்து, இன்றுவரை ஆலய நிர்வாகங்களில் குடிமுறைகளும் சாதியமைப்புகளும் கோலோச்சுவதற்கு இந்த மாகோன் வகுத்த முறைமைகள் காரணமாகியுமுள்ளன.

கலிங்க தேசத்திலிருந்து வந்த இந்த மன்னன் இலங்கையை ஆண்ட காலத்தில் யாழ்ப்பாணமும் அவனது ஆட்சியிலேயே இருந்தமை குறிப்பிடத்தக்கது. அங்கும் இதே போன்றே குடிமைச் சாதிகளைக் இந்தியாவிலிருந்து கொண்டுவந்து குடியேற்றி சாதியக்கட்டமைப்பை நிலைநிறுத்தியவனாக இந்த மாகோனே அறியப்படுகின்றான். இவனது காலத்திலிருந்துதான் யாழ்ப்பாண இராச்சியம் என்னும் ஒரு புதிய "ஆட்சிப் பிரதேசம்" இலங்கை வரலாற்றில் அறிமுகமாகியது. அவனையே யாழ்ப்பாண இராச்சியத்தின் முதலாவது மன்னனென்றும் விஜய காலிங்க சக்கரவர்த்தி எனவும் யாழ்ப்பாண வரலாற்றாசிரியர்கள் கொண்டாடுகின்றனர்.

இந்த மாகோனின் ஆட்சியானது தென்னிலங்கையிலிருந்து மீளவும் மேலெழுந்த இரண்டாம் பராக்கிரமபாகு மன்னனால் கி.பி.1256 ஆம் ஆண்டு இலங்கையிலிருந்து ஒழிக்கப்பட்டிருக்கிறது. அதனைத் தொடர்ந்து கிழக்கிலங்கையின் பிரதேசங்கள் மீண்டும் கண்டி இராச்சியத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. பின்பு சில காலங்களில் கோட்டை மன்னனின் அரசின் கீழான சிற்றரசுகளாகவும் மட்டக்களப்பின் பல பிரதேசங்கள் ஆளப்பட்டிருக்கின்றன.

கடந்த நான்கு பாகங்களாக தொடர்ந்த வரலாற்றுக் குறிப்புகளின் ஊடாக நாம் இரண்டு முக்கியமான செய்திகளை அடைய முடிகின்றது.

முதலாவதாக இராவணன்-இராமன் காலத்திலிருந்து தொடங்கி குவேனி-விஜயன் காலம் ஈறாக துட்டகைமுனு-எல்லாளன் என்று தொடர்ந்த சோழச்சக்கரவர்த்திகள், கலிங்கச் சக்கரவர்த்திகள் என்கின்ற இந்திய ஆக்கிரமிப்பாளர்கள் அத்தனைபேராலும் இலங்கையென்னும் குட்டித்தீவின் ஆட்சியதிகாரத்தையும் இறைமையையும் இலங்கையர்களிடமிருந்து குறிப்பாக சிங்கள மன்னர்களிடமிருந்து நிரந்தரமாக பறித்துவிட முடியவில்லை என்பதாகும்.

இரண்டாவதாக...

*கிழக்கிலங்கையில் ஒரு நிரந்தரமானதும் பலமானதுமான மன்னர் பரம்பரையொன்று இருந்திருக்காமையை காணமுடிகின்றது. சில வேளைகளில் இங்கு பலதரப்பட மதங்களுக்கும் இனங்களுக்கும் இடம்கொடுத்து வந்தாரை வரவேற்றமைதான் இன்றுவரை வாழும் கிழக்கு மக்கள் அனைவரும் சகோதரர்களாக இனப்பெருமையோ மதப்பெருமையோ கொள்ளாத சகிப்புத் தன்மை கொண்டவர்களாக வாழ்வதற்கும் காரணமாய் இருக்கலாம். சிலவேளைகளில் இனத்தின் பெயராலோ மொழியின் பெயராலோ பலமானதொரு ஆட்சி அதிகாரம் இங்கு நிலை பெற்றிருந்திருந்தால் இந்த பன்மைத்துவ வாழ்க்கைச் சூழலை நாம் பெற்றுக்கொள்ளுதல் சாத்தியமற்றுப் போயிருக்கலாம் ஆனபோதும் இடையே வந்த தமிழீழத்தை அடிப்படையாகக் கொண்ட போராட்டத்தின் வடுக்கள் இனங்களிடையே குரோதங்களை ஏற்படுத்தி விட்டுச் சென்றுள்ளன.

*கிழக்கிலங்கையினது சுமார் 2000 ஆண்டுகால வரலாற்றுப் போக்கில் இம்மாகாணம் ஒருபோதும் யாழ்ப்பாணத்துடனான ஆட்சி அதிகாரத் தொடர்புகளை வரலாற்றில் எந்தச் சந்தப்பத்திலும்கொண்டிருக்கவில்லை. எல்லாளன், மாகோன் என்கின்ற இந்திய மன்னர்களின் ஆட்சியின் கீழ் இலங்கையின் ஒருங்கிணைக்கப்பட்ட சந்தர்ப்பங்களைத் தவிர கிழக்கானது எப்போதுமே கண்டிராச்சியத்துக்கு உட்பட்டதாகவே ஆளப்பட்டு வந்துள்ளது. அதேவேளை வன்னிமைகளாகவும் குறுநில மன்னர்களாகவும் சிற்றரசுகளாகவும் தமிழ் ஆட்சியாளர்கள் மட்டக்களப்பு தமிழகத்தின் தனித்துவத்தை தொடர்ந்து உறுதிப்படுத்தியே வந்துள்ளனர் என்பதும் தெளிவாகின்றது.

தொடரும்




# கன்னியர்களின் கனவுக் காதலர்கள்

பேரறுஞர் கல்லாநிதி கியூறியஸ் ஜி

சொன்னால் சிரிக்கக் கூடாது.

ஒரு காலத்தில் எனக்கு ஒரு பெரிய இலட்சியம், கனவு ஒன்று இருந்தது.

இதை எல்லாம் சிறுபிள்ளைத் தனமானது என்றோ, கோமாளித்தனமானது என்றோ நீங்கள் நினைக்கக் கூடாது.

அது என்னவென்று சொல்வதற்கு முன்னால் ஒரு எச்சரிக்கையையும் கட்டாயம் சொல்லி ஆக வேண்டி இருக்கிறது.

இளகிய, மென்மையான இதயமோ, இருதய நோயோ உள்ள பெண்கள் இதை நிச்சயம் படிக்க வேண்டாம். சில நேரம் அளவுக்கு மீறிச் சிரிப்பதே, மூச்சு விட முடியாமல், ஆபத்தில் முடியக் கூடும்.

இந்த எச்சரிக்கையையும் மீறிப் படிப்போர்களுக்கு ஏற்படும் விளைவுகளுக்கு கம்பனி எந்த விதத்திலும் பொறுப்பேற்காது.

இதெல்லாம் சிறீதேவி என் கனவுக்கன்னியாக இருந்த விவரம் தெரியாத காலத்திற்கு பிற்பட்ட, குமுதம், விகடன், கமலஹாசன் படங்களுக்கு அப்பாலான உலகத்தைத் தேடிய, கொஞ்சம் புத்தி விபரம் தெரிந்த காலத்துக் கனவு.

இளவட்டங்களுக்கு எல்லாம் கல்லூரிப் பெண்களின் கனவுக் காதலனாக இருக்க வேண்டும் என்ற கனவு எல்லாம் இருக்கும்.

எனக்கு அப்படிக் கனவுகள் இருந்ததில்லை.

முயல் பிடிக்கிற நாயை மூஞ்சியில தெரியும். கனவுக் காதலன் ஆகும் கனவு நமது ராசிப்படி பலன் இல்லை. நம்ம தகுதிக்கும் கனவுக் கன்னிகளே அருளப்பட்டிருக்கிறார்கள். அதிலும் அவர்களுக்கு என்னைத் தெரிந்திருக்க வேண்டும் என்ற நிபந்தனை கூட இல்லை என்பது கூடுதல் போனஸ்.

இப்படித் தங்களை ஹீரோக்களாக எண்ணியபடி, நெஞ்சு பட்டனைத் திறந்தபடி ஊரில் வலம் வந்த பெல்பொட்ட ஹிப்பிகளை அந்தக் காலத்தில் நிறையக் கண்டிருக்கிறேன்.

பெண்கள் பள்ளிக்கூடம் முடிந்த நேரங்களில், பஸ் ஸ்ராண்டில் அதிகமாக நடமாடுவார்கள். இவர்களில் பலர் ஓமான் போய் சீமானாகி வந்தவர்கள். இவர்கள் பெரும்பாலும் உழைத்த பணத்தை சகோதரிகளின் சீதனத்திற்காக அழுத பின்னால், திரும்பவும் போக முடியாமல் அல்லல்படுகிறவர்களாகத் தான் இருந்திருக்க வேண்டும்.

ஏனென்றால், மற்றவர்கள் எல்லாம் கொண்டு வந்த பணத்தில் வாங்கிய ஹொண்டா சிடி185 இல், அந்த மாணவிகள் எல்லாம் பஸ் ஸ்ராண்ட் வரும் வரை காத்திராமல், அந்த பெண்கள் பாடசாலைகள் முன்பாகவே முறுக்குவார்கள்.

இவர்கள் அதற்கெல்லாம் பணம் இருந்திருக்காமல், நியூ மார்க்கட்டில் இருந்த றெக்கோடிங் பாரில் பதிவு செய்த பாடல்கள் அடங்கிய கசட்டுகளோடு பஸ் ஸ்ராண்டில் நடமாடுவார்கள். அந்தப் பெண்களோடு உரசியபடி பயணம் செய்வதற்காக!

பக்கத்து வீட்டுக்காரனின் தூக்கம் கலைக்கும் ரூ இன் வண் கசட் பிளேயர் இசைப்பெட்டி தான் அவர்களின் உழைப்பில் மிஞ்சியதாக இருந்திருக்கக் கூடும்.

சினிமா நடிகர்கள் பெண்களின் கனவுக்காதலர்களாக இருந்திருக்கிறார்கள்.

வாத்தியார் இதில் கொஞ்சம் வித்தியாசம்.

அவரது காதலிகள் தான் அவரை விழுந்து விழுந்து காதலிப்பார்கள்.

அவர் பண்பாட்டோடு, தாய்க்குலத்தைக் கட்டியணைத்து, சுவரைப் பார்த்து, முழங்கையால் மூடி அழுவார்.

அந்தக் காதலிகளின் கனவில் மட்டும், அவர் அவர்களை றொட்டிக்கு மா குழைப்பது போல உருட்டிப் பிசைவார்.

காதலிகளின் கனவு தான் என்பதால், அதற்காக அவர் மீது #MeToo குற்றச்சாட்டும் வைக்க முடியாது.

ஆனால், அவர் தனது படத்தின் நாயகிகளின் கனவுக்

காதலனாக இருந்தாரே அன்றி, கல்லூரி மாணவிகளின் கனவுகளில் வந்து தொல்லை தந்ததில்லை.

இது எங்களுக்கு வசதியாகவும் இருந்தது. வாத்தியார் படத்திற்குப் போய், கிடைத்த சில்லறையில் வெட்கமில்லாமல் கலரியில் உட்கார்ந்து கெளரவமாகப் பார்க்க முடிந்தது...

பக்கத்தில் இருப்பவர்களின் எச்சில் துப்பல்களுக்கும் மத்தியில்.

சிவாஜி, முத்துராமன், ஜெமினி, ஜெய்சங்கர் எல்லாம் நடுத்தர வயதுக் குடும்பப் பெண்களின் கனவுகளில் தான் தொல்லை தந்திருக்கக் கூடும்.

அந்த நடுத்தர வயதுப் பெண்கள் ரொட்டி சைஸில் இல்லாததால், அந்தக் கனவுகளிலும் இந்த நடிகர்களும் வாத்தியாருக்குப் போட்டியாக, குண்டுப்பணியாரத்திற்கு மா குழைத்திருக்கக் கூடும்.

யாரறிவாரோ ஊமைகளின் கனவு?

இந்தக் காலங்களின் பின்னர், கல்லூரிப் பெண்களின் கனவு நாயகன்களாக வந்தவர்கள் தான்...

கமலஹாசன் முதல் கமலஹாசன் முகவெட்டில், முகப்பருக் காயங்களோடு இருந்த மைக் மோகன் வரை.

கிட்டத்தட்ட அந்தக் காலத்தில் ஹிப்பித் தலை வளர்த்து, பெல்பொட்டம் போட்டிருந்த எல்லா நடிகர்களுமே கல்லூரிப் பெண்களின் கனவு நாயகன்கள் தான்.

சங்கர், சுதாகர், ரவீந்தர்...

ரஜனிக்கும், ரகுவரனுக்கும் கூட, முரட்டு ஆண்களை ரசிக்கும் பெண் ரசிகைகள் இருந்தனர்.

அவர்களும் கனவுகளில் பெண்களை மென்மையாகவே கையாண்டார்கள், புளித்த மாவு தோசையைப் புரட்டுவது போல, கவனமாக!

அந்தக் காலத்தில் கமலஹாசன் அட்டைப்படத்தோடு வந்த பேசும் படம், பொம்மை, பிலிமாலயாவை வாங்கி, நெஞ்சோடு அணைத்தபடி திரிந்த பல பெண்களை எங்கள் பஸ்ஸில் கண்டிருக்கிறேன்.

இவர்கள் எல்லாம் அந்தக் காலப் படங்களைப் பார்க்க மொய்த்ததால், கெளரவக் குறைச்சல் காரணமாக நாங்கள் கலரியில் உட்கார்ந்து பார்க்க முடியவில்லை. செக்கன்ட் கிளாஸ் டிக்கட்டுக்களுக்கு பணத்தை அழ வேண்டியிருந்தது.

ஆனால், அந்த பெண்கள் எல்லாம் றிசேர்வ்ட் கிளாஸில் தான் படம் பார்த்தார்கள். எங்களைப் போன்ற செக்கன்ட் கிளாஸ் சிட்டிசன்களைக் கணக்கில் எடுத்ததில்லை.

பிறகு வந்த தல, தளபதிகளுக்கு ஆண் வெறியர்களே ரசிகர்களாக இருந்ததால், பாலாபிஷேகங்களுக்கு மத்தியில் மாணவிகள் எப்படி போட்டி போட்டுச் சமாளித்தார்கள் என்பதைக் கண்டு இன்புற நான் ஊரிலும் இல்லை. ஒரு வேளை யாருக்கும் தெரியாமல், படுக்கையறைச் சுவர்களில் அவர்களைக் குடியிருத்தியிருக்கக் கூடும்.

அந்தக் காலத்தில் கமலஹாசன் அட்டைப்படத்தோடு வந்த பேசும் படம், பொம்மை, பிலிமாலயாவை வாங்கி, நெஞ்சோடு அணைத்தபடி திரிந்த பல பெண்களை எங்கள் பஸ்ஸில் கண்டிருக்கிறேன்.

இவர்கள் எல்லாம் அந்தக் காலப் படங்களைப் பார்க்க மொய்த்ததால், கெளரவக் குறைச்சல் காரணமாக நாங்கள் கலரியில் உட்கார்ந்து பார்க்க முடியவில்லை. செக்கன்ட் கிளாஸ் டிக்கட்டுக்களுக்கு பணத்தை அழ வேண்டியிருந்தது.

ஆனால், அந்த பெண்கள் எல்லாம் றிசேர்வ்ட் கிளாஸில் தான் படம் பார்த்தார்கள். எங்களைப் போன்ற செக்கன்ட் கிளாஸ் சிட்டிசன்களைக் கணக்கில் எடுத்ததில்லை.

பிறகு முகவெட்டே தேவைப்படாமல், சிம்புவும், தனுஷும் இருந்தார்கள். அவர்கள் ரொட்டி உருட்டும் உருளை சைஸிலும் இருந்தார்கள்.

இப்படியாக, சினிமா நடிகர்கள் வழியில் பெண்களின் கனவுக் காதலனாகும் முயற்சியில், நான் ஊரில் இருந்த காலத்தில் ஒரு கமலஹாசன் எங்கள் பக்கம் இருந்தார். சிவப்பாக, பெல்பொட்டம், உடலோடு ஒட்டிய பொலியெஸ்டர் சேர்ட், பட்டை சைஸ் பெல்ட், பிளட்போர்ம் சப்பாத்து, ஹிப்பித் தலை, மயிர் பறந்து விடாமல் போட்ட கிளிப், சண் கிளாஸ், மோட்டார் சைக்கிள்.

கல்லூரிப் பெண்கள் பாடசாலை பஸ்ஸிற்காக நிற்கும் நேரத்தில் தான் அவரும் பட்டையை... ஓ... புழுதியைக் கிளப்புவார். ஊரிலிருந்து நகரத்திற்கு போக வேண்டியவர், சம்பந்தமில்லாத இடங்களிலும் திசைகளிலும் எல்லாம் ஹீரோ போல வலம் வந்தார்.

அவரும் பலருக்கு கனவுக் காதலனாக இருந்தார். பஸ்ஸில் போகும் பெண்களை காதல் பண்ண பஸ்ஸில் போயிருக்க வேண்டும். வேகமாய் கடந்து போகிறவரைக் காதல் பண்ணவா முடியும்? கனவு தான் காண முடியும்.

துரதிஷ்டம். ஒரு நாள் மோட்டார் சைக்கிள் விபத்தில் இறந்து விட்டார்.

அவரது மரண வீட்டில் பல முன்பின் தெரியாத மாணவிகள் வந்து அழுது கொண்டிருந்ததாகச் சொன்னார்கள்.

அந்தக் கதையைக் கிளப்பியது அவர் மேல் பொறாமை கொண்ட மற்ற இளவட்டங்களாகவும் இருக்கலாம்.

இப்படி சாதாரண குடிமகன்கள் தான், நடிகர்கள் போல தாங்களும் எல்லாம் பெண்களின் கனவு நாயகர்களாகும் இலட்சியத்தைக் கொண்டிருக்க வேண்டும் என்ற கட்டாயமும் இல்லை.

நூறு புத்தகமோ, சஞ்சிகைகளோ விற்க அல்லல்படும் 'நம்பர் வண்' இலக்கியவாதிகளும் கனவில் என்ன கஞ்சத்தனம்

என்று தங்களையும் காதல் நாயகர்களாகக் கனவு காணத் தொடங்கியிருக்கிறார்கள்.

இதில் மனுஷ்யபுத்திரன் தன்னை ஒரு காதல் மன்னனாகவே உருவகித்துக் கொண்டிருக்கிறார். தன்னுடைய கவிதைகளில் ரசிகைகள் மயங்கி, விழுந்து விழுந்து falling all over காதல் பண்ணுவதாகத் தான் அவரும் கதை சொல்லிக் கொண்டிருக்கிறார். தனது பதினைந்து நிமிடப் புகழ் கவிதைகள் ஒவ்வொன்றும் தனது ஒவ்வொரு காதலிகளைப் பற்றியதானதான ஒரு பிம்பத்தைத் தான் அவர் கட்ட முயற்சித்துக் கொண்டிருக்கிறார்.

அவருடைய காதலிகள் எல்லாம் அவர் மற்றக் காதலிகளுக்கு எழுதும் கவிதைகள் குறித்து அலட்டிக் கொள்ளாத பெருந்தன்மை கொண்டவர்கள் போல!

நமக்கோ, எங்காவது போட்ட வெறும் லைக்குகளுக்கே, அதன் மை காய்வதற்கு முன்பாகவே, விளக்கமளிக்கக் கோரும் show cause நோட்டீஸ்கள் உட்பெட்டிக்குள் உடனடியாகவே வந்து விழுந்து விடுகின்றன.

'என்ன கதை ஒரு மாதிரிப் போகுது!?'

'ஏதோ பெரிய நினைப்பில திரியிறீர் போல!?'

'வழியல் நல்லா இருக்கு. துடைச்சு விடும்!'

'உமக்கு முதுகுப் பட்டையை நாங்கள் ஏன் உரிக்கக் கூடாது என்பதற்கான காரணத்தை விளக்குமாறு...!'

சாரு தன்னை ஒரு Playboy ஆக மட்டும் இல்லாமல், ஒரு non-stop sex machine மாதிரி அடித்து விட்டுக் கொண்டிருக்கிறார். அவரது அடிப்பொடிகளும் அவர் தான் தமிழ்நாட்டிலேயே செக்ஸ் என்பதில் வல்லுனர், பேராசான் என்பது போல, பேட்டி காண்கிறார்கள். 'செக்ஸை எப்படி அணுகுவது?'

'இந்தக் கேள்விக்கு இன்றைய தினம் வெளிப்படையான, நேரடியான பதிலைச் சொல்வதற்கு என்னை விட்டால் வேறு ஆளே இல்லை!'

புகழ் பெற்ற செக்ஸ் ஆராய்ச்சி ஜோடிகளான Masters and Johnson *மாதிரி,* he has the last word on sex!

கதவைத் திறவுங்கள். காரிகைகள் வரட்டும்!

பிறகென்ன?

நித்தியானந்தம் தான்!

ஒரு நாட்டையே அந்தப்புரமாக்கி வைத்திருக்கும், ஆனானப்பட்ட நித்தியானந்தாவே இன்னமும் அதற்கான முழு உரிமைகளும் தனக்கே என்று இன்னும் உரிமை கோரவில்லை.

பாலியல் வரட்சியால் தண்ணீர் காணாதிருக்கும் ரசிகப் பெருமக்கள் மொய்த்ததில் அவரது பேட்டி வந்த இணையத்தள கம்பியூட்டர் கிராஷ் ஆகுமளவுக்கு நிலைமை.

இப்படியாகத் தானே, பாலியல் பிறழ்வைப் பெருமையாகக் கருதும் தன்னை, காய்ந்து கிடக்கும் தமிழ்நாட்டின் Casanova, Don Juan ரேஞ்சில் ஒரு மன்மதனாக வடிவமைத்துக் கொண்டிருக்கிறார்.

சிரிப்பு வந்த விடயம் எது என்றால், சாரு பிரான்ஸ்க்கு வந்த போது ஏதோ ஒரு சஞ்சிகைக்கு வழங்கிய பேட்டி ஒன்றில், தனக்கு யாரோ ஒரு சித்தர் அறுகம்புல் சாறில் ஆறு கால சம்போகம் செய்யக் கற்றுத் தந்ததாகக் கூறியிருந்தார். இதை நான் வாசித்து முப்பது வருடங்கள் இருக்கும்.

ரொம்ப முக்கியமான விசயம்!

இலக்கியம் பற்றிப் பேச வேண்டியவர், என்ன சொல்ல வருகிறார்?

இதை யாருக்குச் சொல்கிறார்?

இதைக் கேட்ட desperate housewives தன்னை நோக்கிப் படையெடுப்பார்கள் என்றா?

அல்லது கை படாத ரோஜாக்கள் எல்லாம் தங்களை deflower பண்ண வேண்டும் என்று இவர் வீட்டு வாசலில் 'மலராத பெண்மை மலர' காத்திருப்பார்கள் என்றா? என்ற கேள்விகள் எனக்கு அப்போது இருந்தன.

இம்முறை பேட்டியில் இழுக்க இழுக்க... ஓ... தள்ள தள்ள இறுதி வரை இடையறாத இன்பம் பெற நிலப்பனைக் கிழங்கை prescribe

சாரு தன்னை ஒரு Playboy ஆக மட்டும் இல்லாமல், ஒரு non-stop sex machine மாதிரி அடித்து விட்டுக் கொண்டிருக்கிறார். அவரது அடிப்பொடிகளும் அவர் தான் தமிழ்நாட்டிலேயே செக்ஸ் என்பதில் வல்லுனர், பேராசான் என்பது போல, பேட்டி காண்கிறார்கள். 'செக்ஸை எப்படி அணுகுவது?' 'இந்தக் கேள்விக்கு இன்றைய தினம் வெளிப்படையான, நேரடியான பதிலைச் சொல்வதற்கு என்னை விட்டால் வேறு ஆளே இல்லை!'

பண்ணியிருந்தார். எங்கும் கிடைக்கும் அறுகம்புல்லை விட்டு, மூலிகைக் கடையில் கிடைக்கும் என்றதற்கு, இவருக்கு வேண்டப்பட்டவர்கள் யாராவது மூலிகைக் கடை வைத்திருக்கிறார்கள் போல என்று நினைத்துக் கொண்டேன்.

சாருவின் அல்லக்கை அராத்து எதற்காக இந்த இரகசியம் பற்றி வாயே திறக்கவில்லை என்ற சந்தேகம் வேறு! அல்லது எல்லா கையிருப்பையும் மொத்தமாகவே வாங்கி, ஆயிரக்கணக்கில் non-fungible token ஆக விற்கும் திட்டமாக இருக்கக் கூடும். இளிச்சவயாகரர்களுக்கு இலக்கிய உலகில் குறைவேது!?

காத்திருங்கள்! முத்தரின் பிறந்த நாளுக்கு நகை மலிவு விற்பனை மாதிரி, சாருவின் பிறந்த நாளுக்கும் நாட்டு மருந்துக் கடைகளில் கழிவு கிடைக்கலாம்.

தமிழ்நாடே, எழுந்து வா!

இத்தனை காதலிகளோடு தமிழ்நாட்டில் அந்தப்புரமே காத்திருக்க, அடிக்கடி பாங்கொக் போய் வருவதையிட்டு பெருமையும் கொள்கிறார். பாங்கொக் இரவு விடுதி அழகிகள் தாங்கள் என்றைக்குமே காணாத இன்பத்தை அள்ளி வழங்க இவரை விசேட அழைப்பின் பேரில்

'வருகை' தர வைக்கிற மாதிரி!

Oh, Honey! oh, yeah! I am 'coming'!

இப்படி தன்னை இந்த 'தள்ளாத' வயதிலும், இடையறாத இன்பம் பெற, பெண்கள் துரத்தித் துரத்திக் காதல் பண்ணுவதாகப் படம் காட்டுவதற்கு, வாத்தியார் இருந்திருக்க வேண்டும்.

ராமாவரம் தோட்டத்திற்கு வரவழைத்து, விருந்தே கொடுத்திருப்பார்.

றொட்டிக்கு மாக் குழைப்பதென்ன? கொத்துப் பரோட்டாவே போட்டு அனுப்பியிருப்பார்.

இப்படியான செக்ஸ் மெஷின் எதற்காக இந்த philstine இனத்தோடு இருந்து மல்லுக் கட்டிக் கொண்டிருக்கிறாரோ தெரியவில்லை.

இவருடைய திறமைக்கும் வலுவுக்கும், ஹொலிவூட்டுக்குப் போனால், பெரிய ஸ்டாராகவே வரலாம்.

ஓகே, ஹொலிவூட்டுக்குப் பக்கத்தில் இருக்கும் உலகின் நீலப்படத் தயாரிப்புத் தலைமையகம் இருக்கும் San Ferdinando Valleyக்கு!

இலக்கியப் பெருந்தகைகள் கழியறைக்குள் வைத்து வாசிப்பது மாதிரி, நாங்களும் கழியறைகளுக்குள் வைத்து, போனில் பார்த்து ரசிக்கலாமே!?

படத்திற்குப் பெயர்?

9 ஸீரோ டிகிரி!

இந்த உருட்டல், புரட்டல் எல்லாவற்றையும் பெரும் கதையாடலாக நம்பி, வாயைப் பொளந்தபடி கேட்கும் கேனயர் கூட்டத்தின் வாய்க்குள் சாரு எதையாவது வைக்கத் தானே செய்வார்?

ஆசான் ஆன்மீக சித்தர். அன்னியப் பெண்களை ஏறெடுத்தும் பார்க்கமாட்டார். அந்த ஏரியாவுக்குள் நடமாடவே மாட்டார்.

எந்த ரம்பா, மேனகா, ஊர்வசிகளும் இந்த முனிவனின் தவத்தைக் கலைக்கவே முடியாது.

புளித்த மாவை விற்ற பெண்ணுக்கே பெண் என்றும் பாராமல் முகத்தில் வீசி எறிந்தவர் ஆச்சே!?

எந்தச் சாத்தான்களும் பெண் உருவில் அவரைப் பாவச் சோதனைக்கு உள்ளாக்க முடியாது.

அவரது உட்பெட்டிக்குள் indecent proposal கள் வருவதில்லை. ஆனாலும், இந்த இலக்கிய, அரசியல் உலகின் பிரபலங்கள் உட்பெட்டிகளுக்குள் விடும் மன்மத பாணங்களின் ஸ்கிரீன் ஷொட்டுகள், றெக்கோர்டிங்குகள் தான் வந்து குவிகின்றன.

ஆக, துகில் உரியப்படும் பாஞ்சாலிகளின் அபயக்குரல் ஆபத்பாந்தவன் மாதிரித் தான், இந்த மாயக்கண்ணன் கதை சொல்லிக் கொண்டிருக்கிறார்.

இந்தப் கொற்கைப் பாண்டியனின் அவையில் தான் அவர்கள் வந்து நீதி கேட்கிறார்கள்!

இந்த ஆதாரங்களை வைத்தே முழு இலக்கிய உலகத்தையும் பணயக் கைதிகளாக பிளாக் மெயில் பண்ணி, தன்னையே இலக்கிய உலகின் சக்கரவர்த்தியாக முடி சூட வைக்கக்கூடிய அளவுக்கு, தன்னிடம் ஆதாரங்கள் இருப்பதாகத் தான் அவர் பெருமையடித்துக் கொள்கிறார்.

பாவம், எஸ்ரா!

படி தாண்டாப் புத்தன்.

பேஸ்புக் கூட மனைவி பெயரில் தான் உண்டு.

மனைவி சொல் படி தாண்டா...!

இப்படி தங்களை எல்லாம் கோபியர் நடுவே கோபாலன் மாதிரி கட்டப்படும் கதை சொல்லல்களை இலக்கிய உலக அல்லக்கைகளும், சிங்க வேட்டையில் சிக்கிய மான்களின் எச்சங்களுக்காக வாணீர் ஊற்றியபடி அலையும் கழுதைப்புலிகள் போல, இவர்களைப் புகழ்ந்தேத்திக் கொண்டும், புலம்பிக் கொண்டும் உள்ளார்கள்.

இப்படி இந்த இலக்கியக் கூட்டங்களுக்கு எல்லாம் தங்களைப் பற்றிய ஏதோ பேராண்டி நினைப்புகள் தான் இருக்கின்றன.

இந்தக் கேலிக்கூத்தை யெல்லாம் பற்றிக் கேள்வியும், கேலியும், கிண்டலும் செய்து கேட்கப் பேரில்லை என்ற நினைப்பில், தங்களை காதல் சக்கரவர்த்திகள்,

ஆசான் ஆன்மீக சித்தர். அன்னியப் பெண்களை ஏறெடுத்தும் பார்க்க மாட்டார். அந்த ஏரியாவுக்குள் நடமாடவே மாட்டார்.

எந்த ரம்பா, மேனகா, ஊர்வசிகளும் இந்த முனிவனின் தவத்தைக் கலைக்கவே முடியாது.

புளித்த மாவை விற்ற பெண்ணுக்கே பெண் என்றும் பாராமல் முகத்தில் வீசி எறிந்தவர் ஆச்சே!?

எந்தச் சாத்தான்களும் பெண் உருவில் அவரைப் பாவச் சோதனைக்கு உள்ளாக்க முடியாது.

ராஜராஜன்கள், மன்னர்கள் போல இந்த numero uno கள் இப்படி அடித்து விட்டுக் கொண்டே இருக்கிறார்கள்.

அல்லக்கைகளும் வாயூறிய படியே, வாயைப் பிளந்து கொண்டிருக்கிறார்கள்... 'மச்சம்டா மச்சி!' என்றபடி.

இதனால் தான், தங்களுக்கு காதலிகள் கிடைக்காத கவலைக் கவிதைகளை இலக்கியக் குறுநில மன்னர்கள் அடிக்கடி எழுதிப் புலம்புகிறார்கள்.

எனக்கு இந்த இலக்கியக் கூட்டங்களோடு பெரிய பரிச்சயம் எதுவும் இல்லை. ஆனால் பொதுவெளியில் இவர்களைத் தெரிந்தவர்களின் எழுத்துக்களை வரிகளுக்கு இடையில் வாசிக்கும் போதுதான், இவர்களின் புலுடாக்கள் தெரிகின்றன.

இந்தக் கற்பனைக் கசனோவாக்களின் உருட்டல்கள் எல்லாம் அவர்களைத் தெரிந்த எல்லாருக்கும் தெரிந்து தானிருக்கிறது. ஆனால், அதை வெளியில் சொல்ல மாட்டார்கள் என்ற துணிச்சலில் இவர்கள் அவிழ்த்து விடுகிறார்கள்.

இவர்கள் எப்படியான பாலியல் வரட்சிக்குள்ளும், பிறழ்வுகளுக்குள்ளும் உள்ளார்கள் என்பதையும், அந்த மன்மத பிம்பத்தை உருவாக்க எப்படியான

கேவலமான திருகுதாளங்களில் ஈடுபடுகிறார்கள் என்பதையும் தற்போதைய சில பதிவுகளில் பார்க்க நேர்ந்தது. நேரடியாக இவர்களின் பெயர்களைக் குறிப்பிடாமல் சூசகமாகவே இவர்களின் இந்த புரட்டுக்களைப் பற்றிச் சொல்லிப் போகிறார்கள்.

ஆனால், இந்த இலக்கிய மேதகுக்களோ கற்பனை உலகத்தில் மிதந்தபடியே இருக்கிறார்கள்!

உண்மையாகவே தங்கள் இலக்கிய credential புலுடாக்களை நம்புவோரை படுக்கைக்கு அழைக்கும் திருட்டுக்களவாணிகள் எல்லாம் பொதுவெளியில் தங்கள் படுக்கையறை இரகசியங்களை அவிழ்த்து விடும் அளவுக்கு முட்டாள்கள் இல்லை. அதை இரகசியமாக வைத்திருப்பதன் மூலம் தான் முடிந்தவரைக்கும் பலருக்கு வலை வீசலாம் என்பது அவர்களுக்குத் தெரியும்.

I took up the guitar to get laid என்று யாரோ ஒரு றொக் ஸ்டார் சொன்னதை வாசித்த ஞாபகம். அதைத் தேடப் போனால், Quora விலும், Reddit இலும் புதியவர்கள் வாணீர் ஊற்றிபடி கேள்வி கேட்டது தான் வருகிறது.

How to play guitar well enough to get laid?

Can I impress girls by being a guitarist?

Rock concerts உம், screaming girls உம் இளசுகளின் மனதில் ஏற்படுத்திய பிம்பம் அது.

அது உண்மையாக இருந்தால், என்னிடம் இருக்கும் கிட்டார்களுக்கு நான் மனுஷ்யபுத்திரன் ரேஞ்சில் இருந்திருக்க வேண்டும்.

Girls falling all over!

இப்படி, தாங்கள் எழுதத் தொடங்கியதே பெண்களை படுக்கைக்கு அழைப்பது தான் என்ற நினைப்பில் பல இலக்கியவாதிகள் இருக்கிறார்கள்.

கொஞ்சக் காலத்திற்கு முன்னால், சில பல அந்தரங்க அங்கலாவண்யங்கள் எல்லாம் பொதுவெளியில் தோய்த்துக் காயப் போடப்பட்டிருந்தன.

பால் வேறுபாடு பார்க்காமல், படுத்து முடிய, 'காதல் கத்தரிக்காய் எல்லாம் வேண்டாம் கண்ணே!' என்று இதயங்களை உடைத்த கதைகளும் வந்திருந்தன.

இவர்களில் பலரின் உட்பெட்டி மன்மத பாணங்கள் சில பல என் பார்வைக்கும் கிட்டித் தானிருக்கின்றன.

'பாத்திட்டு உடன அழிச்சுப் போட வேணும்!' என்று எச்சரிக்கையுடன்.

எனக்கே வெட்கமாக இருக்கும்.

'என்னடா, இப்பிடி வழியிறாங்கள்?'

சிலவற்றைப் பார்த்தால், வட்சப் குழுவில் சிலாவி அடிக்கப்பட்டதாக இருக்கும்.

ஒரே தகவல் எல்லாருக்கும்!

எறியும் போது ஏதாவது ஒட்டிக் கொள்ளும் என்ற நப்பாசையில்.

அதிலும் இந்த கவிஞர்களின் தொல்லை தாங்க முடியாது. அன்புத் தோழிகளை கவிஞைகளாக்கவோ, இலக்கிய விமர்சகர்கள் ஆக்கவோ பெரும் முனைப்போடு தான் இருக்கிறார்கள்.

இதற்குள் சஞ்சிகை, பிரசுர வெளியீட்டாளர்கள், இலக்கிய வட்டங்கள் தொல்லை தனி.

புலன் பெயர்ந்திருந்தாலும் சரி, தமிழ்நாட்டில் என்றாலும் சரி, பேஸ்புக்கில் என்றாலும் சரி, இவர்கள் எல்லாருக்கும் கிட்டத்தட்ட ஒரு template தான் இருக்கிறது.

> உண்மையாகவே தங்கள் இலக்கிய credential புலுடாக்களை நம்புவோரை படுக்கைக்கு அழைக்கும் திருட்டுக்களவாணிகள் எல்லாம் பொதுவெளியில் தங்கள் படுக்கையறை இரகசியங்களை அவிழ்த்து விடும் அளவுக்கு முட்டாள்கள் இல்லை. அதை இரகசியமாக வைத்திருப்பதன் மூலம் தான் முடிந்தவரைக்கும் பலருக்கு வலை வீசலாம் என்பது அவர்களுக்குத் தெரியும்.

ஒரு பெண் கவிதை எழுதுகிறவராயின், அவரை அடுத்த தளத்திற்கு கொண்டு செல்வதற்கு தயாராக இருக்கிறார்கள். அவரது கவிதைத் தொகுப்பை திருத்தி, தாங்களும் அவர் பெயரில் எழுதி, வெளியிட்டு, வெளியீட்டு விழா நடத்தி...

கவிஞையின் செலவில் தான்.

இந்த அயோக்கியர்கள் இதற்கு தங்கள் பணத்தைக் கூடச் செலவிடுவதில்லை.

சுமாராக எழுதத் தெரிந்தால், தாங்கள் இன்னொரு தளத்திற்குச் சென்ற பெருமையை, அது தான் தங்களுடைய இன்னொரு கவிதையை, for your eyes only என்று ஒவ்வொரு 'தோழிகளுக்கும்' அனுப்பி, ஏதோ அவர்களுடைய திறமையை மெச்சி, அவர்களுக்கு மட்டும் அனுப்புவதாகக் கதை விட்டு, விமர்சனமாக எழுத வைத்து, அவர்களையும் இலக்கியவாதிகளாக்கி, வேறோர் தளத்திற்கு தங்களோடு கூட்டிச் செல்ல முனைகிறார்கள்.

கிட்டத்தட்ட அறிமுக நடிகைகளை புகழேணியின் உச்சிக்கு அழைத்துச் செல்ல இருக்கும் இலக்கிய உலகின் பாரதிராஜாக்கள் தான் இவர்கள்!

இவர்கள் கூட்டிச் செல்கின்ற தளங்கள் எல்லாம் மலர் மஞ்சங்களாகத் தான் இருக்கும் போல!

All roads lead to... Romp... oh, Rome!

கிட்டத்தட்ட புதிதாக கவிதை எழுத வரும் பெண்கள் எவரும் இவ்வாறான 'நல்லெண்ண' விஜயன்களுக்குத் தப்புவதில்லை.

உடனேயே உட்பெட்டிக்குள் கடலை போட ஆரம்பித்து விடுகிறார்கள்.

அவர்களுடைய கவிதைகள் தங்களை மெய் சிலிர்க்க வைத்த மாதிரி, புகழ்ந்து உருக வைத்து, உள்ளத்துக்குள்... ஓ... உட்பெட்டிக்குள் நுழைகிறார்கள்.

இதையெல்லாம் அவர்கள் பொதுவெளியில், பின்னூட்டங்களில் சொல்வதில்லை.

நீங்கள் நினைக்கலாம், அவர்கள் புகழ் பெற்ற இலக்கிய

மேதகுக்கள்... அவர்களுடைய தராதரத்திற்கு பின்னூட்டமோ, லைக்கோ போடுவது கௌரவக் குறைச்சல் தானே என்று.

அப்படி எல்லாம் இல்லை.

அப்படி பொதுவெளியில் போட்டால், இவர்கள் கடலை போடும் மற்றக் கவிஞைகள் அலேர்ட் ஆகி விடுவார்கள் என்ற பெருந் தன்மை தான்.

இப்படி ஆளாளுக்கு தெரிய வராத for your eyes only தான்.

சும்மா ஒரு லைக் போட்டதற்கே துன்பப்படும் எனக்குத் தெரியாதா?

உலகத்திலேயே அற்புதமான கவிதை என்று வசிஷ்டர் வாயால் பிரம்மரிஷி பட்டம் வாங்கிய நினைப்பில் அந்தப் புதுக் கவிஞைகளும் புல்லரித்து, உருகிப் போயிருக்கக் கூடும்.

என்னா பென்னாம்பெரிய கவிஞர், என்னைப் போன்ற ஒரு அறிமுகக் கவிஞை, எழுத்தாளர் மீது இப்படி கரிசனை கொள்கிறார் என்று.

எனக்குத் தெரிந்தவரை, according to my well placed sources, கிட்டத்தட்ட எழுதுகின்ற பெண்கள் எல்லாருக்குமே இந்த தொல்லை இருப்பதாகத் தான் தெரிகிறது.

சில தடவைகளில் சில 'கிழட்டுக் கவிஞர்கள்' உள்பெட்டி தொந்தரவு காரணமாக, பகிரங்கமாகவே மூக்கறுபட்டிருக்கிறார்கள். பலர் பெண்களின் உரையாடல்களில் blacklisted ஆக இருக்கிறார்கள். தொல்லை தாங்காமல் தடுத்தாட் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

நண்பர்களைக் கேட்டால், யார் யார் கவிஞர்களால் கவிஞைகள் ஆக்கப்பட்டார்கள் என்று பட்டியலே தருகிறார்கள்.

எனக்கு இந்த விடயங்களில் பெரிதும் பரிச்சயம் இல்லை என்றாலும், நான் உங்களுக்குத் தரக் கூடிய clue...

ஒரே ஒரு கவிதைத் தொகுதி வெளியிட்டு, இந்த முக்கின கவிஞர்களே முன்நின்று வெளியீட்டு விழா வைத்து, தலைமை தாங்கி உரை நிகழ்த்தி, அதன் பின்னால் காணாமல் போனவர்கள்!

எல்லாருமா என்பது எனக்குத் தெரியாது.

இப்படி இந்த இலக்கியப் பெருந்தகைகளின் மீ ரூ தொல்லைகளால், இலக்கியப் பக்கமே தலை வைத்துப் படுக்க மாட்டோம் என்று தலைமறைவானவர்களும் உண்டு.

பேஸ்புக்கில் ஃபேக் ஐடி 'பெண்' கவிஞர்களின் உட்பெட்டிகளுக்குள் புகுந்து, அவர்களையும் அடுத்த தளங்களுக்கு கொண்டு செல்ல முயன்றவர்களும் உண்டு.

பெண் பெயரைப் பார்த்து மையல் கொண்டு, அவ்வைப் 'பாட்டிக்' கவிஞைகளுக்கும் காதல் வலை வீசியவர்களும் உண்டு.

இப்படி, தங்களின் கவிதைகள் மேல் காதல் கொண்டு, சினிமா நடிகர்களின் ரசிகைகள் போல, தங்களையும் மொய்ப்பார்கள் என்று நம்பி, தங்களின் விற்பனையாகும் புத்தக எண்ணிக்கைக்கு அதிகமாக தாங்களும் காதலிகளைக் கொண்டிருக்க வேண்டும் என்ற நினைப்போடும் அலைகிறவர்கள் மாதிரித் தான் இந்த இலக்கிய உலகத்தினர் இருக்கிறார்கள்.

இந்தக் கவிஞர்களின் பிரபலம் மீதான பிரமிப்பில், அவர்கள் மீது மையல் கொண்டவர்களும், அதைப் பெருமையாக நினைப்பவர்களும் இல்லாமல் இல்லை. அதற்காகப் படுக்கை வரை செல்லக் கூடத் தயாரானவர்களும் இருக்கிறார்கள். தங்களைத் திருமணம் செய்வார்கள் என்று ஏமாந்தவர்களின் லிஸ்ட் கூட இருக்கிறது.

இப்படியான ஏமாளிகளை படுக்கை அறை வரை கொண்டு சென்று காரியம் முடிந்ததும் கை கழுவி விடுகிற அயோக்கியர்கள் எல்லாம் இப்படி பகிரங்க பில்டப்புகளில் நேரத்தைப் போக்குவதில்லை.

அவர்களால் ஏமாற்றப் பட்டவர்களும் தங்களுக்கும் அவமானம் என்று, பொதுவெளியில் தலைவிரி கோலத்தில் நீதி கேட்க வருவதும் இல்லை. அவர்கள் தெய்வத்துக்கிட்டே... ஓ... ஆசான்கிட்டே தான் முறையிடுகிறார்கள்.

பிறகெப்படி மதுரை எரியும்?

எனக்கு இந்த இலக்கியக் கும்பலின் உள்வீட்டு ரகசியங்களில் ஈடுபாடு இருந்ததுமில்லை. அவர்களின் அந்தரங்கங்களை அறிந்து கொண்டு நான் என்ன செய்வது?

அவர்களோடு படுக்கிறார்கள் தானே, என்னோடும் படுக்க வருவார்கள் தானே என்று வாணீர் ஊற்றும் நிலையில் நான் இல்லை.

வீரகேசரி, குமுதம், விகடன் கிசுகிசுக்களை நம்பிய ஒரு காலம் இருந்தது தான். தற்போதைய கிசுகிசு இணையத்தளங்கள், பயில்வான் யுகத்தில் இவை பற்றி அலட்டிக் கொள்வதேயில்லை.

இதனால், பல இலக்கியப் பிரபலங்களின் கிசுகிசுக்கள் எனக்குத் தெரியாது. ஆனால், நண்பர்கள் பேசிக் கொள்ளும்போது, அக்கறை இல்லாத மாதிரி, காதை எறிந்து விட்டுக் கேட்டுக் கொண்டிருப்பேன்.

இவர்களின் இலக்கிய உலகமும் சும்மா இல்லை.

கட்டற்ற பாலுறவு,<br>
பால் கடந்த உறவு,<br>
Group sex,<br>
Friends with benefits,<br>
open relationships,

பாஞ்சாலி ரேஞ் கூட்டுக் குடித்தனங்கள் என்று, ஒரு சமூகத்தில் இருக்கும் பிறழ்வுகள் எல்லாமே இங்கே இருக்கின்றன.

'தமிழச்சிகளின்' புண்ணியம் அது!

ஆனால், தங்கள் எல்லாருக்கும் தெரிந்த அவற்றைக் கிசுகிசுவாகவேனும் பொதுவெளியில் இந்தக் கூட்டுக்கலவாணிகள் பகிர்ந்து கொள்வதில்லை...

ஏதாவது பங்காளிச் சண்டை வந்தால் ஒழிய!

அல்லது எங்காவது ஊற்றிக் கொடுத்தால்...!

அல்லது விழாக்களுக்கு முன்பானதும் பின்பானதுமான ஹோட்டல் சந்திப்புகளில்...!

ஆனால், அவற்றில் இருப்பவர்கள் சிலர் அவற்றை நியாயப்படுத்துகிறார்கள். பலர் வெட்கம் கொள்வதில்லை, பகிரங்கமாக அதைப் பற்றி எழுதவும் செய்கிறார்கள்.

தங்களை சாருவின்

பெண்ணிய வடிவமாகக் கர்வம் கொள்கிறவர்களும் உண்டு. ‘உங்களுக்கு எல்லாம் செக்ஸ் பற்றி என்ன தெரியும்?’ என்று ஆண்களுக்கே சவால் விடுகிறவர்களைக் கண்டிருக்கிறேன்.

தங்களுடைய body count ஐ மற்றப் பெண்ணியவாதிகளுடன் யாருடைய எண்ணிக்கை அதிகம் என்று அறிந்து கொள்ளும் போட்டிகளில், இவர்கள் பகிர்ந்து கொள்ளக் கூடும்.

அந்த எண்ணிக்கையில் ஒன்றாக அகப்பட்டிருக்கக் கூடிய ஒரு சில தருணங்களிலும் நான் மயிரிழையில் தெய்வாதீனமாகத் தப்பியிருக்கிறேன்.

நான் கொரோனாவுக்கு முன்பே பெண்களோடு social distancing ஐ மெயின்டெய்ன் பண்ணிக் கொண்டு இருப்பதால்!

ஆண் இலக்கியவாதிகள் மீதான மீ ரூ குற்றச்சாட்டுக்களின் போது, ஓடி வந்து அவர்களுக்கு Character certificate கொடுத்து முட்டுக்கொடுக்கும் பெண்ணிய வாதிகளை நீங்களும் கண்டிருக்கக் கூடும். பாதிக்கப்பட்டதாகக் குற்றம் சாட்டும் பெண்கள் மீது அவதூறு செய்வதையும் காணாமலா இருந்திருப்பீர்கள்?

இவையெல்லாம் சரியா, தவறா என்ற நீதித் தீர்ப்பு வழங்குவது என் வேலை இல்லை.

ஏனெனில், நான் எங்கள் தற்போதைய பிரதமர் ஜஸ்டின் ரூடோவின் தந்தை பியர் ரூடோவின் வழி வந்தவன்...

ஓ... தவறான உதாரணம்.

இல்லை, அப்படி இல்லை. அது உண்மை தான்.

அவர் சொன்ன பிரபல வாக்கியம்...

There is no place for the state in the bedrooms of the nation!

இது அவர் சொன்னதாக பிரபலம் பெற்றாலும், அதை உண்மையில் எழுதியது குளோப் அன்ட் மெயில் பத்திரிகையில் எழுதி வந்த Martin O'Malley தான்.

இருந்தாலும், இன்னொருவர் எழுதியதற்கு ஆட்டையைப் போடும் எங்கள் இலக்கியவாதிகள் போல, பட்டப்பகல் திருட்டாக இல்லாமல், ரூடோ அவருக்கு நன்றியும் தெரிவித்திருந்தார்.

கனடாவின் கிரிமினல் சட்டங்களில் பெரும் மாற்றங்களைக் கொண்டு வந்த போது, அதை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்றிய போது, ரூடோ சொன்னது அது.

ஒரு பாலின உறவு கிரிமினல் குற்றமாக இல்லாமல் ஆக்கப்பட்டது அப்போது தான். சட்டத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வயதினர் இருவர் தனிமையில் செய்யும் உறவுகள் குற்றமாக்கப்படுவது நிறுத்தப்பட்டது. ஆயினும் பொதுவெளியில் இவ்வாறான உறவுகளைக் கொள்வது, இரண்டுக்கு மேற்பட்டோர் இருப்பது தொடர்ந்தும் குற்றமாக இருந்தது.

இந்த இலக்கியக் குழுக்களில் இருந்த பாஞ்சாலி செட்டப்புகள் சில நேரம் கனடியச் சட்டப்படி குற்றமாகக் கருதப்படவும் கூடும்.

இப்படி, யார் யாரோடு படுக்கிறார்கள் என்பது பற்றி எனக்கு எந்தப் பிரச்சனையும் இல்லை. அவர்களின் படுக்கையறைக்குள் தலையை நுழைப்பதில் எனக்கு எந்த ஆர்வமும் இல்லை.

சரி, எங்கள் பியர் ரூடோ விடயத்திற்கு வருவோம்.

என் அந்தக் கால கனவு விசயத்தின் ஆதர்ஷ புருசர் அவர். Pierre Elliot Trudeau என்ற அவரது பெயரின் முதல் எழுத்துக்களால் PET என்று அறியப்பட்டவர்.

நீண்ட காலமாக திருமணம் செய்யாமல் பிரமச்சாரியாக இருந்தவர். அவர் பிரதமராக இருந்த காலத்திலேயே அவருக்கு நிறைய பெண் நண்பிகள் இருந்தார்கள். பின்னர் தனது ஐம்பது வயதுகளில் தன்னை விட மிகவும் இளமையான பெண்ணைத் திருமணம் செய்திருந்தார்.

பின்னர் அவரை விவாகரத்துச் செய்த பின்னால், தன் எழுபது வயதுகளில் முப்பது வயதுகளில் உள்ள சட்டப் பேராசிரியராக இருந்த பெண்ணோடு உறவாகி, ஒரு பிள்ளையும் இருந்தது.

சரி, நம்ம இளமைக்கால இலட்சியக் கனவுக்கு வருவோம்.

திரும்பவும் எச்சரிக்கை. மென்மையான, இளகிய மனதுள்ள, இருதய நோய் உள்ள பெண்கள் மேற்கொண்டு வாசிக்க வேண்டாம்.

சொன்னால் சிரிக்கவும் கூடாது. சொல்லிப் போட்டேன்.

ஒரு காலத்தில், எனக்கும் ரூடோ மாதிரி, sex symbol of the thinking woman ஆக வேண்டும் என்று ஒரு கனவு இருந்தது.

ரூடோ எந்த அளவீடுகளின்படி பார்த்தாலும், ஒரு புத்திஜீவி தான். பிரமிக்க வைக்கும் அறிவு, அவரது அரசியல் பிரவேசத்தில் அவரது ஆளுமையால் ஆகர்ஷிக்கப்பட்டு, Trudeaumania என்ற பதமே உருவாக்கப்பட்டது.

இவரது அறிவும் ஆளுமையும் கொண்டிருந்த வசீகரம் காரணமாக, புத்திஜீவிப் பெண்கள் இவர் மீது தீராக்காதல் கொண்டிருந்தார்கள்.

இப்படியாகத்தானே, இந்தக் குடிசைவாசிக்கும் ஒரு கனவு இருந்தது.

சிந்திக்கத் தெரிந்த பெண்களின் கனவுக்காதலனாக இருக்க வேண்டும் என்று.

அது உங்களுக்கு கோமாளித் தனமாக இருக்கக் கூடும்.

‘அவருக்கும் ஒரு நினைப்புத் தான்!’

இந்த இலக்கியவாதிகளின் மன்மத பிம்ப உருட்டுக்களை விட, இது ஒன்றும் கேவலமானதில்லை என்பது என் பணிவான கருத்து.

ஆனால், பிரச்சனை என்ன என்றால், நான் இன்னமும் சிந்திக்கத் தெரிந்த புத்திஜீவிப் பெண்கள் என்று யாரையும் சந்திக்கவில்லை.

அவர்கள் எனது கண்ணில் தட்டுப்படாமல், எங்கள் இலக்கியப் புத்திஜீவிகளுடனேயே உறவுகளைப் பேணிக் கொள்கிறார்கள்.

பேஸ்புக்கில் பார்த்தாலேயே உடனடியாகவே புத்திஜீவிப் பெண்களை அடையாளம் காண முடியும்.

தோழர்களின் பதிவுகளுக்கு இதயக்குறியோடு மட்டும் கடந்து போய் விடுவதில்லை. அங்கே மொய்க்கும் மற்றப் புத்திஜீவிப் பெண்களுக்குள் தனித்துக் காணப்பட வேண்டும் என்பதற்காக, நீண்ட பின்னூட்டம் விடுவார்கள்.

தோழர்களின் மொக்கைப் பதிவுகளுக்கு ஜோக் அடிப்பார்கள்.

என்னைப் போன்ற சில்லறைகளுக்கு அவர்கள் சில்லறையைச் சிதறவிடுவது இல்லை. அவர்களின் நண்பர்களாக ஏற்றுக் கொள்வதும் இல்லை. நட்பு அழைப்பு விட்டால் 'ஏதோ தன்னில் வழியிறார்' என்று தன்னைக் கனவுக்கன்னியாக வைத்திருக்க மட்டும் அனுமதி வழங்குகிறார்கள்.

என்னைப் போன்றவர்கள் பின்னூட்டம் விட அனுமதியும் இல்லை.

அது 'நண்பர்களுக்கு மட்டும்!'

நீங்கள் லைக் மட்டும் பண்ணலாம்.

நட்பு வட்டத்தில் இருந்தாலும், எழுதும் எதற்கும் லைக் கூடப் போட மாட்டார்கள்.

அவர்கள் வேற லெவல்.

அது தான், அவர்களையும் இந்த இலக்கியப் பெருந்தகைகள் கொண்டு சென்ற இன்னொரு தளம்.

அந்தத் தளத்திற்கு வந்து புத்திஜீவிகள் ஆகி விட்டால், (அல்லது ஆக்கப்பட்டு விட்டால்) பிறகு அவர்களின் எழுத்தும் பதிவுகளும் வேறு.

நீயெல்லாம் யார்ரா!? தான்.

பிறகென்ன? நாடியில் கை வைத்து, வேறெங்கோ பார்க்கும் போஸ் தான்.

முன்பு ஒரு தடவை உச்சம் அடைந்த ஒரு பெண்ணியவாதிக்கு... ஓ... நட்பு எண்ணிக்கையின் உச்சத்தைத் தொட்ட பெண்ணியவாதி ஒருவருக்கு நட்பு அழைப்பு அனுப்பியிருந்தேன். அவர் எழுதுவதையும் வாசிப்பவன் என்பதால்.

அனுப்பிய ஓரிரு நாட்களில் அவர் ஒரு பதிவு போட்டிருந்தார்... எனக்கு போதுமான நண்பர்கள் இருக்கிறார்கள். ஆயிரக்கணக்கில் வெயிட்டிங் லிஸ்ட். உங்களை எல்லாம் நண்பர்களாக ஏற்றுக் கொள்ள முடியாது. விரும்பினால் தொடருங்கள்!

அதில் இருந்த arrogance தான் எனக்குச் சிரிப்பாக இருந்தது.

ஹ்ம்... கனவுக்கன்னியாக வைத்திருக்க மட்டும் அனுமதி!

அவர்களுடைய எழுத்துக்கள் எல்லாம் அவர்களின் வாழ்வைச் சுற்றியதாகவே இருக்கும். தங்களின் எழுத்துக்கள் ஏற்படுத்தும் பாதிப்புகள், அதற்கு கிடைத்த மற்ற ஆண் புத்திஜீவிகளின் அங்கீகாரங்கள் (பெண்கள் என்றால் ஒரே முகாமில் இருந்தால் மட்டும்!) என்று சதா சுயபுராணமாகவே இருக்கும்.

> பிரச்சனை என்ன என்றால், நான் இன்னமும் சிந்திக்கத் தெரிந்த புத்திஜீவிப் பெண்கள் என்று யாரையும் சந்திக்கவில்லை.
> அவர்கள் எனது கண்ணில் தட்டுப்படாமல், எங்கள் இலக்கியப் புத்திஜீவிகளுடனேயே உறவுகளைப் பேணிக் கொள்கிறார்கள்.

'உனக்குத் தெரியுமா? நான் எவ்வளவு முக்கியமான ஆள்!'

போராட்டத்திற்கு தலைமை தாங்கும் வேல் நாச்சியார்கள் தான்.

கவிதைத் தொகுப்புகள்.

இலக்கிய விமர்சனங்கள்.

விருதுகள், வெளியீட்டு விழாக்கள்.

தங்களுடைய ஒவ்வொரு அசைவுகளையும் இன்ஸ்டாகிராமில் பதிவு செய்யும் டீன் ஏஜ் பெண்கள் போல, எல்லாப் பதிவுகளும் அவர்களைச் சுற்றியே இருக்கும்... ஐஸ் கிரீம் சாப்பிடுவது உட்பட!

அன்றாட நிகழ்ச்சிகளுக்கான அங்கீகாரம் தேடல்...

அல்லது ego boosting.

நாங்கள் நினைத்துப் பார்க்கவே முடியாத புகழேணியின் உச்சியில் இருப்பார்கள்.

புகழேணியில் உச்சியை அடைவது முக்கியமில்லை. அதை தக்க வைத்துக் கொள்ள வேண்டுமே!?

அதற்காக 'அட்ஜஸ்ட்' செய்து கொள்வார்கள் என்று இந்த இலக்கிய மேதகுக்களும் பெருந்தகைகளும் நம்புகிறார்கள் போல.

போதாக்குறைக்கு சஞ்சிகை, பிரசுர வெளியீட்டாளர்களும் இலக்கிய வட்டங்களினரும் தான் அப்படி நம்புகிறார்கள்.

சினிமா உலகில் இது சகஜம் தானே என்று, தங்களை சினிமா நாயகர்கள் போல என்ற நினைப்பில் இருப்பவர்கள் தானே!?

இதனால் தான் அவர்களுக்கு இடையிலான உறவு அன்னியோன்னியமானதாகவும், வேறெவரும் இடையில் நுழைந்து விடாதபடிக்கு இறுக்கமானதாகவும் இருக்கிறது.

தங்கள் அணைப்புகளுக்கு இடையில் வேறு யாராவது நுழைவதை விரும்புவதில்லைப் போல. அப்படி கூட்டுக்கலவிக்கும் மற்றத் தோழர்கள் மட்டும் தான் அனுமதி போலும்.

இப்போது புரிகிறதா ஏன் என் போன்றவர்களின் நட்பு அழைப்புகள் கூட ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை என்று.

என்னிடம் இவர்கள் எதிர்பார்க்கிற இலக்கிய sex appeal இல்லை. நான் என்ன கவிதைகளா எழுதிக் கொண்டிருக்கிறேன்?

புலியையும் யாழ்ப்பாணியையும் கடித்துக் குதறுவதையே நித்திய கடமையாகச் செய்து கொண்டிருக்கிற எனது எழுத்தில் காதலை எப்படி வடிக்க முடியும்?

இப்படி இந்தப் புத்திஜீவிப் பெண்களால் கணக்கெடுக்கப் படாமல் இருப்பதெல்லாம் எனக்கு ஒரு பொருட்டாகவோ, பிரச்சனையாகவோ இல்லை.

என்னுடைய சினிமாக் கனவு தகர்ந்து போனதையும் ஏற்றுக் கொண்டு கடந்து வந்திருக்கிறேன்.

அதைப் போல, இந்த 'சிந்திக்கத் தெரிந்த பெண்களின் கனவுக் காதலனாக' வரும் கனவும் இலட்சியமும் நிறைவேறாமல் போனதில் எனக்கு எந்தப் பிரச்சனையும் இல்லை.

நல்ல காலம், இந்த 'சிந்திக்கத் தெரிந்த பெண்களும்' எனது நட்பு அழைப்பை அங்கீகரித்து இருந்தால், தெரியாத்தனமாக எதையாவது லைக் பண்ணவோ, பின்னூட்டம் விடவோ போனால்... உட்பெட்டி show cause notice களோடும்... விளக்குமாறுகளோடும்...

ஏற்கனவே இருக்கிற மனைவி, துணைவி, இணைவிகளால் படும் துன்பமே போதும்!

அபத்தம் 4.0

# Read the fine print!

எழுதுங்கள்!
அபத்தத்திற்கு எழுதுங்கள்.

உங்கள் எல்லாருக்குள்ளும் ஓராயிரம் கதைகள் இருக்கும்.

சொல்ல விரும்பாதவை.
சொல்லக் கூடாதவை.

அதெல்லாம் எங்களுக்குப் பிரச்சனையில்லை.

ஆனால் உங்களுக்குள் சொல்லப்பட வேண்டியவை நிறைய இருக்கும்.

அதிலும் யுத்தத்துக்குள் வாழ்ந்து, கற்பனை கூடப் பண்ணாத இடங்களில் வாழ வேண்டி வந்து முடிந்திருக்கிற உங்கள் வாழ்வு பற்றி சொல்ல நிறைய இருக்கும்.

அவை சொல்லப்பட வேண்டியவை.

இன்றும் நாங்கள் கேட்கிற எத்தனை கதைகள் ஆயிரமாயிரம் ஆண்டுகளாக வாய் வழியாகவே சொல்லப்பட்டு, தொடரப்பட்டு எங்களை வந்து சேர்ந்திருக்கும்.

எத்தனை கதைகள் இரண்டாம் ஆளுக்குத் தெரியாமலேயே புதைந்து போயிருக்கும்?

அதில் எத்தனை கண்ணீர்க் கதைகளாக இருந்திருக்கும்?

மனதில் அடக்கி வைத்து, இன்னொருவருக்குச் சொல்லி மன ஆறுதல் பெற முடியால் புதைந்து போன கனவுகளாகத் தானே அவை இருக்கும். எத்தனை கதைகள் எங்களோடேயே முடிந்து போய் விடாமல் சொல்லப்பட வேண்டியவை?

இன்னொருவர் எங்களைப் போல துன்பம் அனுபவிக்காமல் இருக்க அறிந்து கொள்ள வேண்டிய கதைகள்.

அடுத்த தலைமுறை எங்களைப் போல அநியாயமாக அழிந்து போகாமல் இருக்க பாடம் கற்றுக் கொள்ள வேண்டிய உண்மைக் கதைகள்.

எங்களுக்குச் சம்பந்தமில்லாத யுத்தத்தால் பட்ட அவலங்களின் கண்ணீர்க் கதைகள்.

வெளிநாட்டுக் கனவுகளால் தொடங்கிய பயணங்களின் துயரக் கதைகள்.

எங்கள் வாழ்வில் பட்ட துயரங்களால் வந்த துன்பக் கதைகள்.

எங்கள் கனவுகள் சிதைந்து போனதால் வந்த இதயத்தை உடைக்கும் வேதனைக் கதைகள்.

எதிர்பார்ப்புகளின் தகர்ப்புகள்.

இப்படி எத்தனை கதைகள் எங்களுக்குள்ளே இருக்கின்றன?

இதை நாங்கள் சொல்லா விட்டால், பதிவு செய்யா விட்டால், அதெல்லாம் எங்களோடேயே எங்கள் புதைகுழிகளுக்குள் புதைந்து போகலாம்.

சிதைகளோடு எரிந்து போகலாம்.

எழுதுங்கள். அதையெல்லாம் எழுதுங்கள்.

எங்களுக்கும் கதை சொல்லிகள் இருக்கிறார்கள்.

கட்டுக்கதை சொல்லிகள்.

எங்களுக்குத் தெரிந்த உண்மைகளை, எங்கள் கண் முன்னால் கண்ட உண்மைகளை மறுதலித்து, எத்தனை பொய்க் கதைகள் எங்கள் முன்னாலேயே அவிழ்த்து விடப்படுகின்றன?

எங்களுக்குத் தெரிந்த எத்தனை அப்பட்டமான பொய்கள் எங்கள் கண் முன்னால் வரலாறு ஆகிக் கொண்டிருக்கின்றன?

யுத்தத்தை ஒரு விளையாட்டுப் போல, ஓரமாய் நின்று பார்த்து விசில் அடித்து உற்சாகம் அளித்த கதை சொல்லிகள் இருக்கிறார்கள்.

அந்த யுத்தத்தின் கண்ணீரை அப்போது மறுதலித்து, இப்போது விலை பேசி விற்றுக் கொண்டிருக்கிற கதை சொல்லிகள் அவர்கள்.

அவர்களின் கதைகள் தான் வரலாறு ஆகிக் கொண்டிருக்கின்றன.

நாங்கள் எல்லாரும் போய்ச் சேர்ந்த பின்னால் வரலாறு ஆக மிஞ்சப் போவது, அந்தக் கர்ண பரம்பரைக் கதைகள் மட்டும் தான்.

உண்மைகள் இல்லை!

அந்த உண்மைகள் உங்களிடம் இருக்கின்றன.

நீங்கள் உண்மையில் அனுபவித்த, கண் முன்னால் கண்ட கதைகள்.

யாழ்ப்பாணிகளுக்கு ஒரு கதை சொல்லல் இருக்கிறது.

கேட்பவர்களைக் குஷிப்படுத்தச் சொல்லப்படும் பொய்க் கதைகள்.

தாங்களே கேட்க விரும்பும் பொய்களை தாங்களே தங்களுக்குச் சொல்லிக் கொள்கிற கதைகள்.

தமிழ் நாட்டில் அதைத் தான் கேட்பார்கள் என்பதற்காக, அவிழ்த்து விடும் கதைகள்.

எல்லாருக்கும் பொய் என்று தெரியும் என்பதைத் தெரிந்த பின்னாலும், மற்றவர்களை நம்ப வேண்டும் என்று அடம் பிடிக்கிற கதைகள்.

அந்தக் கதை சொல்லலுக்கு முரணான எந்த உண்மைக் கதையையும், இந்த யாழ்ப்பாணிக் கதை சொல்லிகள் சொல்லப் போவதுமில்லை.

யாழ்ப்பாணிகள் அதைப் பிரசுரிக்கப் போவதுமில்லை.

அவர்களுக்கு உண்மை ஒரு பொருட்டே இல்லை.

எது குஷிப்படுத்தும்? எது விற்கும்?

அதுவே அவர்களின் விற்பனைப் பண்டம்.

நல்லவர்களின் மௌனம் தான் உலகின் பல அநீதிகளுக்குக் காரணமாக இருக்கிறது.

அயோக்கியர்களின் கூடாரம் அடித்து, வியாபாரம் நடத்துவது அதனால் தான்.

உயிரைக் கொடுத்துப் போராடப் போய், வாழ்வைத் தொலைத்த அனுபவங்களை எழுதுங்கள்.

கடைசி யுத்தத்தில் நீங்கள் பட்ட அவலங்களை எழுதுங்கள்.

வெளிநாட்டுப் பயணங்களில் பட்ட துன்பங்களை எழுதுங்கள்.

வெளிநாட்டு வாழ்வு உங்கள் வாழ்வில் தரும் அனுபவங்களை எழுதுங்கள்.

இவையெல்லாம் சொல்லப்பட வேண்டியவை.
பதிவு செய்யப்பட வேண்டியவை.

உங்களிடம் உண்மை இருந்தால்...

அந்த உண்மைக் கதையை வேறு எவரும் பிரசுரிக்க மாட்டார்கள் என்று நினைத்தால்...

எழுதுங்கள்.

எழுதுவதற்கு மொழிப்புலமை தேவையில்லை.

உண்மைக்குத் தரக்கட்டுப்பாடு இல்லை.

உண்மைகளை எழுதுங்கள்.

அந்த உண்மைகளை எங்களுக்கு எழுதுங்கள்.

# வைன்ஸ்ரைனும் வைரமுத்துவும்

## நமக்கும் வந்ததொரு மீரூ மோமன்ட்

### தாயகம் சுவடிகள்

பேரறுஞர் கல்லாநிதி கியூறியஸ் ஜி

*2019 ஜனவரி 11, தாயகம் இணையத்தளத்தில் வெளிவந்தது.*

கொஞ்சக் காலம் பேஸ்புக்கில் புழுதி கிளப்பிய தமிழ்நாட்டு மீரூ இப்போது அடங்கிப் போய் விட்டது.

தலை(க்கறுப்பு)மறைவாகி அஞ்ஞாதவாசம் போய் அடக்கி வாசித்த வைரமுத்து ட்விட்டரில் புத்தாண்டு வாழ்த்துச் சொன்னதாக செய்தி வந்தது.

புற்றுக்குள்ளால் வெளியே வரும் பாம்பு தலையை எட்டிப் பார்த்து நோட்டம் விடுவது போல!

Coast seems to be clear! யாருமே அலட்டிக் கொண்டதாக தெரியவில்லை.

கொஞ்ச நாளில் ஆண்டாளின் காமக்கவிதைகள் 2.0 வை எதிர்பார்க்கலாம்!

அல்லது
'இளநீர் குடித்தவர்கள்
கோபுரங்களில் சல்லாபிக்க...

கோம்பை சூப்பியவனை
குடிசைக்குள் சிறை வைத்த
கொடுமை' என்ற கவிதையை!

கவிதைக்குப் பொய்யழகு!

ஆனால், கவிஞனே பொய்யன் என்றான பின்னால் பிறகென்ன?

வைரமுத்துவைக் கூப்பிட்டு கனடாவில் காலில் விழுந்தவர்களைக் கண்டு, இதெல்லாவற்றுக்கும் முன்னால் தாயகம் முனியோடு எப்போதோ பேசும் போது, 'வைரமுத்துவின் கண்கள் ஒரு பொய்யனுக்குரியவை' என்றேன்!

'அதே!' என்றார்.

வழமையில் வேண்டப்பட்ட விளம்பரதாரர்களுக்காக விழுந்த டித்தும், வன்னிசார் நோட்டுப் புலிகளுக்குப் பயந்தடித்தும், எழுத்து தர்மத்தை விற்பவர்கள் இந்த சர்ச்சைகளின் போது எழுத்தாயுதங்களை மௌனிக்கச் செய்தபோது, கள்ளிக்காட்டு கருநாகத்திற்கு மகுடி ஊத மாமா வேலை பார்த்திருப்பார்களோ என்ற சந்தேகமும் வந்தது.

பாவம், பிரபஞ்சன்!

வெகுசனப் பிரபலமாக இருந்திருந்தால் இப்படி அவமானப்பட்டு மனம் நொந்திருக்கத் தேவையில்லை.

ரோமாபுரி ராணிகள், பாக்தாத் பேரழகிகள் மாதிரி, கனடியக் கனவுக்கன்னிகள் பற்றி பயணக் கட்டுரை எழுதியிருக்கக்கூடும்!

கனடாவில் ஊருக்குள் இந்த 'மீடியா ஊடகவியலாளர்கள்' பற்றி எக்கச்சக்கமான #MeToo கதைகள் உலவி வருவது எல்லாரும் கேள்விப்பட்டவையே! தமிழக சினிமா, டிவி பிரபலங்களை அழைப்பதே கனடாவில் கோட் போட்ட புதுப்பணக்காரர்கள் ரசித்துச் சுவைப்பதற்காகத் தான் என்ற அரசில் புரசலான கிசுகிசுக்கள் வேறு! இவற்றையெல்லாம் கிண்டியெடுக்க இன்வெஸ்டிகேட்டிவ் ஜேர்னலிசம் இங்கே இல்லாவிட்டாலும், பார்ட்டிகளில் நாலு பியரைக் கொடுத்து வாயைக் கிண்டினால் போகிறது... வாந்தியெடுப்பார்கள்!

பிரபலம் அடைந்த பல பெண்கள் தாங்கள் பிரபலம் அடைய பாலியல் லஞ்சம் கொடுக்க வேண்டி வந்ததாகவும், கொடுக்காததால் பிரபலம் அடைய முடியாதபடிக்கு பழிவாங்கப்பட்டதாகவும் வந்த கதைகளின் பின்னால்...

கலைத் துறையில் பெரும்புகழைச் சாதிக்க துடித்துக் கொண்டிருந்த கியூறியஸின் கனவுகள் முளையிலேயே கிள்ளி எறியப்பட்ட அந்த மீரூ கண்ணீர்க் கதையை உங்களுக்குச் சொல்லியாக வேண்டும்.

ஒவ்வொரு குளிர் காலத்திற்கும் கியூறியஸ்க்கு 'நரி வெருட்டும்!'

குட்டிக் கியூறியஸ் எதையாவது ஏடாகூடமாகச் செய்து போட்டுடைத்தால், ஆச்சி எப்போதுமே 'உவனுக்கு நரி வெருட்டுது!' என்பது வழமை!

பின்னாளில் 'புலி வெருட்டுகளுக்கு' எல்லாம் இந்த பனங்காட்டு நரி அஞ்சியதில்லை என்பது இன்னொரு புராணம்.

கியூறியஸ் கோடை காலம் முழுவதும் ஊரு வியந்து, பாரு செழிக்க, ஏரு பூட்டி, நீரு பாய்ச்சி,

www.thayagam.com
தாயகம்

வீட்டுக்குப் பின்னால் உள்ள தோட்டத்தில் உலகத்தில் இல்லாத மரக்கறிகளை வளர்ப்பது பொன் னெழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டிய வரலாறு.

அது முடிந்த பின்னால் குளிர் தொடங்க பகல் குறைந்து மாலையில் வேகமாக இருளத் தொடங்கும். வேலை முடிந்து வந்த பின்னால் செய்வதற்கு எதுவும் இல்லாததால், ஒவ்வொரு வருடமும் ரொறன்ரோ கல்விச் சபை நடத்தும் மாலை நேர வகுப்புகளுக்கு பதிவு செய்து கண்டதும் கற்பது இந்தக் கல்லாநிதியின் வழக்கம்.

வழமையான 'ஆங்கிலம் கற்பு' தேவை இந்த மாஜி ஆங்கில ஆசிரியனுக்கு இல்லாததால், கீபோர்ட் போன்ற இசைக்கருவிகள், ட்ஜெம்பே என்ற ஆபிரிக்க மேளம், இலத்திரனியல், வருமானவரி பத்திரம் நிரப்புதல், மட்பாண்டம் செய்தல் (ஏன் எற்கு என்றெல்லாம் கேட்கக் கூடாது!), சினிமா தயாரிப்பு, கணக்கியல், இரும்பு ஒட்டும் வெல்டிங் என்றெல்லாம் சம்பந்தமில்லாதவற்றை வருடம் தோறும் கற்பது வழக்கம்.

இம்முறையும் இந்தக் குளிர்காலத்தில் எதைக் கற்கலாம் என்று நரியை வெருட்ட விட, தமிழ்க்கலை ஒன்றைக் கற்கலாமே என்று நரி மதியுரைத்தது!

அது எது என்பதெல்லாம் உங்களுக்கு இப்போதைக்கு அவசியம் இல்லை என்றாலும் வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க, அது பரதநாட்டியம் இல்லை என்பது மட்டும் தற்போதைக்கு இருக்கட்டும்.

நாட்டியம் கற்றுக் கொண்டு பவர்ஸ்டார், சுப்பர்ஸ்டார் மாதிரி உலகநாயகன் ஆகும் நோக்கம் எதுவும் நமக்கில்லை.

அப்பாடா! ஒரு மாதிரி அரசியல் வதந்திக்கும் முற்றுப்புள்ளி வைத்தாயிற்று.

எனவே, அந்தக் கலையைக் கற்பதற்கு 'நாடவேண்டிய ஒரே' ஆசிரியரைத் தேட தமிழ் மகள்.ன் நிர்வாக வர்த்தக கையேட்டை புரட்டினால்... ஹ்ம்... பெரிதாக இல்லை!

'நண்பி' ஒருவரைக் கேட்க,

> பிரபலம் அடைந்த பல பெண்கள் தாங்கள் பிரபலம் அடைய பாலியல் லஞ்சம் கொடுக்க வேண்டி வந்ததாகவும், கொடுக்காததால் பிரபலம் அடைய முடியாதபடிக்கு பழிவாங்கப்பட்டதாகவும் வந்த கதைகளின் பின்னால்... கலைத் துறையில் பெரும்புகழைச் சாதிக்க துடித்துக் கொண்டிருந்த கியூறியஸின் கனவுகள் முளையிலேயே கிள்ளி எறியப்பட்ட அந்த மீரு கண்ணீர்க் கதையை உங்களுக்குச் சொல்லியாக வேண்டும்.

'அட, விஜய தசமிக்கு உங்க தமிழ்ப் பேப்பரில விளம்பரம் போடுவினம்' என்று பதில் வந்தது.

பிறகென்ன, வெள்ளி தோறும் கடைகளுக்குப் போய், தங்களுடைய மரண அறிவித்தல் வந்திருக்கிறதா என்று முதியவர்கள் செக் பண்ணி, 'அப்பாடா' என்று வாழ்வைத் தொடர்வதற்காக பத்திரிகைகளை அள்ளிப் போவதற்கு முன்னால், போட்டி போட்டு கிள்ளி வந்தால்...

ஒரு ஆசிரியனும் சில ஆசிரியைகளும் போட்ட விளம்பரங்களை...

ஒவ்வொரு வாரமும் வரும் 'தமிழ்ப் பத்திரிகை அலுவலகத்தில் வேலைக்கு' கொத்தடிமை தேவை உட்பட்ட விளம்பர வைக்கோல் போருக்குள் ஊசி மாதிரித் தேடிக் கண்டுபிடிக்க...

ஆசிரியனின் விளம்பரம் 'வகுப்புகள் பழைய புலிகளின் கோட்டையில்' என்றது.

அங்கே போய் கற்றால் மாவீரர் தினத்தில் தண்டத்திற்கு அரங்கேற வேண்டி வரலாம் என்பதால் அந்த ஒப்ஷன் அவுட்.

டீச்சர்மாருக்கு ஈமெயிலினால்... ஒருவர் மட்டுமே பதில் இறுத்தார். தான் அதைக் கற்பிப்பதில்லை!

பிறகென்ன சிகைக்கு விளம்பரம், ஈமெயில் விலாசம் போட்டீர்களாக்கும் என்று கேட்கலாம் என்றால் அதுவே மீ ரூ குற்றச்சாட்டாகி விடும்.

விளம்பரக் கையேட்டின் தடிப்பைப் பார்த்தே தமிழ் பிஸ்னஸ்கள் பல்கிப் பெருகி பொங்கிப் பிரவகிப்பதாக புல்லரிக்கும் 'தமிழேண்டா!' பிரமிப்பாளருக்கு எல்லாம், 'ஆரும் கோல் பண்ணினால் நேரம் இருந்தால் செய்வம்' என்று பலர், லெட்டர்ஹெட் சங்கங்கள் மாதிரி, பிஸ்னஸ் கார்ட் (விசிட்டிங் கார்ட்!) வர்த்தகங்கள் வைத்திருப்பது தெரியாது.

கியூறியஸின் கதைக்கும் ஸ்டைல், அதுவும் பெண்களுடன் கதைப்பது, குழப்பகரமானது என்று அபிதகுஜாம்பாள் அடிக்கடி எச்சரிப்பதால்... ('என்னக்கா, உங்கட அவர்?' இதெல்லாம் பிறகு வரும்!)

நண்பியிடமே நம்பரைக் கொடுத்து தகவல் அறியும்படி சொல்ல...

அவரும் சிரமம் பாராமல் போன் அடித்து, 'ஓகேயாம்!' என்று பச்சைக் கொடி காட்டினார்.

'அவ பெரிய விசாரணை. ஆருக்கு? மகளுக்கோ?'

'விஜயதசமி நல்ல நாளாம், நாளைக்கு வரட்டாம்!'

அட, சிம்பிளான விசயம். போய் கொஞ்ச நாளைக்கு கற்று, டீச்சருக்கு வைக்க வேண்டியதை வைச்சா... திறமையும் அறிவும் இருக்கோ, இல்லையோ, கெதியா அரங்கேற்றுவா தானே, பிறகென்ன நீங்களே ஆசிரியராகி உழைக்கலாம் என்று உங்களுக்கு யோசனை வந்திருக்கும்.

அதை விட, 'அதுக்கு இதுக்கு எண்டு சொல்லி காசு புடுங்குவினம்' என்று தமிழரை விளங்கியவர்கள் எச்சரிக்கவும் கூடும்.

கலையைக் கற்று கலாசாரத்தைக் காக்கும் கனவு காணும் வாழ்க்கை கலைந்து போன கண்ணீர்க் கோலம்...

•••

ஹார்வி வைன்ஸ்டைன் ஹொலிவூட் காட்டின் முடி சூடா மன்னன்! சிங்கராஜா!

ஹொலிவூட்டின் பெரிய

ஸ்டுடியோக்களே ஆக்கிரமித்திருந்த ஒஸ்கார் விருதுகளை தன்னுடைய சுதந்திரமான (இன்டிபென்டன்ட்) மிராமாக்ஸ் தயாரிப்பு நிறுவனம் மூலமாக அள்ளுவதை ஒரு கலையாக்கிக் கொண்டவர்.

பெரும் ஸ்டுடியோக்கள் கவனிக்காமல் விட்ட படங்களை தேடிப்பிடித்து, திட்டமிட்டு சந்தைப்படுத்தி, ஒஸ்கார் விருது காலத்தில் ஹொலிவூட், லொஸ் ஏன்ஜலஸ் பத்திரிகைகளில் பெரும் விளம்பரம் போட்டு, வாக்களிக்கும் உறுப்பினர்களுக்கு படத்தின் பிரதிகளை அனுப்பி, ஊடகங்களைக் கைக்குள் போட்டு ஊதிப் பெருப்பித்து, தன்னுடைய படங்கள் பரிசுக்கு முன்மொழியப்பட்டதும் அதை வைத்து இன்னும் படத்தை ஓட்டி...

ஒஸ்கார் பரிசுகள் ஒன்றும் திறமைக்கானவை அல்ல என்பதை நிருபித்தவர். பல படங்கள், நடிகர்களுக்கு பரிசு கிடைத்ததற்கான காரணம் அவரே என்று சொல்லலாம்.

1966 முதல் 2016 வரை ஒஸ்கார் விருது பெற்றவர்கள் தங்கள் நன்றியுரையில் 34 தடவைகள் வைன்ஸ்ரைனுக்கு நன்றி சொல்லியிருக்கிறார்கள்... கடவுளுக்கு நன்றி சொல்லப்பட்டதும் அத்தனை தடவைகள்தான். (இந்தக் காலத்திற்குள் இந்த இருவரையும் விட, அதிகமாக நன்றி சொல்லப்பட்டவர் 'ஹொலிவூட்டின் மணிரத்தினம்'(!?) ஸ்டீவன் ஸ்பீல்பேர்க் ஒருவர் மட்டும் தான்)

முக்கிய பிரபலமான விருதுகளில் தான் இந்தக் குளறுபடி. தொழில் நுட்பத்திற்கான, சிறந்த பிறமொழிப் படத்திற்கான விருதுகள் ஓரளவு திறமைக்கானவையே!

ஸ்டுடியோக்களின் முதலீடுகள் இல்லாமல் தயாரிக்கப் பட்ட ஆங்கிலப்படங்களையும், பிறமொழிப் படங்களையும் திரையிட்டாலும், அவற்றில் மாற்றங்களைச் செய்யுமாறு இயக்குனர்களையும் தயாரிப்பாளர் களையும் வற்புறுத்தி மிரட்டி வந்தவர்.

ஜப்பானியப் படமான Princess Mononoke ஐ அமெரிக்காவில் திரையிடுவதற்கு மாற்றங்களைச் செய்ய வற்புறுத்திய போது, அப்படத்தின் தயாரிப்பாளர் இவருக்கு ஒரு சமுராய் வாளை தபாலில் அனுப்பி, 'நோ கட்ஸ்!' என்று செய்தி அனுப்பியிருந்தார். கடைசியில் வெட்டுக் கொத்துதல் எதுவும் இன்றிப் படம் வந்தது!

ஜப்பானிய சமுராய் வாளை வீசினால் எது ஒட்ட நறுக்கப்படும் என்று தெரிந்திருக்கும்! அதிலும் அவர் ஏற்கனவே நறுக்கப்பட்ட யூதர்!

வழமை போல, அரசியல் செல்வாக்கிற்காக ஜனநாயகக் கட்சிக்கான ஆதரவாளராக ஹொலிவூட் பிரபலங்களிடம் பணம் திரட்டிக் கொடுப்பவர்.

ஆனால், இவரின் காமச்சேஷ்டைகள் எல்லாருக்கும் தெரிந்த, வெளியே பேசப்படாத இரகசியம்.

தன்னுடைய செல்வாக்கைக் காட்டி, பெண்களை இணங்க வைத்து, மறுத்தவர்களை சந்தர்ப்பங்களை மறுத்து பழி வாங்கி, பலரை வல்லுறவும் செய்து செய்த அட்டகாசம்... ஆனால் யாருமே அதைப் பற்றி பகிரங்கமாக பேச முயற்சிக்கவில்லை.

பயம்!

வைன்ஸ்டைனின் சேஷ்டைகள் பற்றி றோனான் பரோ நியூ யோர்க்கர் சஞ்சிகையில் எழுதியதுடன் இவரது சாம்ராஜ்யம் சரிந்தது.

இதுவரை காலமும் தன் மீதான குற்றச்சாட்டுகளை பெரும் சட்டத்தரணிகள் உதவியுடன் மிரட்டியும், இஸ்ரேலிய தனியார் உளவு நிறுவனம் ஒன்றை பிளாக் கியூப் வாடகைக்கு அமர்த்தி தன் மீது குற்றம் சாட்டியவர்கள் பற்றித் தகவல் திரட்டி பயமுறுத்தியும் செய்த அட்டகாசத்திற்கான முடிவுக்கான நேரம் வந்தது. இவருக்குப் பயந்து என்பிசி தொலைக்காட்சி இந்த குற்றச்சாட்டுகளை வெளிக் கொணர்வதற்கு தயங்கியிருந்தது. பின்னர் நியூ யோர்க்கரும் நியூ யோர்க் ரைம்ஸூம் வைன்ஸ்ரைன் பற்றிய குற்றச்சாட்டுகளை வெளிக் கொணர்ந்து இன்வெஸ்டிகேட்டிவ் ஜேர்ணலிசத்திற்காக புலிட்சர் பரிசைப் பகிர்ந்திருந்தன.

தற்போது மொத்தம் 78 பெண்கள் வைன்ஸ்ரைன் மீது பாலியல்வன்முறைக்குற்றச்சாட்டைச் சுமத்தியிருக்கிறார்கள்.

வைன்ஸ்ரைன் ஹொலிவூட் டின் ராஜா சிங்கம்னா, வைரமுத்து கோட்டை, கோடம்பாக்கத்து சிங்கங்கள் விழுங்கி ஏப்பம் விட்டதில் மிஞ்சின எலும்புகளை நக்கும் குள்ளநரி!

கியூறியஸ் ட்விட்டரில் இல்லாதிருந்தாலும், ட்வீட் பண்ண வேண்டும் போலிருந்தது இப்படி!

"So, at last they found out that the emperor had no clothes!" #Harvey#Weinstein

(படம் பற்றி பேச வேண்டும் என்று அழைத்து விட்டு, நிர்வாணமாய் நின்றபடி நடிகைகளை தனக்கு மசாஜ் செய்யும்படி கேட்பாராம் இந்த சக்கரவர்த்தி)

ட்விட்டரில் இருந்திருந்தால், கியூறியஸ் வைன்ஸ்ரைன் புண்ணியத்தில் உலகப் புகழே அடைந்திருக்கக் கூடும்!

தற்போது கைது செய்யப்பட்டு பிணையில் விசாரணைக்காய் காத்திருக்கிறார். வாழ்க்கை சிறைவாசத்திலும் முடியலாம்!

வைன்ஸ்டைனை மண் கவ்வச் செய்த ரோனான் பரோ இயக்குனர் வூடி அலன், நடிகை மியா பரோவின் ஒரே மகன்.

நடிகை மியா பரோ பல பிள்ளைகளைத் தத்தெடுத்து வளர்த்தவர். அதில் தத்தெடுத்த கொரிய இன மகளை வூடி அலன் திருமணம் செய்திருக்கிறார். இதுவே பெரும் சர்ச்சையாகியிருந்தது.

மியா பரோ நடிகரும் பாடகருமான பிராங் சினாட்ராவின் முன்னாள் மனைவி. ரோனான் பரோ 'சில நேரம்' பிராங் சினாட்ராவின் மகனாக இருக்கலாம் என்று தாய் மியா பரோ ஒரு பேட்டியில் கூறியிருந்தார்.

தனது தந்தை தனது வளர்ப்புச் சகோதரியைத் திருமணம் செய்தது, அவரை தனக்கு தந்தையாகவும் மச்சானாகவும் ஆக்கி விட்டது என்று கார்டியன் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் ரோனான் சொல்கிறார்.

இதைவிட, மியாவின்

இன்னொரு மகளும் தன்னுடன் தன் தந்தை தவறாக நடந்ததாக குற்றம் சாட்டியிருந்தார். இப்போது 16 வயது பாஷன் மொடல் ஒருவர் தன்னுடன் வூடி அலன் தொடர்பு வைத்திருந்ததாக நீண்ட காலம் கழித்து தகவல் வெளியிட்டிருந்தார். (குற்றச்சாட்டாக அல்ல!) மைனர் பெண்களுடன் தொடர்பு கொண்ட குற்றச்சாட்டு வூடி மீது தொடர்ந்து கொண்டிருக்கிறது.

பல பிரபல நடிகர்கள் இனிமேல் வூடியின் படங்களில் நடிக்க மாட்டோம் என்று பகிரங்கமாகவே அறிவித்திருக்கிறார்கள்

இவ்வாறாகத் தானே வைன்ஸ்டைன் விவகாரத்துடன் பெண்கள் மீதான பாலியல் வன்முறை பற்றிய விழிப்புணர்ச்சியை தூண்டிய மீரு இயக்கம் ஆரம்பித்தது. தங்களுக்கும் இது நடந்தது என்பதை எந்தப் பயமும் என்றி வெளியே சொல்வதற்கான துணிச்சலைக் கொடுத்த ஹாஷ்ராக் அது!

இதைத் தொடர்ந்து பல பெண்கள் துணிச்சலாக தங்களுக்கு நடந்தவற்றைக் கூற பல பிரபலங்களின் தலைகள் உருண்டன. அதில் பில் கொஸ்பி முக்கியமானவர். தொலைக்காட்சியில் பிரபலமான நகைச்சுவைத் தொடரின் நடிகரான இவர் பெண்களுக்கு பானங்களில் மயக்க மருந்தைக் கொடுத்து பால்வன்முறை செய்த குற்றச்சாட்டுகள் நிருபிக்கப்பட்டன.

நண்பர் ஒருவர் சமீபத்தில் பேசும் போது நீண்ட காலத்திற்கு முன்னர் தமிழ் அமைச்சர் ஒருவர் தனது அலுவலகத்திலேயே பெண்களை மிரட்டி வல்லுறவு கொண்டதையும், தன் குடும்பத்தினருக்கு தெரிந்த பெண் ஒருவருக்கு அலுப்புக் கொடுக்க, அந்தப் பெண்ணின் கண்ணீர் கதையை அறிந்து அதை தனது நண்பரான பத்திரிகை நிருபர் மூலமாக பிரபல பத்திரிகை ஒன்றில் கிசுகிசுவாக்கியதில் பத்திரிகை நிருபருக்கு வந்த மிரட்டல் பற்றியும் கூறியிருந்தார். (ஊகூம்... அது யார் எவர் என்பது பற்றி இன்வெஸ்டிகேட் பண்ண... எந்தப் பார்ட்டியில் எத்தனை பியர் தந்தாலும் கியூறியஸ் இதையெல்லாம் வாந்தியெடுக்க மாட்டான்!)

நண்பர் ஒருவர் சமீபத்தில் பேசும் போது நீண்ட காலத்திற்கு முன்னர் தமிழ் அமைச்சர் ஒருவர் தனது அலுவலகத்திலேயே பெண்களை மிரட்டி வல்லுறவு கொண்டதையும், தன் குடும்பத்தினருக்கு தெரிந்த பெண் ஒருவருக்கு அலுப்புக் கொடுக்க, அந்தப் பெண்ணின் கண்ணீர் கதையை அறிந்து அதை தனது நண்பரான பத்திரிகை நிருபர் மூலமாக பிரபல பத்திரிகை ஒன்றில் கிசுகிசுவாக்கியதில் பத்திரிகை நிருபருக்கு வந்த மிரட்டல் பற்றியும் கூறியிருந்தார்.

இலங்கைத் தமிழ் அரசியல்வாதிகள் சிலர் மீதும் இந்தக் குற்றச்சாட்டுகள் முன்னரும் இப்போதும் இருக்கின்றன. பாலியல் லஞ்சம் கேட்டார் என்று பேஸ்புக்கில் அடிக்கடி காணக் கிடக்கிறது.

யாழ் பல்கலைக்கழகத்தில் இந்தக் குற்றச்சாட்டுகள் பற்றி குட்டித்தம்பி நட்சத்திரன் கதை கதையாய் சொல்வான் பேஸ்புக்கில்!

தமிழ்நாட்டில் நிலைமை வேறு. மனைவி, துணைவி, இணைவி, கொபசெ, உடன்பிறவாச் சகோதரி என்று இவற்றையெல்லாம் உத்தியோகபூர்வமாக லைசென்ஸ் பெற்ற, சமூக அங்கீகாரம் பெற்ற உறவுகளாக்கி விடலாம் என்பது மட்டுமன்றி, வீட்டுக் கட்டிலில் மட்டுமல்ல, அரச கட்டிலிலும் ஏற்றலாம்.

தாங்களாகவே முடிவு செய்யும் வயதுடைய ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் (கொன்சென்டிங் அடல்ஸ்) ஏற்படும் உறவுகளில் யாரும் தலையிட முடியாது.

ஆனால் அதிகாரத்தில் இருப்பவர்கள் அதைப் பயன்படுத்தி தங்களுக்கு கீழ் உள்ளவர்களை தங்கள் இச்சைகளுக்குப் பயன்படுத்துவது எங்குமே நடந்து கொண்டு தான் இருக்கிறது. பொசிசன் ஒப் ஒதோரிற்றி, ட்ரஸ்ட் இரண்டு நிலைகளிலும் பாதிக்கப்படுபவரின் சம்மதம் குற்றத்தை நியாயப்படுத்தாது. முக்கியமாக வயது குறைந்தவர்கள் மீதான பாலியல் வன்முறைகளுக்கு சம்மதம் என்பதை நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளாது.

அதிகாரத்தை வைத்து தொடர்ந்து வேலையில் நீடிப்பதற்கோ, பதவி உயர்வு பெறுவதற்கோ, வெறும் சலுகைகளைப் பெறுவதற்கோ தங்கள் இச்சைகளைத் தீர்ப்பதை நிபந்தனையாக்கி பாலியல் லஞ்சம் கேட்கும் செயற்பாடுகள் தற்போது பல நாடுகளிலும் குற்றமாக்கப்பட்டுக் கொண்டு வருகிறது.

ஆனால், விரும்பியும் பலனை எதிர்பார்த்தும் தொடங்கித் தொடர்ந்த உறவுகள் கசந்தும் பயன் கிடைக்காமலும் போக, பழி வாங்கும் உணர்வு மேலிட்டு எழும் குற்றச்சாட்டுகளும் இல்லாமல் இல்லை. அது உண்மையில் பாதிக்கப்பட்டவர்களின் நம்பகத் தன்மையை கேள்விக்குரியதாகவே மாற்றும்.

அதிகாரங்களில் இருப்பவர்கள் மட்டுமல்ல, பெண்கள் மீதான தங்கள் ஆதிக்கம் மூலமாக அவர்களை ஒரு போகப் பொருளாக்கும் கலாசார, சமய, பண்பாட்டு நியாயப்படுத்தல்கள் பல ஆண்களுக்கு அதை ஒரு லைசன்ஸ் டு அசோல்ட் என்ற நிலைக்கு கொண்டு வருகிறது.

தென்னாசியா போன்ற பால் உணர்வைக் குற்றமாக்கி, அடக்கி வைக்கும் பண்பாடுகளில் இந்த வக்கிர உணர்வின் வெளிப்பாடுகள் அதிகம்.

பெண்கள் தங்களுக்கு அறிமுகமானவர்களால் மட்டுமன்றி, அந்நியர்களாலும் பாதிப்புக்குள்ளாக நேரிடுகிறது.

இந்தியாவில் பொதுப் போக்குவரத்து நெரிசல்களுக்குள் பெண்களை தொட்டு தங்கள் சிற்றின்ப வேட்கையை தணித்து திருப்தியுறுபவர்களும், யாழ்ப்பாணத்தில் திருவிழா

நெரிசலுக்குள் இடிபட அலைபவர்களும் இந்த வகைக்குள் அடங்குகிறார்கள்.

இந்த வக்கிர உணர்வு வன்முறையாகி, வல்லுறவுகளிலும் கொலைகளிலும் முடியும் அளவுக்கு பால் வரட்சி மற்ற இடங்களை விட, இந்தப் பகுதிகளில் அதிகமாக இருக்கிறது.

பெண்ணை தெய்வம் என்று போற்றிக் கொண்டே போகப் பொருளாக நினைக்கும் இந்தப் பண்பாட்டுப் போலித்தனத்தால் அந்நியப் பெண்களின் மீது வன்முறை பிரயோகிக்கும் அதே பிரகிருதிகள் தங்கள் குடும்பப் பெண்கள் மீது மற்றவர்கள் அதே யுக்தியைப் பிரயோகிக்கும் போது மட்டும் பண்பாட்டுக் காவலர்களாக மாறி விடுகிறார்கள்.

மேற்கு நாடுகளிலேயே வைன்ஸ்டைன் விவகாரத்தை பகிரங்கப்படுத்த இவ்வளவு காலம் எடுத்தது என்றால் எங்கள் நாடுகளில் நிலைமை எப்படியிருக்கும்?

தன் மீதான பாலியல் குற்றத்தை பெண்கள் இலகுவாக வெளியில் சொல்லி நியாயம் தேடி விட முடிவதில்லை. 'ஆண் சேறு கண்ட இடத்தில் மிதித்து தண்ணீர் கண்ட இடத்தில் கழுவுவதான' நியாயப்படுத்தல் சமூகத்தில் ஊறி விதைக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் பெண் அந்தக் குற்றத்தில் பாதிக்கப்பட்டிருந்தவராக இருந்தாலும் அதற்கான விலையை வாழ்நாள் முழுவதும் செலுத்த வேண்டியிருக்கும். பெண்கள் மீதான மீறல்களை பெண்ணின் குற்றமாக்குவதற்காக, அவரது ஆடையுடுத்தலையும் திறந்த மனதுடன் பழகும் தன்மையையும் காரணம் காட்டி 'She asked for it' என்று கூசாமல் சொல்பவர்கள் உண்டு. இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களை குற்றம் சாட்டும் victim bashing/blaming மூலம் குற்றவாளி மீதான கவனத்தை திசை திருப்பி தப்பிக்க வைக்க முயல்கிறார்கள்.

Slut shaming எனப்படும் பெண்களின் உடைகளையும் செயற்பாடுகளையும் சமூகத்தின் எதிர்பார்ப்புகளை மீறுவதாகக் கூறி குற்றம் சாட்டுவது ஆண்கள் மட்டுமல்ல, பெண்களும் தான் என்பது தான் துயரம்.

வைரமுத்து விவகாரத்திலும் இது தான் நடந்தது.

'அவர் நம்ம கவிஞராச்சே! அவள் ஏதோ வந்தேறி. அவள் என்ன பத்தினியா?' என்ற ரீதியில் இந்தப் பிரச்சனையை அணுகியவர்கள் பலர்.

இவ்வாறான விழிப்புணர்வை நீர்த்துப் போக முயற்சி செய்யும் பலருக்கும் தாங்கள் கண்ணாடி வீடுகளுக்குள் இருப்பது புரிவதில்லை.

தங்களுடைய பிள்ளைகள், சகோதரிகள், மனைவிகள், காதலிகள் எல்லாம் அந்தப்புரங்களில் இல்லாமல் வீட்டுக்கு வெளியே சென்று நடமாட வேண்டியவர்கள். அவ்வாறான இடங்களில் பாலியல் துன்புறுத்தல்களுக்கு ஆளாக வேண்டிய நேரிட்டால், அவர்களும் துணிச்சலாக, சமூகம் பற்றிய கவலையின்றி தங்களுக்கு நடப்பவற்றை வெளியில் சொல்லக் கூடிய சூழ்நிலை வேண்டும். இல்லாவிட்டால், அவர்களுக்கும் வெளியில் சொல்ல முடியாமல் உள்ளுக்குள்ளேயே வெந்து கொண்டிருக்க வேண்டி நேரிடும்.

அந்த Sexual predator களும் எந்த பயமும் இன்றி மேலும் பல பெண்கள் மீது தங்கள் துன்புறுத்தலைத் தொடரலாம்.

இதை உணர்ந்து கொள்ளாமல், ஆணைக் காப்பாற்றுவதற்காக பெண்ணைச் சந்தேகம் கொள்வதிலேயே இவர்களின் விசாரணை ஆரம்பிக்கிறது.

'ஏன் இவ்வளவு காலம் எடுத்தது?' என்று கூடக் கேட்டார்கள். இது பலரும் கேட்கும் கேள்வி. இப்போது தான் அதற்கான சூழ்நிலை வந்திருக்கிறது. குற்றம் இழைத்தவர்கள் தண்டிக்கப் பட்டிக்கிறார்கள். தாங்கள் சொல்வதை நம்புகிறார்கள் என்ற சூழ்நிலை வந்திருக்கிறது.

அட, அத்தனை பேர் கூடியிருந்த சபையில் ஒருத்தியின் சேலையை உருவும்போது...

சட்டசபையைச் சொல்லவில்லை, அரச சபையை...

அத்தனை பேரும் வேடிக்கை பார்க்க...

தாலி கட்டிய கணவன்... ஒன்றல்ல, ஐந்து பேர் பார்த்துக் கொண்டிருக்க..

எங்கோ ஒருத்தனை நோக்கி அபயக்குரல் எழுப்ப வேண்டிய கட்டாயம் அன்றைக்கே இருந்திருக்கிறதே.

இப்போது மட்டும் ஓடி வந்தா காத்து விடப் போகிறீர்கள்?

அதெல்லாம் கிடக்கட்டும்.

அபிதகுஜாம்பாளின் எச்சரிக்கையையும் மீறி, போன் அடித்து...

வணக்கம், டீச்சர், உங்களுடைய வகுப்புகள்... என்று தொடங்க...

'ஆருக்கு?'

'எனக்குத்தான் டீச்சர்?'

'நான் ஆம்பிளையளுக்குப் படிப்பிக்கிறேலை!'

'ஓகே, டீச்சர், பிரச்சனையில்லை. நன்றி'

உரையாடல் இப்படி முடிந்தது.

சில நாள் கழித்து...

படுக்கையில் சரிந்திருந்து செல்போனை நோண்டிக் கொண்டிருக்க...

'என்னடா, ஏதோ படிக்கப் போறன் எண்டாய்?' என அபிதகுஜாம்பாள் கேட்க...

'கேட்டனான், டீச்சர் ஆம்பிளையளுக்குப் படிப்பிக்கிறேலையாம்!'

'நீ என்ன அவவின்ரை கையைப் பிடிச்சு இழுத்துப் போடுவியாமோ?'

குற்றத்திற்கு தண்டனை பெறுவதை விட, செய்யாத குற்றத்திற்கு தண்டனை பெறுவது கொடுமையானது.


ஆனால், செய்யக் கூடும் என்பதற்காகவே, அட்வான்சாகத் தண்டனை தருவது அதைவிடக் கொடூரம்.

இப்படியாகத் தானே கியூறியஸின் கலையுலகக் கனவுகள் ஒரு அநியாயமான மீரூ குற்றச்சாட்டினால் தகர்ந்து போனது!.










# உலகெங்கும் அமசோனில்....

| | |
|---|---|
| இந்தியாவில்... | www.amazon.in |
| அமெரிக்காவில்... | www.amazon.com |
| கனடாவில்... | www.amazon.ca |
| இங்கிலாந்தில்... | www.amazon.co.uk |
| ஜேர்மனியில்... | www.amazon.de |
| பிரான்சில்... | www.amazon.fr |
| நெதர்லாந்தில்... | www.amazon.nl |
| அவுஸ்திரேலியாவில்... | www.amazon.com.au |
| இத்தாலியில்... | www.amazon.it |

## ஜோர்ஜ் இ.குருஷ்சேவ்
## என்ற வார்த்தையைத்

# தேடுங்கள்...
# கண்டடைவீர்கள்!